

அமரர். கணபதிப்பிள்ளை மயில்வாகனம்

(சரவணமுத்து)

(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின்,

# 31ம் நாள் நினைவு மலர்

16.11.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு
03.06.1933

உதிர்வு
17.10.2021

அமரர்.
# கணபதிப்பிள்ளை மயில்வாகனம்

## திதிவெண்பா

பிலவ வருடமாம் ஒக்ரோபர் பதினேழ்
நிலவு வளர்நாள் துவாதசி – நலமாம்
குருக்கள்மடம் வாழ் அதிபர் மயில்வாகனனார்
முருகன் கழல்சேர் திதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

**"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது"**

வந்தாரை வாழவைக்கும் வையகமாம் குருக்கள்மடம் தன்னில் கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம் என்பவருக்கு மூத்தமகனாக, 03.06.1933 ம் திகதி சரவணமுத்து எனும் புனைப்பெயருடன் குருக்கள் அத்தியாகுடி மகனாக மயில்வாகனம் அவதரித்தார். இவருக்கு ஒரு சகோதரரும் நான்கு சகோதரிகளும் இருந்தனர். இவர் குருக்கள்மடம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலைவன் பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியைப் பயின்று தரம் 5 புலமைப்பரீட்சையில் முதல் மாணவனாக குருக்கள்மடத்தில் சித்தியடைந்து மட்/ காத்தான்குடி மத்திய கல்லூரியில் ஆங்கிலப்பிரிவில் கல்வியை தொடர்ந்தார்.

1958-1960 காலப்பகுதியில் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் கல்வியை தொடர்ந்து சித்தியெய்தினார். இதற்கிடையில் இவர் கன்னாங்குடா தபாலகத்தில் உபதபால் அதிபராகவும் பதவி வகித்தார். பின்பு ஆசிரியர் தொழிலில் இணைந்து 1963ம் ஆண்டு குருநாகல் வல்பொத்துவெவ G.M.M.S பாடசாலையில் உதவி ஆசிரியராக கடமைபுரிந்தார். அதனைத் தொடர்ந்து 1965ம் ஆண்டு மட்/கிண்ணையடி R.C.T.M.S இலும் 1969 குருக்கள்மடம் MMTMS, 1979 மட் / மாங்காடு RCTMS இலும் 1983ல் மட்/ அம்பிளாந்துறை RCTMS இலும் சிரேஷ்ட உதவி ஆசிரியராக கடமை புரிந்தார். 1984ல் மட்/களுமுந்தன்வெளி GTMS இல் அதிபராக கடமையாற்றி 1991 இல் மட்/களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் 1993 வரை அதிபராக கடமையாற்றி 02.06.1993ம் ஆண்டு அக்கடமையிலிருந்து ஓய்வு பெற்றார்.

1963ம் ஆண்டு திருமணபந்தத்தில் செல்லையா வள்ளியம்மையுடன் இணைந்து கொண்டார். இக்காலப்பகுதியில் இல்லற வாழ்க்கையில் நல்லறத்தின் பயனாக கலாகரன், சிவசக்தி ஆகிய இரு குழந்தைகளை பெற்றுக்கொண்டு அடுத்தவரின் மனம் நோகாமல் நடந்து செயற்பட்டமை இவரின் சிறந்த பண்பாகும்.

தனது வாழ்க்கையில் கள்ளங்கபடமற்ற நகைச்சுவை பேச்சாலும், இளம் வாலிபர்களுடனும் சிறு குழந்தைகளையும் நண்பனாக ஏற்றுக்கொண்டு வாழ்க்கையில் சகோதரர்களுக்கும் உறவினர்களுக்கும், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கும் கடமைகளை எல்லாம் செய்துமுடித்துவிட்டு 17.10.2021ல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "களுமுந்தன்வெளிக் கிராமத்தின் கல்விக்கு அத்திவாரமிட்டவர் மயில்வாகனம் ஐயா"

களுமுந்தன்வெளிக் கிராமத்தின் அடிப்படைக் கல்விக்கு வித்திட்ட மயில்வாகனம் ஐயாவின் மரணச்சேதியை அறிந்தேன்....!

ஊரிலே அப்போது குண்டுமழை பொழியும் காலத்தில் துவிச்சக்கர வண்டியில் பின்னால் பிஸ்கட் பையையும் கட்டிக்கொண்டு கல்விதந்த ஐயா உமை என்றும் நாம் மறவோம். நான் சிறுவயதில் நான் நினைக்கிறேன் 5ம் ஆண்டு கல்வி கற்பேன் என நினைக்கின்றேன். மெனே மெனே என்று தான் அழைப்பார்...

எமது மட்/களுமுந்தன்வெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தற்போதைய (கஜமுகன் வித்தியாலயம்) அதிபராக இருந்து இன்று தலை நிமிர்ந்து நிற்பதற்கு வித்திட்டவர் மயில்வாகனம் சேர் என்றால் அதனை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

ஊருக்குக் கல்வி மாத்திரமின்றி உன்னத ஒழுக்க விழுமியங்களையும் எடுத்தியம்பியவர்.

ஊருக்கு உழைத்திட்ட 22 நபர்களை கடந்த 19.06.2013 அன்று பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா நாம் வழங்கி கௌரவித்த போது மயில்வாகனம் ஐயாவையும் கௌரவித்திருந்தோம். ஐயா நீங்கள் உருவாக்கிய மாணாக்கர்கள் இன்று தலைநிமிர்ந்து உங்கள் நிழலாய் நிற்கின்றார்கள்.

உங்கள் ஆத்மா இறைவன் சந்நிதானத்தில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்!

**வடிவேல் சக்திவேல்**
**உங்கள் மாணவன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்/களுமுந்தன்வெளி அ.த.க பாடசாலையில் கல்வி வளர்ச்சிக்கு உழைத்த மதிப்பிற்குரிய திரு.க.மயில்வாகனம் அதிபர் அவர்களை வாழ்த்திப் பாராட்டும் மடல்,

களுமுந்தன் வெளியில் கல்வி உயிர் காலத்தில்
காத்திரமாய் அதிபர் பாத்திரத்தின் அறப்பணியால்
அறிவியல் மாணவர் உலகில் உயர்ந்திட
அர்ப்பணிப்புக்கு மேலாய் ஆற்றிய நின் சேவை வாழ்க!

ஒழுக்கம் ஒழுங்கு ஒருங்கேசேர் நற்பண்பும்
ஒற்றுமையும் உயர்வுசார் ஒரு மித்த கல்வியும்
கற்ற சமூகம், தனை கறைபடியாமல் தத்தளித்த
கல்வியில் உயர்ந்தோனே உன் சேவை வாழ்க!

பன்னிரண்டு வருடம் பக்குவமாய் நீ தந்த
பார் உயர் பண்புமிகு கல்வி சேவையிலே
சமூகத்தை ஒன்றாக்கி சாதாரண தரம் தந்தளித்த
தயாள குணத்தோனே உன் குணமான சேவை வாழ்க!

பிள்ளை பெற்றோரை தானறிந்து பேதமில்லா கல்விதனை
அன்பால் ஆசிரியர் தனை அழைத்து அறிவூட்டி
அக்கறையாய் மாணவரிடத்தில் அன்பாய் பேசிய
பண்புமிகு பணியாளனே உன் சேவை வாழ்க!

களுமுந்தன் வெளியினிலே கறைபடியா கல்விச் சேவையினால்
கடவுள் அருளும் காரிய சித்தியும் பெற்று
காலமெல்லாம் உன்புகழ் பரவ பேரன் பேத்தி கண்டு
பெரும் புகழ் பெற்று சிரஞ்சீவியாய் வாழ்க!

வாழ்க ! வாழ்க! வாழ்க!

இவ்வண்ணம்
விநாயகர் கலைக்கழகம்
களுமுந்தன்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பப்பா

அன்பின் அப்பப்பா
அழியாத ஓவியமே
அழைத்துவிட்டாரோ கடவுள் தம்முடனே.....

அப்பப்பா 31 நாள் ஆகிவிட்டது நீர் எம்மை பிரிந்து. வீட்டை விட்டு கடைசியாக நீங்கள் செல்லும்போது இனிமேல் திரும்பி வரமாட்டீர்கள் என்று கனவிலும் நான் நினைக்கவில்லை. தெரிந்திருந்தால் தங்களை அனுப்ப விட்டிருக்க மாட்டேன். பிறப்பும், இறப்பும் மனித வாழ்வில் சகஜமாக நடப்பவை தான், பலர் பல விதத்தில் ஆறுதல் கூறினாலும், என் மனம் தங்களின் இழப்பை ஏற்க மறுக்கிறது. நொடிக்கு நொடி தவிக்கின்றேன் தங்களின் ஞாபகங்களை மீட்டிப் பார்த்து. நம் வீட்டில் உங்களுடன் நான் செலவழித்த நேரம் தான் அதிகம். அதை எண்ணிப் பார்க்கும் போது அழுகை பொங்கி வருகின்றது. சிறுவயதிலிருந்தே உங்களைப் பார்த்து வியந்திருக்கிறேன். எவ்வளவு திறமையுள்ளவராக இருந்தும் அதைப்பற்றி ஒரு நாளும் பெருமையாக பேசியது இல்லை. தாங்கள் எழுதிய நினைவுப் பதிவேடுகளை மீட்டிப்பார்க்கின்றேன் அவற்றில் ஒவ்வொரு தினமும் என்பெயரை குறிப்பிட்டுள்ளீர்கள். அதை வாசிக்கும் போது என் நெஞ்சம் கலங்குகின்றது. வீட்டு முற்றத்தில் இருக்கும் மரங்களில் ஒவ்வொரு நாளும் பூ பறித்து வைப்பீர்களே அதனாலே தான் அந்த தெய்வம் உங்களை இப்படி அழைத்ததோ.... தாங்கள் ஒவ்வொரு நாளும் படிக்கும் கந்தசஷ்டி புத்தகத்தை பார்க்கின்றேன். கிழிந்து கிடக்கின்றது அந்த புத்தகம். தங்களின் கள்ளங்கபடமற்ற பேச்சும், எப்போதும் சிரித்த முகமும் என் கண்ணுக்குள்ளே நிற்கின்றது. தாங்கள் இறக்கும் சமயத்தில் கூட தங்களுக்கு அருகில் நின்று என்னால் சேவை செய்ய முடியவில்லையே என்று ஏங்கித் தவிக்கின்றேன். இன்னொரு ஜென்மம் இருந்தால் மறுபடியும் தங்களுடன் வாழ வரம் வேண்டும் பேரப்பிள்ளையாக அல்ல தங்கள் மகளாக.

**தங்களின் பிரிவால் துயருறும் அன்புப் பேத்தி**
**அ. கவுந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர் கலாசாலையில் சாரணியராக இருக்கும் போது







திருமணக்கோலம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னையே தீபமாக்கி தொல்கல்விக்கொளி கொடுத்த தன்னிகரில்லாத் தலைவன் உயர் திரு கணபதிப்பிள்ளை மயில்வாகனம் அதிபர்

மண்ணிலே முத்தான மக்களைப் பெற்றெடுத்து
விண்ணதனில் ஈசனரர் தான் சேர்ந்தான் - கண்ணெல்லாம்
பாரிலே நீர் வந்து பாரையாய் உன்திருவிடைப் பணியை
தமிழர் பழம்பதி குருக்கள் மடத்து தாயவளின்
திங்கள் எனத் திகழ் வதனச் செம்மல் - தங்கநிகர்
குணவாளன் தக்க திரு சரவணமுத்து
பங்கமில்லாப் பண்பாளனையே பரமநவன் ஏன் பறித்தான்.

கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம் செய்திட்ட நல்லறத்தில்
செல்வத் திருமிக்க சீராளன் உன் சிவ பணிகண்டார்
சிந்தை நிறை கல்வி செகத்திலுறை கரப்பந்தாட்டப் பணி
சேர்த்தது அதிபர் பணி செம்மையாம் சேவை உபதபாலதிபர்
ஆசிரியர் வள்ளியம்மையின் கரம் பற்றி சீரான வாழ்வு கண்டாய்
ஏகனருளால் எழில் மக்கள் இருவர் கண்டாய்

கறைப்படாக் கரங்களுடன் கடமையில் சிறந்து நின்றாய்
காலத்தால் அழியாத கண்ணியம் காத்து நின்றாய்
உலகத்தோர் போற்ற உறவுகள் காத்து நின்றாய்
உயிரினும் மேலொழுக்கம் உத்தமனின் வழிநின்றாய்
நிலையற்ற வாழ்வினிலே முருகனே கதி நின்றாய்
நீடு புகழோடு நேசன் நீ உறங்கிவிட்டாய்

கண்கள் குளமாக கலங்கி துடிக்கின்றார் - மக்கள், மருமக்கள்
கவலையுடன் கண்ணீர் சொரிகின்றாள் உன் மனையாள்
எங்கள் உளம் வாழும் ஈடில்லா சோதரனே
என்றென்றும் இறை நிழல் இனிதமர துடிக்கின்றோம்

அன்புடன்
**கலாபூசனம் மாசி திருநாவுக்கரசு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்/ களுதாவளை இராம கிருஷ்ண வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி 1993.06.02ல் ஓய்வு பெற்ற அதிபர் திரு.க.மயில்வாகனம் அவர்களுக்கு ஆசிரியர்கள் கூறும் வாழ்த்துப் பா

இராம கிருஷ்ண மிஷனை தாபித்த வித்தகனின்
நாமத்தைக் கொண்டு நல்ல பணி செய்த
பண்பாளர் அதிபர் மயில்வாகனம் ஐயா பணி
கூறாமல் இருக்க நா கூசாதோ!

குருக்கள்மடத்தைப் பிறப்பிடமாய்க் கொண்டு
குருவாக குருநாகல் வல்பெரத்து வெவவில் சிறப்புடன் பணிசெய்து
பொறுப்புடன் அதிபராய் களுமுந்தன்வெளியில் கடமைபுரிந்து
விருப்புடனே களுவையூரில் கல்விக்கு ஒளி கொடுத்தாய்

இரண்டாண்டு காலம் இணைந்தொன்றாய்
இதயம் கவர் தொண்டு செய்து
இளைப்பாறும் வேளையிலே சேவைதனை
திரண்டொன்றாய் வாழ்த்துகிறோம் - புகழ் வாழ

அன்பு கொண்டு ஆசிரியுரை அணுகும் - அவர்
ஆற்றல் கண்டு வாழ்த்துகிறோம்
பண்பு கொண்ட தலைமைப் பணியிலே
பயன் பெற்று வாழ்த்துகிறோம்

மாண்புடனே பேணும் மதிநுட்பம் கண்டு
மகிழ்வு கொண்டு வாழ்த்துகிறோம்
தொண்டு கண்டு தோழமை கொண்டு
தொழுதே வாழ்த்துகிறோம்.

முப்பதாண்டு சேவைதனை முனைப்புடனே செய்து
முடித்து வைத்த முதல்வனை வாழ்த்துகிறோம்
தப்பேதும் அற்ற தளராத பணி செய்த
தலைவனை வாழ்த்துகிறோம்.

பொங்க செல்வம் புகழ் பெற்று!
எங்குமே சிறப்புடன் என்றும் விளங்கும்
மங்காத பெயருடன் மகிழ்வு கொண்டு
மங்களமாய் நீடு வாழ வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியா சென்ற போது



London சென்ற போது



செல்லக்கதிர்காம ஆலயத்தில்





London இல் மகன் மருமகள் பேரனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனைவியுடன்



பேர்த்திகளுடன்



88வது பிறந்தநாளின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பேர்த்தியின் திருமணத்தின் போது



மகளுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா

◇◇◇◇◇◇◇◇◇◇◇

எனது அன்பு தெய்வங்களில் ஒன்றான எனது தந்தையை இழந்து தவிர்க்கிறேன். நான் லண்டனிலிருந்து மட்டுநகர் வந்து விட்டேன் என்று தெரிந்துதான் போகிறேன் என்று சொல்லிவிட்டு எங்களை விட்டு பிரிந்து விட்டீர்களே அப்பா!!!, ஏன் இந்த அவசரம்?. என் மகன் எனக்கு ஈமைக்கிரிகைகள் செய்ய வந்துவிட்டான் என்ற தைரியமோ?.

உங்களை வீட்டிற்கு மீண்டும் கூட்டி வந்து உங்களோடு உறவாடி புன்னகையை ரசிக்க ஆசைப்பட்ட எனக்கும் உறவினர்களுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கவில்லையே அப்பா! அப்பா நீங்கள் எனது அப்பா மட்டுமல்ல இனிய நண்பனும் கூட. நான் விடுமுறையில் வந்து நிற்கும்போது உங்களுக்கு வெற்றிலைக்கூரும், வீரகேசரி பேப்பரும் வாங்கி தருவேனே!! இனி அந்த காலம் எப்போ வரும் அப்பா?.

நான் ஊர் வந்த காலங்களில் எமது கிராமத்தில் உறவினர்கள் வீட்டிற்கு நீங்களும் நானும் சேர்ந்து வீதியால் நடந்து போகும் போது எல்லோரும் ஐயா ஐயா என்று கூப்பிடும் குரல் இன்றும் என் காதில் கேட்கிறது. காலையில் எழுந்தவுடன் முற்றத்தில் பூக்கள் பறித்து கடவுளை ஒவ்வொரு நாளும் வணங்குவீர்களே அப்பா!! அந்த கடவுள் உங்களை அழைத்து விட்டாரோ?

சிறு பராயத்தில் இருந்து நீங்கள் எங்களோடு பழகிய காட்சிகள் எனது கண்களை கண்ணீரால் நனைக்கிறது அப்பா!!! நீங்கள் பாடசாலை அதிபராக களுமுந்தன்வெளி கிராமத்தில் எப்படி மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும், கல்வியையும் கொடுத்த விதம் பற்றி ஒரு மாணவன் விபரித்ததை பார்க்க உடம்பு சிலிர்க்கிறது அப்பா!!

உங்கள் வஞ்சகம் இல்லா மனமும், மற்றவர்களோடு அன்பாய் பழகியதையும் நான் ரசித்து இருக்கிறேன். சரவணமுத்து ஐயா எங்களை விட்டு போய்விட்டார் என்று ஏங்கும் உள்ளங்கள் நிறைய உண்டு என் அப்பாவுக்கு ஈமைக்கிரிகைகள் செய்து அப்பாவின் அஸ்தியை அப்பாவின் விருப்பத்தின் படி எமது கிராமத்து கடற்கரையில் கரைத்தது எனக்கு திருப்தி.

அப்பா நீங்கள் வெகுதூரம் போகவில்லை உங்களை நேசித்த ஒவ்வொருவரது மனதிலும் வாழ்கிறீர்கள். இந்த கடினமான காலத்திலும் கூட எத்தனையோ அன்பு உறவினர்களும் மற்றும் குடும்ப நண்பர்களும் வருகை தந்து கொண்டிருப்பதை அப்பா நிட்சயமாக அறிவார்.

எனது முகப் புத்தகத்தில் அப்பாவுக்கு நன்றி தெரிவித்த அனைவருக்கும் நன்றி.

**நன்றி**

**மகன் மற்றும் உறவினர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ
ஸ்ரீராம ஜெயம்
மகாவிந்த மென்னும்

# வைகுந்த அம்மானை

## விநாயகர் துதி

### நேரிசை வெண்பா

தக்கபுகழ்நெறியுந் தருமரவர் வைகுந்தம்
புக்கப்பெருங்கதை புகலவே – மிக்க
வியமுகத்தான் பாரதத்தை மேவிக்கூத்தாடும்
கயமுகத்தான் பங்கயத்தாள் காப்பு.

கரிமுகப்பிள்ளையாரே கணபதியே முன்னடவாய்
அரியதவத்துதித்த ஐயங்கரனே முன்னடவாய்
ஏடுதவறாமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவறாமல் கொழுந்தோலைசாயாமல்
பரவிவழுவாமல் பரிந்தெனக்குமுன்னடவாய்
வெட்பாலைக்குள்ளிருக்கும் சப்பாணிப்பிள்ளையாரே
சப்பாணிப்பிள்ளையாரே பொற்பாதம்யான்மறவேன்
பொற்பாதம்யான்மறவே பொன்னின்கணபதியே
தப்பாமலிக்கதைக்குத் தக்கோனேமுன்னடவாய்
பஞ்சவர்கள் தன்கதையை பட்சமுடன்யான்படிக்க
செஞ்சொல்சிவனுடைய தேவிதிருமகனே
குற்றங்கள்வராமல் குறையொன்றும்நேராமல்
கற்றமட்டும்யான்படிக்க கணபதியேமுன்னடவாய்

### சுப்பிரமணியர் துதி

தேவரெல்லாம்வணங்குந் தேவர்சேனாபதியே
மூவரெல்லாம்புகழும் முருகோனேமுன்னடவாய்
புள்ளிமயிலேறும் புனிதவடிவேலா
வள்ளிமணவாளா வந்தெனக்குமுன்னடவாய்
திருத்தணிவேலரேயுன் சீர்பாதம்யான்மறவேன்
கருத்துடனேபாடக் கட்டழகர்ஐவர்கதை
பஞ்சவர்கள் தன்கதையை பற்பலந்தான்படிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலொன்றில்லாமல் அடியேனும்நான்படிக்க
எம்பிரான்முன்னடக்க என்கதையும்பின்னடக்க
தம்பிரானானசிவ சண்முகனேமுன்னடவாய்

### சரஸ்வதி துணை

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
பூவிற்பிறந்தவளே பூலோகரட்சகியே
மாசற்றதீபமே மன்னர்புகழ்விளக்கே
நேயத்துடனெனக்கு நெஞ்சிற்குடியிருப்பாய்
பஞ்சவர்களைவரும் பட்சமுடன்வைகுந்தந்
தஞ்சமுடனெல்லோருந் தட்சணமேசேர்ந்தகதை
அல்லல்மிகநீங்கி ஐவர்களுஞ்சேர்ந்தகதை
புல்லனென்வாயில் புகழ்ச்சியாய்பாடுதற்கு
நாவுதவறாமல் நல்லோசைதாருமம்மா
குரலில்குடியிருந்து குரலோசைதாருமம்மா
மறலியணுகாமல் வரமீய்ந்துகாருமம்மா
வல்லமகமாயி வாக்கிற்குடியிருந்து
நல்லவரந்தருவாய் நாவிற்சரசுவதியே
நித்தமுமெந்தன் நினைவிற்குடியிருந்து
பத்தியாயான்பாடப் பார்வதியேமுன்னடவாய்.

### ஈஸ்வரர் துணை

ஆதிபரஞ்சுடரே அரியசிவனாரே
ஜோதிமணிவிளக்கே தூயவருட்கடலே
கற்கண்டேசர்க்கரையே கனிவுள்ளமுக்கனியே
சொர்க்கபதியரசே தூண்டாச்சுடரொளியே
எள்ளுக்குளெண்ணெய்போல் எங்குநிறைந்தபொருளே
மாலுமயனறியா வண்ணப்பரஞ்சுடரே
ஆலவிடமுண்ட ஐயனேமெய்ப்பொருளே
பாண்டவர்கள் தன்கதையை பகவானேயான்பாட
ஆண்டவனே நீருமெந்தன் அடியேனிடநாவில்
இடறுகள்வராமல் இன்பமாயான்பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவாகயென்னாவில் அய்யனே நீவருவாய்
இகழ்ச்சிகள்வாராமல் இடுக்கொன்றும்நேராமல்
மகிழ்ச்சியாயெந்தனுக்கு மகாதேவர்முன்னடவாய்.

### மகாவிஷ்ணு துதி

அண்டமளந்தவரே ஆதிநாராயணரே
கொண்டல்நிறமுள்ள கோபாலமாயரே
கஞ்சன்வலதழித்த கார்மேகாமுன்னடவாய்
செஞ்சொல்கோதையுடன் தேவிதன்பாலகனே
எல்லையளந்தவனே இரணியனைக்கொன்றவனே
கல்லைபெண்ணாக்கிவைத்த கர்த்தாவேமுன்னடவாய்
பெண்ணை திருவடியே யிடைச்சிகள்கையாலே
வண்ணமுடனடிகண்ட மாயவனேமுன்னடவாய்
ஆண்டவனேயிக்கதைக்கு அருள்புரியவேண்டுமையா.

### *கதையின் வரலாறு*

காரானைமாமுகனே கணபதியேகாப்பாக
சீரானமாமுகனே செல்வனேமுன்னடவாய்
எந்தன்குருவாழ்க ஏகம்பாமுன்னடவாய்
தந்திமுகத்தோனே தற்பரனேமுன்னடவாய்
ஆத்திமதிசூடும் அரனார்திருமகனே
வந்துதவிசெய்வாய் மகாபாரதக்கதைக்கு
முந்திபரமேசுவரனார் மொழிந்தவசனமிது
இப்புவியிலுள்ளோர் எழுதிப்படிப்பதற்கு
செப்புகிறேன்லட்சுமியாள் சிதேவியுமாக
ஞானமதில்மெய்ஞ்ஞானம் நாளும்பரமபதம்
வாலைசரசுவதி யேவந்திருந்துகூத்தாட
ஆகாதசேடன் அநியாயநிஷ்டூரன்
மாபாவிசெய்த வஞ்சமெல்லாம்பொறுத்து
மகாபாரதக்கதையை வகுத்துரைத்தசாஸ்திரத்தில்
பூபாலரைவர் பொருந்துதுரியோதிரனும்
வென்றுபுவியாண்டு விஷ்ணுபதம்சேர்ந்தகதை
ஒன்றுமறியாதான் உரைத்தேன்புவிமீதில்
பெரியோர்பொறுத்தருளும் பிள்ளையிவனெனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாதான்சொன்னமொழி செந்தமிழோர்தான்பொறுப்பீர்
பாவாணர்பாதம் பணிந்துநமஸ்கரித்து
வைகுந்தவம்மானை துதிக்கத்துணையாக
சொல்லுகிறேன்ஞானமெனச் செப்புகிறேனம்மானை
வெல்லுகிறகாலமென்ன வேந்தன்துணையாயிருந்து
பார்புகழ்தமிழ்நேசர் பாவாணர்தான்வாழ்க
திங்கள்மும்மாரி சிறந்துமிகப்பொழிய
பொங்கும்புகழ்காவேரி பொய்யாகாலெந்நாளும்
தேசஞ்செழித்துவரச் செங்கோல்தழைத்தோங்க
இராசன்புவியாள நற்றவங்களுண்டாக
தேவாலயம்விளங்க திருப்பணிகளுண்டாக
மூவர்முதலாக முப்பத்துமுக்கோடி
தேவர்களும்வாழ்க செங்கதிரோனும்வாழ்க
நாராயணர்வாழ்க நான்மறையுற்தான்வாழ்க
தராதலத்தோர் தபோதனருந்தான்வாழ்க
பஞ்சாட்சரமும் பகருமோரெட்டெழுத்தும்
துஞ்சமாலெந்நாளும் துதிப்போர்மிகவாழ்க
வீறுதிருநாமமுதல் வெண்ணீறுமுண்டாக
கூறுமுபதேசம் குன்றாமலெந்நாளும்
நன்றாய்சிவன்றனையும் நாராயணன்றனையும்
ஒன்றாகக்காண்போ ருள்ளமகிழ்ந்திடவே
நல்லோருமிப்புவியில் நாட்டில்மிகவாழி
இல்லாருமுள்ளோடு மெளியோர்வலியோரும்
எண்ணரியஸ்ரீரங்க ராமனிடதன்சீஷன்
மண்ணுலகில்வெங்கியருள் வடிவான்மனமகிழ்ந்து
அல்லலறவே அருவினை கள்தானறவே
சொல்லியவைகுந்தகதை சொல்லறவேயான்பாட
தண்ணளிசோர்வீதியிலே தழைத்தாலின் கீழிருக்கும்
விண்ணவர்கள்போற்றும் விநாயகனேமுன்னடவாய்
தோராதசூரனையுந் தொலையாக்கிவஞ்சமதை
வேறோடறுத்தெரியும் வேலவனே முன்னடவாய்
துள்ளுமிடையாளே சொற்கலைக்குவல்லவளே
தவளநிறத்தாளே சரஸ்வதியேவாக்கருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும்கலைபகருஞ் செந்தமிழோர்கள் முன்னே
அரியவைகுந்த வம்மானைச்சொல்லுதற்கு
வரிசைபெறும்வையகத்தில் மாரிபொழிவதுபோல்
பேச்சறியாப்பிள்ளை புலம்புகிறேன்வாய்திறந்து
காலையில்குயில்கூவக் கண்டேயதற்கிணையாய்
கூவிக்குளறுமந்த கூகையொக்குமம்மானை
ஆதரவாயானுரைத்த வம்மானைதன்னிலே
ஏதுபிழைவந்தாலும் என்னைபழிசொல்லாமல்
வாசமுள்ளபாடலென்று மானிலத்தோர்கொண்டாட
நேசமுடனேபெரியோர் நிந்தைமிகச்சொல்லாமல்
சிந்தைமகிழ்ந்துகொள்வீர் சிறியோனுரைத்தமொழி
சந்தேகங்கள்சொல்லாமல் தரணியிலுள்ளவர்கள்
விண்ணவர்கள்போற்றும் விநாயகனேமுன்னடவாய்
ஆசையுடன் படித்து அன்புவைத்துகேட்டவர்கள்
ஓசையுடன்வாழ்த்தி உகந்திருப்பீர்கண்டீரே
ஆறுமுகன்துணையால் அவையடக்கம்பாடுகிறேன்
பூருவமுள்ள புலனும்வெளியாகி
வையகத்தோர்கேட்க வழுத்துகிறேனிக்கதையை
சர்ப்பனைகள் செய்தறியா தருமருந்தம்பியரும்
அத்திபுரநகரம் ஆளுகிற நாளையிலே
புத்தியுள்ள பஞ்சவரும் பாரளந்தமாயவரும்
நீதிமறவாமல் நெடுநாட்புவியாண்டு
ஆதிமகாவிஷ்ணுபதம் ஐவரும்சேர்ந்தகதை
காலதுவாபரம்போய் கலியுகம்வந்ததினால்
சாலவேகோபாலர் சங்கையல்லவென்றுசொல்லி
உள்ளத்துக்குநல்ல உபாயமனதிலெண்ணி
சீருடனேவைகுந்தம் சேர வென்றுசம்மதித்து
நாருடனேபூவும் நன்றாகச்சேர்ந்ததுபோல்
பஞ்சவர்களைவரையும் பார்த்தார்களப்போது
தஞ்சமுடன் மாயவருந் தரணிதனிலெண்ணிச்
சிந்தைதனிலெண்ணித் திருமால்மனமகிழ்ந்து
விந்தையாயிக்கதையை மேதினியோர்தான்துதிக்க
அம்மானையென்று அரியவைகுந்தகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மானிலத்தோ ரெழுதிப்படிப்பதற்கு
வாக்கருள்செய்வீர் வடவான்மொழிந்தகதை
பார்க்கவிருத்தமென்று பாடவேயிக்கதையைச்
சுருக்கமாய்ப்பாடினதைத் தோற்றமுடனேதெரிந்து
பெருக்கவிரிவுசெய்து பெருமாளபதம்போற்றி
ஒன்பதுநூறு ஒன்று நூறாயிரமாம்
என்றுமுத்திசித்தி இதுவேபொருளாக
திருத்தமுடனிக்கதையைச் சிறப்பாகச்சீருடனே
விருத்தமுடன் சொர்க்கமும் விபர் தமாய்ப்பாடி
பூலோகமெல்லாம் புதுமையெனக்கொண்டாட
மாயோனுதவிசெய்வார் வைகுந்தமென்பார்க்கு
மெய்கண்டவேத வியாசர்மொழிந்தகதை
வைகுந்தஅம்மானை மகாபாரதமுடித்து
குருகுலத்திலுள்ள கொற்றவர்கள்நூற்றொருவர்
போர்க்களத்தில்மாண்டு போனபின்பாண்டவர்கள்
தருமருடனைவருந் தம்பியருந்தானிருந்து
வாழ்ந்தகதையும் மற்றுமுன்ளோர்தன்கதையும்
தாழ்ந்தகலிவருமுன் தங்கலிமேதான்தெரிந்து
காளைமுகில்வண்ணன் கண்ணிரருளாலே
வாளபிமன்னனுக்கும் மன்னன்பரிச்சித்துவுக்கும்
பட்டந்தரித்துப் பாராளவைத்ததும்
நடந்துவழிசெங்கோல் நாட்டுந்திறமறுந்து.

## விருத்தம்

ஓம் குருவாழ்கவென்று உலகெலாமகலநீக்கி
பாங்குடனைந்துபேரும் பத்தினிரோபதையும்
ஈங்குள்ளகருமமெல்லா மென்னெனவகையுமற்று
தீங்கிதுசெகமென்றெண்ணித் திரளிலேநடந்தஞாயம் 1

மண்ணுள்ளோர்வாழவென்று மற்றுமுள்ளமூவர்தேவர்
விண்ணுள்ளோர்வாழவென்று மேதினிமுனிவர்ஞானம்
அண்ணுள்ளோர்திருமால்பாத மைவருஞ்சேரவென்று
தண்ணுள்ளோர்வாழ்கவென்று கலைமகள்காப்பதாமே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

சொல்லுகிறேனல்ல சோலிங்கத்தான்போற்றி
வெல்லுகின்றகாலம் வெகுளியின்தன்மையினால்
வைகைநதியான் வாழ்மதுரையம்பதியான்
மெய்க்கமலமலர்பூத்த விபூதிபஞ்சாட்சரந்தான்
எளியோர்வலியோருக்கு ஏழையிவனெனவே
தெளிவோர்க்கடிபணிந்து சீஷரில்சீஷனுமாய்
வணங்கிநமஸ்கரித்து வாழ்த்துகின்றாரம்மானை
அணங்கிடனுடசீர்பாதம் ஆறாமலிப்போது
கூறுந்தமிழுடைய குருகுலத்தில்பஞ்சவர்கள்
பேருந்தவமும் பெருமைகளுமுண்டாக
சொன்னதமிழ்பெருகச் சொன்னதுவேயம்மானை
அன்னமெனுமீனாட்சி யம்மாள்துணையெனவே
விரித்துநான் சொல்லுகிறேன் மேதினியோர்தான்பாட
சிரித்துப்பழியாமல் சித்தமேதான்பொறுத்து
ஆளும்பெரியோர் அடியேனுரைத்ததமிழ்
கேட்பார்வைகுந்தகதை கிருபையுடனேயிருந்து.

## பஞ்சவர்கள் அத்திபுரத்தை அரசு செய்தல்

இந்நாளளவும் இடத்திலிருந்தபடி
முன்னாளிற்பஞ்சவர்கள் மூர்க்கமுடனேயிருந்து
வேதமறவாமல் வேதியரும்பூசுரரும்
நாதமணிகீதம் நற்சங்குவிதானமுடன்
கேள்விகேளாமல் கேட்குமிப்புராணகதை
நீதிநெடுநியாயம் நெறிமுறைமைதப்பாமல்
ஆதிமகாவிஷ்ணு ஐவருமேபோற்றிசெய்து
மந்திரிமார்சூழ்ந்திருக்க மகுடமுடிவேந்தருடன்
தந்திரிமார்வந்திருக்க தார்வேந்தன் காத்திருக்க
அந்தணரும்வேதியரு மானதபோதனரும்
செந்தமிழ்சேர்வாணர்களும் தேவரிஷிமாதர்களும்
அன்னசொர்னதானம் அறமேபெரிதாகி
மன்னவர் தங்கள் செங்கோல் வாழுமனுநீதி
வாழுவாதசெல்வ மனுநீதிதப்பாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிசெழித்துவர புவிராசன்வாழ்ந்திருக்க
சாமிதிருமால் சகாயமன திலெண்ணி
சேனைர தகஜங்கள் திக்கெங்குஞ்சூழ்ந்துவர
ஆனையின்மேல்முரசு அதிரப்பரிவாரம்
சங்கீதராகம் சகலகலைமுழங்க
இங்கிதமாய்நாளு மிடையூறுவராமல்
கோத்திரங்களெல்லாம் குபேரனைப்போல்வாழ்ந்திருக்க
பார்த்திருந்ததருமர் பஞ்சவர்கள்தன்னுடனே
மக்கள்மனைவிசுற்ற மகிழ்ந்துசிலகாலம்
திக்கெங்கும்போற்றித் திசைகளெட்டுந்தானதிர
ஆளுகின்ற அத்திபுரம் வகையாய்முடிதரித்து.

## அபிமன்னனுக்கு பிள்ளை பிறந்தது

வாழ்கின்றநாளில் வாளபின்தேவி
சுந்தரியுங்கர்ப்பமுடன் தோற்றமுடனேயிருந்து
மைந்தனையுமீன்றாள் மாணிக்கம்போலவேதான்
குழந்தைபிறந்ததென்று கொற்றவர்கள்தான்மகிழ்ந்து
திங்களொன்றுமாகித் தேமாங்கனிபோல
பூரித்துநாள்தோறும் பொன்போல்வளர்க்கலுற்றாள்
பார்த்துமேபுத்திரனும் பருவமாய்த்தான்றேறி
அன்னைமுகம்பார்த்து ஆஊவெனக்குளறி
தத்திவிளையாடித் தாவித்தவழ்ந்துவரும்
வெற்றிவிசயன் மிகமகிழ்ந்துபேரனுக்கு
தண்டைசிலம்பு சதங்கையுடன் தாள்பூட்டி
பூஷணமும்பூட்டிப் பொன்னால்லங்கரித்து
வாசமுள்ளவபிமன் மைந்தனுக்குபூஷணங்கள்
தேறியவில்விஜயன் சிந்தைமகிழ்ந்திருந்து
தும்பியமுதிடுமாம் சொல்லுபயின்றிடுமாம்
அம்புலியைவாவென்று ஆனையசைந்தாடி
செங்கீரையாடிச் சிலகாலந்தானாடி
வங்காரமுத்தமொன்று மருவியதோர்சப்பாணி
சிற்றில்விளையாடி சிறுதேருந்தானுருட்டி
முத்தியொருவயது முழுதும்பருவமதாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தடியுமுண்டு தம்பியிவனாமெனவே
பத்தடியுமிட்டு பருவமொருவயதாக
தெளிந்துமிகபஞ்சவர்கள் சிந்தைமகிழ்ந்திருந்தார்
மூன்று வயதாகி முலைமறந்துவீதிசுற்றி
ஊன்றுஞ்சிறுகோலும் உண்டைவில்லுந்தான்பிடித்து
நாலுவயதாகி நடையுடைபாவனையும்
ஐந்துவயதாகி ஆனைரதமேறி
கொஞ்சும்பறியேறிக் கொற்றவனும்வித்தைக்கற்று
ஆறுவயதாகி ஆடைவெகுபூஷணமும்
நீறும்புனைந்து நெடியோனை நெஞ்சில்வைத்து
ஆசானடிபணிந்து அரியசிலம்பணிந்து
இராஜதிராஜனென்று நாற்றிசையும்கொண்டாட
வில்வித்தைசாஸ்திரமும் விதவிதமாய்த்தான்படித்து
கல்வித்தமிழறியக் கட்டழகன்வேணுமென்று
ஏழாம்வயதில் எழுத்தறிந்துஓதுதற்கு
மாலபிமன்னன் மகனும்படித்திடவே.

**அபிமன்னன் பிள்ளையை ஐவர்கூட்டி பள்ளியில் வைத்தது**

ஆதிகுருவிடத்தில் ஐவரிடசேதிசொல்ல
ஓதுவிக்கவேணுமென்று ஒப்புவித்தாரம்மானை
அரிஓமென்றட்சரத்தை அரியோன்றன்பேரனுக்கு
தெரியப்படுத்தி சிற்றறிவும்பேரறிவும்
எழுத்தினிடஅட்சரமு மெல்லாம்படித்தெழுதி
அழுத்தமுடனின்ற அன்பத்தோரட்சரமும்
படித்துவிரைவில் பலநூலுந்தானறிந்து
வகுத்ததமிழால் வகையாகத்தானறிந்து
ஆசுமதுரமுதல் அவையடக்கமுள்ளதெல்லாம்
பேசுந்தமிழ்பலவும் பிரியமுடன்தான்படித்து
துலங்குமகிழ்நாகரமும் நயனகுறிபாஷைகளும்
மால்போன்தான்படித்து வயதும்பன்னிரண்டாகி
தனுசாஸ்திரம்படித்து தரணியெல்லாம்மகிழ
மனுவிக்கியானம்நீதி மற்றுமுள்ளவித்தைகளும்
பாஷைபதினெட்டும் பரிச்சித்துதான்படித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசைபெறத்தேசம் உலகமெங்குந்தான்மகிழ
நல்லவித்தைகற்றிருந்தான் நாராயணன்பேரன்
செல்வத்தைகற்று சிறுவருடன் கூடி.

## பரிசித்து வேட்டையாடப் போகிறது

தான்வேட்டையாடவென்று தாரணியிற்பிள்ளையுடன்
வனவேட்டையாடக் கையிற்சிலையெடுத்து
காளைகளாய்க்கூடி வனம்புகுந்துநாலிடமும்
சோலைகளுங்காவுகளும் சுனையும்மலைபலவும்
ஓடிவிளையாடி உயர்ந்தமலைதானேற
தேடிக்கரடிபுலி சிங்கங்கள்ஆளியுடன்
நான்மறைகள்புலிகள் வராகந்தான்வதைத்ததுவும்
மேன்மையுள்ளதேனும் விருந்தாகும்நற்கனியும்
வாழைப்பழமும் வருக்கைபலாக்கனியும்
விளையாடிப்பாலர் வெகுளிமிகவாகி
இளையாமற்சற்றும் இன்னதென்றும்பாராமல்
காடுகலைத்துக் கடுகமலையேறி
ஓடுகிறபாம்பை உயிரைவதைசெய்து
ஆடிவிளையாடி அக்கழித்துநாகமதை
கோட்டிமிகப்பண்ணி கொன்றாருயிர்தன்னையும்
நாகமதுசெத்ததையும் நலமாகவேயெடுத்து
வேகமுடனவ்வனத்தில் விளையாடிப்பாலர்களும்
அங்கேசடைமுனியும் ஆனதவமுனியும்
எங்கேசிவன்பாதம் என்றைக்குக்காண்பேனென்று
இருகைவிரித்து இருந்தார்சிவயோகி
அங்கேசிறுவர் அவர்செயலைப்பாராமல்
சுடரில்விழும்விட்டிலைப்போல் துன்பமிகநினைத்து
இடர்வருமென்று எண்ணமதுதோன்றாமல்
நையாண்டிபண்ணி நகைத்துவிளையாடி
ஐயாண்டுமாறுமென்று அரவையெடுத்துவந்து
கேடுவரும்போது கெடுமதிகள்தோன்றும்போல்
பாடுவருமென்று பரிச்சித்தறியாமல்
ஏதுவருமென்று எண்ணியவன்பாராமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீதுவினைதன்னைச் சிறுவனறியாமல்
சர்ப்பத்தைத்தானெடுத்து சன்னியாசிதன்கழுத்தில்
உற்புத்திதானுனக்கு உடமையிதுவென்றணிந்தான்
கண்டந்தமாமுனியுங் கண்கள்பொறிபறக்க
விண்டந்தகோபம் வெளியிலேகோரமதாய்
ஏண்டாசிறுபயலே என்மீதிற்பாம்புதனை
வேண்தாதார்போல விடவரவைப்போட்டாயோ
தீண்டாதேயுன்னைச் சீறும்பெரியவரம்
ஆனாலுனக்கு அரவால்மரணமென்று
ஞானபரனான ஞான்முனிசாபமிட்டார்
சொன்னமுனிசாபம் துடைக்கஅறியாமல்
என்னமோவென்று ஏகினர்காணம்மானை
தன்னிகரில்லாதொரு தனஞ்செயனார்தன்பாதம்
சென்னிகவிழ்ந்து சிறுவருடன்தான்கூடி
அத்திபுரம்நோக்கி ஆரணியம்விட்டகன்று
வெற்றிமிகப்பேசி விளையாடிக்கொக்கரித்து
பட்டணமுஞ்சேர்ந்து பரிச்சிந்வந்திருந்தான்
அட்டதிசைபுகழும் ஐவர்மிகமகிழ்ந்து
வில்லெடுத்துக்காணில் வேட்டையாய்வந்ததுவும்
தொல்லெடுத்தான்பேரன் சூரனிவனெனவே
அங்கங்குளிர்ந்து அன்புமிகப்பேசி
சாபந்தெறிந்துஐவர் தங்களிலேசம்மதித்து
நன்மைசெய்தஞாயம் நமக்கேபலித்ததென்று

### *பரிட்சித்துவுக்குக் கலியாணம் செய்கிறது*

சிந்தைம்மகிழ்ந்து சிறுவன்மேலன்புவைத்து
கன்னிகலியாணம் காசினியோர்தாமறிய
சீரகஜவர் சிறப்பாகப்பேரனுக்கு
நேராகநாள்முகூர்த்தம் நிச்சயத்தாம்பூலமிட
வேதியரைத்தானழைத்து வேண்டிமுகூர்த்தமிட
ஆதிநாராயணரை ஐவரும்போய்தெண்டனிட்டார்
சுந்தரிதன்மைந்தனுக்கு சோபனமுந்தான்முடித்து
தந்திரமுமின்னதென்று சாற்றுவீரெம்பெருமாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுதிருமேனியனே அபிமன்னன்மைந்தனுக்கு
களபமயில்மேனியனே கல்யாணந்தான்முடிய
வகையேதெனக்கு மாயோனேசெய்யுமென்றார்
தொகைவகையும்ஐவருக்கு தோற்றமுடனினைந்து
நால்வகையும்பார்த்து நாராயணர்தாமும்
பால்போலும்வங்கிஷத்தால் பண்பானகோத்திரத்தில்
இன்னபடியென்று இதமாகச்சம்மதித்து
சொன்னதொருமாயோனை தொழுதுமிகப்பணிந்து
சாத்தகியாழ்வார் தானின்றமைந்தனென்னும்
ஏத்ததுளசி மகாராஜனின்றெடுத்த
செல்வியென்னும்பூமடந்தை சிறியாளைமாலையிட
நல்லவிஷயமென்று நாராயணரைப்பெண்கேட்க
நாடிநடந்தார்கள் நல்லதொருபஞ்சவர்கள்
தேடித்துவாரகா புரிதனிலேசென்றுபுக்கி
கண்டார்கள்மாயவனை கமலமலர்பாதமதில்
தெண்டனிட்டுவாய்புதைத்துச் செப்பினாரம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுகோபாலர்
சந்தோஷமாகச் சாத்தகியைவாவெனவே
உன்னுடையமைந்தன் உற்றதுளசியவன்
தன்றுடையமைந்தன்மகளைத் தனஞ்செயன்பேரனுக்கு
பூமடந்தையென்னும் பொற்கொடியையிப்போது
தாமனபிமன்னன் தன்னுடையமைந்தனுக்கு
மாலையிட்டுநன்றாக மணஞ்செய்யுமென்றுசொல்லி
சேலையுமஞ்சள் செலுத்துமென்றைவரையும்
மாமனுரைக்க மன்னர்களாமெனவே
தூயதொருமுகூர்த்தஞ் சொல்லுமென்றார்வேதியரை
கேட்டுவொருதினத்தில் கிருபையுடனெல்லோரும்
தீட்டுபுழைவர் திருமாலிடந்தனிலே
கொண்டுவந்துவைத்தார்கள் கூறையொடுபரியும்
கண்டுமகிழ்ந்து காயாம்புமேனியனார்
பாக்கியமாமெனவே பச்சைமால்கொண்டாடி
வாக்கியமுஞ்சொல்லி மகிழ்ந்துதான்பஞ்சவர்கள்
நின்றவரைப்பார்த்து நெடியோன்மனமகிழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயன்றிருமால் அருளினர்காணம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுபஞ்சவர்கள்
விந்தைமலர்பாதமதில் விழுந்துநமஸ்கரித்து
வந்தார்களத்திபுரம் வண்ணமணிடபத்தில்
சந்தோஷமாகச் சகலரையுந்தானழைத்து
அத்திபுரத்திலுள்ள அன்னசத்திவங்கிஷமும்
சித்திவிநாயகரைத் தெரிசித்தடிபணிந்து
மூலப்பொருளே மூர்க்கமுள்ளஐயாவே
ஞாலப்பொருளே நமஸ்கரித்துத்தான்தொழுது
பாலனெங்கள்மைந்தன் பரிச்சித்துவேந்தனுக்கு
கால்பலமாயிருந்து கலியாணந்தான்முடித்து
முன்னிற்கவேண்டுமையா முக்கணனார்புத்திரனே
சென்னிக்குன்நின்ற சிரோன்மணியேமுன்னடவாய்
என்றுதுதிசெய்து இறையோனைத்தோத்தரித்து
சென்றுநகரில் சிறப்பானபட்டணத்தில்
வான்கமுகுநாட்டி வாழைமிகப்பந்தலிட்டு
தேங்காயிளநீர் தேன்கரும்புதானிறப்பி
வாழைக்கனியுடனே பலாக்கனியுந்தானூன்றி
தாழைமடல்மல்லிகைப்பூச் சரமாரியாய்நிறைத்து
பட்டாலலங்கரித்துப் பட்டுமேல்சுட்டிகட்டி
வட்டாரஞ்சூழ மாணிக்கமாலையிட்டு
கூடமலங்கரித்துக் கோபுரம்பாவனையும்
தெருவீதியெல்லாம் சித்திரங்கள்தானெழுதி
சாந்துபுனுகுநல்ல சவ்வாதுகஸ்தூரி
ஏந்துபரிமளங்கள் எங்கும்கமகமென்ன
வாசமுள்ளதெல்லாம் வகைவகையாய்த்தானிறைத்து
தேசம்புகழ தெய்வலோகம்போல
வைகுந்தம்போல வயிரவைடூரியத்தால்
செய்கின்றாரைவர் திருமால்மனமகிழ்ந்து
மருவுமலரும் மருக்கொழுந்துவாசனையும்
நாளும்முகூர்த்தம் நல்முகூர்த்தவேளையிலே
வாழுமரசாணியது மாணிக்கத்தூணாட்டி
அன்னைசுற்றமெல்லாம் அலங்காரமாய்கூடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னவர்கள்மன்னவர்கள் தேசத்தில்லுள்ளவரும்
திக்குகள்கோத்திரமும் சிறப்பாகத்தான்பூட்டி
முக்கியமாய்க்கலியாண முடிக்கவேவந்தார்கள்
வந்ததொருமன்னவர்கள் மகுடமுடிவேந்தரையும்
பந்திபந்தியாக பாவணர்சீலமுடன்
ஆனையொருகோடி அசுவமொருகோடி
சேனையொருகோடி தேருமிருகோடி
சங்கீதவீணை தவில்முரசுமல்லரி
எங்கும்முழங்க எங்களாம்பூரிகையும்
பேரிகைமத்தளமும் பேசுங்கிடுமுடியும்
வாரியொலியிட்டதுபோல் வானமுழக்கமுடன்
துத்திகவுரி திருச்சின்னந்தாரையுடன்
சத்திக்குமேகமன்ன தம்புருவுங்கின்னரியும்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்கள் மாதர்களும் செய்சோபனமுழங்க
மங்களமும்பாடி மறையோர்கள்தான்துதிக்க
சிங்காதனத்தில் திருமாலும்வந்திருக்க
மாப்பிள்ளைகோலமிட்டு மாளிகையுந்தான்புகுந்து
மூப்பிமார்தாதியர்கள் மொய்குழற்பட்டுடுத்தி
ஆடையுடுத்தி ஆபரணந்தான்பூட்டி
வாடைபரிமளங்கள் வாகளையாய்த்தான்பூசி
காலுக்குமிஞ்சியிட்டு கடுக்கன்சவளியிட்டு
கோலச்சரப்பளியுங் கொத்துமுத்துத்தாழ்வடமும்
வேடிக்கையாக விசையனுடபேரனுக்கு
சோடித்தார்வேணதெல்லாம் சொர்ணமயமாக
நாராயணன்பேரன் ராசாதிராசனுக்கு
சீராகநால்வரையும் தெரித்துநல்லபூஷணங்கள்
அரிசித்தமேமகிழ்ந்து அன்பானபேரனுக்கு
பரிச்சித்துவேந்தனுக்குப் பலமணியுந்தான்பூட்டி
துளசிமகாராஜன் துய்யதொருபெண்கொடிக்கு
வளையல்தரித்து வர்ணமிகப்பட்டுடுத்தி
பொன்னாலலங்கரித்து பிறைபோல்மையெழுதி
தேனாரும்சின்னமுல்லை செண்பகப்பூவாசமிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளையும்பெண்ணும் மதனும்இரதிபோல
சீப்பிட்டுமையெழுதி சித்திரம்போல்பொட்டுமிட்டு
வைத்துமகிழ்ந்து வந்துசொன்னார்மாயரிடம்
மாயவரும்ஐவருமே வந்துமேபந்தலின்கீழ்
தாயானகுந்தியம்மான் தேவிதனையழைத்து
உன்பேரனம்மா உந்தனபிமனிட
தன்பாலன்வீர சமர்த்தன்பரிச்சித்துவுக்கு
சுபசோபனமுத்துத் தோகையரேநீர்பார்க்க
வேணுமிருவென்று விளம்பினார்பஞ்சவர்கள்
பூணுமெனவேயிருந்து பொற்கொடியாள்தான்மகிழ்ந்து
திகழ்பெரியதாயார் பொற்கொடியாள்தான்மகிழ்ந்து
புகழும்நவரசமே திவ்வியமேமா தாவே
கற்புடையமாதாவே காந்தாரிதாயாரே
மைப்புடையோன்வாளபிமன் மைந்தன்பரிச்சித்துவுக்கு
அகலாதிருந்த அபிமரிடபுத்திரற்கு
செகலோகமெச்சச் செய்யுங்கலியாணம்
மகாதேவர்தன்னருளால் வருந்திமுடிப்பதற்கு
தாயாரேநீருந் தருமருடனிருந்து
செல்வக்கலியாணம் செய்விக்கவேணுமென்றார்
சொன்னவுடன்காந்தாரி தோகையரும்ஆமெனவே
அன்னம்போல்தான் நடந்து ஐவருடன்கூடி
நல்லதென்றுபக்கலில் நடுவேதான்வந்துநின்றாள்
செல்வக்கலியாணம் திருமாலவன்பேரனுக்கு
மணமுடிக்கவேணுமென்று மாயோனெழுந்தருளி
மணவறையிற்சென்று மாப்பிள்ளையைப்பிடித்து
கெண்டிநீர்வாங்கிக் கெம்பீரமாய்த்தான்வாங்கி
வண்டானமரர்கோன் மாயோன்மனமகிழ்ந்து
மனையைவலமாய்வந்து மகிழ்ந்துமணையேற்றி
இணையாகப்பெண்களை இப்படியேகூட்டிவந்து
நேரேமணமேற்றி நிர்ணயமாயுள்ளதெல்லாம்
செய்துமுடித்துச் சிறப்பாகபந்தலின்கீழ்
பைங்கொடிக்கும்மாப்பிள்ளைக்கும் பாங்குடனே நற்சடங்கும்
சாத்திரத்திலுள்ள சடங்குமுடிந்தபின்
தோத்திரங்கள் கூறக் குறவைமுழக்கமிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைரதமேறி அலங்காரமாய்வரவே
சேனைதளத்துடனே தெருவீதிசுற்றிவந்து
மங்கிலியந்தான்தரிக்க வரவேணுமென்றுசொல்லி
இங்கிதமாயானையின்மேல் ஏற்றினார்மாப்பிள்ளையை
கன்னியுந்தேரேறிக் கணவனுடன்தான்வரவே
இரவுபகலாகி இந்திரன்பட்டணம்போல்
அரவுயர்த்தான்பட்டணந்தான் அடக்கலுஞ்சொல்லலானான்
வானமெரிய வானத்தின்மீன்போலே
காணவந்துநிற்பாருங் கண்டுமகிழ்வாரும்
இந்திரனோவென்பாரும் இறைவனோவென்பாரும்
சந்திரனோவென்பாரும் சரணங்களென்பாரும்
மன்மதனோவென்பாரும் மார்க்கண்டனென்பாரும்
தருமர்க்குவந்துதித்தார் தார்வேந்தனென்பாரும்
பூவனமெங்கும் பூமலர்போல்தான்செறிய
பாவணராகப் படித்துவரச்சங்கீதம்
பட்டணத்திலுள்ள பலபேருந்தான்பார்த்து
கட்டழகன்தானவர கட்டழகைப்பாருமென்ன
வீதிசுத்தித்தான்வர கட்டழகைப்பாருமென்ன
கோட்டையும்பட்டணம் குதிரைத்தளத்துடனே
நாட்டையுஞ்சுத்தி நகரம்வலமாக
வந்துமணப்பந்தலின்கீழ் மாப்பிள்ளையும்பெண்ணுடனே
மாயனருளாலே வந்தார்மணவறையில்
ஆயனுடனைவர் அதிலிருந்தவேதியரை
ஜாமத்துக்குள்ளாக தாலிகட்டவேணுமென்று
ஓமமும்வளர்க்கவென்று உத்தாரம்பண்ணினார்கள்
கும்பமுடன்மாவிலையும் குசபுல்லுநூலுடனே
இன்பமுடன்சோடித்து இருந்தார்கள்தாதியர்கள்
அக்கினியும்நெய்யும் ஆர்ப்பரித்துமேற்புகைய
முக்கியமாயெங்கும் மூலமுதற்பொருளாய்
வைகுந்தமூர்த்தி யவர்காண்துணையெனவே
தேங்காயுடைத்து சித்திவிநாயகர்முன்.

## பரிட்சித்து மாங்கலியந் தரித்தல்

பாங்குடனேவைத்து பரிட்சித்துவேந்தனுக்கு
கங்கணங்கட்டி கன்னிக்குக்காப்புமிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்கினமாய்பெண்கழுத்தில் மங்கிலியந்தான்தரிக்க
சந்தனம்பூசித் தானிருந்தாரம்மானை
தெய்வப்பிராமணருந் தேவர்களுஞ்சாட்சியாய்
ஐவருமேதொட்டு அபிமருடபுத்திரர்க்கு
கண்ணீர்திருக்கரத்தால் கற்பித்தார்மங்கிலியம்
விண்ணவர்கள் வாழிசொல்லி விரைவாகத்தான்வணங்கி
தரித்தானேமங்கிலியம் தையநல்லாள்தன்கழுத்தில்
பரிதேருடைய பரிட்சித்துமன்னவனும்
வேதமுழங்க வெண்கவரிதான்வீச
நாதமுழங்கியவரை நாதம்மிகமுழங்க
செயஞ்செயமென்று சேஷைகளுந்தானிறைக்க
ஆயனுடன்மாமுனிவர் அட்சதையுந்தான்கொடுக்க
மங்களமும்பாடி வாழ்த்திவரச்சோதி
திங்கள்முகவாணர் செயசோபனமுழங்க
சோபனமுஞ்சொல்லி துடியிடையுமாப்பிள்ளையுந்
தாபமுடன்கைகோர்த்துத் தங்களன்னைசுற்றமுடன்
பண்ணினார்கோபலர் பரிட்சித்துவேந்தனுக்கு
நண்ணினார்கண்ணர் நடவுமென்று கைபிடித்து
கணவருடன்பொற்கொடியை கைகோர்த்துதான்கொடுத்து
மணவாயிற்போமென்று மாயோனுதவிசெய்ய
அந்தநாள்சென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
நந்தகோபாலாவா நாசிங்கபரமூர்த்தி
மற்றாநாள்சாமி மஞ்சள்நீராடுமென்றார்
அந்தனார்சொற்படிக்கு மஞ்சள்நீர்தானாடி
மாப்பிள்ளைபெண்ணும் வாழ்ந்திருந்தாரம்மானை
மூப்பிலுள்ளவங்கிஷமும் முன்னோரும்பின்னோரும்
அல்லியுந்தாமரைபோல் அன்னைசுற்றமுள்ளதெல்லாம்
துல்லியமாய்வந்து சுகமாயிருந்தார்கள்
தர்மருந்தம்பியரும் தரணியையாண்டிருந்தார்கள்
நன்மைவளர நாற்றிசையுந்தான்முழங்க
துன்மையகலத் தேசந்தழைத்தோங்க
கர்மமகலக் காவேரிபொங்கிவர
கன்னல்விளைந்து கனகமணி தான்விளைந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதலிபழுத்து கனித்துடைந்து ஆறோட
மதுரப்பலாபழுத்து வந்தொழுகியேயோடே
கமுகுகுலைசாய்ந்து கனிந்துபழமுதிர
தெங்குடனேமாதனையும் சேர்த்துமயங்கிநிற்க
ஓங்கும்புகழ்செல்வம் ஒருநாளுங்குன்றாமல்
நடுநீதிஞாயம் நாளும்தவறாமல்
வாசமுடனைவர் மனுநீதிதப்பாமல்
தாரணியெல்லாமகிழ தரணியோர்போற்றிசெய்ய.

## விருத்தம்

ஐவருமிருந்துபாரி லனேகநாள்சீமையாண்டு
செல்வருந்தருமஞாயம் தராசுபோல்நிறையாய்நின்று
கைவருங்கருமமெல்லாம் காரியமறியபின்பு
மெய்வரும்புதுமைகண்டு மேதினியாளுநாளில் 3

சித்தசருபனான திரள் வாளபிமன்மைந்தன்
பத்தனார் தமதுபேரன் பரிட்சித்துமனைவியாளும்
எத்திசைபுகழவேதா னேந்திழைகர்ப்பமாகி
வெற்றிசெய்மா தம்பத்தும் விளங்கவேசுமந்தாள்மாது. 4

## கதை

பார்த்தனிடபேரன் பரிட்சித்துவேந்தனுக்கு
நாற்றிசையுங்கொண்டாட நாயகியாள்கர்ப்பமதாய்
மாதமுந்திங்களுமே வந்திடவுந்தானறிந்து
நீசமுடன்சடங்கும் நேசமதுதப்பாமல்
இதமானபூமடந்தைக் கெல்லாருந்தாமிருந்து
முதுகுநீர்வாங்க மெய்குழலாள்பூமடந்தை
திங்களொருபத்தாகச் செனமேசெயன்பிறந்தான்
கங்குலிரவுதனில் கதிரோனுதித்தாப்போல்
ஆணிக்கனகமுமாய் அழகுஜெனமேஜெயனுந்தான்
சீலமுடன்பாலன் ஜெனமேஜெயன்வாழ்ந்திடவே
காலந்துவாபரம்போய் கலியுகமும்வாரதினால்
வருகுதென்றுலோகம் வழங்குதுகாணிவ்வசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகுபுகழ்தருமருக்குப் பேரன்பிறந்ததினால்
வாளபிமன்றன் பேரன் வந்தானெனவேதான்
காலைமுகில்மேனியனார் கண்ணரவர்தானறிந்து
ராசிகளும்நல்ல நட்சத்திரம்பார்க்க
வாசியென்னும்வேதியரை யன்பாய்வரவழைத்து
பாலன்பிறந்தான் பரிட்சித்துவேந்தனுக்கு
வாலபலமென்ன கருத்தென்னபாருமென்று
மாயனிதுசொல்ல மாமறையோனேதுசொல்வான்
தூயவரேயிப்போது சொல்லுகிறேன்கேளுமென்றார்
ஜெனமேஜெயன்பிறந்தான் சீறும்பலாயனனும்
கேளும்பெரிய கொடுமைகலியுகமும்
வருகுதையாவென்று மறையோனெடுத்துரைக்க
பருகுகனிவாயன் பச்சைமால்தானிருந்து
ஆனதுவாபரமும் ஆச்சுதென்றுதானினைந்து
கானமேசெல்லக் கரியமால்மேகவண்ணர்
ஐவருக்குந்தூதாக அனுப்பினார்மாயவனார்.

## விருத்தம்

காசினையளந்தமாயன் கலியுகம்வருமுன்னாகப்
பேசியேகொள்வோ மென்று பிரபஞ்சவிவரமெல்லாம்
ரகசியமாகத்தூதாள் நாழிகைதன்னிற்சென்று
தேசிகரைவர்தன்னைச் சீக்கிரம்கொண்டுவாவென்றார். 5

உய்த்தொருவசனங்கேட்டு ஒருநொடியதனில்தூதன்
அஸ்தினாபுரியிற்சென்று ஐவரைவணங்கிக்கொண்டு
கர்த்தனார் குறிப்பெல்லாம் கருதியேயுரைத்தபோது
சித்தமேமகிந்துதருமர் சீக்கிரம்பயணமென்றார். 6

தம்பிமார்நால்வர் தன்னைத் தருமருடன்வருகவென்று
உம்பர்கோன்றம்பிரானா ருலகினையளந்தமாயன்
நம்பியேயுண்மையாக ரகசியமருளிச்செய்து
இன்பமாய்வருகவென்றா ரேதெனத்தெரியவேணும். 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயனார்தூதன்வந்தா னருளினதெல்லாஞ்சொன்னான்
மாயனாருண்மைகண்டு வணங்கிநாம்வார்த்தைசொல்லி
நேயமாய்சென்றுமேயாம் நிமிஷத்தில்வருமோமென்று
தூயதோர்தருமராஜன் துரகதமீதிலானார். 8

வீமன்விஜயனகுலனுமாம் தேவராஜன்சகாதேவன்
தாமோதரன் தனைக்காணத் தருமருடனே செல்வார்
ராமாமுகுந்தாகேசவா ஸ்ரீராமா அரியென்று
சோமவாரத்தில்நாள் துவாரகாபுரிவிட்டகன்றாரே. 9

**கதை**

வாசமுள்ளபஞ்சவரை மாயன்வரச்சொல்லியொரு
நேசமுள்ளதூதனைப்போல் நிமிஷத்தில்வாவெனவே
சொல்லியனுப்பிவைத்த தூதனவனோடிவந்து
நல்லதொருதருமரையும் நமஸ்கரித்துதான்வணங்கி
கண்ணன் திருமால் காயம்புமேனியனார்
அண்ணன்வரச்சொல்லி யருளினாருங்களையும்
அந்தமொழிகேட்டு அடியேனுமோடிவந்து
விந்தமயராமல் விரைவில்வரவேணுமென்று
தூதனுரைத்தமொழி தூயதருமர் தான்கேட்டு
போகமனமகிழ்ந்து பூரித்திருபுறமும்
குந்திமாதேவிமுன்போய்த் தெண்டனிட்டாரைவருமே
துய்யபுகழ்மாதாவே தூதவனுமோடிவந்து
மாயவனாரைவரையும் வரச்சொன்னாரென்றுசொல்லி
ஞாயமொருசேதிசொல்ல நாங்கள்வந்தோம்மாதாவே
மறுத்துநான்செய்ய வகையேதுசொல்லுமென்றார்
தேடும்புகழ்குந்தியம்மன் சிந்தைமிகமகிழ்ந்து
நாடுபுகழ்மாயன் நமக்குத்துணையாமெனவே
மைந்தர்களேநீங்கள் மனதிலொன்றுமெண்ணாமல்
செந்திருவாழ்மாயன்பக்கல் செல்லுமென்றுதானுரைத்தாள்
கேட்டுமகிழ்ந்தவர் கிருபையுடநமஸ்கரித்து
பூட்டுமதவாளபிமன் புறப்பட்டாரைவருமே
பட்டவர்த்தனர்கோடி பாத்திபர்கள்தான்கோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமதிகுலத்தில் மகுடவர்த்தனர்கோடி
மந்திரிகளொருகோடி மற்றுமுள்ளோர்தான்கோடி
மத்தகசங்களணி வர்த்தகருமொருகோடி
மெத்தமகாசேனையுடன் வேந்தரைந்துபேர்களுடன்
அத்திபுரந்தன்னைவிட்டு அகன்றார்காணம்மானை
மரகததேரொன்றும் மகாமேருக்கொப்பான
துரகங்கள் தான்பூட்டி துருசில்வந்தான்தேர்ப்பாகன்
ஏழுபரிதேர்மீதில் ஏறினார்தருமருமே
நாற்றிசையும்தம்பியர்கள் நால்வருமேநன்றாக
ஏறியதேர்மீதில் இருபுறமும்சூழ்ந்துவர
எண்ணவொண்ணாச்சேனையாக ளெங்கும்நிறைந்துவர
மன்னர்மகுடர் மறுவேந்தர்சூழ்ந்துவர
வட்டக்குடையும் வைடூரியக்குடையும்
கட்டுநவரத்னமணி கவரிகுஞ்சம்வீசிவர
கூறுகின்றசித்திரத்தால் குடைகள்பலசூழ
ஏறுகின்றயானையின்மேல் எங்குமில்லாவாத்தியமும்
வீரானஒட்டகமேல் விந்தையுள்ளமாடதுவும்
சேரவேயோசையுடன் திசைகளெட்டுந்தானதிர
வெள்ளியால்தம்பட்டம் வெண்கலத்தால்தம்பட்டம்
முடுக்கானமேளம் முரசுடனேதானுடுக்கை
எடுக்கவொண்ணாபேரிகையு மிராசக்கிரீடமுடியும்
வட்டமுடிதாள மத்தளமுமல்லாரி
ஒட்டியேமேகாளம் உலகமெங்குந்தானதிர
கஞ்சக்கொம்புகள்சின்னம் தாளமுடனெக்காளம்
பஞ்சக்கருவி பலதிசையுந்தான்முழங்க
மண்ணதிரவிண்திர மலைகளெங்குந்தானதிர
விண்ணதிரமேலே மிகுத்துகம்மல்தான்மூட
குருகுலத்தலைவர் கோபாலர்தன்னருளால்
மன்னவர்கள்மன்னன்வந்தான் வாழ்பாண்டிமன்னன்வந்தான்
அன்னபரிபாலன்வந்தா னத்திரிபுரிவேந்தன்வந்தான்
செய்யநெடுமால்பதத்தைச் சிந்தைதனில்கொண்டிருக்கும்
வைதிகந்தன்னில் தருமர்வந்தாரெனவே
மூடுதிரைகள் நிலைகள் குலைந்திடுதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடுபசும்பொற்காயம் முயங்குதுகாணம்மானை
தருமருடன்தம்பியரும் சதுரங்கசேனையுடன்
ஒருகோடிகட்டியங்கள் ஒன்றாகப்பாடிவர
பாடும்புலவர் பரிவாரமுன்னடக்க
கடும்பரியின்மேலிருந்து கைவாங்கிக்கொண்டுவர
வங்காளராவுத்தர் மல்லகசெட்டியுடன்
சிங்காளராவுத்தர் சீனராவுத்தருடன்
ஆரியராவுத்தருடன் அதோவென்றார்ப்பரிக்க
பாரிசிங்காளர் பரியேறிதானடக்க
வீரமணியோசையுடன் வீரானயானைவர்க்கம்
மூர்க்கமதயானையுடன் முன்னணியார்தானடக்க
அங்குமுரசக்கொடியும் அனுமக்கொடிதன்னுடனே
சிங்கக்கொடியும் திசைகளெட்டுஞ்சூழ்ந்துவர
விண்ணதிரமண்ணதிர விண்ணிலுள்ளோர்தானடுங்க
எண்ணரியநீடுதிசை எட்டுந்திடுக்கிடவே
நாடியநீள்தருமர் நடந்தார்காணம்மானை
அத்திபுரத்திலுள்ளோர் அங்கேவந்தவர்தாமும்
மெத்தவேதான்பட்டணத்தில் விடுதிகளிற்போயிருந்தார்
தெரிந்துபுகழ்தருமர் சேனைபவுந்துடனே
பவுந்துதுவாரகாபுரி பதிவுந்தாரைவருமே
மன்னனுந்துவாரகாபுரி பதியைவலமானவந்து
மன்னர்தருமர் மகிழ்ந்துவந்தாரம்மானை
மாதர்கள்தான்சிலபேர் மன்னர்தனக்கெதிராய்
ஆதரவாய்கற்பூரம் ஆலாத்திகொண்டுவந்து
முரசக்கொடியோனை முன்பாய்பணிந்தவர்கள்
கைவளையல்தான்விழவுங் காலில்சிலம்புவிழ
மெய்யிலணிநற்பணிகள் வெவ்வேறாய்த்தான்விழவும்
கூரையவிழ்ந்துவிழக் கூந்தல்குதிக்காலில்விழ
மாதுமலர்கள் நடுத்தெருவில்தான் விழவும்
மன்னவனேநாங்க ளடிமையாவோமெனவே
பொன்னனையார்பிடித்துப் போறார்களெல்லோரும்
மாதர்களெல்லாம் மன்னவனைத்தான்தொடர்ந்து
ஆதரவாய்த்தங்களிட ஆசைபலன்கூறலுற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமெல்லாஞ்செங்கோல் செலுத்துந்திகிரிமன்னா
ஆசைகொண்டார்புயமு மருளுவதுமாகாதோ
தேரும்பரியுடைய தேர்வேந்தர்எங்கள்துரை
பரியுடனேதிரும்பிப் பார்த்தருளலாகாதோ
அன்புடையீர்நல்ல அறிவுடையீரெங்கள்துரை
பின்திருப்பிப்பார்த்தால் பிழைகள்வருமோதான்
பொங்குநெறியுடைய புண்ணியவானென்பார்கள்
இங்கெமையேதிரும்பிப் பார்த்தாலிளப்பமுண்டோ
அடங்காதமையலாய் அறிவழிந்தோமெங்களையும்
இடக்ண்ணால்நீர்திரும்பிப் பாருமென்றேயேந்திழையார்
கொங்கையசையநல்ல கூந்தல்குலைந்தசைய
அங்கணனுந்தான்சிவப்பா யவர்தொடர்ந்தாரம்மானை
அறிவழிந்துபின்தொடர்ந்த அரிவையர்கள்தன்துயரம்
பரிவுடனேதானோக்கிப் பார்த்தீபனும்நீள்தருமன்
சேர்ந்தமயல்தீரச் சேயிழையார்தங்களுக்கு
பூந்துகில்தாமளித்துப் போனார்காணம்மனைக்கு
கொற்றவனுந்தானெருங்கிக் கோபுரவாசல்தனில்
மற்றுமுள்ளமாசேனை மன்னவரையுந்தானிருத்தி
கூரறியவேந்தருந்தான் கோயில்தனிற்புகுந்தார்
சீரறியமால்பதத்தில் தெண்டனிட்டாரம்மானை
கண்ணன்தருமரையும் காதலுடனேயழைத்து
வண்ணமணிமார்பன் மகிழ்ந்தசைந்தாரம்மானை
அந்தரர்கோன்மைந்தருடன் ஐவரும்கொண்டுவந்து
மந்திரசாலையிலே மாயோனும்போயிருந்தான்
நெய்யுண்டமாலே நெடியோனேயெங்களைத்தான்
வைகுந்தமூர்த்தி வரவரைத்தகாரியமேன்
என்றுதருமர்கேட்க எம்பெருமானேதுசொல்வார்
மன்னுபுவியாளும்மன்னவனே சொல்லுகிறேன்
மன்னன்தருமனைத்தான் மாயன்முகம்நோக்கி
உற்றவிசனம் உணத்தலுற்றாரம்மானை
மண்டலத்தையாண்டு மனுநீதிதப்பாமல்
விண்ணிலத்தோர்கொண்டாட மேதினியில்தவமிருந்து
நீதிதவறாமல் நெறிமுறைதப்பாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிவரம்பு தவறிலைகள்சேராமல்
வாழ்ந்திரிதுவரையில் மன்னவனேயிப்போது
நான்தானொருசேதி நவிலுகிறேன்கேளுமென்றார்
நல்லதொருபஞ்சவர்கள் நாரணனேசொல்லுமென்றார்
வல்லதொருமாயன் வாய்திறந்தங்கேதுசொல்வார்
சொல்லுந்துவாபரமும் தொகையுஞ்சரியாச்சு
வெல்லுங்கலியுகமும் விபரீதமாய்த்தான்வரவே
பாகமுடன்பூமி பாரமதுதான்தீர்த்தோம்
ஆசையுடனிங்கிருக்க அடையவல்லவென்றுசொல்லி
மற்றுமினிநாமுமிந்த வைகுந்தவாழ்பதிக்கு
போற்றுமிந்தமாநகரை விட்டுமிகப்போகிறோம்
ஆகையினால்மிகுந்த அவனியிடர்தீர்ப்பதற்கு
பேசினீரந்நாளில்என்னுடன் நீங்களுந்தான்
நன்மையில்வேந்தே வைகுந்தவாழ்பதிக்கு
போவீரோவென்று புகழ்ந்தனர்காணம்மானை
ஏசில்லாமன்னவனே இன்னுமொன்றுநீகேளு
காசினியிலுந்தனுக்குக் கைவசமுந்தானாகி
மற்றதினியெங்களுக்கு வலுமையுடன்வீரியங்கள்
மற்றுமிகமுன்னாள்போல் உதவாதுமன்னவனே
சத்தியமுநில்லாது தருமநெறிநில்லாது
அத்திருவும்நில்லாள் அசத்தியமும்வந்துவிடும்
தாய்தனையும்பேணார் தந்தைதனைநினையார்
ஆயன்குருவின் அருளுமவர்நினையார்
அம்புவிதனிலேதான் அநியாயமேலாகும்
மாதவங்கள்தானழியும் வரமுமழிந்தேவிடும்
வேதங்கள்தன்பலமும் பேதங்களாகிவிடும்
சாதிநிலைகுலைந்து சத்திருக்கள்மேலாவார்
நீதியழிந்துவிடும் நெஞ்சகமேவஞ்சகமாய்
மாசில்லாபூவுலகில் மாரிமறுத்துவிடும்
காசினியில்காரியங்கள் கற்புமிழந்துவிடும்
விடுத்தசிலகாலம் விசேஷமதுகண்டாயே
கடுத்தலிகாலமென்று கடுத்துரைத்தாரம்மானை
ஆதலாலுங்களுக்கு அரசேதானாகாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவீரர்தம்முடனே போந்தாமலிப்புவியை
ஆளவல்லோநூற்றுவரை அன்றுவதைத்தீரே
மீளவுமப்படியே மேதினியைக்காப்பீரோ
உங்களுக்குத்தோன்றினதை உண்மையாய்சொல்லுமென்றார்
செங்கண்திருநெடுமால் செப்பினர்காணம்மானை
சோதியேவேதச் சுருதிக்கதிபதியே
ஆதிவராக அரிகேசவாமுகுந்தா
அச்சுதாபஞ்சவர்கள் ஐவருக்குநாயகமே
சச்சிதானந்தமெனும் சாரூபவாசமுள்ள
கற்பூரவாசகனே காயாம்புமேனியனே
பொற்பூரும்வாசமுள்ள பூலோகமீதில்வந்த
தங்களுயிர்போலத் தற்காத்தீரிந்நாளும்
எங்களைத்தான்காக்க இவ்வளவுதானெடுத்து
சீருஞ்சிறப்புஞ் செலுத்திமிகசெல்வமெல்லாம்
பேருஞ்செலுத்தப் பிரபலமாய்தானிருக்க
வைத்தீரிதுவரையில் வாழ்ந்தோம்சிலகாலம்
மைத்துனர்போலெங்களுக்கு பெருமையாய்தானிருந்து
ஆகாதநெஞ்சன் அநியாயநிஷ்டூரன்
மாபாவியான வணங்காமுடிவேந்தன்
வாரிதனிற்கழுவை வைத்ததும்போதாமல்
சாதத்தில்நஞ்சைப் பரிந்தேயளித்ததுவும்
அரக்குமாளிகையில் அக்கினியில்வளர்ந்ததுவும்
முந்துமந்தவாரிதனில் மூழ்கிவரத்தானிணைந்து
பொய்சூதாலெங்கள் புவியவர்வாங்கினதும்
துற்சாதனன்சபையில் துகிலையுரிந்ததுவும்
பிறந்ததுநச்சுப்பொய்கை புதிதாய்சமைந்ததுவும்
துறந்துசபிக்கவென்று துருவாசர்வந்ததுவும்
மற்றுமவர்செய்த வன்கொமையாலேயும்
சற்றுந்தவறாமல் தற்காத்துபசரித்த
தந்தையரும்நீயேகாண் சற்குருவும்நீயேகாண்
குந்தியரும்நீயேகாண் கொண்டல்வண்ணாஉங்களுக்கு
நாலுதிக்கும்தான்பார்த்து நடப்பீரிருப்பீர்காண்
மேலுமிருப்பீர் மேதினியிற்றானிருப்பீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருமறியாமல் ஆலிலைமேற்பள்ளிகொள்வீர்
பாருலகையாண்டு படைப்பீருலகளிப்பீர்
கோலமெல்லாம்நீயெடுத்த கோலமேயல்லாது
ஞாலமதிலுன்னையல்லால் நடப்பதும்வேறுமுண்டோ
சூதோதிருக்கூத்து எத்தனையோவிஸ்தாரம்
ஏதோஉன்னுடைய சூத்திரத்தையாரறிவார்
கண்ணுக்குள்பாவைபோல் கலந்திருந்த காரணமா
நித்தனேயும்மைவிட்டு நிமிஷத்திலிருப்போமோ
என்னமொழிபேசினீ ரெம்பெருமானென்றுதருமர்
பன்னாகமேற்றுயின்ற பச்சைமுகில்மேனியரே
அட்டதிக்குந்தானறிய ஐவர்களையெப்போதும்
விட்டுப்பிரியாத மேகவண்ணர்தன்னைவிட்டு
மண்ணாசையாலே மறந்தார்களென்றுசொல்லி
விண்ணோரும்வானவரும் மேதினியுந்தானகைக்க
விருப்பமுடனீங்கள் மேதினியையுண்டெனவே
இருப்பதுமில்லையினி எந்தவிதமானாலும்
திருவுந்திபூத்தோனே திவ்வியமலர்ப்பதத்தை
கண்டுவணங்கிஐவர் கைக்கட்டிவாய்புதைத்து
தொண்டுபண்ணிநாங்கள் தொழுதுவைகுந்தமதில்
காத்திருந்துஏவல்செய்ய கற்பிக்கவேணுமையா
வீற்றிருப்போமும்மிடத்தில் மேதினியேவேண்டாங்காண்
அன்றுஅஸ்வத்தாமாவை அச்சமில்வதைத்தாயே
வென்றுகதிர்மறைத்து விஜயனையுங்காத்தாயே
பாருலகிற்கஞ்சன்றன் பழிக்காத்தநீதானும்
வீரன்சயிந்தனையும் வீமனால்கொன்றாயே
சிந்துபதிசாபஞ் சிந்தையழியவைத்தாயே
எந்தவகையானாலும் ஈரொன்பதுநாளில்
பார்த்திபாநூற்றுவரும் பதினெண்ணக்ரோணிபடை
நாற்றிசையோர்மன்னரையும் நற்படையோர்தங்களையும்
நீயேவதைத்தாயே நினையல்லால்வேறுமுண்டோ
நாரணர்பாதம் நாள்தோறும்காத்திருக்க
மாண்டுவைகுந்தம் வாழ்பதிக்குஐவரையும்
கொண்டுசெல்லுமென்று கூறினார்தருமருமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னும்திருமால் பேசலுற்றாரம்மானை
நாடுதனில்செய்தகுற்றம் நன்றாகளங்களுக்கு
தெரியாதபடியெங்கள் செய்தபிழைதீர்த்திடவும்
பிரியாதுலகில் பேராசையற்றிடவும்
நண்ணும்பரகதியை நாங்களடைவதற்கு
அண்ணலேநீகிருபை அளித்திடென்றாரம்மானை
மாயவனார்மனமகிழ்ந்து வைகுந்தம்வாழ்பதிக்கு
நேயமுடனும்மை நினைத்துசெல்லும்போது
மன்னனேதூது வரவிடுவேந்தனுக்கு
பின்னும்பார்த்தனுடன் பேரானபரிட்சித்துவையும்
தோற்றுமேவத்தி புரத்திற்கதிபதியாய்
சாற்றுபுவிக்குத் தலைவனெனவுரைக்க
வைத்துமரணத்தின மகுடமுடிசூட்டி
அத்திபுரந்தனிலே அங்கவரைநிறுத்தி
வீறுபுகழ்குந்தியையும் வேந்தனேநீயழைத்து
கூறும்பரிட்சித்துவின்றன் கொலுவிலிருக்குமென்றுசொல்லி
கலியுகம்வருவதுமுன் காவலரேநீர்தாமும்
மெலியாமல்ஐவருமே மெல்லிநல்லாள்தன்னுடனே
பந்தமணிவைகுந்தப் பரகதியைபார்க்கவென்றார்
பற்றுமகாவிந்தம் பாருமென்றாரைவரையும்
மன்னவர்கள்தான்பணிந்து மாயோனைதானோக்கி
உன்னருளால்வேறே ஒருதுணைகளுண்டோ
தீதாகில்நாங்கள் செய்தபிழையுள்ளதெல்லாம்
ஏதாகிலும்பொறுத்து இரட்சிக்கவேண்டுமையா
ஐயாசுவாமி அரிகேசவமுகுந்தா
மெய்யாய்வைகுந்தபதம் வேண்டியேவாரோங்காண்
என்றுபணிந்து இயலானஐவர்களும்.

## விருத்தம்

எங்குமாய்நின்றமூர்த்தி ஈரேழுலகமெங்கும்
அங்குமாயிங்குமாகி யாருயிர்க்கெல்லாந்தானாய்
பொங்குபூரணமாய்நின்ற பொன்னலகாராபோற்றி
தங்குவதில்லைநாங்கள் தரணியிலும்மைவிட்டு 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவதோர்காலமெல்லா மச்சுதன்செயலினாலே
போவதோர்காலம்வந்தால் புத்தியுமலைக்கலாமோ
சாவதோர்காலம்வந்தால் சற்றிங்கேதரிப்போமோதான்
நாவதுவரண்டுஞ்சொல்வோம் நாரணாபோற்றிபோற்றி. 11

### *கதை*

என்றுதர்மராயவர ரிருதாளைபூண்டுகொண்டு
சென்றுமகாசேனையுடன் திரும்பினாரம்மானை
மற்றுமகாசேனையுடன் வேந்தருடனப்போது
சாற்றும்புகழ்தருமர் தான்திரும்பிப்போனதன்பின்
ஏற்றுந்துவாரகா பதிதனிலேமாயவனும்
வீற்றிருந்துசெங்கோல் விசாரிக்குமந்நாளில்
சாஸ்திரங்கள்சொல்லுஞ் சலமுனிவரந்தணரும்
காலங்கலியுகங்கள் கற்பனையும்வந்ததினால்
கோலங்குறுகிக் குணபேதமுமாகி
பொய்யுங்கொலையும் புனைசுருட்டுமேகளவும்
செய்யும்பரிகாசஞ் சின்னமுகாசனமும்
குண்டுணியுங்கோளுங் குடிகேடுவஞ்சனையும்
தெண்டம்பரும்பிடியுந் தெண்டனையுங்கண்டிதமும்
மானபரமிழிந்து வரம்புதப்பிப்போவதும்
தானதவங்குலைந்து சத்தியமும்பொய்யாகி
மேல்குலமேகீழ்குலமாய் கீழ்குலமேமேல்குலமாய்
கால்மேலுந்தலைகீழாய்க் கலியன்பிறக்குமென்றான்
நால்வேதஞ்சொல்ல நாரணனும்தான்கேட்டு
சாத்தகியாழ்வார் சகலரையுந்தானழைத்து
ஏத்தவிசாரமென்று இனியேதுசொல்லுமென்றார்
தேவர்செயலாலே தீங்கறியோநாமடியார்
ஏவல்செய்யுந்தொண்டர் ஏதென்றெடுத்துரைப்பார்
சொற்புத்திகேட்டுந் தொண்டர்க்குநீர்தாமும்
கற்பித்தருளியசொல் கர்த்தனேசித்தமையா
கேட்குமடியார்க்குக் கிருபையென்னவென்றுரைப்பீர்
தீர்க்கமுடனூழியர்கள் செப்புகிறோமென்றுரைத்தார்
ஆதரவால்மாலும் அவர்கள்தனையறிந்து
நீதமிக்கநாமும் நீணிலத்திலேயிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோசியாள்சொன்ன சொற்படியேநானும்
வாதனைக்குள்ளாகாமல் வனத்தில்தவசிருக்க
நன்றாகத்தோணுதப்பா நலமுடையயோசனைக்கு
குன்றாமல்நீங்கள் குவலயத்திலேயிருந்து
எப்போதும்போலே இருப்பீர்சுகமாக
அப்போதிருந்தவர்கள் அகமுகிகவுருகி
இருக்குந்தருணத்தில் இன்னமொருசர்ப்பனைதான்
பொறுக்குப்பொருளே பிள்ளைகள்தான்செய்தபிழை
பச்சைமாலீன்ற பதினாயிரம்புதல்வர்
இச்சையுடன்கூடி இசைந்துவிளையாடுகையில்
வீதிதனில்நின்று விளையாடுநேரமதில்
மாதுமயல்தூர்வாச மாமுனிதான்வரவே
சந்நியாசிவேடமுமாய்த் தான்வரவேகண்டார்கள்
மின்னார்போல்வேட மிகுந்தொருகற்பமதாய்
ஒருமாரர்கன்னி லொருவனுக்குப்பெண்ணுடையாள்
தீதில்லாதவமூர்த்தி செய்தஉதாரமதில்
பாத்திரையைவைத்துநல்ல பட்டாடையுமுடுத்தி
ஏற்றமுக்காடிட்டு எதிர்சென்றாரம்மானை
கோலஞ்சிறந்து குழாங்களுடன்தான்கூடி
குருமுனிகாலில் குமாரர்களும்போய்ப்பணிந்தார்
பெருமையுடனிவந்தான் பெண்பெறுமோ ஆண்பெறுமோ
திருமேனியேசெப்புமென்று தெண்டனிட்டாரம்மானை
குருமுனியுந்தானழைத்து குமாரர்களைநோக்கி
வீறுகின்றவுங்கள்தவம் மெய்யாயழித்திடவே
இந்தப்பெண்தன்வயிற்றில் இரும்புலக்கைதானுமொன்று
முந்திபெறுவாளெனவே மொழிந்தனர்காணம்மானை
அச்சாபமிட்டு அரன்முனிவன்போனபின்பு
இச்சாபம்போகாமல் இரும்புலக்கைதானுமொன்று
மாயன்குமாரர் வயிற்றில்விழுந்திடவே
ஐவர்குமாரரெல்லாம் கண்டுதுயரமதாய்
இரும்புலக்கைதன்னை எடுத்தங்கேபோயினர்காண்
கொண்டல்வண்ணன்முன்புவைத்து கும்பிட்டாரம்மானை
கண்டுதிருமால் கருத்தில்துயரமதாய்
மீண்டுசொல்லிவரவழைத்து மேன்மையுள்ளவாளரத்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்லிப்பொடியாகத் தவிடுபொடிசெய்யுமென்றார்
அந்தப்படியாக அரத்தால்பொடியாக்கி
சிந்துபொடியுஞ் சிறுமணல்போலானபின்பு
அரத்திட்டுராவி அதிகறுகப்பொடியாய்
உதிர்த்தசிறுகணுவா யுச்சிதமாயமைத்ததென்றார்
கணுவையெடுத்து கடலிலேபோடுமென்றார்
அணுவாயுதிர்ந்ததெல்லாம் அனைவோரும்தூவுமென்றார்
உருத்திமுளைத்துமகா வுன்னதமாய்முளைத்து
நின்றதுகாணங்கே நெடியோனருளாலே
ஒன்றுமிச்சமான உருண்டகணுவதனை
மச்சம்விழுங்கி வலையில்வந்துசிக்கினதே
அச்சிமில்லாவேட னந்தனச்சந்தான்வாங்கி
கீறிக்கிழங்கில் கிடந்தெடுத்தானிக்கணுவை
மீறிச்சுறந்தனிலே விருப்புமுடன் தான்சேர்ந்து
வைத்திருந்தான்வேடன் வகையாகஅம்புதனை
புத்திரரும்பார்த்து பூரித்துக்கொக்கரித்து
ஆற்றிலேசென்று அணிவகுத்தாரம்மானை
அடித்துவிளையாட அனைவோரும்சம்மதித்து
வருங்காரியமறியாமலே மதலைகளும்மாண்டுவிட்டார்
விளையாட வந்திடத்தில் விதிவசமுந்தான்சூழ
கிளையோடிருந்து கிடக்கிறாரென்றுசொல்லி
கண்டபேரோடி கண்ணாிடந்தாமுரைத்தார்
வந்ததொருதூருவாசன் மாமுனிவன்சாபத்தால்
ஆறாகவேணுமென்று அரியமுனிதானுரைத்தார்
பாராகவேதமக்குப் பலித்ததேயச்சாபம்
அண்டர்பிரானும் அலுவலொழிந்ததென்று
செய்யுஞ்சடங்கு சீக்கிரமாய்தான்முடித்து
வைகுந்தஞ்சே மனமுற்றாம்மானை.

### விருத்தம்

தம்பியுமகுடமன்னர் சகலரும்வாருமென்று
அம்பிரானருளிச்செய்ய ஏவல்காட்டாதோவென்று
நம்பிநாராயணரேவந்தோம் நாதனேசரணமென்று
தம்பிமாரறியப்போற்றி சாத்தகியாழ்வார்வந்தார். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றதோர்மன்னர்தம்பி நிருபர்தன்முகத்தைநோக்கி
நின்றவர்நந்தகோபர் நானிலம்விட்டுகாணப்
பென்றிடவேணுமென்று புவிதனையாண்டுநீங்கள்
தென்றலங்காரற்போலச் செகந்தனில்வாழுமென்றார். 13

கரியமாலருளிச்செய்த காரணமேதோவென்று
தெரியவேவரங்கேட்கத் தேசிகரறிந்துநன்றாய்
அரியதோர்கலியன்வாறா னானதால்வனத்திற்போறோம்
பெரியதோர்புவனமெந்தன் பேரனையொல்லிவாழும். 14

இப்படியிறையோன்சொல்ல ஏங்கியேமுகம்வாடி
அப்படிச்சொன்னாரானா லடியரும்வாறோமென்று
செப்பிடத்திருமால்தானும் தெரியவேயுண்மையாக
வைப்பினிலிருங்களென்று வனம்புகநடந்தாரையா. 15

## கதை

வனத்தில்தவசிருக்க மாயவனார்தான்மகிழ்ந்து
கானகத்துக்கிதமான தன்மைகளும்புத்திகளும்
சொல்லியுபசரித்துத் துயரமெல்லாந்தீர்த்து
மெல்லியதோர்கானகமே விரும்பிமனதிலெண்ணி
சாத்தகியாழ்வாருக்குத் தனிமுடியுந்தான்தரித்து
நாற்றிசையும்போற்றும் நம்மைப்போல்தானிரென்று
முடிமகுடந்தான்தரித்து முறையாய்நீயிருந்து
வன்னமில்லாதபடி மேதினியோரெல்லோர்க்கும்
சொன்னபடிகேட்டுத் தொழுதுவணங்கிநிற்கும்
அன்னைசுற்றமெல்லா மச்சமின்றிதானிருங்கள்
காலம்கலியுகமாய்க் காரணமுந்தோற்றுகையில்
ஞானங்கள்தானறியும் நம்முடையரூபமெல்லாம்
பேரழியாதநட்பும் பொறுமையதுபாரில்நின்று
சிறுமைவருமெங்களுக்கு தேவரீர்போவதினால்
என்றுமயங்கி எழுந்துமன்னவர்தாமும்
நின்றுதவழ்ந்து நெடியோனைப்பின்தொடர்ந்து
தொடர்ந்தழும்தம்பியையும் துரைமக்கள் தங்களையும்
அடர்ந்துவராதபடி அமர்த்தியே அச்சுதனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம்புவியளந்த மால்பாதந்தானோக்கி
கானகமேநோக்கிக் கடுகநடந்தாராம்
நாடுவிட்டுத்தேசம் நன்னகரிதானும்
கூடுவிட்டுத்தேன்குளவி கொட்டாதபாவனைப்போல்
காடுகரைகண்டார் கண்ணானகண்ணாலே
தேடுந்தவமதில் சிவயோகநாட்டமதாய்
பேரறிவுகொண்டு புறப்பட்டாரம்மானை
ஊரருகாய்நின்ற உயர்ந்தமரங்களெல்லாம்
பூத்துச்சொரியும் புவனமிழந்ததையும்
காய்த்துவிசிறியதாய் காளாஞ்சிபூமியதாய்
மயில்கள்தொடர்ந்தாட வாரனங்கள்கூத்தாட
குயில்களிசைந்தாடக் கொஞ்சும்கிளிபேசிவர
கிளிகள்மிரண்டோட கீத்தனங்கள்பாடிவர
அரிகளடிபணிய அயோனுந்தானடந்தார்
கரிகளடிபணிய கரியோனுந்தானடக்க
கஸ்தூரிவாசனென்று கஸ்தூரிவந்துதொழ
வஸ்துவிற்குள்வேண்டினதோர் வஸ்துவெல்லாம்வந்துதொழ
கற்பூரமலர்களெல்லாம் நாற்றிசையும்பூத்துநிற்க
அறவியதோன்றன்பாத மரவுபணிந்திடவே
இரவுபகலாகி எம்பெருமாள்வந்தவிடம்
மேகநிறமேனியற்கும் மேகம்பணிமாற
ஆகங்குளிர்ந்து அநேகநெடுந்தூரம்
வந்துநெடுமால் வனமெல்லாமாராய்த்து
கொத்துலவுசண்பகஞ்சேர் சூழ்ந்துவனச்சோலைகளும்
கந்தமலர்க்காவும் கடம்பவனச்சிறப்பும்
ஆதவனுமாடாதே ஆரணியமானதிலே
மாதவனுஞ்சம்மதியால் மனதுமிகமிழ்ந்து
நாலுதிக்கும்பார்க்க நடுவேயொருவிருட்சம்
ஆலுதித்துநின்ற அடவிதனைப்பார்த்து
இந்தவிருட்சம்நா மெங்கேயுங்கண்டதில்லை
நிற்போம்தவசு நிறைவேற்றவேணுமென்று
கற்பூரவாசம் கலையரசன்விரித்து
பொற்பூவும்வாசமும்போல் பொருந்திமனமொன்றாக
அஷ்டாட்சரத்தி லமர்ந்திருந்தார்மாயவனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டாற்றிலன்று நடுக்கடலிற்போட்டதொரு
இருப்புக்கணுபதித்த எய்தஅம்புதானெடுத்து
செருமாச்செடிதாங்கி சீராவுந்தானெடுத்து
சிலையெடுத்தவேடன் சிற்றறிவாள்கைபிடித்து
கலைமான்களைத்துக் கறவேடன்காடுசுற்றி
மான்மறைகள்தேடி வனத்துடன்செல்லலுற்றான்
தேன்மருவுந்தாரன் திருவேங்கடப்பெருமாள்
ஆரணியந்தன்னில் ஆலமரத்தடியில்
தாரணிவிட்டு தவசிருந்தகோலமதை
வேடனதுகண்ணுக்கு விரைந்துவப்தமானதுபோலே
அண்டர்பிரான்ரூபம் அவன்தனக்குமான்போலே
கண்டான்முடுகிக் கடுகிச்சரந்தொடுத்தான்
விட்டான்சரத்தை வேடனவன்மானெனவே
மார்புரளவாங்கி வல்வேடனெய்துவிட்டான்
சீர்மருவுமாயனிட சீர்பாதந்தன்னில்வந்து
பட்டுருவிஅம்பு பரிந்துமறுபுறமும்
தட்டுருவியோடத் தண்டாமரைபாதத்தில்
மண்ணையுண்டமாயன் மயக்கமதுவந்து
வெண்ணையுண்டமேனி விசனம் பொறுக்காமல்
முச்சற்றுமேனி முகமும்வெளுப்பேறி
பேச்சயர்ந்து பிரக்கினையுந்தோன்றாமல்
மாயோனசைந்து மயங்கிக்கிடக்கையிலே
மானெய்தோமென்று மகிழ்ந்துசிலைவேடன்
பதையாதமாந்தரென்று பாங்குடனேஒடிவந்து
வதைபட்டமாந்தரென்று வனவேடன்பார்ப்பளவில்
கெதையும்பட்டுருவிக் கோபாலர்தான்கிடந்தார்
இதைவந்துபார்த்து ஏமாந்துவனவேடன்
கதையோகதைப்பயனோ காலத்தின்வினையோ
விதியோவிதிப்பயனோ பிரம்மாவின்கற்பனையோ
மதியோமதியக்கமோ மகாதேவர்கற்பனையோ
ஏதோவிதிப்பயனோ எம்பெருமாள்தன்மீதில்
தீதுவரக்காரியமேன் செய்ததவக்குறையோ
தானென்றுலகளந்த தம்பிரான்வாவெனவே
பொய்மான்போல்வந்த புதுமையறியாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்மானென்றெண்ணி விரும்நாவெனய்துவிட்டேன்
என்னெஞ்சேஉன்செயலோ ஏதென்றறியாமல்
முன்செய்ததீவினையோ முகுந்தர்மேலம்பட
வஞ்சனைகளல்ல மனதறியவந்தல்ல
பாவியானேனே பச்சைமால்வந்தல்ல
பாவியானேனே பச்சைமால்நாரணற்கு
தீவிணைகள்செய்தேனோ சென்மமென்னசென்மமினி
என்றுசிலைவேடன் ஏங்கிவிழுந்தலறி
குன்றுதவறிக் குவலயத்தில்வீழ்ந்தாற்போல்
அல்லல்அபயமிட்டு ஐயோசிவனேயென்று
தலையிலேதானறைந்து தானழுதான்வில்வேடன்
வில்வேடன்றானழுக மெய்மகிழ்ந்துகோபாலர்
அழுதவனைத்தேற்றி அரவணைத்துவாயெனவே
தொழுதவனும்வந்து தூரவந்துதெண்டனிட்டு
எந்தன்பிரானே எளியார்க்கெளியவனே
உந்தன்மலர்ப்பதத்திலே ஊடுருவிஅம்புதைக்க
எய்தேனேபாவி எழுநரகில்வீழ்வேனே
மையழகுமேனியிலே மாசுபடவேயெய்ததொரு
அம்புபடாமேனியிலே வடுவரவேயெய்ததொரு
அம்புதொட்டகையை யறுத்துமேமுன்னேவைப்பேன்
அன்றுலகையெல்லாம் அளந்தபாதமல்லவோதான்
புல்லறியங்கங்கை புரிந்தபாதமல்லவோதான்
பேசிமுறுவசியான் பிறந்தபாதமல்லவோதான்
பூசுரரும்தேவர்களும் போற்றும்பாதமல்லவோ
வேடனிவைசொல்லி வெகுண்டழவேமாயவனும்
தோஷமில்லையுன்பேரில் சும்மாயலையாதே
முன்னாளில்நீயும் பலமிகுந்தவாலியல்லோ
அந்தநாளில்நீயிருந்தா யப்போதுயெய்துகொன்றேன்
முன்னாட்பழிவாங்க எய்துகொன்றாய்வில்வேடா
இந்தப்புவியில் இப்போதுவந்தானாம்
நமக்குமுடிவிதுகாண் நல்வேடாசொல்லுகிறோம்
உமக்கும்கலியுகத்தில் துன்பம்வருமென்றுசொல்லி
வைகுந்தம்சேரவந்து வந்தகாய்வனத்திலேதான்
கைகொண்டெரிந்தது கணுக்காலில்தைத்ததுகாண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுஞ்சரியாக முடிந்துவிதிப்பயனால்
மடியவுயிரிழந்து வைகுந்தம்போய்ச்சேர
போவதறியாமல் புலம்புவரோநீவேடா
பாரவிதிவந்தால் மாட்டேனென்றால்விடுமோ
உந்தன்மயக்கத்தை இப்போதேவிட்டுவிடு
உன்செய்திபார்க்கில் உன்மீதிகுற்றமில்லை
என்சேதிசொல்லுகிறேன் இதவாயுதவிசெய்வாய்
நல்லதென்றுவேடன் நாரணரைத்தான்பணிந்து
சொல்லுமென்றுவாய்புதைத்துச் சோம்பிமுகம்வாடி
வாட்டமுடன் நின்று வில்வேடன் தான்கேட்க
நாட்டமுடன்மாயன் எம்பெருமானேதுசொல்வார்
வாடாநீவேடா மன்னுபுகழ்பஞ்சவர்கள்
காராரும்அத்திபுரம் தர்மருந்தம்பியரும்
சீராகவாழும் சிறந்தநகர்தனிலே
நேராகநீபோ நிமிஷத்திலுண்மையதாய்
தருமர்நகுலன் சகாதேவன்கேளாமல்
மவுனம்வெளிதனிலே வாராமல்நீகாரும்
வீமன்விஜயனிடம் விளம்பிவாயென்சேதி
தர்மரவர்சொன்னதுவாய் சாற்றுமென்றுசொல்லி
வேறொன்றுஞ்சொல்லாமல் விபத்துவமென்றுசொல்லி
கூறுவென்றுஞ்சொல்லிவிட்டார் கூர்வேடன்தன்னிகரில்
அவ்வசனங்கேட்டு அசந்துசிலைவேடன்
இவ்வசனங்கேட்டு இரட்சகனைத்தெண்டனிட்டு
வழிகூடித்தானடந்தான் மனதிடைந்துதான்வேடன்
பழிபாவம்வந்ததென்று பயந்துதிசைநோக்கி
காடுகடந்து கரிசமலையுந்தான்கடந்து
நாடுநகரிற்சென்று நன்னகரினுள்ளேபோய்
நாலுதெருவில் நடுத்தெருவுந்தான்கடந்து
கொலுவுமரண்மனையுங் கொற்றவர்கள்தானிருக்கும்
கோட்டைதனில்சென்று குருகுலத்தோர்தங்களுடன்
வீட்டையுங்கண்டு வீமன்விஜயனிடம்
அச்சுதனார்சொன்னதொரு ஆந்திரியமுள்ளதெல்லாம்
உச்சிதமாய்வேடன் உரைத்தான்காண்மன்னவர்க்கு
அந்தமொழிதருமர் அனியாயமென்றுரைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தமொழிகேட்க என்செய்வோமென்றிவர்கள்
வேடனைத்தான்போமெனவே வீமன்விஜயனுந்தான்
தாடலந்தருமரிரு தாள்தனிலேபணிந்து
அதிசயமாயெங்களுக்கு அளனுப்பிவைத்தகதை
ஏதோஎவருடைய சூட்சுமமோகற்பனையோ
தம்பிநகுலன் சகாதேவன்தன்னுடனே
உம்புரேயுந்தனுக்கு உரையாமலிச்சேதி
அண்ணருக்குமெந்தனுக்கும் அனுப்பிவைத்தகற்பனைதான்
எண்ணமென்னசாமி இனிமேலேமர்மமென்ன
என்று விஜயன் இவ்வசனந்தான்கேட்க
மன்னுபுகழ்தருமர் மயங்கிமனமுடைந்து
தம்பிரானைவர் சகாயந்தானிப்போது
எம்பிரான்கற்பனைக்கு என்னவென்றுநான்சொல்வேன்
காரணமாய்காணுதிந்த கார்வண்ணர்சேதி
நாரணனார்சொற்கேட்டு நடந்தோமிதுவரையில்
என்னபிழைவந்தாலும் ஏதுபிழையானாலும்
சொன்னமொழிதப்புவாரோ சோதனைதான்தம்பியரே
எப்படியோசித்தம் எம்பெருமாள்தன்னினைவு
அப்படியேயல்லாது அன்றுமுதலின்றளவும்
சொற்படியேநாமும் கொண்டுபணியேதிரிவோம்
விற்பிடித்தசேவகனை வீமனேயுங்களைத்தான்
வலுவுடையராகையினால் வரச்சொன்னாருங்களையும்
மெலிவுடையராயிருந்து வீரியத்தைவாங்கி
வரச்சொன்னீர்நீங்கள் வழிதுரையாம்கேட்பதற்கு
தரச்சொல்லுவார்கையை தானகலநின்றுவிடும்
அகலநின்றுகாரியங்கள் ஆசாரமாய்வணங்கி
சகலகலையறிந்த தாமோதரனிடத்தில்
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
செயம்போலிருவருமே தெண்டனிட்டாரம்மானை
நடந்தார்வனந்தனிலே நாராயணரைத்தேடி
தொடர்ந்தார்வனங்களெல்லாஞ் சோலையிலேவந்துகண்டார்
சந்தனச்சோலையில் தறிக்காலின்கீழேதான்
அத்தருணமங்கே அமுதபரிதாபம்
தோற்றுதுகாணென்றிருவர் துள்ளநடந்தோடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவரைவெற்றிகொள்ளு மன்னிபேரும்
அந்தவனந்தனிலே அருச்சுனனும்வீமனுமாய்
இந்தவனமென் றிசைந்தோடிவந்துநின்று
வந்தார்களாலடியில் மன்னிருபேரும்
செந்தாமரைக்கண்ணர் தியங்கிமுகம்வாடி
கண்ணருந்தான்மண்மீதில் காயத்துடன்பிடிக்க
கண்டார்மனத்துயரால் கதறியபயமிட்டார்
விண்டார்மனத்துயரால் விண்ணுமண்ணுந்தானதிர

## விருத்தம்

ஐயகோராமராமா ஐவரைப்பிரிந்துகானில்
மெய்யதுபுழுதிதானு மேனியும் நிதமும்வேறாய்
நையவும்வசமோவுந்தன் நாமமுமறந்துநாங்கள்
உய்யவேயினிமேற்பாயு முண்ணவும்வேணுமோதான் 16

காயமும்வருமோவெங்கள் கண்ணுக்குக்கண்ணானகண்ணா
ஞாயமிதுவோஐயா நாங்களுஞ்சகிக்கப்போமோ
மாயமாயெய்ததாரோ மாயனென்றறிந்திலாரோ
ஆயனேயெய்தார்சொல்லும் அவனுயிர்கொள்வோமென்றார். 17

## வேறு

பார்ப்பார்விழுவா ரெழுந்திருப்பார் பழியோகுலையோ முடிந்து தென்பார்
கேட்பார்திருமால் முகம்பார்ப்பார் கெதியோவிதியோ வறியேனென்பார்
ஏற்பாரிதுதான் செய்தபிழை செய்தார்சொலு வித்துயரங், காப்பார்திருமால்
தனைநாளுங் கயிலைக்கடவுளார்தாமே.

## கதை

என்றுபுலம்பி இருவருமேதானெழுந்து
குன்றுமலைபோலே குதித்துவிழுந்தழுது
அழுதுபுரண்டுஐயோ அபயமென்று
புழுதியின்மேல்விழுந்து புலம்பிப்பரதவித்து
பூமியதிரப் புவனமெல்லாந்தானதிர
சாமியுந்தன்மீதில் சரந்தொடுக்கவல்லவரார்
தேவசுரர்களோ நிக்குள்ளபாலர்களோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரோஅந்த முனிவரரக்கர்களோ
யாவரோயெய்தவர்க ளறிந்தாலழித்திடுவோம்
தேவரீர்தப்பாமல் செப்புமென்றாரம்மானை
சூர்பகழியிட்டவனைக் கொல்லுவோங்காண்சொல்லுமையா
அவன்கையினம்பால் அவனையழித்திடுவோம்
எந்தவிதஞ்சுவாமி இடையூறுவந்ததென்று
அந்தமுள்ளவீமன் அருச்சுனனுந்தான்கேட்க
சுந்திரஞ்சேர்மாயன் சொல்லுவார்நல்வசனம்
வீருபுகழ்வெற்றியுள்ள வீரரருகிருக்க
ஆருமென்மேலேதான் அம்புதொடமாட்டார்கள்
கேளீரருச்சுனரே கிலேசமதைவிட்டுவிடு
மீளாவலுவீமா விசாரங்கள்வேண்டாங்காண்
காலங்கள்தான்முடிந்து கற்பனையுந்தோன்றாமல்
ஞானங்கடந்து நற்றவசுதானிருக்க
சீலமுடனுங்களுக்குத் தெரியவேசேதிசொல்லி
ஏலவந்துகானகத்தில் இருப்போந்தவமெனவே
நாமொன்றுதானினைக்க நடுவிருந்தான்தன்செயலால்
தாமென்றுந்தோன்றாமல் சாதகமாய்கூடநின்று
இந்தாருடலுயிரும் எப்போதுந்தன்னுதாய்
சொந்தமெனப்பூவுலகில் சுமந்தலைவாங்காலமெல்லாம்
மெய்யென்று தாமிருந்தோம் மேதனியேயுண்டெனவே
பொய்யாய்முடிந்ததுகாண் புத்தியுள்ளோர்தான்கேளீர்
மோசம்வருவதற்கு முன்னரியநம்செயலே
பாசம்பிடித்திழுத்தால் பார்க்கவிளக்குமுண்டோ
நாசம்வருங்காலம் நல்லறிவுபோய்விடுமே
நேசம்விளையாட்டால் நினைவுதடுமாறிவிடும்
வல்லமையாலே வாழ்வதுண்டோபூவுலகில்
நல்லவர்கள்நீங்கள் நமக்குதவியாகவந்தீர்
பயிருமேவேலியதாய் பஞ்சவர்கள்முதலாய்
உயிருமுடலதுபோல் உறவாகித்தாமிருந்தோம்
இப்போதுவந்தது இடையூறுகானகத்தில்
செப்பமுடன்வேடன் சிலையெடுத்துமான்துரத்தி
ஒப்பமுடன்வந்திடத்தே ஓடிவந்தமான்போல
என்னுருவமான்போலே இருந்தபடியாலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுருவவேடன் வில்பிடித்துஎய்துவிட்டான்
வந்துவிழுந்தது மண்ணும்விண்ணுந்தானதிர
விழுந்தழுதவேடனைத்தான் விரைவிலருகழைத்து
அங்கேயனுப்பிவைத்தேன் அந்தரங்கமாயுனக்கு
எங்கேநீர்வந்தீர் என்துயரந்தீர்ந்ததிப்போ
அம்புபடாத்தேகம் அம்புபட்டிருக்கிறது
ஆணிநரம்பு அறுபட்டுத்தான்போச்சு
பேணிஎன்னைப்பார்த்துப் பிழைப்பிக்கவல்லீரால்
காயனைப்பார்த்துக் களைநரம்புதான்பார்த்து
நேயத்துடனே நேராகத்தானிருத்தி
சோதித்துப்பாருமென்று சொன்னாரம்மாயவனார்
ஆதித்தன்போலே அர்ச்சுனனும்வீமனுமாய்
உள்ளமுருகியொரு உடம்பெல்லாம்புண்ணாகி
கள்ளருந்தர்மர்மொழி கடிந்துரைக்கமாட்டாமல்
கல்லாய்மரமாய்க் கருத்தசைவந்துநின்றார்
எல்லாம்விதிவசமாம் இப்படியேநீங்களெல்லாம்
நடந்தோநரிமெய்க்க நாமிருந்தகோலமென்ன
கிடந்தோர்க்கனியே கிட்டவரவேபயந்தீர்
போதாதோயிவ்வளவு புதுமைஅதிசயங்கள்
காதாரக்கேட்டோமே கண்ணாரக்கண்டோமோ
இனியார்சதமெனக்கு இளைப்பற்றவேளையிலே
தாயேஇனிமாளச் சங்கரனார்கற்பனையோ
தடையாயிருக்குதுகாண் தம்பியரேயிங்கெனக்கு
வகையாயிருக்குதுகாண் வந்திருந்தவர்கைதாரும்
இப்படியேசொல்ல ஈடழிந்துமெய்சோர்ந்து
அப்படியேநின்றார்கள் அர்ச்சுனனும்வீமனும்
போகுதடாசீவன் புண்ணாய்க்குலையுதடா
ஆகுதடாசீவன் அருச்சுனமேவீமர்களே
காயகிழக்குமுன்னே கையாயுதத்தாலே
நேயமாய்த்தூக்கி நிலத்தில்வைக்கமாட்டீரோ
ஆபத்தைத்தான்கார்க்கும் ஐவரென்றுசொல்வார்கள்
தாயப்படுக்கையிலே தான்பார்த்துநிற்பீரோ
நிமிஷம்பொறுக்காது நற்சீவனாகுதடா
சமையமதாகுதடா தம்பியர்ச்சுனரே
என்றுமன்றுமாயன் இப்படியேசொல்லுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றஅர்ச்சுனரும் நெடியதொருவீமனுமாய்
தங்கள் தெண்டாயுதமுந் தனுவையுமேநீட்டலுற்றார்
அங்கேயதுவழியா யவர்கள்பலம்வாங்கிவைத்தார்
தண்டுந்தனுவும் தானெடுக்கமாட்டாமல்
மீண்டுமனமுடைந்து விள்ளாமலுள்ளுடைந்து
ஒருத்துப்பலங்குறைந்து உள்ளுரைந்துமெய்சோர்ந்து
மறுத்துமொன்றுபேசாமல் வலுவிழந்துநிற்பளவில்
கருத்தத்திருமேனி காயம்பூமேகவண்ணர்
வெறுத்தபுவியை மெய்மறந்தானயர்ந்து
எங்கெங்குந்தானாகி இருந்தாரேயெம்பெருமாள்
பொங்குபுகழ்வைகுந்தம் போய்புகுந்தார்மாயவனார்

## *விருத்தம்*

நிலம்பறந்து விழிசொருகி நெருப்பும் பறந்து நீர் மேலாய், கோலம்பெரியவுடல்வேர்த்துக் கோழையுடனே சிலேட்டுமமும், ஆலம்பெரிய முடனுருகி ஆவியொடுங்கியறிவசைந்து, சீரும்பெருகும் வைகுந்தஞ் சேர்ந்தாருகந்தார் செகத்தைவிட்டு. 19

விட்டுப்பிரிந்த திருமாலை வீமன் விசயன் தானெழுந்து, கொட்டுப்புவியிலுள்ளடக்கித் துயரத்துடனே விழுந்தழுது, கட்டுப்பிரிந்தாரெனவோங்கிக் கானந்தனையேவிட்டகன்று, பட்டுப் பறந்து ஆயுதத்தை பகையாயெடுத்தார் தலை மீதில். 20

மாயனை யிழந்தோமென்று மனமெல்லா மிடைந்து புண்ணால் தூயதோர் தருமர்கேட்கச் சொல்லுவோம் வாருமென்று, ஆயுதந் தலைமேல்வைத்து அருச்சுனன், வீமன்றானும், நேயமாய்க் கானகம்விட்டு நிமிஷத்தில் வருவதானார். 20

## *கதை*

சீரானவைகுந்தத் திருமாலுந்தான்பார்த்து
பேரானபார்த்தன் பெரியவன் வீமனுமாய்
மன்னிருபேரும் மாயவனார்தம்முடைய
பொன்னடியில்வீழ்ந்து புரண்டழுது
மண்மேல்விழுந்து மாயோனைக்காணாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மேல்முகம்நோக்கி மெய்சோர்ந்துநின்றழுதார்
நின்றுநின்றுதான்துதிப்பார் நிலைதளர்ந்துதான்சொல்வார்
மன்றலருமாயோனை வாரியெடுத்துவிசயன்
கச்சுதோபூமி கசந்துதோ நாங்களுந்தான்
மைத்துனரேயென்று வயிற்றிலறைந்தழுதான்
மெய்ச்சுடரேரூப வெளியேவெளிமயக்கே
நச்சரவில்பள்ளிகொள்ளும் நாரணரேயிப்போது
அச்சமில்லாவெங்களுக்கு அலைச்சல்வைத்துப்போனீரே
மாயத்தால்சூதாடி மண்ணிழந்தஅன்றுமுதல்
தாயத்தார்செய்யுந் தருக்கையழித்தோமே
பாயப்புரைகழுவில் பதறநான்பாராமல்
தொடர்ந்துவரிவண்டாகி தோயகத்தில்மாயவனே
அடர்ந்தகழுவிருத்த அடையாளங்காட்டினையே
பார்த்திபாதேள்தன்சபையில் பாஞ்சாலிதன்னையிங்கே
ஏற்றுதுகிலுரிய எம்பெருமாள்காத்தீரே
பாராருமென்னிடத்தேர்ப் பாகனாய்நின்றாயே
போதகம்நூற்றுவரைப் பொருந்திமிகவென்றீரே
தனியாமலெங்களுக்காய்த் தரணிதனில்காப்பாய்
இனியாரெமைக்காப்பா ரென்றழுதானேவிசயன்
எங்கேயினிக்காண்போ மெழுபிறப்பிலும்மையென்றார்
அங்கேவருவோம்நாம் ஐவருமேயுன்னிடத்தில்
இப்படியாய்நின்று இவர்கள்புலம்பினார்கள்
தம்புருவீணை சரமண்டலிமுழங்க
கிம்புருவர்கின்னரரும் கீதமுதநாதமுமாய்
பூந்தேருஞ்சங்கீதமும் பூவையரும்ஆடல்செய்ய
வாழும்பெருமாள் வைகுந்தகோலமெல்லாம்
ஆளும்பெருமாளே அச்சுதன்வாராரென்ன
முழங்குதுகாண்சத்தமென்று முனிவர்மிகக்கொண்டாடி
காராருமேனியனைக் கமலமுகத்தோனை
சீராருஞ்சிங்காரத் திருவுறைமாயோனை
வேதாவின்தந்தைதன்னை விண்ணவர்கள்கோமானை
சீதைக்குநாயகனைத் தெய்வச்சிகாமணியை
மேகவண்ணமேனியனை விடைகொள்ளவேண்டுமென்று
தாகமுடனோடிவந்து தாங்கள் மாண்டாரம்மானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணியந்தன்னில் அருந்தவத்தோர்சொல்லும்வழி
பூரணமாய்நெஞ்சில் பொருந்தியிருவருக்கும்
காதாரக்கேட்கக் கலக்கமிகத்தெளிந்து
பாதாரந்தன்னில் பலமலர்கள்தான்தூவி
சேர்ந்தார்வைகுந்தஞ் செங்கண்மாலென்றறிந்து
பூந்தேனொழுகும் புட்பவனச்சோலையிலே
நல்லடக்கம்பண்ணி நமஸ்கரித்துமுக்காலும்
வல்லதொருமாயவற்கு வலுவாகவாள்விசயன்
செய்யுஞ்சடங்குஞ் செய்கருமம்தான்முடித்து
கையுங்குவித்து கடுகிநடப்பதற்கு
வீமன்விசயன் வில்லுண்டுதானெடுக்க
தாழும்பலமில்லாமல் தலையிலேதான்சுமந்து
வந்தவழிதானோக்கி வருகின்றவேளையிலே
அந்தவழிகடந்து அப்பாலும்போகையிலே
ஆடுகளைத்தான்மேய்த்து ஆயனுந்தான்போனார்
வேடுவர்கண்டு விரைந்தெடுத்தார்ஆடுகளை
அப்போதிடையர் அர்ச்சுனவீமரென்று
இப்போதருச்சுனரே இருவர்நீங்கள்போகையிலே
ஆடுகொள்ளைபோகையிலே ஐயோ அபயமென்று
நீடுபுகழ்மாயன் நெடுங்கானகமுறைய
கொள்ளைகொண்டான்வேடன் கூகூவெனவிடையன்
துள்ளிவந்துசொன்னான் துடிவீமன் பார்த்தனிடம்
இடையனிவைசொல்ல இவர்கள்மனமிடைந்து
தகைசெய்யவேடனையும் தான்பொருதவேணுமென்று
வீரத்துடனே வீமன்விசயனுமாய்
கோரத்துடனேவந்து கொல்லவென்றுவேடர்களை
தாழ்ந்துபுகழ்வீமன் தான்வெகுண்டுவேடர்தம்மேல்
எற்றியகண்டை எடுக்கவலுமையற்ற
பாரியிடும்பனையும் பகாசூரனையுமுதைத்த
வீரங்குறைந்ததுவும்வேடன்மெலிவுற்றதும்
கண்டுசிலைவிஜயன் கனகமிகவெகுண்டு
வண்டலர்வேடர்தம்மேல் வில்லெடுத்தாரம்மானை
எடுத்தவில்லைதன்னிடத்தில் ஏற்றவலுமையற்று
கடுத்தசிலைவிஜயன் கலங்கினானம்மானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டாவனத்தை கானலுக்களித்ததுவும்
மூண்டுபெருத்தவரை முக்கோடிகானவரை
வென்றவிஜயனுக்கு வேடரெதிரானதுகாண்
அன்றுகலியன் அருள்ரூபமானதுவே
வீமன்விஜயன் வேடருடன்தான்பொருத
நேமமுடனாயுதங்கள் இல்லாமல்நின்றதுகாண்
வேடரறிந்து வெகுண்டுசினந்தெழுந்து
சாடவேவீமனையும் தம்பிவிஜயனையும்
போடவெகுண்டு புறங்காட்டியோடலுற்றார்
ஊழித்துவேடல் ஒருமிக்கஆடுகளை
பாரில்துவாரகாபுரி பட்டணம்கொள்ளையிட
கானல்புனவேடர் கருதியேவார்த்தைசொல்லி
சீரில்சிறந்த சிறைபிடிக்கவேணுமென்று
ஊரில்வருவதற்கு உற்சாகமாய்ப்பேசி
போனார்கள்வேடரென்று போர்விஜயன்வீமனுமாய்
கூறாகலென்றுங் குதுவணம்புண்ணாகி
வீறானஐவரென்று மேதினில்நாமிருந்தோம்
எண்ணமெல்லாம்போச்சே என்றுமனமுருகி
கண்ணரியபட்டணமும் காவலழிந்ததும்
வின்னமொன்றுவாராமல் வின்னமேல்வந்துதென்றல்
ஆதிபிரானான அச்சுதர்க்குநேராது
பாதிப்பிறையணிந்து பரமனர்க்கும்நேராது
நமக்குவலுக்குறைந்து நாணிநின்றோமேயாகில்
சுமக்கும்பழிபாவம் தோஷமிகவுண்டாகும்
அண்ணருக்குச்சேதி அரியவுரைக்கவென்று
தருமரிடவீமன் தம்பியும்அர்ச்சுனனும்
ஏங்கிமுகம்வாடி இடைந்துவழிகூடி
தாங்கிநடந்திடுவார் தானேவிசாரமுடன்
அத்திபுரஞ்சென்று அண்ணரையுங்கைதொழுது
சத்தியுள்ளவீமன் தனஞ்சயனுமேதுசொல்வான்
குருகுலத்தையாளும் கோபாலாகாத்தருளி
வருங்கருமஞ்சொல்லி வரமாய்த்தானிருந்து
ஆதிநாராயணர்க்கு ஆபத்துவந்ததென்று
செய்திசொல்லக்கேட்டுச் செய்தவினையறியீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதென்றருளிசைந்த புண்ணியரேநீர்கேளீர்
காடெங்குந்தேடிக் கானகமெல்லாந்திரிந்து
வனமும்வனாந்திரமு மலையும்பலகோடி
புவனம்புகுந்திரிந்து பூத்தோனைக்காணாமல்
தேடித்திரிந்துஒரு செண்பகப்பூங்காவனத்தில்
நாடித்திருமாலைநாங்கள் கண்டோமண்ணாவே
அம்புபட்டுமேனி வாடிமெலிந்துநொந்து
மெய்க்கூடுதான்வெளிரி மேனியெல்லாம்புண்ணாகி
பொய்க்கூடுபோலே பூமியின்மேல்தான்கிடந்தார்
கண்டவுடனேநாங்கள் கதறிவிழுந்தழுதோம்
புண்டரிகமேனியனார் போதமாய்த்தானமர்த்தி
என்னையெடுத்து இருத்துமென்றார்கோபாலர்
பின்னைநினைவுகொண்டு பேசாமல்நாங்களந்நின்றோம்
நின்றரைப்பார்த்து நெடியோனும்பூருவத்தில்
நன்றிசெய்தபேச்சும் நடத்துகின்றசொல்லுமதை
உடம்புருகச்சொன்ன உத்தாரங்கள்தான்கேட்டு
குடங்கழுத்துநீர்புரிந்த கும்பமதுபோலாகி
தேவரீர்சொன்னமொழி செய்திகளைமீறாமல்
நாவுலர்ந்துநின்றோம் நாரணரைநம்பாமல்
கருத்தறிந்துமாயன் கைதரவுசொன்னார்கள்
உருத்தறிந்துநாங்கள் ஒன்றுமுறையாமல்
குன்றாமனது குன்றிமனம்புண்ணாகி
அந்தநிலையறிந்து ஆயுதத்தைநீட்டவென்றார்
எந்தவிதமென்று எண்ணியெங்களாயுதத்தை
நீட்டியிருந்தோம் நின்றோமதுவழியாய்
வாட்டிவலுவை வாங்கிவைத்தார்மாயவரும்
பலங்குறைந்துநாங்க ளப்போதிருக்கையிலே
கலங்கிவிழிபுரட்டி கண்ணருந்தான்மெய்சோர்ந்து
பாசங்கலங்கி பதறிகுடல்வேர்த்து
வாங்கமலமண்ணில் வைகுந்தஞ்சேர்ந்தனர்காண்
சென்றுமலர்பாதம் தீட்டியெடுத்தவ்வனத்தில்
அட்க்கிச்சடங்குகளனைத்தும் முடித்துவந்தோமண்ணாவே
வந்தோம்வழிகூடி வாடிமனதிகிலடைந்து
அந்தவழியிலொரு ஆயன்தான்விட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய்த்துவருகையிலே வேடர்புகுந்தானெடுக்க
பார்த்துநீர்போறீரோ பார்த்தவீமரேநீர்
அபயமபயமென்று ஆயனுந்தான்கூவெனவே
உபயமெனக்கென்று ஓடிவந்துவேடருடன்
தண்டிப்பொருளாளன் வாடாளர்வேடருடன்
தண்டிப்பொருத வேகிவயவந்தார்காண்
தரிப்பட்டுநிற்கத் தத்துவங்களில்லாமல்
ஆரிட்டசாபமென்று அறிந்துவலுக்குறைந்து
முறுபட்டுவந்தோம் முதுகுபுறங்காட்டி
தெறிபட்டுதந்துமக்கு செய்தியெல்லாந்தானறிய
என்றிவர்சொல்ல ஏங்கியேதருமருந்தான்
குன்றுதிர்ந்துவிழுந்தாற்போல குதித்துவிழுந்தழுது
முகத்திலறைந்தழுது முடிகுலைத்தான்வீழ்ந்து
வயிற்றிலறைந்துகொண்டு மண்மேல்விழுந்தழுதார்
வாழ்வேன்யெவரும் மதியாமணிவிளக்கே
தாழ்வேன்யெவரும் தான்தம்மறப்பரேதான்
வாழ்ந்தார்தருந்தவமே வானமணிவிளக்கே
பிரிந்தேநானிங்கிருக்க பிரபலமோநாயகமே
பூலோகசாமீப சாருபதேசிகனே
எள்ளுளெண்ணெய்போல் எவ்வுயிர்க்குந்தானானால்
வள்ளலேயும்மைவிட்டு மறந்திருக்கக்கூடுமோதான்
அழகுதிருமேனியனே ஆபத்துக்கொத்தோனே
களபமிகுமேனியனே கண்ணனேயென்றழுதார்
துளபமணிமார்பழகா சுகந்தமணிதின்புயனே
புளகமதகோமானே பூபாலர்கோபாலா
தூது சென்றயெங்களுக்கு சூதனிடமாக
தீதுகொண்டநெஞ்சத் துரியோதனனையும்
பாங்குடனேகொள்ளப் பகைமுடித்துங்களுடன்
சாங்கமாநின்று தளமுமவன்சேனையெல்லாம்
கர்னன்சகுனிமுதல் காவலர்கள்நூற்றுவரும்
மன்னவர்களெல்லாம் இறந்தகளந்தனிலே
மடிந்துவிழுமட்டும் வயிரமாய்நின்றீரே
முடிந்ததோகாலம் முகில்வண்ணாவுந்தனுக்கு
மாறுகொண்டஐயா நீர்வைகுந்தம்போகும்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றவெங்களையும் கொண்டுசென்றாலாகாதோ
வாலிதனைக்கொன்ற மாயவனேவும்முடைய
கோலத்திருவழகை குறித்தென்றுகாண்பேனோ
ஈரைந்துசென்னி இராவணனைவெஞ்சமரில்
போரஞ்சாவீரனை பொருந்திமிகக்கொன்றாயே
வாய்ந்தஅரக்கர்குல மாளவேதான்பொருந்தி
எய்ததிருக்கோலம் என்றுநான்காண்பேனோ
தொடர்ந்துயிரணியனைத் தூணிலுதைத்தாயே
அடர்ந்துகொன்றகோலமென்று ஐயா நான்காண்பேனோ
எங்கேயினிகாண்போம் இவ்வுலகிலும்மைத்தான்
அங்கேவைகுந்தம் அங்கிருந்துகாண்போமோ
என்றுசொல்லிதரும ரிருந்தார்மனமிடைந்து
நின்றுநகுலன் நெடுமாலைத்தானினைத்து
குந்திவிழுந்தழுது கோதென்றபயமிட்டு
புத்திகலங்கி பற்றியுடல்வேர்த்து
விழுந்துபுரண்டழுது மெய்சோர்ந்துகைசோர்ந்து
செந்திருவாழ்மாயவரே சிநேகம்பிரிந்தோமே
விந்தமலர்ப்பாதமதை மேதினியில்காண்போமோ
அந்தமுள்ளமாலே அவனியளந்தோனே
அரிகேசவாமுகுந்தா ஐயாஎனைப்பிரிந்தால்
சிரியாரோபூவுலகில் தேசத்திலுள்ளோர்கள்
பரியாசம்பண்ணுமட்டும் பஞ்சவர்கள் நாங்களிறோம்
தரியோம்தரணியிலே தரிக்கோமேஉம்மைவிட்டு
வருவோம்வைகுந்தமென்று வல்லநகுலன்சொல்லியபின்
தருவானநூல்வேந்தன் சகாதேவன்தான்சிரித்து
பொய்வாழ்வென்று போதமனமகிழ்ந்து
மெய்வாழ்வுபோல விரும்பினார்மன்னவனை
தேசம்பொருளோ செகம்பொருளோஉங்களுக்கு
தாகம்பசியினைப்புஞ் சஞ்சலங்கள்தான்பொருளோ
தேடுந்திரவியங்கள் செல்வமதுதான்பொருளோ
நாடுநகரமிந்த நற்பணிகள் தான்பொருளோ
தந்தைதாய்சுற்றம் தருமங்கிளைபொருளோ
மைந்தரும்வீடு மனையாட்டிதான்பொருளோ
ஆனைக்குதிரை அலங்காரந்தான்பொருளோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னப்பொருளென்று இடைக்கிறீரெல்லோரும்
தென்னவர்மாய்கைதன்னை எதிரென்றுநம்புவாரோ
காகந்தரியாது கண்பொருளுநில்லாது
நேரந்தவறாமல்நிலை நின்றோர்தங்களுக்கு
மேகந்தருநிழலை மெய்யென்றுநம்புவாரோ
காகுத்தன்செயலைக் காணாமல்கண்டுகொண்டான்
பகையாதிருப்பீர்காண் பாசத்தைநம்பாமல்
காரணங்கள்தான்முடிக்க காணாமல்கண்டுகொண்டான்
நாராயணராய் நடத்துகின்றார்பாரதத்தை
உகந்தயுகம்பிறந்து ஒடுங்காதபேரையெல்லாம்
செகத்தோடேயொத்திருந்து செயம்பண்ணியிப்படியாய்
எத்தனையோகோலமலர் எடுத்தஅவதாரம்
கர்த்தனார்தன்செயலைக் காண்பதரிதெனவே
வேதங்கள்தானும் விளங்குதுகாண்சாஸ்திரமும்
ஆதலால்மாயவனும் அளவற்றகாலமெல்லாம்
அழிவதுமில்லையவர் ஆதிமகாமூலம்
தெளிவதுவேசித்தமென்ன தீரன்சகாதேவன்
அப்போதுரோபதையும் அடித்துவிழுந்தலறி
மைபரவுமேனியர்க்கு வந்தவிதமோசமென்ன
கற்புக்கரையாமலெந்தன் கற்புநிலைநிறுத்தி
துற்புத்திசெய்தோரைச் சொல்லரியபாழ்நரகில்
வைப்பித்தபுண்ணியருந்தான் மாளவந்தகாரணமேன்
மெய்ப்பித்தபஞ்சவரை மேதினியில்விட்டேகி
தப்பித்தனிவழியே தான்போகக்காரியமேன்
தெய்வமேஞாயமிதோ செங்கணெடுமாலே
ஐவர்சகாயரே ஆயரேதந்தையரே
நாயகரேபஞ்சவர்க் கென்னாளுந்துணையிருந்து
தாரகையாயென்னாளுஞ் சாங்கமாய்நின்றோனே
கணக்குப்பாழாய்க் காசினியோர்தாமறிய
உனக்குப்பிழைவாராமல் ஏழைபங்கில்நின்றோனே
என்றைக்குக்காண்பேன் எங்கள்பெருமானே
குன்றைக்குடைபிடித்து கோவுகளைக்காத்தோனே
ஐயாதுணையெனக்கு ஆரினிகாணிப்புவியில்
மெய்யாயெனைமறந்து விண்ணுலகில்போனீரோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானேதுணையிழந்தேன் நாரணரேயும்மைவிட்டு
வானோர்கள்போற்றவுந்தான் வைகுந்தஞ்சேர்ந்தீரோ
கினிமொழியாளிவ்வசனம் கிலேசமாய்சொல்லியபின்
மெய்குன்றிக்குந்தியம்மாள் முகத்திலறைந்துகொண்டு
என்மருகாவென்கோவே எல்லார்க்குநாயகமே
தருமருக்குந்தம்பியர்க்கும் சாங்கமாயென்னாளும்
இம்மைதனிலிருந்து எங்களையுங்காத்தோனே
நன்மைசெய்யக்கர்மன் நடுக்கானகந்தனிலேன்
மான்மறைந்துபோன மகிமையென்னநாரணரே
வேண்டிவினைசெய்த விதிவசமிப்படியாய்
அந்தரத்தில்நீரும் அருந்தபசுபோயிருந்து
தந்திரத்தையின்னதென்று தருமரறிந்திலையோ
மந்திரவேதம் வரம்புதப்பிப்போனதுவோ
சந்திரருஞ்சூரியருந் தானறிந்துபோனாரோ
அண்டமளக்கும் அச்சுநிலைதான்பேர்த்து
கொண்டாய்கருவழிந்து குரைகடலுநீர்தாண்டி
ஆகாயம்பூமி அந்தரங்கள்தான்குலைந்து
வாகானநற்றவங்கள் மாசமடைந்துபோனாலும்
பிறப்பேதுனக்குப் பிறந்துமிறப்பதுவும்
இரண்டுந்தொழிலாய் நடத்துகின்றபுண்ணியரே
மிரண்டுவுரையோன் விளம்பினானொருவசனம்
என்றுகுந்திதேவி இத்தனையுந்தான்புலம்பி
சென்றுபுகுந்தாள் செய்யமணிமண்டபத்தில்
தம்பியருந்தருமருடன் தானேமனமுடைந்து
வெம்பிமுகம்வாடி வேகநாராயணர்தம்
சொல்லரியநேசமது துவாரகாபுரிதனிலே
வெல்லரியவேடர்சென்று வீரியங்கள்செய்யாமல்
இப்போதேசென்று எம்பெருமான்பட்டணத்தை
வீமன்விசயன் மிகுந்தசகாதேவன்
தர்மன்நகுலனுடன் தந்துபரிசேனைதளம்
சிறப்பாகசேனையுடன் சீக்கிரத்திலந்நேரம்
புறப்பட்டார்பூமி பேரண்டந்தானடுங்க
நடந்தார்வெகுதூரம் நன்னரிதானோக்கி
விரைந்துபுகுமுன்னே வேடரங்கேதான்முடுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்துவளர்ந்தோர் நெடுமால்தன் பட்டணத்தை
பச்சைமால்தேவி பதினாராயிரவரையில்
இச்சையுடன்வேட ரெல்லாரையும்பிடிக்க
விளைத்தாரரண்மனையை மாயனார்தேவியரை
நுழைந்தேபிடிக்கவென்று நோக்குகின்றவேளையிலே
கங்குல்வந்துமூடிக் கதிரோனும்போய்மறைந்தான்
விழுந்தேவரண்மனையில் மெல்லியர்களெல்லோரும்
இழுந்துகரைந்து எம்பெருமானென்றழுதார்
கங்குல்விழுந்து கதிரோனும்வந்துதித்தான்.

### விருத்தம்

தேவிகளழுதபோதே செங்கண்மால்தனக்குதோர்த்து
பாவியார்வேடர்தாமும் பங்கமேசெய்யாவண்ணம்
ஓவியமானபெண்க ளுருவெல்லாமாற்றிமுன்னால்
தாவியரிஷிபோலாகித் தாரணியில்வருகவென்றார். 22

தப்புடன்சங்குதாளம் தாதர்போல்வேஷங்கொண்டு
இப்புவிதன்னில்வேடர் ஏங்கியேசபையேவாரும்
ஒப்புடன்தாதர்போல ஒருமித்துவரவேகண்டு
மெய்ப்புடனும்வந்தார்கண்டார் வேடருமலைத்துநின்றார். 23

### கதை

அழுதகொருதேவியர்க ளாரிழைமாரெல்லோரும்
தொழுதபயமிட்டுச் சொன்னதொருதோத்திரங்கள்
அந்தமொழிகேட்டு ஆயனார்சூத்திரமாய்
முந்தியிருந்த முனிவர்தபோதனர்போல்
ஓமென்றுஅவ்வுருவ முருமாறியேயிருந்தார்
சடைமுடியுடனே தான்வந்தார்வீதியிலே
படைகூடிகாத்திருந்த பார்வேடரெல்லோரும்
விதிபோலசைந்து மெய்மறந்துதானிருந்தார்
சதிருடையப்பட்டணத்தை தான்கொள்ளையாடவென்று
நெருங்கிவரும்போது நிமிஷத்தில்தர்மர்படை
கங்குல்போல்சூழ்ந்து கைகலந்தாரம்மானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தியடித்துவிட்டுத் துன்பமறவேதிரும்பி
அரத்தியேசாத்தகியை ஆழ்வாருமுன்னடத்த
வெற்றியுடன்சேனைதளம் வேந்தருடமந்திரிமார்
அந்தப்புரந்தனிலே அழைத்துவந்தாரம்மானை.

### விருத்தம்

மாயவனுலகையாண்டு வனத்திலேயிருந்தாரென்று
நேயமில்லாவேடர்வந்து நிலைமையைகொள்வேமென்று
தூயதோர்தர்மர்தானுஞ் சொல்லியோர்விரலைழுக்கில்
ஞாயமோசிவனேயென்று நடந்துடல்சோர்ந்திருந்தார் 24

இப்பவுஞ்சேதியென்ன வென்றுதான்தம்பியரே
ஒப்புடனழைத்துமுன்னே யுண்மையென்றுகேட்க
அப்புறமினிமேலென்ன அண்ணலேயேகும்ஞாயம்
மெய்ப்புடனிவ்விடம்விட்டு விஜயவைகுந்தம்சேர்வோம். 25

இளையவர்நீங்கள்பாரி லிருந்துதான்புவனமெல்லாம்
கிளைவழியுடனுங்கூடிக் கிள்ளையேமகுடமன்னர்
பழையவரிருந்ததாயும் பாக்கியமனேகமெல்லாம்
குறைவரவிருந்துவாழ்ந்து குவலயத்திருங்களென்றார். 26

### கதை

தருமரிவார்சொல்லத் தனஞ்செயனும்வீமனுமே
தருமமோவென்று கண்ணீர்மிகச்சொரிய
நகுலன்சகாதேவன் நாட்டமற்றுவாட்டமதாய்
வெகுகளையாகி விள்ளாமலுள்நுழைந்து
எங்களையும்விட்டு இனம்பிரிந்தமான்போலே
தங்குவதுமெங்கே தரிப்பதுமெவ்விடங்காண்
நாங்களேயும்மைவிட்டு நானிலத்திலேகுகிறோம்
தீங்கொன்றும்பேசாதே திருவுளமேயல்லாது
இருந்துமனக்கோட்டை யிப்பவுமிங்கேநாம்
வருந்துவோம்நாங்கள் வாடுவோமும்மைவிட்டு
என்னவொருசொல்லில் எடுத்துரைத்தீரண்ணாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமிதுவரையி லிணைபிரிந்துநின்றோமா
மாய்கையிதுவாழ்வு மாயமாய்ப்போச்சுதிப்போ
சாய்கையிதுவென்று சதமென்றுநானிருந்தால்
இந்தவுயிர்தனக்கு யீடேற்றமெப்போதான்
அதுகருமமெங்களுக்கு அடைவுதானிப்போது
மதுரமொழிபயனும் வாசகமேயண்ணாவே
நடக்கும்வகைதெரிந்து நாயகமேயண்ணாவே
அடக்குமுபாய மவனிதனிலுண்டுபண்ணி
விலக்குமுபாயம் வழங்குமென்றார்தம்பியர்கள்
வகைபுகழ்தம்பியர்கள் விளம்புமொழிகேட்டு
தக்கபுகழ்தருமர் தம்பிமேலன்புவைத்து
சிறந்தபுகழைவர் சேவகங்களுள்ளதெல்லாம்
இறந்துமிக அத்திரத்திருக்கும் நாள்தனிலே
தேசமிகுவாமொரு தெய்வப்பிராமணில்
முன்னாளில்வேதியன்றான் முழுதும்குடியிருந்து
இன்னாளொருபார்ப்பான் பிரதேசம்விட்டுவந்து
இந்தப்பிராமணனை யிருக்கவிடந்தாருமென்றான்
அந்தமனையி லவனுக்கொருபுறத்தில்
விட்டுக்குடியிருமென்று வேதிருத்தான்கொடுக்க
மட்டுடனேவீடுமங்கே கட்டினான்வேதியனும்
பார்ப்பானும்சம்மதித்துப் பகுதியில்குடியிருந்து
நேர்ப்பாகவவ்விடத்தில் நிலம்பிசைந்துமண்ணெடுத்து
கட்டினான்வீடு கனத்தபுதையலொன்று
மண்ணிலிருந்தெடுத்தான் மறையோனுமந்நேரம்
கண்ணிலேகண்டபொருள் கருமமென்றுதானினைந்து
நமக்குத்தெரியாது நம்மிடத்துசிக்காது
சுமக்கும்பழிநமக்கும் துன்பம்வருமென்றேதான்
மனைநமக்குந்தந்த மனையாளன்தன்னதென்று
வினையொழியவேண்டி வேதியரைத்தானோக்கி
ஐயாவேதியரே அதிசயந்தான்கேட்டீரே
துய்யமனைக்கட்ட துடங்கினதோமண்டபங்கில்
கண்டதிரவியமுங் கனகமணிபெட்டகத்தில்
கொண்டோடிவந்தேன் குடத்திற்பணந்தனையும்
உந்தன் பொருளிதுகாண் மற்றோர்கள்தான்புதைத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமுனக்கென்று தோற்றுதுகாணெண்மீதில்
உன்மனையிற்கண்டபொருள் உன்னைவிட்டுப்போகாதோ
ஆனதினாலுன்பொருளை ஐயரேவாங்குமென்றார்
வேதியர்சொல்லவந்த வேதியனுமென்னசொல்வான்
அன்றுனக்குநாமும் அன்பாகவீடுதந்தோம்
இன்றுனக்குவந்த இவ்விடத்துக்கண்டபொருள்
கண்டவர்க்கேயின்பம் காணாதிருந்தவர்க்கோ
உண்டவர்க்கேயின்பம் உறங்கினபேர்க்கெந்நாளும்
வேண்டாங்காண்வேதியரே வீட்டிற்குக்கொண்டுபோவீர்
தீண்டாப்பொருள்களையும் தீண்டுவாரோநல்லோர்தான்
போங்காணும்சும்மாய் பொருள்களையுங்கொண்டேதான்
வாங்கேனொருநாளும் மதியேன்வனந்தனிலும்
என்றுமறையோனும் இவ்வசனம்சொல்லுவதை
நின்றுபிராமணனும் நீர்சொல்வதுநியாமல்ல
பொருந்தாதகாரியத்தை பொருந்தவேசொல்லுகிறீர்
வருந்தாதார்வென்று வருத்துவதுமாநிலத்தோர்
உந்தன்மனையெனக்கு உபகாரமாய்க்கொடுத்தீர்
கிடைத்தபொருளை நானெடுக்ககிட்டாதுவேதியரே
எந்தன்விதிப்பயனோ இவ்வூரிலும்மிடத்து
வந்தவிதிப்பயனோ வழங்குரைக்கவேணுமென்று
உன்சமர்த்தும்என்சமர்த்தும் ஊரறியவேணுமென்று
பின்சமர்த்துப்பேசி புறப்பட்டாரன்னேரம்
சீறிவிழுந்து கெடுபிடியுஞ்சண்டையுமாய்
நெறியுடையாரென்று நீதிவிளங்கவென்று
ஊசலிட்டுக்கொண்டு உருபூசல்தன்னுடனே
அந்தணர்கள்தருமரிட மவர்வழக்கைச்சொல்லலுற்றார்
வந்தவர்கள்சொல்லை வாகாகத்தான்கேட்டு
மந்திரிமாரைவர் வென்றுருகழைத்து
தந்திரிமாரெல்லோருஞ் சதிராகத்தான்கூடி
ஞாயம்நடக்கட்டும் நமக்குரையுமென்றுரைத்தார்
தூயதருமர்சொல்லத் துரந்தோர்களெல்லோரும்
அடுக்காயிருந்து அவர்வழக்கைகேட்கலுற்றார்
தொடுத்தமறைவேதியரே தொடர்ந்தவரேசொல்லுமென்றார்
குடியிருக்கவந்தோன் கூறினான்தன்வழக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடியிலடிபட்டு வேறூரில்தானிருந்து
இவரிடத்தில்வந்து இருக்கவிடங்கேட்டேன்
அவரெனக்குவீடுகட்ட ஆமென்றிடங்கொடுத்தார்
அவ்விடத்தில்மண்ணெடுத்து அடைவாகசுவரேற்றி
இவ்விடத்தில்வீடு இதமாய்முடித்திருந்தேன்
மண்ணெடுத்துக்கோணையிலே மறைபொருளாய்தானிருந்து
கண்ணதிலேதெரிந்து கரத்தில்பொன்னெடுத்து
எடுத்தவுடனே இவனிடத்திற்கொண்டேகி
கொடுத்தேன்பொருள்கையில் கொள்ளேனெனவுரைத்தார்
முன்னமிவருடைய மூதாக்கள்வைத்தபொருள்
மன்னவரேநாமெடுத்தால் மாபாவம்வந்துவிடும்
ஆதலால்மன்னவனே ஆரொருத்தர்வைத்தபொருள்
காதலுடனஞ்சா தெடுத்துவிட்டுக்கையாண்டால்
எடுத்தபுதையல்தன்னை எப்போதுமன்னவரே
அடுத்தவர்களுக்கடிமை பாழ்நரகில்வீழ்ந்திடுவார்
ஆகையாலிப்பொருளும் ஆகாதுஎன்றுசொல்லி
வேகமுடனேமறையோன் வாதித்துத்தானுரைத்து
அதிதிபரதேசி அடுத்துக்குடியிருந்தால்
பகுதிபெரும்பிடியாய்ப் பண்ணுகிறானென்றுரைத்தார்
மற்றுமந்ததருமர் மனையுடையவேதியரே
உற்றுமிகநோக்கி உன்னினைவைச்சொல்லுமென்றார்
பாராளும்தருமர்நீர் பாக்கியவானேகேளீர்
ஏதக்கடுமனையை இவர்க்குயிடங்கொடுத்தேன்
அந்தமனையும் அதிற்கொண்டவாழ்பொருளும்
இந்தவுலகறிய இவர்க்கென்றுதான்கொடுத்தேன்
எடுத்துரைத்தமன்னவரே இன்னமொன்றுநீகேளாய்
கொடுத்தபொருள்மீளக் கொள்ளுவார்தாமுண்டோ
அடுத்தோர்தமக்குவினை அங்கேநினைப்பாரும்
தொடுத்தகருமமவை தொடர்ந்தேயளித்தவரும்
கெட்டுவிடுவார் கேடில்லாமன்னவரே
தட்டவருநிதியும் வாங்கேனெனவுரைத்தார்
முட்டவேவேதியனும் மொழிந்தனர்காணம்மானை
கேட்டந்ததருமன் தேர்ந்துசிலமந்திரியை
ஏற்கவேநோக்கி இருவரதுவாழ்க்கைதள்ளிவைக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகியேமறையோர் இருபேருந்தான்வெகுண்டு
மற்றவர்தங்களிலே வண்மைமிகப்பேசி
உற்றுமிகமுன்னாள் உரைத்தமொழிதவறி
சொன்னபடியைந்தாநாள் தோற்றமுடன்வந்துநின்று
மன்னவர்கள் தருமர்முன்னே வாகாகவந்துநின்று
அன்புடனேமாமறையோர் அரசுபலனாடி
இன்பமுடன்தருமர் எடுத்துரையுமென்றுரைக்க
பெருமையுடன்நோக்கிப் பேர்பெரியவேந்தர்முன்னே
அருமறையோர்தன்வழக்கு அற்றதோவென்றுரைக்க
திருமுனிவர்தாமிழைக்கச் செயலுற்றாரம்மானை
மன்னவனேஉன்மனையிற் கண்டதொருவன்பொருளை
என்னவென்றுசொல்லி எடுத்துரைத்தாரம்மானை
வந்தவன்மனையில் இவருக்கிடங்கொடுத்தேன்
சொந்தபுதையல்தன்னைச் சுகமுடனேகொள்ளைகொள்ளும்
கொடுக்கமனஞ்சலித்து குறியாகவார்த்தைசொல்லி
பிடிக்கிறான்சண்டையிவன் போகவுந்தான்ஞாயமுண்டோ
உன்செய்தியென்னவென்று உகந்துதருமர்கேட்க
என்செய்திஎன்னசொல்வேன் எடுத்தபுதையலைத்தான்
கொடுப்பேனாநானுங் குடத்துபணத்தையெல்லாம்
குடிபுகுந்தேனானால் குவலயத்திலேயிவர்கள்
அடியிருப்பதற்கண்ட ஆனவொருவன்பொருளை
கொடுத்துகுடியிருக்க வந்தேனோகொற்றவனே
அடித்துகுடியிருக்க வந்னோஜவரிடம்
நிஷ்டூரம்பண்ணுகிறீர் நீதியோமன்னவனே
எட்டூரறிய இருக்கிறான்சந்தியிலே
நீதியுடனேசொல்லுமையா நிருபனேயென்றுரைத்தார்
வேதியன்றானிவ்வசனம் விளம்புவதைத்தான்கேட்டு
இனியென்னஞாயம் எடுத்துரைக்கவாயேது
அனியாயமிப்போது அந்தணர்தன்வழக்கு
கண்டோமதிசயந்தான் கலியினிடகீர்த்தி
விண்டோம்புவனம் வெறுத்தோங்கலியாலே
சொந்தமெனக்கப்படியாஞ் சொல்லுங்காண்வேதியரே
அடாமழையிற்காக்கைக்கு அன்னமிடந்தந்தாற்போல்
புக்கானமாகலியின் புதுமையிதுவென்ன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

அந்தணர்வழக்குண்டோ மடிக்கடிபுரட்டுங்கண்டோம்
இந்தமானிலத்தில்நாமு மிருப்பதுதர்மமல்ல
அந்தநாளாய்கால மாண்டுவான்முடிந்துமற்றும்
வந்தநாள்வந்துதானால் வழக்கென்னவழக்குஞாயம். 27

பஞ்சமாங்காலங்கொண்டும் பாரினில்கலியன்வந்தால்
என்னசெய்வோம்தம்பிமாரே எப்படியுலகந்தன்னில்
முன்செய்தஞாயம்போலே முற்றுமேயினிமேல்நம்மால்
பஞ்சவரென்றுசொன்ன பாவனைமுடியாதென்றே. 28

ஆண்டவர்நடந்தாரிந்த வதியசம்வருமென்றெண்ணி
நீண்டவர் மொழிந்ததென்று நிச்சயநிசமுங்கண்டோம்
பாண்டவர்முதலவர் தாமும் பாரினிலிருந்தோமானால்
மூண்டதோர்கலிவிடாது முடிந்ததுநமக்குக்காலம். 29

வாழ்ந்ததுவாபரத்தில் மனுநெறிமுறைமைநீதி
தாழ்ந்ததுகலியுகத்தில் தருமரேபெயரும்போகும்
சூழ்ந்ததோர்புவியைவிட்டு சொல்லும்வைகுந்தம்சேர
ஆழ்ந்ததோர்கலியைவிட்டு அகலுமோமகலுவோமே. 30

நாரணர்நம்மைவிட்டு நடந்ததோகாரியந்தான்
காரணர்முடித்தகோலம் கலியுகம்வருமென்றெண்ணி
ஆரணந்தன்னையீன்ற அச்சுதன்பச்சைமால்தான்
பூரணங்கடந்தமார்க்கம் போவதுகருமமின்றே. 31

வானவரிமையோர்மற்ற மாதவமுனிவர்தேவர்
தானவரிஷிகள்வேதத் தபோதனர்கள்புகழ்தல்செய்ய
நாவினிற்கரிகராக நல்லிசைமிகவும்பாட
மேனகைபணிகள்மாற வெகுசுகம்வருகுந்தானே. 32

வீமனேவிஜயன்தம்பி மேதினிதன்னிலுங்கள்
நேமமும்பலமும்வாங்கி நெடியமால்போனாரென்று
சாமமாய்வேடர்முன்போய்ச் சமரினிற்பலமுங்காட்டி
நாமினியுலகில்வாழ்க நமக்கிதுசகியாதென்றார். 33


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமருந்தம்பி சகாதேவனைநோக்கி
வன்மறவேதான் வகையாய்ச்செப்பலுற்றார்
நீதியும்பொய்த்து வினைகளுமேஉண்டாகும்
மற்றும்சத்தியமா மைந்தர்தவறிவிடும்
கொற்றரேவந்துமுன்னாட் கூறினாரெம்பெருமாள்
தப்பாதுசொன்னமொழி சதுர்மறையோர்தன்னிடம்
இப்போது கண்டோ மெனவுரைத்தாரம்மானை
தருமர்தனைப்பணிந்து சகாதேவனப்போது
வருங்கலியின்வாசகத்தை மன்னவனேகேட்டருள்வீர்
அருந்தானங்குன்றும் பான்மைகளும்பேதமாம்
மெய்யுமழிந்துவிடும் வீரியமுங்குன்றிவிடும்
பொய்யுங்கொலையும் புவிதனிலேமேலாகும்
காசினியில்மாதர்களின் கற்புமழிந்துவிடும்
பூசுரர்கள்சீரியர்கள் பல்லர்களாய்தானாவார்
சீறியவேந்தனிட செங்கோலுங்குன்றிவிடும்
பூமியர்களும்புல்லர்களும் புவிகளுமேயாண்டுவர
வேந்தன்கலியன் விசேடமிதுவன்றுசொல்லி
தேர்ந்தசகாதேவன் தெண்டனிட்டரம்மானை
உள்ளபடிதப்பாது உரைத்தாய்நீதம்பியரே
வள்ளலாரென்றுரைத்து மாற்றம்போலானதுவே
தரணிதன்னில்தாமிருந்தால் சத்தியமுங்குன்றிவிடும்
முரணிழந்தவேடருக்கு முதுகிட்டார்தம்பியரும்
அவனிதன்னிலிங்கிருந்தால் அகத்தியமும்வந்துவிடும்
புவனமுண்ணுமால்பதத்தைப் போற்றியேஜவருமே
நன்றாய்மகாவிந்தம் நடப்பதேசரியென்று
குன்றாப்புகழ்தருமர் கூறினாரம்மானை
போறார்தருமருந்தான் புரோகிதனைதானோக்கி
போர்விஜயனுடைய பேரன்பரிட்சித்துவையும்
மண்ணுலகையாள்வதற்கு மகுடமதுசூட்டி
உண்ணுமியல்முகூர்த்த மிடுமென்றாரம்மானை
நெறியுடனேயோக நினைத்தநினைவுகளெல்லாம்
குறியுடனேசொல்லக் கோலர்சந்நிதிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியுடனேசொல்லிப் பரிசனத்துநால்வருக்கும்
சூழசனமுள்ள சுற்றத்தாரெல்லோரும்
தென்னல்பயணமென்று செப்புகின்றாரம்மானை
சீட்டெழுதிவைத்தார்கள் திசையுள்ளமன்னவர்கள்
எட்டெழுத்தைவாசித்து எல்லோருமேகூடி
என்னவிதிவசமோ என்றுமன்னரெல்லோரும்
மன்னர்சமுத்திரத்தில் வந்துகண்டாரம்மானை
ஆண்டவரேநீர்தான் அழைத்துபணிவிடையேன்
அப்போதுதருமர் அரசர்தனைநோக்கி
இப்போதுகொடுங்கலியன் இவ்வுலகில்வந்துவிட்டான்
இனிமேல்கலியுகத்தில் இருக்கவும்போகாது
தனியேவனவாசஞ் சஞ்சரிக்கமெத்தநன்று
ஆனாதினாலுங்களை அருகேவரவழைத்தோம்
மானமுடன் நீங்கள் வரம்புத்தப்பிபோகாமல்
காலமறிந்து காணிக்குள்நீங்களுமே
காலத்துக்கேற்ற கணக்கின்படியாக
தெரிந்துநடந்துகொண்டே செங்கோல்தவறாமல்
பிரிந்தொருத்தர்போகாமல் பிள்ளைசிறுபாலனிடம்
கலந்தசெகமுழுதும் கட்டாய்நீரிருந்து
துலங்குபரிசித்துவுக்குந் துரந்தரிக்குந்தான்தரித்து
வைக்கிறோம்நாங்கள் மகுடமுடிதரித்து
நிற்கிறோமும்மைவிட்டு நிகழ்ந்துபரிட்சித்துவையும்
வைக்கிறோம்பாரில் வணங்குகிறோமுள்ளபடி
நீங்களிருந்து நெடிவனம்புகுந்தால்
நாங்களிருந்து நடப்பதென்னகாரியந்தான்
எல்லோரும்வாறோம் இந்திரபதிசேர்ந்தாலும்
பலபேரும்வந்து பணிவோமேயல்லாமல்
அரைநொடியிலும்மைவிட்டு அவதரிப்போம்பூவுலகில்
துரையேதுரையாரே துரந்தரிமன்னவனே
என்றுதருமராசன் அவர்களையேதானமர்த்தி
ஒன்றுமேயஞ்சாமல் உலகளந்தோன்தன்னருளால்
கன்றுக்கிரங்குகிற காத்தாம்பசுபோலே
நம்மையனுதினமும் நாள்தோறும்காத்தாப்போல்
செம்மையுடன்செங்கோல் செலுத்தப்பரிட்சித்துவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாய்தானிருந்து அரசு நிலைதானிருத்தி
போதரவாய்வாழ்த்தும் புவிமீதில்தானிருப்பீர்
வெய்யோனும்மண்ணும் விண்ணுமுள்ளகாலமட்டும்
துய்யதோர்மறையோர் துதித்துப்புகழ்ந்தேற்றும்
இருமென்றுதருமர் எல்லோரும்வாருமென்று
குருமுன்னிலையாகக் கொற்றவனுமந்நேரம்
மாநகரஞ்சோடித்து வாழைபலநிறைத்து
தேனொழுகும்பூங்கருந் தேங்குபலநிறைத்து
மரகதத்தோரணங்கள் வகைவகையாய்கட்டிவைத்தார்
உற்றபுகழ்பெற்ற உலகிலதிகமென்ன
அத்திநகரந்தன்னை அலங்கரித்தாரம்மானை
முத்துநிமைப்பாலிகையில் முகர்ந்துமுளைத்தெறிந்து
எத்திசைகேத்தும் போகரிஷிபட்டமுகூர்த்தமதில்
தருமருடன்தம்பியருஞ் சதுர்மறையோர்தம்முடன்
மீன்மருவுஞ்சோதி முடிவேந்தன்பார்த்திருக்க
வாழும்அபிமனுட மதலைதனையழைத்து
தளரவேபூவுலகில் தருமநெறியுள்ளாக
மங்கையர்கள்கற்புமந்த மாமறையோர்வேள்விகளும்
செங்கோல்முதலாய்ச் சிவனாடுமாலயமும்
சைவநெறியுந் தழைக்கவரசாளுமென்று
பொய்யில்லா நீள்தருமன் புகன்றனன்காணம்மானை
பார்வேந்தன்சொல்லி பரிசித்துதான்கேட்டு
தார்வேந்தன்நீரிருக்க தம்பிமார்தானிருக்க
தானேருஞ்செங்கோல் தேசமெல்லாம்நன்றாக
நானாள்வேனென்று நகைத்தான்காணம்மானை
சிங்கந்தானாளுகின்ற தேசமெல்லாமாளுகின்ற
பங்கமின்றிநாய்தனக்கு பட்டம்பொருகின்ற
செறிவாகவுந்தனிட தேசமெல்லாமாளுகின்ற
அருளாகயென்கைதனில் ஆகாதேயென்றுரைத்தார்
பார்த்தனிடபேரன் பகருமொழிகேட்டு
வாய்த்தபுகழ்தருமர் மகிழ்ந்துரைத்தாரம்மானை
மன்னுபுகழ்வேந்தன் பரிசித்துகேளாய்
உன்னினைவாலே உலகாளவேவிடுமே
பன்னாகமேல்துயிலும் பராபரனார்தருமருக்காய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாளுரைத்த மொழிதவறிப்போகாமல்
எம்பெருமாள்தன்னுடைய ஏவல்தொழில்மறந்தால்
நம்பெருமாள்தன்னானை நரகத்திலேவிழுந்தோம்
மாசிலாவாளபிமன் மைந்தனெனுமன்னவனே
பாசமுள்ளநல்ல பரிசித்துநீகேளாய்
வாழ்நெடுமால்தானுரைத்த வார்த்தைமறவாமல்
தாழ்வன்றிஇத்தத் தரணியில்நில்லுமென்று
சூழ்ந்தபுகழ்மன்னன் சொன்னார்காணம்மானை
ஆழ்ந்தபுகழ்மன்னவன்சொல் கேட்டேமனமகிழ்ந்து
ஒன்றுமுரையாமல் ஒப்பியேதானிருந்தான்
தேசத்தரசரையும் செழுமறையோர்தங்களையும்
பாசத்துடன்தருமர் பரிந்துடமிகப்பார்த்தருளி
மற்றுமந்தவாளபிமன் மதலைபரிச்சித்துவுக்கு
வெற்றிமுடிசூட்டுதற்கு வேள்விதனைத்தொடர்ந்து
பத்தியாய்வேள்வியைப் பண்ணவைத்தாரம்மானை
தாழைமுரசுடனுஞ் சங்குமிகமுழங்க
பங்கமில்லாமல் பரிச்சித்துராஜனுக்கு
கங்கைநதியாட்டிக் கனகப்பட்டுத்தான்சாத்தி
எல்லவன்தன்னொளிபோல் இலங்குசிங்காதனத்தில்
வல்லபரிச்சித்துவையும் வாழ்த்தருமருந்தான்
கொல்லைமுடியவிழ்த்து சூட்டினாரம்மானை
மன்னவர்கள்மந்திரிகள் மகுடவர்த்தனர்தமையும்
சின்னஞ்சிறியோர்முதலாய் தெரிவைமார்தங்களையும்
வாள்விஜயன்பேரனுக்கு மன்னவனுந்தானளித்து
தாழ்வின்றியிந்தத் தரணிதனையாண்டிரென்றார்
தோணிவந்தானென்று கோவிலிலேதானிருந்து
முத்துமுடிசூட்டி முடிமன்னர்காத்திருக்க
கொத்துகுடைநிழற்ற கோல்வேந்தர்சூழ்ந்திருக்க
சத்துக்கடல்போலே சனங்கள்நெருங்கிருக்க
சுட்டும்பரியை காவல்கள்வந்துநிற்க
வெட்டும்பரிவீரர் வீரவாள்கைபிடித்து
தத்தும்பரிடேறித் தங்களிலேவந்துநிற்க
சுற்றும்ரதமேறித் துரைமக்கள்வந்துநிற்க
நூறுமதராவணன்போல் தூரந்திரிகள்வந்துநிற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுதமிழ்வாணர் கொண்டாடிவந்திருக்க
தம்புருவீணை சரமண்டலிமுழங்க
கிம்புருகின்னரருங் கீதங்கள்தான்முழங்க
சங்கீதராகமுடன் தாளமுடன்மத்தளமும்
இலகிதராஜசின்னம் எக்கசளம்பூரிகையும்
கவரியுடன்செயகண்டி நற்சங்கம்தான்முழங்க
பவரிகமாய்பேரிகைகள் பலதிக்கும்தானதிர
சேனைதளமும் சிறப்பாகத்தான்சூழ
சிங்காதனச்சிறப்பும் சேனைமன்னர்தன்சிறப்பும்
கண்கள்களிகூற கண்டுதர்மர்தம்பியரும்
எங்கள்பதிகாக்கு மிவனேபுவிராசன்
ஆனாலினிமேல் அச்சங்களொன்றுமில்லை
போனாலும்நம்முடைய புவியாள்வானிப்பாலன்
செலுத்துவான்செங்கோல் திருமாலருளாலே
ஆலித்துநாமிருந்து ஆலோசனைகளெல்லாம்
அன்றைக்குத்தீர்த்தோம் இனிமேல்லேசமென்ன
குன்றைக்குடைகவிழ்த்த கோபாலன்தன்னிடத்தில்
போகலாமென்று பூரித்துப்புத்திரர்கள்
ஏகலாமென்றால் இனிமேல்மயங்காமல்
என்றுபரிச்சித்துவையும் இங்கேவாறென்றழைத்து
ஒன்றும்பதையாமல் உலகாழ்வீரென்னரசே
நாங்கள்வைகுந்தம் நடக்கவழிகாட்டி
போங்களென்றுசொல்லி புண்ணியரேந்தாமும்
மனதுசலியாமல் வாழ்த்திமுகமகிழ்ந்து
என்றுமனங்குளிர்ந்து இன்பமுடன்சொல்லுமென
விம்மல்மிகுந்து மெலிந்துபரிட்சித்துவந்தான்
செம்மலர்விழியால் திரண்டுகண்ணீர்தானோட
ஐயமார்தன்னைவிட்டு ஐவருந்தான்போனாக்கால்
உய்யேனொருநாளும் உடைந்திடிந்துபோகவோ
விட்டுப்பிரிந்தீரானால் விளங்குவனோநான்பாவி
மட்டுபடாச்செல்வம் வாழ்வுபலவிருந்தும்
என்னைத்தனியேவிட்டு ஏகினீராமாகில்
என்னபயனோ முடிந்தனோநான்பாவி
தந்தையரைப்பெற்றவர்கள் தரணியிலாண்டிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தையாயிந்த மேதினியைவிட்டிழந்து
நடந்தசடத்தோடே நாம்போறோமென்றுசொன்னால்
தொடர்ந்துமேநான்வருவேன் தூரவறிபோனாலும்
கண்டிருக்கநானும் காவலரேபோவோமென்றால்
விண்டிருக்கபோமோ வித்தகரேயென்னாவில்
சடத்தையிங்கேவிட்டுத் தானடந்தீராமானால்
சடத்துக்குள்ளதெல்லாம் தானதர்மந்தான்முடித்து
மறந்திருப்பேன்கண்டீரோ மானிலத்தோர்புத்திசொல்லி
நேரோடேதாம்போறோம் உலகாளுமென்றுசொல்லி
உயிரோடேநீபிரிந்த தன்மைபோலாவேனோ
ஊரிருக்கநாடிருக்க உற்றசனந்தன்னிலுள்ள
பேரிருக்கநீர்போக பேச்சறிவேனையாவே
எந்தவிதமென்று எனக்குவகைசொல்லுமிப்போ
அந்தவசனம் அறிந்துதர்மர்கேட்டு
முந்திநடந்த முறைகளுந்தானுரைத்து
தந்தைவரலாறும் மாயவனார்போனதுவும்
பாரதப்போர்முடிய பண்ணிவைத்தகாரியமும்
சாரதியாய்நின்று சகாயனறிந்ததுவும்
காரணங்கள்தான்முடித்து கரியமால்போனதுவும்
ஆரணனுமெங்களைத்தான் அப்போவரவழைத்ததும்
சிந்தைமகிழ்ந்து திருமாலருளினதும்
மைந்தன்மனது மலையாமல்வார்த்தைசொல்லி
சந்தமலர்க்கையால் கட்டியறவணைத்து
முகந்துமடியில்வைத்து முதுகுத்னைத்தடவி
சுகந்தமணிந்து போசனமுந்தான்தவிர்த்து
மதலைகுழந்தை மனமதுவார்த்தைசொல்லி
அமர்த்தியிருமென்று அரவணைத்துக்கொண்டாடி
சமர்த்தன்பரிட்சித்துவந்தான் சாதமாய்நல்லதென்று
நல்வழிசென்று நாரணரைத்தானோக்கி
சொல்லுமென்றுநல்வசனஞ் செப்பினாரம்மானை
மற்றுமுடன்மன்னவர்கள் மகுடமுடிவேந்தருடன்
புத்தியுடன்சொல்லி புகுந்தாரரண்மனையில்
தாயாரிருக்குமந்த ஆசனத்தின்முன்னேவந்து
ஆயாளிருக்குமந்த ஆசனத்துமுன்னேவந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்துநமஸ்கரித்தார் வேதியரும்தம்பியரும்
அந்தத்தழுவி ஐவரையுமுத்தமிட்டு
சூழவேமைந்தருடன் துயரமுற்றிருக்கையிலே
தாழுமொழிபேசித் தருமருந்தம்பியரும்
சோதையரணஞ் சலிப்பென்றுஞ்சொல்லாமல்
ஆயிநீயெங்களுக்கு அன்புடனேயின்பமதாய்
மாயோனிடத்தில் வைகுந்தஞ்சேர்ந்திருக்க
நீரேறுமென்று நெற்றியிலேநீறணிந்து
சந்தோஷமாகத் தானனுப்பவேணுமென்று
என்தாயேவேறொன்றும் எண்ணாமலன்புடனே
அனுப்புவீரென்று ஐவருந்தான்கேழ்க்க
தனுப்பபெரியதாயாரும் தங்கிமுகம்வாடி
என்னைப்பிரிந்தமக்கள் என்னையுந்தானிங்குவிட்டு
நடப்பதற்கேவந்து நன்றாயுபசரித்தீர்
நடப்பதற்குநானும் நாடியுடல்தளர்ந்து
கூனிவிழிமயங்கிக் கோலூன்றியேகையில்
வாய்நீரொகி வயதுசரியாகி
உடலுந்தளர்ந்து ஊனுஞ்செயல்குறைந்து
பகருமிருமல் பாசத்திளைப்புடனே
முகமுஞ்சிறுத்து முழங்காற்பிடிப்பாகி
உள்ளுடைந்துமேனி உடலும்பசையற்று
வெள்ளிடமாகி மெய்யுமிகத்தளர்ந்து
ஆக்கைக்குலைந்து அவதிவரும் நாளையிலே
தீக்கடனும்நீர்க்கடனுஞ் செய்துமுடியாமல்
போரமென்றபுண்ணியரே புத்திரரேமித்திரரே
வாருமென்றமக்களுடன் மண்ணில்விழுந்தழுது
தந்தையருமில்லாமல் தனித்துநானுங்களையும்
சிந்தைகலங்காமல் சிறியோர்பெரியோராய்
ஆகட்டுந்தான்வளர்த்த அன்னையல்லோவெந்தனையும்
சாகவிட்டுப்போகச் சம்மதியோவுங்களுக்கு
அந்தநாளெங்க ளன்னைபிதாவிடத்தில்
குந்திதேவியென்று குழந்தையாய்நானிருந்தேன்
சொல்லரியவேத துருவாசமாமுனியும்
வெல்லரியஅத்திபுரம் வீதியிலேவந்தளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களையர்கண்டு இருமென்றுஆதரித்து
அங்கேதான்வந்து அமர்ந்திருக்கும்வேளையிலே
மிஞ்சுமொருசமையல் விதமாகத்தான்முடித்து
அன்னம்படைத்தால் அதுகொள்வேணாமாகில்
என்றுமொழிசொன்னளவில் எங்களையரெந்தனையும்
அவர்க்குப்பணிவிடைசெய் அம்மாவெனவுரைத்தார்
அவர்க்குமனதுவர யானுமிளையாமல்
அன்புடனேதான்சமைத்து அமுதுபடைத்துவந்தேன்
இன்பமுடன்சாப்பிட் டெழுந்திருக்கும்வேளையிலே
சந்தோஷமாகமுனி தனித்துயெனையழைத்து
மந்திரமுஞ்சொல்லி மகிழ்ந்துகாத்தாரெந்தனுக்கு
வேதமுனிசொன்ன வித்தைகளைவைத்திருந்தேன்
நீளமுள்ளபாண்டுவவர்தாம் நித்தியதாம்பூலமிட
கலியாணமுஞ்செய்தார் கருத்துடனேயுண்மையதாய்
மண்ணாளநீங்கள் வருவதற்குமார்க்கமதாய்
உங்களையர்தம்மிடத்தில் உண்மைசொல்லிநான்கேட்க
அங்கேயவர்சொன்ன அன்பானமந்திரத்தில்
வேண்டித்தவமிருந்து மேதினியிற்புத்திரரை
ஆண்டியிடசொற்படிக்கு அன்பாகவுங்களையும்
ஈன்றுமுலைகொடுத்து இப்போதுவதழ்ந்தீரென்றார்
தோன்றுமொருமந்திரமுஞ் சொல்லிமுறைமுறையாம்
அப்படியேதப்பாமல் அவர்சொல்லுமீறாமல்
தாமதிக்காரர் சதிகேடர்ராச்சியத்தில்
மாளாதேயுங்களைத்தான் ஈன்றெடுத்துதான்வளர்த்து
இப்படியேயுங்களைநான் ஈன்றெடுத்தகாரணங்கள்
என்னைவிட்டுப்போக வெறுத்ததோவுங்கள்மனம்
அன்னையென்றுசொல்லி இங்கிருந்துபோற்றாமல்
பிள்ளையில்லாத பெருமலடிபோலாக
பிள்ளையில்லாதவர்போலக் கிலேசமாய்வாடுவேனோ
குந்திமைந்தரைவரென்று குவலயமெல்லாமறிய
பெற்றெடுத்ததாய்வயிற்றில் பெருந்தணலைமூட்டி
வைத்துவிட்டுப்போறோமென்ன வாய்வீணம்பேசுவாரோ
மங்களமல்லோவெனக்கு மாற்றாள்தான்வந்தீரோ
பக்கமுள்ளபேருதவி பண்ணுவரோவெந்தனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மரேவீமா சகாதேவர்தம்பியரே
நன்மையிதுதானோ நகுலர்அர்ச்சுனரே
இம்மைதனிற்பாவ மெனக்குப்பலித்ததுவோ
செென்மமெடுத்தேனே சிரிப்பார்க்குள்ளானேனே
எனக்குவிதிதா னிதுவோவெழுதினது
உமக்குமைந்தரில்லையென்று உவந்தெழுதிவிட்டாரே
அருமையுடன்பெற்றெடுத்து ஐவரேதம்பியரே
பெருமையுடன்பெற்றெடுத்தேன் பேசவுந்தான்காரியமோ
இத்தனையுஞ்சொல்லி இறைந்தழுதாள்குந்தியம்மா
காலனைநொந்தழுதாள் கண்ணீர்களாறோட
கண்ணீர்துடைத்துமவர் காலிலேதான்விழுந்து
என்னிடமாதாவோ எங்களையேயழைக்க
வந்தான்கழியனுமே மாபாவியிப்போது
எங்களைபங்கம்பண்ண இயல்பாய்வந்தான் கலியன்
இங்கிருக்கநீதியல்லா யென்றுமிகமாயனுந்தான்
ஆயன்மொழிதப்பாமல் வைகுந்தம்சேர்வதற்கு
ஆயனுரைத்த அடைவுந்தான்தப்பாமல்
சத்தியமுமங்கே நீணிலத்தில்தானிருந்து
புத்திகலங்கி பொறிகலங்கிப்பொய்யாகி
மெய்வார்த்தைசொல்லி விரதம்பிடித்தவர்கள்
பொய்வார்த்தைசொல்லி புலையனாய்மானிலத்தில்
சிரிக்கவுடம்பெடுத்து திரியாமலெங்களுக்கு
துதிக்கும்படியாகத் துயரகற்றுநீதானும்
விதிக்கும்படியாய் விளம்புவீமாதாவே
உனக்குப்பரிசித்துவந்தா னுகந்தபிள்ளையெங்களைப்போல்
தனக்குத்தான்வேண்டுமென்ற சௌபாக்கியத்துடன்
அன்னைசுற்றமெல்லா மருகிருந்துபோற்றிசெய்ய
ஆனாலுனக்கு அச்சுதனார்பாதம்
வாணாள்முடித்து வரும்போதுநாரணரும்
நாங்களும்கூடவந்து நடந்தோவந்தழைத்து
பாங்குடனேவைகுந்தம் பதிதனிலேநீயிருக்க
அன்னையேநாமிருப்போ மழவேண்டாந்தாயே
தாயேதவங்குலைந்து தவங்கெட்டுப்போகாமல்
நீயேதுணையாக நேசமுடன்புத்திசொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்மகலியுகத்தை கடந்துகரையேற
தர்மந்தவறாமல் தாயேநீகாப்பாற்றி
அக்காலஞ்சென்று அழைக்கவருமென்கையில்
சிக்காமல்நீயுஞ் சிந்தைமகிழ்ந்தலறி
இறப்பதுமெய்யாகும் இருப்பதுபொய்யாகும்
சிறப்பதுகாண்மாதாவே செல்வர்தனைஅனுப்பும்
ஆகாயம்பூமி யந்தங்களுள்ளவும்
போகாதுதர்மம் பொறுமைபொருந்திடாது
உனக்குமெந்தம்பியர்க்கு மிவ்விடம்சகியாது
எனக்குமிருக்க உதவிசெய்யநாங்களுந்தான்
இடம்பிடித்துமங்கே இவ்விடமும்தானழைத்து
உடன்படிக்கைபண்ணி உலகளந்தான்தன்னிடத்தில்
வீற்றிருக்கவேண்டி விரும்பியனுப்பவேண்டும்
நேற்றிந்தானின்றிருக்க நிச்சயமில்லாதவுடல்
சதமில்லாஇவ்வாழ்வு சதமோயிவ்விடமம்மா
நிதமுஞ்சிவபூசை நீயறியும்தப்பாமல்
அவ்விடஞ்சதமென்று ஆத்மத்தைசுத்திபண்ணி
இவ்விடஞ்சதமல்ல எங்களையும்தானனுப்ப
மாதாவேதாயே மனங்கள்சலியாமல்
நீதானனுப்புமென்று நீதியுடன்பாதமதில்
வீழ்ந்தார்சரணமென்று மெய்மகிழ்ந்துதாயாரும்
தாழ்ந்துமனமிரங்கி தம்பியரேபோமெனவே
நீறுந்தரித்து நேரிழையாள்தான்மகிழ்ந்து
வேறுவினைவாராமல் வேதநாராயணரே
காருமெனவாழ்த்தி கைநீறுதானணிந்து
என்று-குந்திமாதேவி யின்பமுடன்தானடைந்தார்
மன்றுபுகழ்காத்தமனை நேராகதானடந்தார்
காந்தாரிவீற்றிருக்கும் கனகமணிமாளிகையில்
புகுந்தாரிருவர்கள் புதியமண்டபத்தில்
கண்டாரடிதொழுதார் காந்தாரியம்மனுமே
கண்டாளேமைந்தரையும் கட்டியரவணைத்து
மைந்தருக்குநல்ல வார்த்தையுபசாரமுடன்
ஐந்நூறுபெற்றோனிருனிருந்து ஐவரையுங்கொண்டாடி
சிந்தைகளித்துநன்றாய்த் தேன்மொழியாள்தானிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்தாயேமாதாவே எங்களையுமிப்போது
சந்தோஷமாகத் தானனுப்பவேணுமிப்போ
கலியன்பிறந்தது காரணமாயிங்குவந்தோம்
வைகுந்தஞ்சே வாழ்த்திவிடைதாரும்
கைகொண்டுநீறணியும் காந்தாரிநாயகமே
என்றுதருமர்சொல்ல ஏங்கியேகாந்தாரி
ஒன்றுமுரையாமல் உறுதியுடன்பேசாமல்
என்னிடத்தில்நீங்க ளிதுகணக்கேவந்தீர்காண்
உண்மையேநான்நம்பி உற்றதுணையென்றிருந்தேன்
மாபாவிவீட்டை மைந்தரென்றுவந்தீர்காண்
பூபாலரைவர் போதுமென்றுநானிருந்தேன்
நூற்றுவரும்மாண்டிறந்து போர்க்கிடந்துபோனார்கள்
காத்திருந்தேநானுங் காலம்முடியுமட்டும்
நீங்கள்துணையென்று நீணிலத்தில்நாளிருந்தேன்
நாங்கள்பயணமென்று நன்றாகச்சொன்னீரே
முன்செய்ததீவினையோ மூதாக்கள்போனதுவே
பின்செய்ததீவினையோ பெருமாள்போனதுவே
அந்தமைந்தர்நூற்றுவரு மதகழிந்துபோனாலும்
இந்தமைந்தர்போலுமினி இங்கேநமக்குதவி
ஆமென்றுநம்பு ஐவரைமுண்டெனவே
நாமொன்றுதானினைக்க நடுநின்றார்கற்பனைதான்
தாமேமுடித்தால் தம்பியரேயென்னசொல்வேன்
நானேதுசொல்வேன் நாயகரேதம்பியரே
நாளுஞ்சரியாச்சு நடையுடையும்வேறாச்சு
வாழும்புவியைவிட்டு வருவதுமக்காச்சு
போங்காலமெந்தனுக்குப் புத்திரருமில்லாமல்
சாகுங்காலம்வந்திருக்கத் தம்பியேஎன்னைவிட்டு
ஏகினீராமாகில் எந்தனுக்குவேறுதுணை
பெற்றும்பெருமலடி பிறவியோபோனானே
சற்றுமிரங்காமல் தர்மரேபோவீரென்றீர்
மாளக்கொடுத்து மனஞ்சலிப்புநீர்தீர்த்து
ஆழக்குழிதனிலே அழுத்திவிட்டுப்போவீரோ
பக்கத்துணையில்லை பரிந்தமுகபிள்ளையில்லை
துக்கத்துடனிருக்கச் சொல்லிவிட்டுப்போறீரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரிருந்தாலென்ன ஆனைகட்டிவாழ்ந்தாலென்ன
தாராருமைவரைப்போல் சகாயமெனக்குண்டோ
செய்யுங்கடனுந் தீக்கடனும்நீர்க்கடனும்
கையுங்கணக்குங் கடனும்கழியாமல்
போகவுங்கேட்டீரோ புத்திரரேமித்திரரே
ஏகவழிபார்த்து இருந்துபுலம்புவனோ
யோசனைகள்சொல்லெனக்கு உற்றவிசேஷமப்பா
வாசனைசேர்தருமரே மகனேயுரையுமென்றாள்
அந்தமொழிகேட்டு அன்புடனேதருமருந்தான்
வந்தமொழிசொல்லுகிறேன் மதாவேநீர்கேளும்
என்னுடையதம்பிறவி ஏற்றமுள்ளநூற்றுவரும்
மன்னுகுருவாசாரி மகுடமன்னருள்ளோரும்
மற்றதுணைமைத்துனனும் ஊரிலுள்ளமன்னவரும்
பற்றவேகொன்று பாராண்டேனான்பாவி
ஆண்டுமுடிந்ததுகாண் அவர்களுடன்தான்போக
வேண்டும்விவகாரம் விதியும்விதிவசமாய்
காலம்சமைத்திருக்கக் கலியுகமும்வந்ததுகாண்
கோலஞ்சமைத்திருக்கக் கூத்துஞ்சரியாச்சு
இனிமேல்கலியுகத்தில் இருந்தேனேயாகில்
அனியாயமேலாகும் அகந்தைமிகவுண்டாய்
இடும்புங்கொலைகளவும் ஏராளமாகிவிடும்
நெடும்புவியிலுள்ள நீதிநடவாது
அந்ததுவாபரயுகத்தி லனேகம்தயவுதாண்மை
இந்தக்கலியுகத்தி லெய்தாதுதானதவம்
நன்றுசெய்வோமென்றால் நமக்கறிவுவேறாகும்
குன்றிவிடும்புத்தியது குறுகுங்கலிகாலம்
ஆனதினால்தாயே அடியேன்பயந்துவந்தேன்
தானந்தவமறந்து தருமரென்றபேர்பேராகும்
பேருந்தவமும் பிரபலமும்போகாமல்
காருமென்றுநாயேன் கற்புநிலைபோகாமல்
உந்தனுக்குநல்ல உதவிசெய்தபாலகன்காண்
மைந்தனபிமன்னன் மகன்பரிசித்துவுடன்
வேந்தர்மகுடமன்னர் வீரர்பரிபாலருடன்
சேர்ந்துரைமக்கள்செகதலத்திலுள்ளோரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறாருந்தனுக்கு ஏவல்செய்யவேண்டியபேர்
உருக்கமாயெங்களைநீர் ஒன்றுமுரையாமல்
வாக்குவரவேணுமம்மா மனதுநோகாதபடி
தீர்க்கமுடனெங்களுக்குத் திருவாய்மலர்ந்தருளி
சொல்லியனுப்பும் துரோபதையுமெங்களையும்
மெல்லியரேதாயே விடைகாருமென்றுரைத்தார்
ஐவருந்தான்கேட்க ஆனந்தக்காரியம்மா
மெய்வருந்திநின்றாள் விரும்பிவிடைகொடுத்தாள்
விடைவாங்கஐவருந்தான் விழுந்துநமஸ்கரித்து
அடைவேன் காண்வைகுந்தம் அச்சுதனார் தம்மிடத்தில்
வென்றுகலியுகத்தை விட்டுவெளியில்வந்தோம்
இன்றுபிழைத்தோம் இனிமேற்கிலேசமில்லை
நமக்குப்பயமில்லை நடப்போமினிதுணிந்து
சுமக்கும் சுமைவிட்டுத் துன்பமெல்லாம்தீர்ந்து
கேட்டவரந்தருவாய் கிருஷ்ணாவுனக்கபயம்
நாட்டமுடநாங்கள் நல்லவழியறிந்து
வாட்டம்வராததற்கு மாயவரேநீர்துணையே
தேட்டமுடன்வந்து திருவுளமேகாத்தருள்வாய்
வழிதுணையாய்நில்லுமையா மாயவனேசரணமென்று
களித்துமனமகிழ்ந்து கண்ணர்தனைநோக்கி
நாற்றிசையும்பார்த்து நமஸ்கரித்துநன்றாக
தோத்திரமுஞ்சொல்லித் துணிந்துநடக்கலுற்றார்

**விருத்தம்**

மாத்திரைப்பொழுதானாலுந் மாயவனைமறந்துபாரில்
தோத்திரத்துடனேகூடித் துதிப்போம் சிந்தைதன்னிலே
பாத்திரமறிந்துவுன்னைப் பரகதிசேரவாரோம்
சூத்திரத்துடனேவந்து துணைசெய்வாய்கரியமாலே. 34

நாடிநடந்துதான்வாறோம் நகரும்பதியைவிட்டேகி
கூடி நடந்து வழியேகுறித்து திசையை தானோக்கி
வாடி யிடைந்துமருகாமல் மனமேதானே யன்புவைத்து
தேடித்திகைத்து திரியாமல் செவ்வேநடத்துந்திருமாலே. 35


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தன்போக்குஞ் சிவன்போக்குஞ் சிவன்போக்கின் மேலாகி மத்தன்போக்குஞ் சிவன்போக்கும் வானத்திந்த மனைபோக்கும் கத்தன்போக்கும் கரணங்கள் கண்டார் விண்டங்கொண்டாரே, சத்தம்போக்கே வினிப்போகே சமயமிதுதான் கோபாலா. 36

சரணஞ் சரணங்கோபாலா சாமிசரணந்தருவாயே
கரணம்பொறிகள் புலன்கள் காமக்குரோதமணுகாமல்
கிரணமதுவேசடமாகத் திரவியமதுவேபெரிதாக
மரணமழியாதுடலாகி வந்தாட்கொள்ளவருவாயே. 37

வழியில்பயங்கள் கடையிடைகள் மற்றுமுள்ள விக்கினங்கள் வெளிப்படுத்தி யடியார்கள் திகைத்து மலைத்து நில்லாமற், பழையவினைகளணுகாமல் பால்போலுளமும் பூரணமாய், தெரிவிலறிவும் வெளியாக்கி வெளியே வருவாய் பெருமாளே. 38

சுருதிப்பொருளாய்த் திரம்படுத்திகன்மக்கூட்டையுரித் தெறிந்து, திருத்தியறிவை நிலைநிறுத்தி திரும்பாம்பு தன்னை வேரறுத்து, கருத்துக்கொழுந்தை முனைகட்டிக் குறியுங்காணா வகைபடுத்தி, இழித்தின்பத்தின் வழிகூட்டியிரைக்கும் பெரிய பெருமாளே. 39

நானோலயமுமில்லாமல் இரண்டு மிகவே சொல்லறியேன், தானோர்எனை நீயாட்கொண்டா யிருத்திலெவர்க்குந் தெரிந்தறிய, வானோரறிய வழிகாட்டிவருவாய் பெரிய பெருமாள்தான், ஞானோரறிய மவ்வழியை நடத்தும் பெரிய திருமாலே. 40

தேசமிழந்து செகமிழந்து சேனைதளங்கள் தானிழந்து
வாசமிழந்து மனையிழந்து மைந்தர் பெண்டீர் தனையிழந்து
பாசமொழிந்து பகையொழிந்துன் பாதமலரே பொருளாகி
தேசமிழந்த நினைவதிலே நின்றுவளர்ந்தாய் பெருமாளே. 41

ஐவருந்துணிந்துவாறோ மடிகளேகெதிகளென்று
தெய்வமேபெரிதென் றெண்ணித்தெரிசனைக்காணக்கண்கள்
மெய்வளர்திருமால்பாதம் வேண்டிவைகுந்தஞ்சேர
கைதருமாலேபோற்றி கருணையங்கடவுளாரே. 42

இராகவமுகுந்தாபோற்றி இராசகோபாலாபோற்றி
ஏகமாய்நின்றாய்போற்றி எம்பெருமானேபோற்றி
லோகநாயகனேபோற்றி நூன்மறைதெரிந்தாய்போற்றி
நாகமேல்துயின்றால்போற்றி ராமனேபோற்றிபோற்றி. 43


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரப்பொருளே யுன்னைவழுத்திநின்றுதுதித்துப்போற்றி
தந்திரத்துடனே யெந்தன் தம்பிமார் நாலுபேரும்
அந்தமர்க்குழலினாளும் ஐவரோடாறுபேரும்
சந்திரப்பகுதிவைகுந்தத் தன்னையே நோக்கிவாறோம். 44

அரிகரிராமாராமா அச்சுதாநந்தகோபாலா
கரியமாலுந்திப்பூத்தோன் கார்முகில்மேகவண்ணா
பெரியவானந்தசேஷா பிரமனைப்பெற்றமாயா
உரியவர்கள் உகந்தைவர்வாறோம்வாறோம். 45

## கதை

பஞ்சவர்களைவருமாய் பக்தியுள்ளதுரோபதையும்
கஞ்சமலர்வைகுந்தங் காணவென்றுதானடைந்தார்
நடந்தொருபஞ்சவரை நல்லபரிச்சித்துவுந்தான்
தொடர்ந்துவழிவிட்டு தொழுதுநமஸ்கரித்து
சேனைப்படைத்தலைவர் செகவீரரெல்லோரும்
ஆனைபரிதேர் ஐவரையுந்தான்தொழுது
வந்தார்களத்திபுரம் மகுடமுடிமன்னரெல்லாம்
நொந்தாரிடைந்தார் நோக்கிவனம்போனவர்போல்
காசினியிலெல்லாம் கலங்கிமனம்வேறாகி
வாசனைசேரைவர் வனம்போனாரென்றுசொல்லி
காகாவென்றபயமிட்டு கொற்றவனைக்காணாமல்
பாவமோவென்று பரதவித்துநிற்பாரும்
ஐயோசிவனேயென்று ஐவரையுந்தானினைந்து
மெய்யாபுவியை விரும்பியிருப்போமோ
மன்னர்மன்னரெல்லாம் மனங்களிலேதானினைந்து
தென்னவனைக்காணாமல் தேடிநினைப்பாரும்
ஆரிருந்தாலென்ன ஆனைக்கட்டிவாழ்ந்தாலென்ன
காராருமைவரைப்போல் காசினியில்கிட்டாது
போனவழிபார்த்து புலம்பியேநிற்பாரும்
தானவனேயென்று தலைவிரித்துநிற்பாரும்
வஞ்சனைசெய்தோமே மாபாவியானோமே
பஞ்சவரேயுங்களுக்குப் பாவிகளுமானோமே
எங்களைவிட்டு எழுந்தருளப்போனீரோ
ஊரிருக்கச்சேனை உகந்தமன்னர்தானிருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிருக்கநீங்கள் தேசமிழந்தீரோ
பாரிருக்கச்செல்வம் பரிகள்தானிருக்க
தேரிருக்கவாழ்ந்த தேசம்விட்டுப்போவீரோ
காரிருக்குந்தர்மர் தனஞ்செயனேயிங்குள்ள
பேரிருக்கநீரும் பிரதேசம்போறீரோ
மாடமிருக்க மனைவிமக்கள்தானிருக்க
கூட்டமிருக்க குடியிருந்துபோறீரோ
தாழ்வில்லாச்செல்வம் சகலபொருள்தானிருக்க
வாழ்விருக்கநீயும் வனவாசம்போவீரோ
தர்மவீமரே தனஞ்செயரேதம்பியரே
நன்மைசெய்து நீங்கள் நாடிழந்துபோவீரோ
துடியிடையாள்சோர துரைமக்கள்தான்சோர
குந்தியம்மாள்தானிருந்து குமாரர்களைத்தானினைந்து
அந்திசந்திதேடி அழுதகுரல்கேட்டீரோ
வேதவிதியோ விதியின்பயனெனவே
மாதாவழுதகுரல் வைகுந்தம்கேட்கிலையோ
சார்ந்தருமன் தவத்தினையுஞ்சுற்றமுடன்
காந்தாரிகூவென்று கதறினதுகேட்கிலையோ
காலங்கலியுகத்தை கடந்துவழிகூடி
கோலங்கொண்டுநீங்கள் கூட்டோடேபோவீரோ
நாளுள்ளமட்டுமிது நடக்குமென்றுபோனீரோ
மெய்கண்டஐவரென்று மேதினியோர்கொண்டாட
வைகுந்தஞ்சேர மனந்துணிந்துபோனீரோ
ஆனாலினிமே லைவர்செயலுண்டெனவே
மானாபிமானமுடன் வாழ்வேபுவிமீதில்
என்றுமன்னர்கூடி இந்தமதிமந்திரிமார்
சென்றுபரிச்சித்துமன்னர் தேற்றியுபசரித்து
பூலோகந்தாங்கும் புத்திரனேயிப்போது
ஆலோசனைபேசி அழவேண்டாமென்றுசொல்லி
விதிவசமாய்நாள்தோறும் மனதைமிகத்தேற்றி
களிகூர்ந்திருமென்று காவலருங்காத்திருந்தார்
காத்திருந்தமன்னரையும் காவலர்கள்தங்களையும்
பார்த்திருந்துசொல்வான் பரிச்சித்துவேந்தனுந்தான்
குந்தியம்மாள்பாட்டியவள் கூவென்றழுதசத்தம்
புத்திகலங்கிப் பொறிகலங்கிப்போகுதையோ
அந்தமனக்கிலேசம் அனைவரும்போயகற்றுதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துகுந்தியம்மாதேவியிட மனச்சலிப்புதான் தீர்க்க
காந்தாரிமாளிகையில் கட்டுடனேதான்கடந்து
பூந்தார்கள்மண்டபத்தில் பொற்கொடியேயிச்சலிப்பு
வேண்டாமெனவுரைத்து வீற்றிருந்தாரம்மானை
காண்டாவனமெரித்த கண்ணுதலோன்புதல்வன்
பார்வேந்தர்பெற்ற பரிச்சித்துமன்னனுந்தான்
தார்வேந்தர்கொண்டாட தரணியையாண்டிருந்தோன்
தேசக்குறிப்புந் தெரியவெடுத்தெழுதி
வாசற்குடிதழைக்க மனுநீதிதப்பாமல்
அரசரோடுசீமை அடங்கலுமேதானெழுதி
மன்னரமைச்சர் மந்திரிமார்தங்களுக்கு
அன்னசொர்னமேடை ஆபரணந்தானணிந்து
ஆனைசேனைபரிவுள்ள அடங்கலுமிப்படியே
சேனைரதகஜங்கள் ஜெகத்தினிலுள்ளவர்க்கும்
வாசல்வரையுள்ள மனையாட்டிலுள்ளவர்க்கும்
ரோசுபடச்செலவு ரொக்கமாய்த்தானெழுதி
வேதியர்களந்தணர்கள் வீரரைவான்பூசருக்கு
ஆதியிலுள்ள ஐவர்கணக்குப்படியாய்
சோதிமணிமகுடர் துரைராசர்மன்னவர்க்கு
ஓதியதபோதனர்க்கு உள்ளபடிதான்கொடுத்து
நீதிதவறாமல் நெடுமுறைதப்பாமல்
சாதிமுறைமை தவங்குலைந்துபோகாமல்
அதிதிபரதேசிகளும் அவதியென்றுசொல்லாமல்
பகுதியோஆறிலொன்று படியேதப்பாமல்
தெய்வத்தலங்கள் சிறப்புமிகப்பூஜைகளும்
ஐவரிருந்தைப்போல் அவனியெங்குங்கொண்டாட
கொலுவிலிருந்தான் குவலயங்கள்போற்றிசெய்ய
வலுவானவீமன் மகனுடையசிங்காரம்
மன்மதனாமென்று வாழ்த்திசிலபேர்கள்
தாமரவாமென்று சாற்றுஞ்சிலபேர்கள்
வில்லியுடபேரன் விஜயன்காணெண்பாரும்
சொல்லியபீமன் துரந்தரிகனென்பாரும்
நல்லசகாதேவ ராசனிவனென்பாரும்
வல்லபுகழ்நகுலன் மன்னன்காணென்பாரும்
ஐவர்குலந்தனக்கு அரசுநிலையென்பாரும்
சைவசமயந்தழைக்க வந்தானென்பாரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுலத்தில்வந்த குலக்கொழுந்தோனென்பாரும்
இராஜாதிராஜனிவன் நரசிங்கனென்பாரும்
போஜனிவனென்று பூரித்துநிற்பாரும்
பாராளவந்த பார்த்திபனென்பாரும்
சீராளனெவ்வகைக்கும் சீமான்காணென்பாரும்
ஆகாயம்புவியை ஆளவந்தானென்பாரும்
வங்கிஷத்தைகாட்டும் வரமிழந்துபோகாமல்
அங்கிசங்காக்கவந்த ஆண்பிள்ளையென்பாரும்
எல்லோரும்வாழ்த்தப் பார்த்திபன்போல்வீற்றிருந்தார்
தேசமெங்குங்கொண்டாட சிங்காதனத்திருந்தார்
இராஜனெனயோகம் நடத்தும்படிகேளீர்
நந்தவனத்தோப்பும் நாலுதிக்கும்நின்றிலங்க
கந்தனச்சோலைகளும் தானெங்குஞ்சூழ்ந்துநிற்க
செண்பகச்சோலைகள் செங்கழுநீரோடைகளும்
பண்பாகதேனிளநீர் பலதிக்கும்சூழ்ந்துநிற்க
பூமரங்களெங்கும் பூத்துமிகச்சொரிய
கோங்குகமுகுபுன்னை குவித்தெங்குஞ்சூழ்ந்துநிற்க
ஓங்குபலமரங்கள் உலகெலாமுன்பாக
கன்னல்காலி கதிர்குலைகளீன்றுநிற்க
செந்நெல்வயலுஞ் செந்தாமரைமலரும்
வித்வசனஞ்சூழ வீற்றிருக்கும்லட்சுமியும்
பூங்காவனஞ்சூழ் புதியமலர்பூத்துநிற்க
பாங்கானவாவிகளும் பரியமலர்பூத்துநிற்க
கோபாலபேரன் கொற்றவன்போல்வீற்றிருக்க
பாலனாயிருந்து பூலோகமாளிகையில்
மந்திரிமார்வந்து வாய்புதைத்துவார்த்தைசொல்ல
தம்பிமார்வந்து சரணமென்றுவார்த்தைசொல்ல
மன்னரிருக்க மண்டலத்தோர்காத்திருக்க
தென்னவர்கள்வந்து சிறையிட்டுக்காத்திருக்க
அரசரோடுகாவலர்கள் ஆனைபரிதரும்
முரசொலிகளார்ப்பரிக்க முடிமன்னர்காத்திருக்க
சித்தடிகளார்ப்பரிக்க சிலமன்னர்காத்திருக்க
துடியதீரவீரவனம் துலங்குதொனிடமாரம்
காளமொடுபேரிகையும் கனகதப்பிதான்முழங்க
மத்தளமும்பம்மை மணிகள்மிகமுழங்க
ஜெயகண்டிகச்சையொடு துத்திகளுந்தான்முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலாத்திப்பெண்கள் அலங்காரமாய்நிற்க
கோலத்திருவிளக்குஞ் சமுகத்தைச்சூழ்ந்துநிற்க
மெல்லிநல்லாளென்பாரும் விசிறிகள்வீசிநிற்க
மல்லிமருங்கிடையார் மதுரகவிபாடிவர
மின்னனையபொற்கொடிமார் வெண்கவரிவீசிநிற்க
பொன்னணிசேர்மாதரெல்லாம் பூமலர்கள்தான்சொரிய
பாவாடைவீசப் பாவாணர்கொண்டாட
நாவாணர்கீதம் ராகங்கள்பாடிவர
கொத்துகுடைநெருங்கக் குப்பைக்குழலுடனே
மத்தகஜன்மீதேறி மன்னவன்பவனிவர
ஆலவட்டஞ்சூழ்ந்துவர பேரணிகள்முன்னடக்க
தாலவட்டம்நின்றிலங்க தரணிபர்கள்முன்னடக்க
சந்திரகாவிடாமல் தவத்துடனேநேர்ந்துவர
இந்திரவிமானமாட இணையாய்நெருங்கிவர
சாந்துசவ்வாதுடனே சாம்பிராணிதான்வீச
ஏந்துமுலைமார் இருபுறமுமாடிவர
கட்டியங்கள்கூறக் கணவிருதுதானடிக்க
கெட்டியிவனெனவே கெம்பீரமாகவெகு
பட்டணமுஞ்சுற்றிப் பவனிவலமாகவந்து
கட்டழகனென்று காசினியோர்கொண்டாட
பார்த்துமனமகிழ்ந்து பரிச்சித்துமன்னவன்தான்
மற்றவர்கள்போற்றிசெய்ய மன்னன்சிங்காதனத்தில்
வந்துகொலுவில் மகாராஜன்போலிருந்தான்
சாந்துபயில்சாத்திரங்கள் தான்கேட்கவேணுமென்று
ஓதினான்தூதுவனை ஒருநொடியில்வாவெனவே
அந்தணர்கள்தன்தெருவில் ஆராய்ந்துதூதுவம்
கொந்தலரும்வேதியனார் குடிகளிலிருந்துவர
கண்டுநமஸ்கரித்துக் காவலர்கள்வேதியரை
அண்டர்பெருமான் அழைத்துவரச்சொன்னார்காண்
என்றுசொல்லவேதியரு மேதென்றெழுந்திருந்து
நின்னுடையமாதரை நிமிஷத்தில்வாவெனவே
புத்தகத்தைதானெடுத்துப் பூவையரேவாருமென்றார்
வித்தகப்பெண் புத்தகத்தை விரையுடனேகொண்டுவந்தாள்
அந்தநல்லகோட்டை அத்திபுரந்தன்னில்
பரிச்சித்துவேந்தனையும் பாங்காகக்காணவந்து
தெரிசித்துஅட்சதையும் செயம்பண்ணித்தான்கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர்க்கரசனே அரசர்பெருமானே
முரசக்கொடியுடைய முடிபொருத்தமன்னவனே
என்னைவரச்சொன்ன இயல்பேதெனக்கேட்டான்
முன்னைப்பயனும் முடிந்ததுராச்சியமும்
நாளும்பலனும் ராசிபலக்கினமும்
கேளும்புகையுங் குவலயமுங்காசினியும்
ஆளும்புவியை அரசர்க்குச்செங்கோலும்
வாழும்பொருளும் மனைபொருத்தமுள்ளளவும்
பார்த்துரையுமென்று பரிச்சித்துராஜனுந்தான்
ஆராய்ந்துபார்த்து அளவிட்டுசாஸ்திரத்தை
நேராய்மனைகீறி நீங்காதறைகீறி
ஓராதனைப்பார்த்து உச்சிநிலைதான்பார்த்து
பெயரைவிளங்கிப் பெரியஅரசுநிலை
ராசிபிரித்து நட்சத்திரம்பிரித்து
ஆசுபலகரைகள்தான் அமைவுடனேதான்பார்த்து
பலகரைகள்வைத்துப் பலசாஸ்திரம்பிரித்து
அழகுநிலைநிறுத்தி அஷ்டதிக்குந்தானிறைத்து
திசைகள்பதினாறுந் தெரிந்துலகைபிரிந்து
இசையாமலக்கினங்கள் இதமாகத்தான்பார்த்து
சொல்லுகிறானவேதியனுந் துரைமகனுந்தான்கேட்க
கேளுங்காண்மன்னவனே கிருபையுடன்சாஸ்திரத்தை
வாருங்குருகுலத்தில் மன்னவரேயும்முடைய
ராசிபொருத்தம் நட்சத்திரம்பார்த்தேன்
தேசிகுதிரையோடு சேனையோடும்பூமிநல்ல
உடமைமதகரிகள் உற்பத்திகாணுமல்ல
திடமுடையசெம்பொன் தேடும்புதையல்ல
மாடமொடுகூட மனையாட்டியாளுமல்ல
ஆண்டவனேயும்முடைய ஆத்துமத்திலோர்வினைதான்
சேமச்சனியும் தேகத்தில்வல்வினைதான்
கன்மஞ்சிறுவனையுங் காலாலன்பொல்லாது
செவ்வாயின்தோஷம் தென்னவனேபோகாது
கவ்வாவியாழன் கருமணிரண்டில்வந்தான்
மாதமொருநாளில் மருகுதுசனிதோஷம்
போறாதுனக்குப் புண்ணியரேயிப்போது
தத்துவருகுதுகாண் தந்திரமாநீயிருந்து
எத்துடனேதானிருந்து இதமாகத்தானொழிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பியிருக்கச் சமர்த்துண்டேயாகில்
என்றுசொல்லிவேதியனு மெழுந்துமிகப்போனான்
என்னசெய்வோமென்று இருக்கும்வகையேதெனவே
முன்செய்ததீவினைதான் முடிந்ததோநம்மளவில்
பெரியோர்கள்சாபம் பின்னேதொடர்ந்ததுகாண்
தெரியாமல்தானிணைந்து தீவினையால்வந்தகுற்றம்
போகநினைவுபொருத்தமுடன் பார்க்கவென்று
வாகானமந்திரிமார் மன்னவரைத்தானழைத்து
நமக்குவரும்கருமம் நாட்டமுடன்போதாது
அந்தப்படியே அலைகடற்குள்மாளிகையும்
மந்திரிமார்தான்முடித்துவந்து சொன்னார்மன்னரிடம்
தென்னவர்கள்மந்திரிமார் சேரவரவழைத்து
நாம்போயிருந்து வருமளவும்ராச்சியத்தை
தாய்போலிருந்து சட்டஞ்செலுத்துமென்றார்
மைந்தன்செனமேஜெயனுக்கு மன்னரும்புத்திசொல்லி
இந்தவயணமென்று ஏகினார்காணம்மானை
கடலினடுவே கம்பமெல்லாம்சூழ்ந்துநிற்க
அடைவுடனேபாற்கடலி லாகாசப்பந்தலிட்டு
படையுடன்கருப்பும் பலதிசையும்காவலுமாய்
இடைவிடாக்காவ லெச்சரிக்கைவிச்சிதமாய்
வைத்துநடுவே வகையாகவீற்றிருந்தான்
கைத்தவிடாயாகவும் கார்க்கோடகனானவனும்
முன்னாட்பழிவாங்க மூலனெங்கேயென்றெழுதி
இன்னாட்பயண மிதமெங்கேயென்றெழுதி
உமக்குத்தெரிய வுரைக்கிலேன்மன்னவனே
சனிபகவான் போதாது சர்ப்பமுந் தீண்டுமென்ன
இனிமேலுபாய மிருக்கும்வகைகேளு
பாற்கடலுக்குள்ளே கம்பமதுதானூன்றி
நீர்மேற்சவுக்கைகட்டி நிறுத்தியேகால்நாட்டி
சுத்திவரக்காவல் சூழநிரைநிரையாய்
வைத்துமேதானிருந்து வகையாகத்தப்புவித்து
வரலாமரைநொடியில் மாளிகையுண்டாகுமென்றார்
பரமரகசியமாய் பாரிலுள்ளோர்காணாமல்
அரைநாழிக்குள்ளே ஆளனுப்பிகட்டுமென்றார்
நாடுநகர்தேடி நன்னகரிதான்தேடி
காடுவரைதேடிக் காவலனையெங்கேயென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவித்திரிந்து ஊரெங்குந்தான்தேடி
கலாபத்துக்காயரசன் கடலிலிருப்பானேன்
ஊரில்குடியிருக்கு முள்ளசனங்களெல்லாம்
பாரிலவர்கூடிப் பரமரகசியமாய்
பட்டணத்திலுள்ள பலசனங்களெல்லோரும்
திட்டமுடனெல்லோரும் செப்புமொழிதான்கேட்டு
உரைக்கின்றவார்த்தை யுலகத்திலேகேட்டிருந்து
திரைகடலைநோக்கிச் சீராகத்தானிருந்து
வருகுதுகாணாகம் வந்ததுகோபத்துடனே
பெருகுகடலருகே பெருநாகம்வந்ததுகாண்
நீடியதூரம் நிலையேற்றிச்சமுத்திரத்தில்
ஓடியொளித்திருக்கு முத்தமனைத்தீண்டுதற்கு
உபாயமென்னசொல்லுவோம் ஒருவழியுங்காணோமே
சாபமிட்டகப்பலுக்குக் கார்க்கோடன்பாற்கடலின்
தோணிபதவுஞ் சரிப்புடையதன்கோலம்
வாணிபங்கள் செய்யும் வளம்போலெடுப்போமோ
சப்பாணிரூபஞ் சாதித்தெடுப்போமோ
கற்பமதாய்மிதந்து பாற்கடலில்போவோமோ
பட்சியாய்சென்று பறந்துவிழுவோமோ
கச்சிக்கரியக் காதம்போய்ச்சேர்வோமோ
பாம்பாய்மிதந்து பழுதைபோல்சேர்வோமோ
நாம்போகநினைவி நாயகரையுங்காணோமோ
வேறுவருங்கொள்ள விவரமொன்றுங்காணாமல்
மாற்றுருவங்கொண்டு மன்னவனைத்தீண்டுதற்கு
என்னவடிவெடுத்து என்பதந்தீர்த்திடுவோம்
மன்னவனைக்கொல்ல வகையொன்றுங்காணோமே
மனதுபோல்நாகமும் கற்பனையால்கொல்வதற்கு
முகந்துமணங்கொண்டு முகத்தோடறவணைத்து
மிகுந்தகனியேதெனவே விசாரித்துப்பார்ப்பளவில்
தின்னாற்புளித்திருக்கும் தின்னவென்றால்பல்கூசும்
கண்டாற்களிகூறும் கண்மலரில்தானணையும்
தெய்வீகமானதொரு தேவகனிதானாகும்
திவ்யமாமென்று தேற்றநினைவுகொண்டு
எலுமிச்சம்நற்கனிதா னின்பமெனத்தோற்றுகையில்
எலுமிச்சம்பழமொன்று வடிவெடுத்தாகார்க்கோடகன்
கனிரூபங்கொண்டு கடலிற்குதித்திறங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியேமிதந்து தடையறவேபோகலுற்றான்
கப்பல்விட்டுச்சுத்திக் காத்திருந்தகாவலர்கள்
தெப்பலெனவோர்மனிதன் தெரியுதுகாணென்பாரும்
அந்தரமாய்வருகுதுகாண் அதிசயங்காணென்பாரும்
வந்தாலெனக்கென்றுசொல்லி மற்கொட்டிநிற்பாரும்
வந்தாலெனக்கென்றுசொல்லி இச்சித்துநிற்பாரும்
உனக்கேன்கிடைக்குமென்று உபாயமிட்டுநிற்பாரும்
ஆர்கண்டாலென்ன அமையாதொருவருக்கும்
பார்கொண்டராஜன் பரிசித்துவேந்தனுக்கு
தங்குமேயல்லாது தர்க்கமிட்டுநின்றாலும்
சிக்குமோவுங்களுக்குத் தெய்வகனியென்பாரும்
இப்படியாய்ச்சொல்லி இசைவாய்வெகுஜனங்கள்
நிற்பளவில்கம்பமதாய் நிலையாய்ச்சமுத்திரத்தில்
அலையிலடிபட்டு அசைந்தசைந்துதான்குதித்தார்
கொலைசெய்யவாரதொரு குருமான்கனியதுதான்
ஒதுங்கிவழிவிலகி ஒருவிடமும்போகாமல்
பிதுங்கிநெகிழாமல் பிடித்தார்பழந்தனையும்
எடுத்துக்கனியதனை இன்பமுற்றெல்லோரும்
அடுத்தக்கனிதன்னை அனைவோருந்தான்பார்த்து
யோசனைகள்பண்ணி ஒருமிந்துஎல்லோரும்
இராசனுக்காகுமென்று நடந்தார்சமூகமதில்
மன்னவன்பரிச்சித்து மகாராஜன்தன்கொழுவில்
தென்னவர்கள்காரியப்பேர் சென்றுதொழுதேற்றி
ஆண்டரேயெங்கள் அரசபெருமானே
நீண்டவனேநாங்கள் நீணிலத்திற்கண்டதில்லை
கண்டறியாகாட்சியெங்கள் கையில்வந்துசிக்கியதே
புண்டரீகமார்பா புவியாரேயுன்போகம்
அதிசயமாய்கண்டெடுத்தோம் ஐயாபுதுமையிது
மருசேரும்புண்ணியனே மாயோகமுந்தனுக்கு
வந்ததுகாணென்று வாழ்த்தியேயெல்லோரும்
சந்துபயில்மன்னன் தார்வேந்தன்தன்னிடத்தில்
கொண்டாடிக்கொண்டு கொடுத்தார்களெல்லோரும்
கண்டான்துரைராசன் கனகப்பிரியமாய்மகிழ்ந்து
நல்லகனியென்று நகைத்துமுகமலர்ந்து
செல்வமகன்வாங்கிச் செந்தாமரைமுகத்தில்
ஒத்தினான்கண்ணில் ஊடுருவிநாகமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தினான்சீறிக் குதித்தான்கடல்தனிலே
பழிநமக்குவந்ததென்று படவரவந்தானினைந்து
வழிகூடியேநடந்து மறைந்ததுவேவாளரவம்
மதியுடனேவந்தொளித்த மன்னனும்பட்டுவிட்டான்

### விருத்தம்

விதியின்பயனை விலக்கவென விரும்பி யொருவன் முந்நாளில் அதிரத்தலையைத் தான்சிரைத்து அகன்று பிழைத்து வருகவென சதியேவருவ தறியாமல் தாழநிழலில் போயிருக்க, விதிதான் மொட்டை தலைதனிலே விழுமாம் பனையின் கனிதானே. 46

தலையில்விதித்த விதிதனக்குத் தலையைத் திரையோன்பட்டது போல், அலையிலொளித்த பரிச்சித்தும் அமர்ந்தானரவ விஷத்தாலே, குலையேசெய்ம பழிபாவங் குலையாய் முழுந்ததெனவோங்கி, மலை யாதிருக்க மன்னரெல்லாம்மலைந்து குலைந்து வுலைந்தாரே. 47

ஏங்கினார் முகங்கள்வாடி என்செய்வோமென்றுசொல்லி
தூங்கினார் தலைகவிழ்ந்து துயரமு மெத்தவாகி
வாங்கினார் கடலைவிட்டு வருகிறோமென்றுசொல்லி
ஏங்கினார் சன்மங்கேட்க உத்தரமெழுதுமென்றார். 48

### கதை

பட்டுக்கிடக்கிற பரிச்சித்துவேந்தனையும்
கட்டிலுக்குள்வைத்து கனகதண்டினாற்போர்த்து
சாந்துபுனுகு சவ்வாதுசந்தனமும்
கமகமென்றிருக்கின்ற களபமெல்லாந்தான்பூசி
போவெனவேநல்ல பொட்டமதிற்றானிருத்தி
முன்னேஎழுதவிட்டார் முடிபொருத்தமன்னனுக்கு
பின்னேபயணமென்று பெருங்கடலைவிட்டகன்று
ஓலைதனைக்கொண்டு ஒருநொடியில்தூதுவனும்
சேனைதலைகுனியச் செனமேஜெயராஜன்வந்தால்
தெண்டனிட்டதூதன் சென்னிகவிழ்ந்துரைப்பான்
தொண்டனுக்குவாய்த்தது தான்துணியுமோயென்றுரையே
என்றோலைதன்னை எடுத்துமுன்னேவைக்கலுற்றார்
நின்றோலைவாசித்து நிலையில்விழுந்தழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணதிரவிண்ணதிர வயிற்றிலறைந்தழுவான்
கண்ணீர்களாறோடக் கதறிவலுத்தழுது
வந்ததொருதூதுவனை வகையேதெனக்கேட்க
அந்தவிவரமெல்லாம் வகைவகையாய்ச்சொல்லியபின்
கேட்டுஜெனமேஜெயன் கிலேசமிகவுண்டாகி
நாடுபுகழ்மன்னனையும் நாழிகையிலிங்கேதான்
கொண்டுவரவேணுமென்று கொற்றவனுந்தானுரைத்தான்
சென்றுசிவிகையின்மேல் தென்னவனைக்கொண்டுவந்தார்
வந்தார்களத்திபுரம் மன்னவனைக்கொண்டேகி
சந்தானமான சனங்கள்விழுந்தலறி
கொல்லென்றசத்தங் கூக்குரலைத்தானமர்த்தி
நில்லென்றமர்த்தி நினையாதெல்லாம்நினைந்து
அழுதுபுலம்பியதால் ஆவதுதானொன்றுமில்லை
பழுதுசெய்துபோனதொரு பாம்புதனையழைத்து
எந்தன்பிதாவே எழும்புவேனல்லாது
அந்தவிசேஷங்கொள்வதற்கு ஆகாதுமக்குள்ளதெல்லாம்
எழுப்பியதாற்பிள்ளை எழுப்புதலாலென்னபிள்ளை
எழுப்பியதாலே வருமோவுயிர்தானும்
தந்தையரைவைத்துச் சமர்த்தாகதானிருத்தி
விந்தையுடன்வேள்வி விதமாய்வளர்க்கலுற்றான்
சாத்திரத்திலுள்ள சகலகலைகளுமே
சூத்திரமாய்ச்சேகரித்துச் சூழ்த்திசைவளர்த்தி
வேதியரைத்தானழைத்து வேணலெல்லாங்கொடுத்து
ஓதியவேதமதில் ஒன்றுங்குறையாமல்
சொல்லுமுயர்ந்திருப்பர் கூட்டுமென்றாவேதாந்தம்
கல்லுமுறுகிவிழக் கதித்தொருமந்திரத்தால்
உற்பத்தியாகவொரு ஓமங்கள்தான்வளர்த்தி
சர்ப்பத்தைவென்றுவிழத் தரக்குமென்றாரம்மானை
ஆமென்றுவேதியரும் அந்தணருந்தான்கூடி
ஓமென்றுவேள்விசெய்ய ஒருதீயைமூட்டினரே
யாகத்தீமூண்டதுகாண் அண்டகடாகமட்டும்
சாகத்தான்சாபந் தவிடுபொடியாக
நீறாகவெந்து நெருப்புத்தணலாகி
வேறாகிச்சாபம் வெந்துநீறாவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கேயெனத்தேடி எழுந்ததுகாணக்கினியும்
அங்கேயரவம் அக்கினிக்குள்ளாற்றாமல்
ஈரேழுலோகமெல்லாம் எங்கெங்குந்தான்தேடி
பாரெங்குந்தான்தேடி படஅரவுஆற்றாமல்
மேலசைந்துநாகம் வெகுண்டுபயந்தேக
காலசைந்துதானோடிக் கனலிலகப்பட்டிடைந்து
பார்த்தவிடமெல்லாம் பயந்தெழுந்தவக்கினியால்
ஆற்றமுடியாமல் அயிறாவதத்தினையும்
ஓடிசிங்காதனத்தின் ஊடேநுழைந்துகொண்டு
நாடியேசீர்பாதம் நமஸ்கரித்துத்தெண்டனிட்டு
அபயமுனக்கபயம் அடைக்கலங்காணென்றுசொல்லி
தேவேந்திரன்சபையில் சென்றுமிருந்தமையால்
ஐவருடபேரன் ஆனபரிச்சித்துவையும்
முப்பழிசெய்தானெனவே முயன்றவனைநான்தேடி
பிற்பழிநான்கேட்டு பிராணனையேதொடர்ந்து
அந்தமொழிகேட்டு அடியேனைதொடர்ந்து
இந்தசெனமேசெயன் என்மீது அக்கினியை
ஏகிவிட்டான்தாங்க வெம்மால்முடியாமல்
தாவியேவந்தடைந்தேன் சரணமெனைக்காரும்
என்றவருஞ்சொல்ல இந்திரனுமப்போது
மன்றவருந்திண்புயத்து மன்னன்செனமேசெயனுக்கு
இந்திரனுஞ்சீட்டெழுதி ஏவினான்தூதுவனை
அந்தரத்தூதுவனும் அரைநொடியிலோடிவந்து
சீட்டுக்கொடுத்துச் சேதிசொன்னான்தூதுவனும்
நம்மிடத்தில்வந்தவனை நாமேவதைசெய்தால்
தம்மிடத்தில்வந்தவனை தான்கொல்வாருமுண்டோ
முன்னால்தவசிருந்த தவமுனிமேல்நாகமதை
மன்னாளாவுந்தகப்பன் மாதவர்மேற்றானணிந்தார்
கோபமடங்காரிஷி கூறினார்சாபதை
பூபனேசாவுக்குப் போய்வரலாமென்றுசொல்லி
அந்தமுனிசாபம் அறுகேகுடியிருந்து
வந்தவிதிவசந்தான் வருமளவுந்தான்பார்த்து
எழுத்துமுடிவிதுகாண் இம்மட்டேயல்லாமல்
கொழுந்துமரலிவந்து கூடுகின்றகாலமதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயமிதுவென்று சர்ப்பமுந்தீண்டினது
அமையுமோவுன்னாலே அமையாதெவராலும்
யாகத்தைத்தானமர்த்தி யகலுமென்றகோபத்தை
வாகாகயாகம் வளர்த்தாரேயாமாகில்
ஏகமாய்ப்பற்றி எரியும்புவனமெல்லாம்
நாகத்துமட்டும் நடவாதுஅக்கினியும்
அண்டமனைத்துமுதல் அகண்டமுதல்அக்கினியும்
விண்டலமும்வெந்து வெளியாய்முடிந்துவிடும்
உனக்குநிலையுமில்லை உலகத்திலெவ்வுயிர்க்கும்
எனக்குநிலையுமில்லை இந்திரனென்பாருமில்லை
செத்தாற்பிழைப்புமுண்டோ தேசத்திலுள்ளோர்கள்
மற்றாருஞ்சொல்வார் மயக்கத்தைவிட்டுவிட்டு
தந்தைதனையடக்கிச் சாத்திரங்கள்தான்முடித்து
விந்தையாய்நீயிருந்து மேதினியையாளுமென்றார்
வாசவன்தன்சீட்டு வாசகத்தைமீறாமல்
இராஜன்செனமேசெயன் நல்லதென்றுசம்மதித்து
ஆறியமர்ந்து அனைவோருந்தான்கூடி
தேறித்தெளித்து தெய்வமேயென்றுசொல்லி
மந்திரிமாரும் மகுடமுடிவேந்தர்களும்
தந்திரமாய்க்கூடிச் சடங்குதனைமுடித்து
மாதானம்பூதானம் வஸ்திரதானமுதல்
கோதானமீய்ந்தான் கொற்றவன்கையாலே
சடங்குமுடித்தான்காண் சாஸ்திரத்திலுள்ளபடி
அடங்காகிலேசமெல்லா மாறித்தெளிந்தபின்பு
மன்னரமைச்சர் மகுடமுடிவேந்தருடன்
தென்னவர்களெல்லோரும் செனமேசெயராசனுக்கு
பட்டந்தரித்துப் பாராளுமென்றுசொல்லி
திட்டப்படுத்திச் செகம்வந்தவராய்த்திரிந்தார்
இருக்குந்தருவாயில் ஏலவேசாபமிட
வருக்கமுள்ளதவமுனிவன் மன்னன்பரிச்சித்துவையும்
நாகமதுதீண்டுகையில் ராசன்மடிந்திடுவான்
சாகுமுன்னேசென்று சர்ப்பத்தின்கைவிஷத்தை
திருப்பிவிஷத்தை தென்னவனைத்தாமெழுப்பி
விருப்பமுடன்வைப்போம் மேதினியையாளுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்சாபந்தீர்க்கத் தபதிவருகையிலே
வம்பானசர்ப்பம் வழியிலெதிர்வருமாம்
எதிராகவந்ததொரு ஏற்றதவசிதன்னை
சதிராகவந்ததொரு தவசிதன்னைக்கேட்க
நாகமதுகேட்க நற்றவசியேதுசொல்வான்
லோகமுழுதாளும்ரூப மகன்றனையொப்பாமல்
இருக்கும்பரிச்சித்துவுக்கு என்னுடையசாபமதால்
பெருத்தவிஷந்தீண்டிப் பிடிக்கவருகுதென்று
தீர்த்துவிஷந்தனைத் திருப்பிடவேணுமென்று
எட்டுத்திசைநோக்கி ஏகிவந்தோம்கண்டீரோ
நின்றுமயங்கி நெடுமூச்சுக்கொண்டேகி
படவரவுந்தீண்டிப் பரிச்சித்துவேந்தனுந்தான்
சடமொழிந்துபாரில் தீக்கொழுத்திச்சுட்டுவிட்டார்
சாம்பல்குவித்துச் சடங்குமுதல்சொல்லியபின்
ஏன்போறீரென்றவரும் எதிராகச்சொல்லியபின்
மெய்யோவென்சாபம் வினையாய்முடிந்ததுவே
அய்யோவரசழிக்க ஆமோபுவிமீதில்
நம்மாலே அரசனுக்கு நாசம்வந்ததாகையினால்
சும்மாவிடலாமோ தோஷம்நமக்குநேரும்
அஸ்தியடக்கி அதுசாம்பலானாலும்
சுத்தமாய்நானும் துரைமகனையுண்டுபண்ணி
திக்கெல்லாம்போற்றும் தேசத்தையாளுமென்று
வைக்கலாமென்று மனதுகந்துவந்தேன்
இல்லாதுபோனால் ஈடேதுயெந்தனுக்கு
பொல்லாதசாபம் பொருந்தவுரைத்துவிட்டேன்.

## விருத்தம்

வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாற்செய்தபாவம்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாற்றீரவேணும்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினாற்தீராவிட்டால்
வாக்கினாற்கண்ணாற்கையால் மனத்தினால்லழியுந்தானே. 49

## கதை

தீராதேபோனால் திருவுளத்துக்கேறாது
வாராதசீவனையும் வரவழைத்துக்கப்பலையும்
உருவாய்வகுத்து உயிரையுடல்பொருத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவினுடமந்திரத்தால் கொள்ளலாங்காரிமும்
என்றுமுனிசொல்ல ஏற்றமுள்ளநாகமது
நன்றுநாமென்றுசொல்வோம் நமக்குசெபநீர்தாமும்
ஆமென்றுகேளும் அதிசயமாயொன்றுசொல்வேன்
மாமரம்பூத்து வடிவுடனேமாங்கனியும்
பூமரமாய்நிற்கிறதைப் புகைந்தெரியத்தீண்டுகிறேன்
பங்கமாய்ப்போகும் பச்சைமரமானதுவும்
உற்பத்தியாக உயிர்மரம்போலாக்கிவைத்தால்
செத்தவருந்தான்பிழைப்பார் செகத்திலுள்ளோர்கொண்டாட
வித்தகமாமுனியே மெய்யென்றுதானறிவேன்
சர்ப்பமிவைசொல்ல சந்நியாசியாமெனவே
கற்பகமரத்தைக் கடியுமெனவுரைத்தார்
உரைத்தவுரைகேட்டு ஒருமித்துநாகமது
இசைந்தவரஞ்சீறி எழுந்துமிக்கோபமதாய்
வாய்பிளந்துநாகம் மாமரத்தைக்கவ்வியது
காய்கனிகள்தோறும் கப்புக்கிளைதானும்
வெந்துநீரானதொரு விருட்சமெனுமரத்தைச்
சந்துமயில்மாமுனிதான் தழைமரம் போலாக்கிவைத்தான்
அப்பொழுதுமாமுனியை அரவமது கொண்டாடி
இப்போதுவுன்பழிக்கு ஈடாகப்பண்ணிவைத்தேன்
அஷ்டமாநரகமதில் நானொருத்தித்தானாகும்
இஷ்டமுடன்நீரும் எழுப்புவீர்மாமுனியே
எங்கதிகாரம் எல்லாந்தான்போய்விடுங்காண்
திங்களொலிபோல் சிரசிலிருந்தெடுத்து
பெரியவராமென்றுசொல்லிப் பேரரவந்தான்கொடுத்து
அரியமணிவாங்கி அருந்தபசியேகிவிட்டார்
நாகம்மகிழ்ந்து நடந்ததுகாணம்மானை
சென்றரவம்போனபின்பு செனமேஜெயராஜனுந்தான்
அன்றலரும்தாமரைபோல் ஆதித்தன்வடிவாய்
இருந்துசிலகாலம் இந்திரனைப்போலாகி
திருந்துபுகழ்கொண்டாட செயவிசயனவன்பேரன்
தேசமொருகுடைக்கீழ் செங்கோல்மனுநீதி
வாசமிகுபூவுலகில் மன்னவர்கள்போற்றிசெய்ய
தாகமுடன்மன்னவனுஞ் சகலபரிவாரமுடன்
ஏகசிங்காதனத்தில் இருந்தார்காணம்மானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விருத்தம்

பஞ்சவர்பேரனென்னும் பரிட்சித்தைவிஷங்கள் தீண்டி
துஞ்சினதாகையாலே சுத்தசெனமேசெயன்றன்னை
மிஞ்சுசிங்கா தனத்தில்வைத்து வேந்தனமைச்சர்தானும்
அஞ்சலென்றடிகள்போற்றி யவனியிலிருந்தாரன்றே. 51

இப்படியனேககாலம் இருந்தனர்செங்கோல்செய்து
சொற்படி தவறாவண்ணம் சோர்வரநடத்தச்செய்து
முற்படியுயரம்போலே முன்னவனிதனாமென்ன
அப்படியிருந்துபாரி லவனியையாளும்நாளில். 52

ஆகமவேதஞான வருந்தமிழ்கவிதைநூல்கள்
பாகமாயிருந்துகேட்டு பத்தியாய்பெரியோர்கள்போல்
ஏகசிங்காதனத்தி லிருந்துடன்வாழுநாளில்
பார்த்தனுடன்வாளபிமன் பாலன்பரிட்சித்துவுடன். 53

### கதை

ஏற்றதொருபாலன் இராசன்செனமேசெயனும்
சுத்திக்கடல்சூழக் சாசினிஎல்வாம்விளங்க
முத்துநவமணிபோல் முளைத்தெழுந்தரத்தினம்போல்
வந்தமகாராசன் மன்னன்செனமேசெயன்
விந்தைமலர்போல விதவிதமாய்ச்சிங்காரம்
தந்தியிருக்குந் தவமணிமார்பன்
பொங்கியேபூரணமாய் பூலோகந்தாயகமாய்
நிறைமுறையாலொன்று எள்ளளவுமீறாமல்
பொறையுடையதருமரெனப் பூலோகமாளுகையில்
அத்திபுரமுற்றும் அரசாளும்நாளையிலே
சத்தியவாக்கியந் தவறாதவேதமுனி
நாற்றிசையுங்கொண்டாடும் நன்னகர்தன்னில்வந்தார்
வாத்தியடிபணிந்து மகுடமுடிவேந்தரெல்லாம்
தோத்திரமுஞ்செய்து தொழுதுவணங்கியபின்
இருக்குந்தருவாயி லிளவரசுதான்விளங்கி
உருக்கமுடன்கண்டு ஒழுக்கமாய்தெண்டனிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிசெனமேசெயன் பூரித்தகமகிழ்ந்து
ஏற்றிச்சிங்காசனத்தி லிருத்தியேகைதொழுது
கனிவகைகள்சர்க்கரைதேன் கற்கண்டுசீனிமுதல்
வாழைக்கனியும் சகலகனியுள்ளதெல்லாம்
கொண்டுவந்துவைத்து குருவேசரணமென்று
தொண்டுபண்ணிநின்று தொழுதுமிகவணங்கி
நல்லதொருவேதமுனி ராசனையுங்கொண்டாடி
வல்லதொருமாங்கனிதான் வாரியமுதுசெய்து
நாகரீகமானதொரு ராசன் செனமேசெயனுந்தான்
தாகமுடன்வேதமுனி தன்னிடத்தில்வந்துநின்று.

## விருத்தம்

பாரதமுடியும்மன்னாட் பயின்றதோர்வேதமெல்லாம்
வீரியனாதியாகி விநாயகன்கோடுகொண்டு
சீரிதுசிறந்தகீர்த்திச் செகத்தினிலுதித்தவேந்தன்
போரதுமுடியவென்று புகன்றதுவேதமாமே. 54

குருகுலத்தோர்களெல்லாம் குருவெனவந்துதோன்றி
கருவுருவதுவுங்காட்டிக் காசினியாளுமென்று
அருகுதானுருக்கியந்த வறிவுடன்தெளிவுசொல்லி
பெருகுசீர்புனல்வந்தன்னாட்பெரும் பகைமுடித்தாய்போற்றி. 55

பஞ்சவர்நூற்றுவர்க்கு பகையதுவருவதுண்டோ
அஞ்சலென்றமர்த்திநீதா னறிவினால்விவரஞ்சொன்னால்
முஞ்சவரும்பகைசெய்வாரோ வேதமாமுனியேயுந்தன்
வஞ்சமேவஞ்சமல்லால் மற்றொன்றால் முடியுமோதான். 56

## கதை

எத்திசைகள் கொண்டாட எங்கள் குலத்தரசே
சத்தியவுண்மை தவறாதமாமுனியே
சீரானஜவருடன் சிறந்ததுரியோதரனும்
பாராளும்நாளில் பகைகளொன்றும்வாராமல்
தாராளமாகத் தன்மையொன்றுசேகரமாய்
பேராளர்பூதலத்திற் பேதமொன்றும்வாராமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கப்படுத்திவைக்க வாரானோதேவருக்கு
தீர்க்கமுன்னாளான திருநகரத்திலுள்ளபடி
இன்னபடியென்று ஈசர்முன்னேதானுரைத்தீர்
எழுதும்விநாயகனே என்றிவர்தான்கூற
தொழுகும்விநாயகர் சொன்னதென்றுந்தப்பாமல்
ஒருகொம்பொடித்து ஊணிவைத்தார்மேருவதில்
நிகரில்லாவேதம் நிலைகண்டுகொண்டானே
பகருமொழிகேளாதார் பாருலகிலுண்டோ
குருகுலத்துக்கெல்லாம் குலக்கொழுந்தேநீயிருந்து
அருகிருந்துபுத்திசொல்லி அரசனுமாய்நீயிருந்து
வின்னம்வராதபடி வேதியரேசொன்னீரானால்
மன்னவருமாளாமல் வையகத்தில்தானிருப்பீர்
எந்தவிதமோகிருபை ஏதொன்றறியேனே
உந்தன்வினோத மொருவருக்குந்தோன்றாமல்
வஞ்சனைகள்செய்தீரோமாமுனியேயிப்படிதான்
உன்செயலோஅல்லது உலகத்தில்வேறுமுண்டோ
மற்றுமுள்ளமன்னவர்கள் மகுடமுடிவர்த்தகரும்
சுற்றமொடுராசன் துரைமக்கலெல்லோரும்
எண்ணவொண்ணாச்சேனை ஏழக்குரோணியத்தனையும்
மாண்ணாசையற்று மாண்டிறந்துபோனதெல்லாம்
உன்னாலேயல்லவோ ஒருவர்மேற்குற்றமில்லை
அன்னாளிலேயவர்க்கு ஆமென்றகாரியந்தான்
தெரியவகைச்சொல்லி செப்பினீராமாகில்
பிரியாதிருந்து பேதமற்றுழலாரோ
இறந்தாரோநூற்றுவர்கள் இருந்தாரோபஞ்சவர்கள்
சிறந்திருந்தபஞ்சவர்தான் சடத்தோடுயிப்போது
விந்தவைகுந்தம் விரும்பியவர்சேர்ந்தாரோ
அந்தவகையெனக்கு அறியவேசொல்லுமையா
சொல்லுமென்றுகேட்ட துரைமகனேசெனமேசெயா
சொல்லுகிறேன்கேளாம் தோற்றமுடனுள்ளதெல்லாம்
முன்னுலகிலுள்ள முன்னாள்விதிப்படியே
மீண்டொடுருவராலே விலக்கவல்லாருண்டோதான்
ஆகையினாலே அவர்கள்செய்த தீவினையால்
மாய்கையாய்வந்து விளைந்ததுகான்செய்தவினை
என்றுமுனிதானு மெடுத்துரைக்கசெய்தியெல்லாம்
நின்றுசெனமேசெயன் நினைவாகத்தான்கேட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினையாதெல்லாம்நினைந்து நெடுமூச்சுவிட்டேகி
தீவினைப்பயனாகித் திரண்பகைபோராக்கிக்
கைக்கதையில்லாமல் கால்வேறுதலைவேறாய்
மெய்க்குமெய்யில்லாமல் விசனங்கள்தான்மூட்டி
ஆட்டுவித்துபாவைதனை ஆட்டுவிட்டுப்பார்த்திருந்து
மூட்டிவினைசெய்த முனியேயினிகேளும்
தருமரென்றுபேரெடுத்துத் தரணியில்லாமல்
கருமமேசெய்தவரைக் காசினியில்தருமரென்றால்
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்பேன்மாமுனியே
தன்மையுற்றுச் சனமுமனமுமற்று
இம்மைதனிற்றான்வாழ எல்லோருமாண்டிறந்து
மவுனம்பிடித்து வகைசெய்தமாபாவி
இருந்தரசையாளாம லின்னதென்றுபாராமல்
வருந்தரமல்வைகுந்தம் வானேறிப்போனதென்ன
சொல்லுமையாவேந்தனுக்குத் தோற்றமெல்லாம்நீயாகி
வெல்லும்விதியாகி விதிப்பயனுந்தானாகி
ஏற்றமொருவிவரம் இறையோனேநான்கண்டேன்
தோற்றுகாணெந்தனுக்கு தோஷமெல்லாம்நீரெனவே
படையுடைதர்மமென்று பொய்சொல்லாமெய்யரென்று
நிரையுடையரானாகில் நீருரைத்தபுத்திதனை
கேளாரோபாரில் கிருபையொன்றும்பாராரோ
வாழாரோபாரில் மைந்தரொடுசெல்வமதாய்
துன்மைசெய்தார்மாண்டு தேசமதையிழந்தால்
நன்மைசெய்தார்பாராண்டு நாளுமிருக்காமல்
ஏன்காண்பாரிழந்து ஏகினார்வைகுந்தமதில்
தானேதான்புவியாள ஞாயமோவேந்தனுக்கு
பாரதப்போருண்டுபண்ணி பகைமுடித்துமுன்னாளில்
மேருதனில்தானெழுதி வைத்தவரும்நீதானோ
நினைத்தபடி முடிக்க நீர் நினைத்ததல்லாது
மனந்தனையேபுண்ணாக்கி வகுத்துரைக்கநாமேது
புத்திதனைச்சொல்லப் பொருந்தவுரையாமல்
சத்துருவாய்மாமுனியும் கற்பனைகள்செய்தீரே
தாராரும்வேந்தர் சமர்முடிந்ததெல்லாமுன்
பாராய்முனியேகேள் பாவமெல்லாமுந்தனுக்கு
சாராமற்சாய்ந்ததுகாண் தப்பாமற்சொன்னேனென்பார்
தீராதபாவமது செய்தீரேமாமுனியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுசெனமேசெயன் இவ்வார்த்தைதானுரைக்க
நன்றுகாணென்று நகைத்துமுனியேதுசொல்வான்
தம்பியரேயிப்பழநீர் சமர்த்தாகப்பேசியதால்
தம்பியினிகேளு தரமாகச்சொல்லுகிறேன்
வெம்பியெனையுரைத்தீர் விட்டகுறைபாராமல்
நம்பியுயிர்களையும் நமனையும்பாராமல்
தலையிலெழுதிவைத்த சதுர்முகனைப்பாராமல்
குலைசெய்யும்ருத்திரனைக் கூர்ந்துநீர்சொல்லாமல்
மாய்கைபலசெய்யும் மாயவனையுஞ்சொல்லாமல்
தாயர்களாம்நம்மைச் சலித்துமிகச்சொன்னீரே
உள்ளவிதியென்றே உவமித்துச்சொல்லாமல்
காளிபலிகொண்ட கதையுற்றுப்பாராமல்
பத்தியாய்நம்தலைமேல் பெருஞ்சுமையைத்தானேற்றி
முத்துஞ்சுமத்தலையாம் மொழிந்தநீர்வகைகேளும்
சுற்றிவளைந்து சூழ்ந்ததையுஞ்சொல்லுகிறோம்
கொற்றறனேகேளுமென்று கூறினார்மாமுனியும்
மன்னாகேள்நூற்றுவர்க்கும் வாய்த்தருமராசருக்கும்
முன்னாளிற்புத்தி மொழிந்தனையோவென்றுரைத்தார்
நூற்றுவர்க்கும்புத்தி மொழிந்தனையோவென்றுரைத்தார்
நூற்றுவர்க்கும்புத்தி சொன்னேனோசொல்லலையோ
ஏற்றமுது மீடேறப்பஞ்சவரை
காட்டிலிருந்து காலனுக்குவேளைவரில்
தாட்டிகமாய்புவியில் தற்சந்தீவன்றனையும்
மீட்டென்னைக்கொண்டு வெளியேற்றிவிட்டாலும்
நாட்டில்வராதேயென்று நடுக்கமொழுந்திடுவார்
தீது செய்தான்பாவி துரியோதனன்பாவி
ஏதுமறியாம லிருப்பார்கள்பஞ்சவர்கள்
பொறுத்தாரரசாண்டார் பொங்கினார்காடுறைந்தார்
பொறுத்தார்கள் பஞ்சவர்கள் உரைத்தார்கள்நூற்றுவர்கள்
அகந்தையழிந்ததுகாண் ஐவர்மேல்குற்றமில்லை
இகத்திலேசூதுபண்ணி செகத்தினிலெமாண்டார்கள்
இப்படியாய்வந்தவர்க்கு என்னைநீயுஞ்சொன்னாயே
சொற்படியேகேட்டிருந்தும் துற்புறுத்திவிட்டாரே
தம்பிசெனமேசெயா தார்வேந்தேநீதானாய்
வெம்பிமனமுடைந்து வேண்டுமென்றுசொன்னீரே
கேட்டீரோஞாயம் கேட்டுகெட்டான்தன்வசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டாரேபுத்தி புலையாட்டேன்பேசுகிறீர்
சூதன்வனமாமுனிதான் எடுத்துரைக்கும்ஞாயமதை
அவ்வசனங்கேட்டு அரசன்செனமேசெயனுந்தான்
வாரீர்புவியோர்பல பஞ்சவர்க்கும்நூற்றுவர்க்கும்
பாரீர்புவியோர்பல பஞ்சவர்க்கும்நூற்றுவர்க்கும்
வின்னதுவாராமல் விற்பனமாயுட்புகுந்து
தன்மைகள்காட்டித் தாங்கியேபடிசொன்னீரே
இத்தனைக்கும்வின்னங்க ளேதொன்றுவாரதில்லை
கர்த்தனேதோன்றாமல் கண்காட்சிபார்த்துவிட்டீர்
சித்தமதிற்சாத்திரங்ள் திரணமதுவல்லாமல்
இருந்தபசியுனக் கின்பதுன்பமிரண்டுமில்லை
அருந்தவசியாயிருந்து ஆர்ந்ததயவில்லாமல்
அவர்களுக்குகாலபல னடவுமனுச்சொல்லாமல்
இவர்களுக்காகபலன் இதமுடனீர்சொல்லாமல்
வருந்துவதினாலேதும் வராக்கருமமுண்டோ
வேந்தனிவைசொல்ல வேந்தமுனிசொல்லுகிறார்
யாகம்வளர்க்கவென்று அரசனேநீநினைத்தாய்
யாகமதுயாகம் பலிக்காதுகாணுமக்கு
மாற்றவுனக்கு வசையுண்டோயாகில்
என்னைச்சலித்து மெள்ளளவுங்குற்றமில்லை
பின்னையுனக்குத் தெரியும்பிரமையினால்
உள்ளபடிசொன்னா முற்பனமாயுந்தனுக்கு
வள்ளலறிய வழுத்துகின்றோமிவ்வசனம்
போறோம்புவிமீதில் பொன்னுலகந்தான்சேர
வாறோமினிமேலும் மன்னாவுன்றனிடத்தில்
என்றுசொல்லிமகாமுனியும் ஏகினார்காணம்மானை
அன்றுசெனமேசெயனுந்தான் அவரைநமஸ்கரித்து
அனுப்பிசிலகாலம் ஆண்டிருந்தான்பூலோகம்
தனுபிடித்தகையான் தாரார்செனமேசெயனுந்தான்
யாகம்வளர்க்கவென்று அவனியெல்லாந்தானறிய
சேகரமாயுள்ளதெல்லாம் யேழுதளவாடமுதல்
வரவேணுமென்றார் மந்திரிமார்தன்னுடனே
துரைராஜன்மன்னவனுஞ் செல்லலுற்றாரம்மானை
திறமுடையமந்திரிமார் தேசத்திலுள்ளவரை
பரவசமதாகப் பார்வேந்தர்சொற்படிக்கு
ஆனந்தப்படியாக அவனிதனிலேயிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததளவாட மற்றுமுள்ளமால்வரையும்
சீராகச்சேகரித்துத் தெய்வப்பிராணரை
நேராகவாயிரம்பேர் நேர்பாகமுள்ளோராய்
வாகாகத்தானழைத்து வளர்ப்பதற்குயாகமதை
யாகமுடன்செய்ய ஆவினிடநெய்யாக
நூறுகுடம்நெய்யும் நொடிக்குள்ளேதானழைத்து
வீறுடனேயாகம் வேதியரேசெய்யுமென்றார்
சாலையதுமுடித்துச் சதுரமாய்பந்தலிட்டு
ஆலயமாக்கித்தான் அந்தணருந்தானிருக்க
விசாலமாயுண்டுபண்ணி வைத்தாரொருநொடியில்
பலாவிறகுபிளந்து பலரைமிகச்சோடிணையாய்
அரசுபலாவிலுப்பை ஆல்விறகுதொப்பையுடன்
பரசுமுதலுள்ளதெல்லாம் பங்குசம்வேணதெல்லாம்
சேகரித்துவைத்துச் செனமேசெயன்றான்முழுக
யாகத்தடியில்வந்து அந்தணரைதெண்டனிட்டு
வேதியர்க்கெல்லாமிசைய வேணுமென்றவஸ்திரமும்
நீதியுடன்தான்கொடுத்து நிர்வாகம்பண்ணுமென்று
அக்கினியையுண்டுபண்ணி விபூதிதான்கொடுத்து
மெய்க்கினியமந்திரங்கள் வேதியர்கள்தான்துதிக்க
சூழவேதானிருந்து சொல்வார்கள்மந்திரிகள்
வாளபிமன்பேரனையும் வாருமென்றுதானழைத்து
பலகைதனைப்பரப்பி பரிச்சித்துமைந்தனுக்கு
இலமணிரத்தினாசன மேலிருக்கவேண்டுமென்றான்
பூசைசெபம்பண்ணுமென்று புகழ்ந்தார்கள்வேதியர்கள்
நேசமுடனிருந்து நேமமாயுள்ளதெல்லாம்
வாசனையாய்ச்செய்யுமென்று வகுத்துரைத்தாரம்மானை
ஆசனத்தின்மேலிருந்து அட்சதையுந்தான்வாங்கி
யாகத்தைநோக்கி அன்பாகத்தானிருந்தான்
வாகாகதொப்பையது வாங்கவேதானிருந்தான்
அழகுமணியாகம் அக்கினியுந்தான்வளர்த்தி
புகழிதமாய்தான்வளரும் பூவால்எக்கியமும்
எக்கியத்துக்கேற்ற இதமானநெய்குடமும்
முக்கியமாய்ச்செய்து முடிந்துவளர்யாகமதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

முன்னாள்முனிவன் சொற்படி முடித்தயாக மதுதனிலே
இன்னால்மயக்கம் வருவதும் மெய்மறையோன் போயிருந்து
சொன்னவேதம் யாகமதில் துக்கமிக துயரகன்று
மண்ணால்மயங்கிவீழாமல் தன்னைசெய்வான்தார்வேந்தன். 57

ஐயோ மறையோ னக்கினியி லசந்துவிழுவா னென்வெண்ணி,
கையால் தெர்ப்பை தனைக்கொண்டு கழுத்திற் பிடரி யதிற்றொடவே,
மெய்யாய் புவியான் பாய்ந்துதென்று வெருவிப்பயந்து வேதியனும்.
நெய்யிலெரியுஞ் சுடர்தனிலே நேராய் விழுந்து ம ாய்ந்தானே. 58

## கதை

அங்கிருந்துசாத்திரங்கள் அனுட்டிக்குவேதியரில்
மருகிருந்துவேதம் வகுத்துரைக்கும்வேதமதில்
அசதிவந்துபார்ப்பான் அசைந்துகண்ணைத்தான்மூடி
வசமாகவேதம் வழுத்தாமல்மெய்மறந்து
நித்திரைதான்கொண்டு நிலத்தில்விழுவார்போல்
பத்திரமாய்ப்பார்ப்பான் மெய்மறந்துகொண்டலைந்து
உறங்கித்தலைகவிழ்ந்து உடலுமைத்தானாப்போல்
சிகரங்களுமற்றைந்து தேகம்விழுந்ததுபோல்
அந்தவுறக்கத்தி லானதொருசொப்பனமும்
வந்தவழிதன்னில் வலியகடுவாய்ப்புலியும்
எதிர்க்கவழிமறித்து இவனைவதைசெய்வதுபோல்
அடக்கிவிழித்து அதட்டிப்பயமுறுத்தி
இடிக்கிறதுபோல பிராமணனுந்தான்பார்த்து
நடுங்கியுடல்பதறி நஞ்சுண்டமீனதுபோல்
இருக்குந்திறம்தனை இளவரசுதான்தரித்து
வருத்தமுள்ளபாகம் வளர்க்கவென்றுவந்திருந்தோம்
அதற்குவிகாதம் அந்தணனாலப்போது
ஏதுக்காயிருந்து இசைகேடுதான்முறிய
பார்த்திருக்கப்போகாது பாவம்வருமென்றுசொல்லி
ஏற்றிருக்குந்தர்ப்பையினா லிவனைசண்டைபண்ணவென்று
நீட்டினான்தர்ப்பையினால் நினைவுவருமென்றுசொல்லி
காட்டிற்புலிபாய்ந்ததென்று கலங்கியுடல்பதறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டினான்தீயில் மடிந்தான்பிராமணனும்
அட்டில்குதித்து அந்தணனுந்தீயில்விழ
கண்டுசெனமேசெயனுங் கலங்கிமுகம்வாடி
பண்டுவியாசர் பவழவாய்மொழிந்தபடி
வந்ததுகாண்பவசம் மதியைவிதிவிலக்க
தத்துவயாகபலன் சனியன்பிடிக்கவென்று
வெந்துமன்மிடைந்து பிரமையதுதான்பிடித்து
இந்தவுலகவாத யிருளதுபோற்றான்மூடி
மாய்கைதடித்திருக்க மனுநீதியோமறைந்து
பேயும்பிடித்ததுபோல் பிரமைகொண்டாரம்மானை
மன்னன்ஜெனமேஜெயன் மாய்கைபிடித்திழுக்க
தென்னவர்களெல்லாந் தீவினையோவென்றுசொல்லி
ஆறாத்துயரம் அருந்துயரம்வந்துதையோ
நீராகிவெந்து நெஞ்சமெல்லாம்புண்ணாகி
என்னசெய்வோமென்று ஏங்கிபரதவித்து
முன்செய்ததீவினையோ முனியிட்டசொற்படியோ
வந்தவிதமறியோம் மகாதேவர்கற்பனையோ
எந்தவிதமோதான் இடையூறுதான்வந்து
செய்யுமருந்துகள்தான் தேசத்திலுள்ளதெல்லாம்
வையுமென்னபண்டிதர்கள் வைத்தமருந்தானாலும்
சற்குணமில்லாமல் தலைசுற்றியாடுகையில்
பித்தம்கலங்கிப் பினத்துகிறானென்னுசொல்லி
கலிக்கமுறைத்து கண்ணிலிட்டுமொன்றுமில்லை
பலிக்குமச்சியமிட்டுப் பார்த்தாலுமொன்றுமில்லை
தலையில்கோடாலியிட்டுத் தயிலந்தனைதீர்த்து
கலையவில்லைபித்தங் காலபலனென்பாரும்
மருள்பிடித்ததென்று மந்திரங்கள்செய்வாரும்
இருள்பிடித்ததென்று யந்திரங்கள்கட்டுவார்
செய்யாவிநோதமெல்லாம் செய்தலுத்துமென்றுசொல்லி
ஐயோசிவனேயென்று அபயமுனக்கென்பாரும்
வெய்யோனுக்குள்ளே விளங்குபொய்களால்முடித்து
அதிதிபரதேசியற்கும் அன்னமிகக்கொடுத்து
நீதியுடன்தானதவம் நேசமுடன்கோயில்குளம்
சத்திரமடங்கள்கட்டி சாலையிலந்தணர்க்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரமாய்பூசைபலன் செய்வார்தினமும்
நால்வேதசாஸ்திரமும் நாளும்விளங்கிவர
பால்தயிர்நெய்யும் பருப்புமரிசிமுதல்
வாகாயனுதினமும் மாறாமல்நித்தியமும்
பாகாயனுதினமும் படியளந்துவேதியர்க்கு
தானதவஞ்செய்து தவிப்பார்பரதவிப்பார்
ஞானசிவபூசை நடத்துவார்தாக்ஷியர்கள்
தேசத்திலுள்ளசெனமும் செனமேசெயனுக்கு
மேகத்திருந்து மெய்சோர்ந்துகைசோர்ந்து
பாருலகந்தாங்கும் பரிட்சித்துமைந்தனுக்கு
காருலகமேனியரே கண்ணரேயிப்போது
தீதுவரக்காரியமேன் செய்ததவக்குறையோ
ஏதுசெய்வோமென்று இருக்குந்தருவாயில்
பராசரமுனிவன் பயந்தவேதியரும்
சாரமாவேத சகலகலைவல்லவனாம்
வேதவியாசமுனி மேதினியிலேநடந்து
வந்தரிஷிபாதம் மன்னரெல்லாந்தான்வணங்கி
இந்தவிவகாரம் இவர்க்குவந்தகர்மவினை
தீர்த்தருளவேணுமையா ஜெனமேஜெயராஜனுக்கு
கார்த்தருளவேணுமையா கடவுளேதஞ்சமென்று
சிறியோனறியாத செய்தகுறையைப்பொறுத்து
வெற்றியேகப்பாருமையா வேதவியாசரே
என்றுமன்னர்கூற இறையோன்மனமகிழ்ந்து
ஒன்றுமறியாமல் உரைத்தீரேமன்னவரே
நாமேதுசெய்வோம் நாமோவிதிதனக்கு
கோபமதுசெய்தாலும் போமோபிரமையது
அல்லவேசொல்லுகிறேன் அந்தப்படியிவன்தான்
சொல்லவேகேட்டால் துயர்பிரமைதீர்ந்துவிடும்
முன்னாளிற்பஞ்சவர்கள் மூண்டுசமர்பொருத்தி
முன்னாளிற்பாரதப்போர் மென்றுமுழுந்தகதை
சொல்லியவன்கேட்டால் சுருதியதுவேதாந்தம்
மல்லென்றபோர்வீமன் வாகாய்ச்சமர்தனிலே
மத்தகெஜந்தனை வாரிப்பிடித்திழுத்து
சத்தமுகில்கடந்து தாண்டிவருவான்வெளியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்சூழ்ந்ததென்று பூரித்தான்பாரதத்தில்
வரப்புகழ்கழியில் வளைவொட்டமத்தகெஜம்
வாராலங்கேமரித்த வந்ததென்றானத்திரத்தில்
சீராய்ஜெனமேஜெயன் செவியுற்றுதான்கேட்டு
பொய்யென்றுசொன்னான் புத்திசற்றுமில்லாமல்
மெய்யெங்குந்தாவி வெண்பொரியாய்க்கண்டாச்சு
இதற்குவகையேது என்னவென்றுகேட்டளவில்
அதற்குவகைதானும் அறிந்தோரெடுத்துரைக்க
புத்தியென்றுகேட்கப் பொருந்திமதியுடனே
பத்தியாய்ப்பாரதத்தைப் படியானொருக்கால்
கேட்டீரோமனதையதில் கிலேசமெல்லாந்தீர்ந்துவிடும்
நாட்டீரோமனதையதில் நடுவேநிதானமாய்
என்றுரைக்கவேதியர் இன்பமாய்வந்திருந்து
அன்றுஜெனமேஜெயன் ஆமென்றுபாரதத்தை
முடியுமட்டுந்தான்கேட்டு முற்றிலுமோராய்ந்து
வேலையுந்தீரலையோ வேந்தனிவன்றனக்கு
கொள்ளைபிரமை குறையாலேபோவதற்கு
ஐவரரசாண்டு அவனிட்டுதானேகி
வைகுந்தஞ்சேர்ந்த கதையைத்தான்கேட்டாய்
தீரும்புதுமையிது தென்னவரேயென்றுரைத்தார்
பாரும்புதுமையிது பலிக்கும்சலிப்பறவே
கரும்பட்டுதான்போர்த்து கருத்துடனேதான்கேட்டால்
அரும்பட்டுவெண்பட்டாய் ஆகுமதுசவ்வாது
அப்போபிரமையது அகன்றுவிடுங்கண்டீரே
இப்போதுகேளும் இன்பமுற்றுதானிருந்து
என்றுமுனிசொல்லி ஏகினார்காணம்மானை
நன்றுதானென்று நமஸ்கரித்தாரெல்லோரும்
ஆமென்றுசம்மதித்து அரிவோமெனவேதான்
ஓமென்றுசொல்லி உற்றஜெனமேஜெயனுமே
வைகுந்தஅம்மானை வாகுடனேதான்கேட்டு
செய்கின்றசாஸ்திரங்கள் சிறப்பாகத்தான்முடித்து
அம்மானைபாடிவைத்து அந்தக்கதைகளையும்
செம்மானைத்தான்றரிக்க சிவனருளேயுண்டெனவே
கதைத்துவக்ககேட்கப் பலநினைவில்லாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரறுத்துக்காமம் வெகுளிதனைவிட்டேகி
காருபமான காடுதனைவிட்டொழிந்து
ஏகமனதாய் இருதயத்தைசெப்பனிட்டு
ஆகமுடன்கேட்க அரசன்கொலுவிருந்தான்.

## விருத்தம்

வேதவியாசர் முந்நாளில் விளம்பும் விசனமுள்ளபடி
தேசமுழுதுஞ் சிறப்புளதுந் தெரிந்துபார்க்கச் சமரசமாம்
பூதபந்த வுயிர்போலே புவனமிருந்த வகைமோச
நீதமிருந்து நெறியிருந்தும் நிலையாவண்ண மெளிதாச்சே. 59

விதித்த விதியைப்பாராமல் வேதவியாசர் மனைநோக்கி, எதிர்த்துச்
செய்திகேட்ட பலனிப்போதமக்கு பலித்ததென்று, மதித்து மனதில்
ஜெனமேஜெயன் மனது கலங்கி தெளிந்தறிவாய், துதித்துப் புகழ்ந்து
முனிவனையுஞ் சொன்னான் மகிழ்ந்து சொன்னானே. 60

சொல்லியகதைக்கேட்டு சுருக்கமாய்மனதைத்தேற்றி
பல்லியமாகக்கேட்டுபலதுயர்பிரமைபோக
அல்லியருள் நீங்கவென்று ஆனசனமேசெயனுந்தான்
மெல்லியபட்டுப்போர்த்து வீற்றிருந்தரசன்கேட்டான். 61

கருநிறப்பட்டுப்போர்த்தி கதைகளையுற்றுக்கேட்டால்
தருநிறம்வாங்கிவெள்ளை மதித்தபெண்கட்டதனால்
வருமொருபிரமைநீங்கி மனத்துயர்தீருமென்று
குருமுனியுரைத்தநேசங் குணமெனக்கண்டார்வேந்தன். 62

## கதை

வாகுடையபஞ்சவர்கள் வைகுந்தஞ்சேர்ந்தகதை
பாகுடையசொல்லான் பரிட்சித்துமன்னன்மகன்
சீராய்ஜெனமேஜெயன் சிந்தைமகிழ்ந்தன்பாய்
நேராகக்கேட்கநீலவண்ணர்காப்பாமே
ஓதுபுகழிக்கதையை உரைக்கவேதான்கேளீர்
மாதுசரஸ்வதியாள் வழுத்துகின்றசொற்படியாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேருவில்விநாயகர் வரைந்தெழுதுவேதாந்தம்
பாரிலுள்ளோர்கேட்க படிக்கிறேன்காணம்மானை
ஐவர்சகாயன் அரிகேசவன்முகுந்தன்
வாசவர்சகாயன் தாமோதரனிருக்க
அரியவைகுந்தம் அடைவோமெனவேதான்
உரியதொருஐயா ஒருமித்துஓமெனவே
நடக்கிறார்தேசம்விட்டு நன்னரிதானும்விட்டு
வடக்குமுகமாக வடமேற்குகோபுரமாய்
தருமருடன்தம்பியரும் தாரார்துரோபதையும்
கருமத்தைவிட்டகன்று கங்கைக்கரையில்வந்தார்
மங்கைதுரோபதையும் வாகான ஐவருமாய்
சங்கையாய்தான்தொழுது சரஸ்வதியைத்தான்வணங்கி
தலையிற்புனல்தெளித்து தாயேசரணமென்று
அலையிற்றலைமுழுகி அனுஷ்டானந்தான்முடித்து
ஆதித்தனைபூசைபண்ணி ஐவருந்தான்முடித்து
சாதித்தார்வேற்றுவருஞ் சந்நியாசிவேடமுமால்
சந்தமாய்மூழ்கிச் சடைமுடியுந்தானாகி
பாந்தமாய்தேடப் பருவமுடன்முடித்து
பாராசைதானும்விட்டுபைங்கொடியாளாசையற்று
ஊராசைதானாமற்று உற்றமன்னராசைவிட்டு
மாதாவினாசைவிட்டு மந்திரிமாராசைவிட்டு
மீதானகானகத்தில் விரைவாச்சென்றார்கள்
அப்போதுமாயன் அவர்மனதைத்தேற்றுதற்கு
இப்போதுயெதிரே இவர்காணவேகலியன்
தன்னுடையமாதாவின் தலையிற்சுமையேற்றி
மன்னன்மனைவிதனை வார்புயத்தின்மேலேற்றி
வந்தவனைக்கண்டு மன்னர்தருமர்வாய்புதைத்து
இந்தவகைதம்பியரே ஏதோசகாதேவா
கண்டோர்புதுமையிது கலியுகமானதினால்
அண்டாப்பெருஞ்சுமையை அன்னைதலைமேலேற்றி
பெண்டீர்தனைதோளில் பெருமையென்றுவைத்துவந்தேன்
பண்டுமொழிதவறில் பழுதுவருமேநமக்கு
மாநகரைவிட்டுவந்து வகையாய்ப்பிழைத்தோமே
ஆனநல்லதம்பியரே அரிகேசவன்பதத்தை
நன்றாகவுச்சரித்து நம்பியேயென்பிறகே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றானமனதுடனே கோயாலருண்டெனவே
தர்மருந்தம்பியற்குத் தைரியமாய்வார்த்தைசொல்லி
சீர்மேவுங்கானகத்திற் சென்றுபுக்காரம்மானை
கல்லுமுருகிவிடும் கடிவிஷமுந்தோன்றிவிடும்
புல்லும்புகைபாலைவனம் போய்புகுந்தாரைவரும்
மெல்லியர்கள்தன்பதமும் மின்னனையாள்தன்பதமும்
பூவலியமெல்லியதால் பொருந்தாமலேதுரைப்பார்

### *விருத்தம்*

தேகமிழந்துவாராமற் சடத்தைமிகவேதான்சுமந்து
தாகமிருந்துதவிப்பினையுஞ் சாராதுடலிற்றயவுசெய்து
பாகஞ்சிறந்தவுமைப்பாகர் பதத்தினைமிகவேதேடி
மேகஞ்சிறந்தமேனியனே விடைதானந்தகோபாலா.

ஒன்றுமறியோம் பொருளறியோ முன்னையல்லாதுணர்வறியோம், நன்றுமறவோந் தீதறியோம் நந்தா முகுந்தா நரசிம்மா, அன்றுசகாயமிருந் திருந்து வடியார் தங்களிடர் தீர்த்தாய், குன்றுமலைகள் குன்றாமல் குடிசார்ந்தகோபாலா.

உருவாயுருவிலோ குருவே யுடலிற்புகுந்துதனதாகி
வெகுவாய்குளறியுரையாமல் வேறேகவனம்நினையாமல்
கருவாய்மலர்பிடியாமற் கார்த்தாய்கார்த்தசிறையெதிர்தல்
வருவாயடியார்வைகுந்தம் வாவென்றருளாய்கோபாலா.

மனதுபிரமைபொல்லாது மாய்கைக்குரங்குபொறிபுலனை
தனதாகவெண்ணாமற் றானேதானாய்தனித்துமனம்
என்றுபயமில்லாமல் யெங்கள்தன்னையீடேற்றும்
உனதுபதிகெதியாக வுதவுநந்தகோபாலா.

### *கதை*

கலக்கமில்லாதெங்களையும் கண்ணுதலலேகாத்தருளும்
மயக்கமதைவிலக்கி வழிகூட்டியெங்களையும்
நடத்தும்பெருமாளே நாங்களொன்றுந்தானறியோம்
சடத்துக்குள்ளாழ்ந்த தத்துவமேபோற்றியென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தார்வழிதனிலே நமோராயணாவென
மடந்தையுடனைவருமாய் மால்பாதந்தானோக்கி
சோலைநிழலில்லாத கடுவனங்களானதொரு
பாலைவனங்கடந்து பஞ்சவர்களப்பாரும்
அருமுனிவர்தான்வாழும் அதிசங்கள்தான்பார்த்து
இருளிட்டுவந்து இரவியும்போய்மறைந்தான்
கார்மேவும்பின்னிருளும் காவலர்களனைவருமே
பார்மீதிலோங்கும் பாறைவழிகடந்து
கொள்ளிக்குவிள்ளாக கூரிருளில்தானலைந்து
தள்ளிவழிநடக்க சற்றுந்தெரியாமல்
மனமிடைந்துபுண்ணாகி மாயோனைத்தானினைந்து
கனலில்மெழுகதுபோல் கானகத்திலேயுற்று
தம்பிமார்கள்மனது இனியறியவேணுமென்று
பார்த்தனொடுநால்வரையும் பாஞ்சாலிதன்னையுந்தான்
ஏற்றதொருவார்த்தைதன்னை இனிக்கூறக்கேளுமினி
தம்பியரைநோக்கித் தருமருந்தானேதுசொல்வார்
வெம்பிக்களிம்பால் வெகுண்டுபயந்துவந்தோம்
எதிர்த்துப்போகமாட்டாமல் இளைத்தோடிப்போயினர்காண்
துதித்துலகமெல்லாம் தூஷணிப்பார்கண்டீரோ
இருந்துசெயங்கொண்டு எதிர்த்துத்துரத்தாமல்
இருண்டுமிகபயந்து ஆரணியம்போய்மடிந்தார்
என்றுலகஞ்சொல்லி ஏசாமலிப்போது
மன்றுலகில்வாழ்விசயன் மைந்தன்மகன்சேரனுக்கு
சென்றுதவியாகத் திரும்பியேநால்வருந்தான்
சேர்ந்துகலந்து சென்றுதவியாயிருந்து
ஏந்துசெனமேசெயனுக்கு எதிர்த்தொருவர்வாதுசெய்யில்
கலியனும்வந்து வளைந்துபோர்செய்தாக்கால்
வலியச்சனும்வந்து வளைந்துபோர்செய்தாக்கால்
சிறுவன்வினையறியான் செருக்களத்திில்சென்றறியான்
சிறுபூசல்செய்தறியான் உற்றாரொருவரில்லை
தானேதனியாயத் தயங்கியலையாமல்
உற்றபரிட்சித்துமகன் உகந்துஜெனமேஜெயனும்
வெற்றிசெய்துநீங்கள் மிரட்டியவனைச்செயித்து
செங்கோல்தழைத்தோங்கச் செனமேசெயன்வாழ்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கேயிருந்து அவனிதனையாளுமென்று
சீராருந்தருமர் தெரிந்துரைத்தார்நால்வருக்கும்
நேராகவிருந்துசெனமே செயனுக்குநீங்களுந்தான்
துணையாயிருந்து சுகமாகவாழுமென்றார்
மன்னாநீரெங்களைத்தான் மாநகரில்போயிரென்றால்
அன்னாளோயெங்கள் அபசாரஞ்செய்ததுண்டோ
கர்த்தனுடசித்தங் கலங்கினதுளந்தவிதம்
பெற்றபிதாவறியோம் பின்னையொன்றும்தானறியோம்
வந்தவனைக்கொல்ல மடிப்படாதெங்களையும்
வளர்ந்தஅருமையிதோ வனந்தனிலேவந்திருந்து
அழுத்தமுடனெங்களைநீர் அகலப்போமென்றுசொன்னீர்
அய்யாகுருகுலமே அண்ணரேயென்றழுதார்
மெய்யோதானீரும் விட்டுப்பிரிவீரோ
எங்களையும்விட்டு இருப்பீரோதான்தனியே
திங்கள்முகத்தோருஞ் செப்புகின்றதிவ்வாறோ
சுத்தத்திற்றேறாத தீவினைகள்செய்தோமோ
குற்றமதுசெய்தபிழைக் கொண்டுபொறுத்தருள்வாய்
செங்கோல்செலுத்தமென்று தேவரிடவாக்கதினால்
எங்கள்முகம்பார்த்துரைக்க எழுந்ததோசித்தமது
கணப்பொழுதும்மைக் காலந்தவறிப்போய்
க்ஷணப்பொழுதுகாணாமல் தரிக்குமோவெங்களுயிர்
அண்ணரேயெங்களைத்தா னவனிற்போமெனவே
எண்ணிமனந்துணிந்து இப்போதுரைத்தீரே
தம்பியருமீதுரைக்க தருமருந்தானேதுசொல்வார்
அன்புடையதம்பியரே ஆளுகின்றதேசம்விட்டு
என்பிறகேவந்தால் இன்வரசுக்காருமில்லை
தம்பிமுகம்வாடிச் சலித்துமனம்புண்ணாகி
வெம்பியிருப்பான் வேந்தன்செனமேசெயன்
அரசுநிலைநிறுத்தி அவனிதனிலேயிருந்து
விரசுடையவத்திபுரம் மேதனியைத்தானாண்டு
குருகுலத்துமன்னனிட கோத்திரத்திற்றான்கூடி
மருவியிருந்து வாழுமென்றுதானுரைத்தான்
அந்தமொழியுரைத்தீர் ஆனதம்பிநால்வருந்தான்
இந்தமொழியுரைத்தீர் எங்கோவேயண்ணாவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாசைபொன்னாசை மற்றுமுள்ளபெண்ணாசை
எல்லாம்வெறுத்து இப்போதுவும்முடனே
எல்லாம்வைகுந்தஞ் சேரவென்றுநாம்நினைத்து
வந்தோம்புவியைவிட்டு வைகுந்தம்சேரவென்று
சந்தோஷமாய்வரவே சஞ்சலங்கள்சொல்வதென்ன
ஆண்டவனேயிப்போது அடியேனுஞ்செய்தபிழை
நீண்புரையுடைய நெறிசேருமண்ணாவே
சரணஞ்சரணமென்று தாளினையைப்பூண்டுகொண்டு
அடிகள்மிகச்சுடவும் ஆவிதளர்ந்திடவும்
கட்டியமணல்சுடவும் காலசைந்துநின்றிடவும்
சாய்கைதட்டுவந்து தட்டழிந்துநின்றிடவும்
பதியிழந்துகானகத்தில் பரதேசியாய்வரவும்
அதிகபவுசிழந்து அரும்பதிகொண்டேவரவும்
நீங்கள்படும்பாடுகண்டு நெஞ்சம்பொறுக்காமல்
தாங்கமுடியாமல் தானுரைத்தேன்தம்பியரே
இன்முடன்நீங்கள் என்னருகில்வந்தவரை
துன்பமதுநினைத்துக் கொல்வேனோநான்பாவி
நாளுஞ்திருமால் நமக்குதவியாயிருந்து
ஆளுங்குருசுவாமி அரியின்பதஞ்சே
நினைத்துவந்துநேசம் நிலைதவறாதோர்மனதாய்
மனந்துணிந்துவந்தீர்களோ வைகுந்தம்சேரவேதாம்
என்றுதர்மர்சொல்ல ஏற்றதிரௌபதியும்
நின்றுமனதுருகி நெஞ்சமும்புண்ணாகி
கால்களடிச்சுடவும் கண்கள்சிவந்திடவும்
மெய்களயர்ந்து வெகுமெய்கள்கைசோர்ந்து
அருமைதலைகுனிய ஐவருக்குபின்னேதான்
பெருமைசிறுமையதாய் பெண்ணரசேயிப்போது
உரிமையுடன்நீவரவும் உத்தமியேஎங்களுக்கு
தருமரெனப்பேரேது தயவுசற்றுமில்லாமல்
ஆனதினால்பெண்கொடியே அன்னையார்தானும்மாமி
தாழும்வாழும்மாளிகையில் தனியாயிருப்பார்களோ
மானனையீர்நீர்போய் மாமியுடன்சேர்ந்திருந்து
ஞானசிவபூசைகள்தா னடததியனுதினமும்
குந்தியம்மாள்தன்னிடத்தில் கோதையரேநீர்சேர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமொழிகேட்டு அருந்ததியுமேதுசொல்வாள்
மெய்யரேயெந்தனையும் வித்தகரேயிப்போது
பொய்சொல்லாவேந்தர் போவென்றுசொன்னதென்ன
நான்பாவியானேனொ நாயகனேயென்றழைத்தாள்
தேன்பயிலுங்கோவே சித்தில்கண்டதென்ன
வாகாகவென்னை வரவேண்டாமென்றுசொல்லி
ஆகாபுலைச்சி யழிபுலைச்சியானேனே
சற்பனைகளான சதிகேடுசெய்தேனோ
கற்பழிந்துவேறு கண்டாரைக்கொன்றேனோ
ஐவர்துணையென்று அன்றுமுதலின்றளவும்
மெய்வருந்தினாலும் விட்டுப்பிரியாமல்
சித்தம்வரநடந்து சேவடியைப்பூண்டிருந்தேன்
கர்த்தனுக்கென்னால் கசடுவருவதுண்டோ
இனிமேலடியார்க்கு ஈடேறும்பந்தியென்ன
பணியாதபொய்யுடலை பாரமென்றுசொல்வேனோ
வையத்தோர்சொல்லி வம்பால்நகையாரோ
மெய்யகத்தோற்சேர்ந்து மேலும்பிரியாமல்
காத்தருளவேணும் கண்ணரிடதன்னருளால்
ஏற்றசிறைதன்னை வீடேறமுற்றிலுமே
சீர்பாதந்தன்னை தினமும்பணிந்தேத்தி
ஒருமனதாயிங்கிருந்து உத்தாரம்பண்ணுமயா
தர்மர்மனமகிழ்ந்து தையலைபுங்கொண்டாடி
கர்மமெல்லாம்விட்டு கரையேறினோமினிமேல்
முத்துத்தெளிந்து மோகவலைவிட்டே
வந்தோமினிமேல் மலைகள்தான்சற்றுமில்லை
சந்தோசமாச்சு தர்மர்மனமகிழ்ந்து
அவ்விருளுந்தானீக்கி ஆதித்தன்வந்துதித்தான்
எழுந்திருந்துசூரியனை இன்பமுடன்பஞ்சவர்கள்
விழுந்துநமஸ்கரித்து மெய்யலருந்தான்முடித்து
ஞானமனுதினமும் நாரணரேதஞ்சமென்று
தமையோனைதெண்டனிட்டு மிக்கானஐவருந்தான்
பேயிருண்டகானகத்தில் வனத்தில்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம் பொல்லாதயானைமுதல்
மலைவண்டுதான்தட்டி நடந்தார்வனங்கடந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தீபனுங்காடுவிட்டுப் பரிவாய்வெளியில்வந்து
ஆற்றோரம்வந்து ஆத்துமதத்தைச்சுத்திபண்ணி
சீரானகாட்டினுள்ளே தீர்த்தமதுதானாடி
தாராளுமாமுனிவர் தன்னையடிபணிந்து
வாழ்கமுனியேநாங்கள் வைகுந்தம்சேர்வதற்கு
பூமேனிமேனியரே பொருந்தவிடைதாருமென்றார்
நேசமுடனிப்போது நிமலர்பதம்போற்றி
ஆமென்றுமாமுனியும் அருளினார்நல்வசனம்
நல்லதென்றுபாதைவழி நடந்தார்கள்பஞ்சவர்கள்
வல்லதொருகானகத்தில் வழிந்தோடும்நீரதுபோல்
காடுதனிலோடுங் கானலைமிரென்றுசொல்லி
ஓடுவாரள்ளியுண்ண ஒண்டொடியோடைவருவாய்
பாலைவனங்கொடுமை பார்பிளந்துநீறாக
சாலையெனும்மூங்கில்வனம் தானெரிந்துநீறாகி
விண்ணளவுந்தீயெரிந்து மேகநீர்வாரிடமாம்
கண்கள்விழிக்கரிதாய்க் கனலுமேகோரமதாய்
கண்டுபயந்து கடவுளரேதஞ்சமென்று
தொடர்ந்துவந்தோம் தாகைவெள்ளம்வந்துதாம்
இருந்துதவிப்பார் எழுந்துமெள்ளவந்தோம்
வருத்துமைவர்கானகமும் வனமுங்கடந்தேகி
மதகரிதன்னைக்காத்த மாதவாவெங்கடேசா
இதுநல்லசமயமையா எங்களைநீகாப்பதற்கு
பச்சைமாலென்றுசொல்லப் பாவங்கள்தீர்ந்துவிடும்
அச்சுதானந்தகோபால ஆயனேயென்றுசொன்னால்
விக்கினங்களினின்று விலகுமேயென்றுசொல்லி
அக்கினியுமன்னவரே மறிவுடனேதான்விலகி
மற்றுமந்தஅக்கினிதான் வழிவிலகிஅப்பாலே
உத்தமமருமகனுக் கொதுங்குகின்றமாமியைப்போல்
விலகிவழிவிடவும் விரைந்துஐவர்தானடைந்தார்
இலகுபுகழத்தனையும் விட்டகன்றாரம்மானை
அவ்வனத்தைவிட்டு அநேகநெடுந்தூரம்
இவ்வனமுமாக இக்கோலமாய்நடந்தார்
பாவமகலாது பார்த்தவர்க்கடங்காது
செவ்வேதான் தாம்நடந்தால் திருமாலுதவிசெய்வார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமோநமக்குஞாபகம் வழியேபுதுமையென்ன
தர்மருந்தானினைந்து தம்பியரைத்தானோக்கி
தாரார்புகழ்வீமா தம்பியருச்சுனரே
சீராகநானொருசொல் செப்புகிறோம்கேளுமென்றார்
தம்பியென்றெண்ணாது தமையனுமென்றெண்ணாது
நம்பினோரன்னைசுற்றம் நால்வரையுமெண்ணாது
கலங்கிமனமிடைந்து காவலர்களந்நேரம்
மயங்கியேதருமர் மாயோனைத்தானினைந்து.

## விருத்தம்

ஆயனேநந்தகோபா அச்சுதாபச்சைமாலே
தாயனேசமயமிப்போ வந்துநீகாக்கவேண்டும்
தூயனே நெருப்புவெள்ளம் சுழிஎழுந்தோடக்கண்டோம்
நேயனேவாறுதாண்ட நெடியவாதுணைசெய்வாயே. 66

நெருப்பாறுடையவதுவேகம் நீயேயறிவாய் நானறியேன், கருப்பா
றெனவே கனல்தன்னை கையாலணைத்து தகையார்கள், திருப்பாய்
கனலை புனலாகி செவ்வே வழிந்து திறந்துநல்ல, கருப்பேதுதவுங்
கோபாலா சரணஞ் சரணஞ் சரணுமக்கே. 67

அனலாய்வெந்துவந்தீதை அடியேன் கண்டு பயந்து நொந்து,
கனலேதன்னு விருந்தொழுக கடுகமனங்கள் வெந்திடைந்து,
தனலேபுனலாகக்கொண்டருளிச் சமயம் வருவாயகண்ணுதலே,
எனவரசிங்கவடியார் முன்னேகிவந்த கோபாலா. 68

## கதை

மாயன்றனைநினைந்து மனதிற்றியானமதாய்
நேசமுடனைவர் நின்றதொருநல்வசனம்
அரிகரிராமாராமா ஆபத்துக்காக்கும்ராமா
வடமலைநந்தகோபா வந்துநீகாக்கவேணும்
கடல்தனையடைத்தமாயா காவலுன்காவலையா
ஒடிப்பதினேழு யோசனையுந்தான்கடந்து
நாடித்திசைநோக்கி நடந்துவழிகூடி
பற்றிபறந்தோங்கும் பரிந்துநிழலாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையுள்ளவெள்ளை வெளியாகவேதோன்றும்
அடித்தோர்கைகட்டுகிற அன்றுற்றசெய்தியது
தொடுத்தவெகுதூயவஞ் சுத்தவெளியானதொரு
பளிங்குநல்லபாறையின்மேல் பாங்குடனேமேலேறி
பொழிந்துடன்மழைபோல் பூமியின்மேல்தான்சொரிய
கண்டுபுதுமைதன்னைக் கன்னிடையதம்பியரும்
ஒண்டொடிக்குங்காட்டி உயர்கானகம்நடந்தார்
மேனிமிகக்குறுகி மெல்லடிகள்கொப்பளிக்க
சோனைமழைபொழியக் கொலைகானகம்புகுந்தார்
வெகுதூரந்தான்கடந்து விசாரமிகத்தீர்த்து
ரகுராமாவென்று ஏகினர்காணம்மானை
அங்கேவெகுதூரம் ஆறுமடுவுகளும்
தாங்காமலேகடந்து தாண்டிக்கரையேறி
ஓடும்நதிகடந்து உப்பாறுதான்கடந்து
காடும்புனல்கடந்து கரையாகநின்றளவில்
நெடுங்கானகந்தன்னில் நெருப்பாறுதான்வரவே
கடுங்கானில்வாரதொரு கடுங்கொடுமைகண்டுமவர்
பெற்றபிள்ளையானாலும் பிரியமதையெண்ணாது
சுத்தமென்றேசற்றே துணையிதுவென்றெண்ணாதே
மன்னர்மகுடமுடி வந்தரெண்ணாது
தென்னர்குருவாசாரி தேவரையுமெண்ணாதே
தானவனாமென்ற தவசியையுமெண்ணாது
ஞானசிவயோகியொரு நாகத்தையுமெண்ணாது
வாதுசமர்பொருத வந்துவிடுமிந்தமதம்
தீதுவருமல்லாது தெளிவரமாட்டாது
மூர்க்கமேவுண்டாகும் முனையவெகுவாதம்
தீர்க்கமுடனுண்மையது செய்யுந்தொழிலுண்டாகும்
ஆசாரந்தோற்றாது அன்புசற்றும்வராது
ராஜாதிராஜனென்னும் லாகிரியேயுண்டாகும்
வித்தைமதம்சத்திமதம் வேதமேயுண்டானால்
இத்தையெல்லாங்கொண்டு ஏகுவதுஞாயமல்ல
ஆயிரமாகாது அருந்தவசுவந்தவர்க்கு
வேயுதவிதம்பியரே வில்லுமெடுப்பார்களோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவொருசிலையை வாரிதியில்போடுமென்றார்
அல்லலறநாமும் அவரேதுணையெனவே
போவதுஞாயம் புத்தியதுவேநமக்கு
தேவரீர்சொன்னமொழி சிறியோர்கள்கேளாமோ
அண்ணரேயெங்கள்சிலை ஆழ்கடலிலேயெறிந்து
எண்ணமறவாரோ எங்கோவேயென்றுசொல்லி
தருமருரைத்தமொழி தம்பிமார்கள்தான்கேட்டு
பொருதுஞ்சிலைகொண்டு போட்டுவிட்டார்கடல்தனிலே
நடந்தார்வெகுதூரம் நல்தருமருமாய்
கடந்தார்வெகுதூரம் காதமிருகாதவழி
அப்பால்வெகுதூரம் ஆனபிரமகிரி
மெய்ப்பாகவேநடந்து விரைவாகக்காதவழி
வந்துதவிப்பார் வாணுதலுமைவருவாய்
சிந்துதருகண்ணரங்கா தேடிவுரைகாகமாய்
சருகாமல்வந்து சங்கரியைத்தான்தொழுது
இருகாலமங்கே ஏகினார்காணம்மானை
பூங்காவனம்புகுந்து போனார்களைவருமே
நீங்காதசெல்வம் நிறைந்தேகியேயிருந்து
அந்தவனந்தனிலே அனுகாவனமாகி
நொந்தவருங்காணாமல் நொந்திடஐவருமாய்
பருகித்திகைத்து மாயோனைத்தஞ்சமென்று
முறையிடவேயந்திரத்தின் மொருபிறந்தாரம்மானை
வேழமுகத்தானுடைய விக்கினங்ளென்றுசொல்ல
காளைமுகில்மேனியனார் கற்பித்தாரந்தரத்தில்
அவ்வசனங்கேட்டு ஆனதருமருமகிழ்ந்து
இவ்வசனஞ்சொல்லி இன்னமிவர்களெல்லாம்
விக்கினங்கள்தீர்க்கும் விநாயகனேதஞ்சமென்று
கைக்கினியமாங்கனிதேன் கடலையவலுடனே
எள்பொரியும்நல்ல இயல்பானசர்க்கரையும்
நெய்பொறியுமப்பளமுந் தெவிட்டாதுணவுசெய்வீர்
வைப்பேன்பலாச்சுளையும் வாழைப்பழந்திருத்தி
அப்பமுடன்தேங்காய் அவல்கொழுக்கட்டையுடன்
சீனியதிரசமுஞ் சிறந்தநல்லபச்சரிசி
நானிவேன்தப்பாது நாதாதுணைசெய்வாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

மூலப்பொருளே முதற்பொருளே முத்தேவித்தாய் முளைத்தெழுந்த ஞாலப்பொருளே நடுநிலையாய் நடுவேயிருந்தநாயகமே, கோலத்துடனேயுள்ளிருந்து குருவாய் மூலக் கிழங்காகி, சாவத்திருத்தி யொருநாளுந் தம்பிசமயஞ் சமயமிதே. 69

வல்லபைதமக்குநேசம் வைத்தநின்நேசம்போல
நில்லையாநெஞ்சில்நேசம் நினைவுடன்கலந்துபாரில்
மெல்லவேமயக்கிவிடப் பிரமையேமயங்கியப்பால்
செல்லவேநடத்துமையா திருவடிசரணம்தானே. 70

ஐந்துகரமுமொருவகுப்பு மகண்டசெவியுஞ் சிறுகண்ணும்
தெந்திவயிறு மும்மதவாயுந் தூலத்துடனே யிருமதமும்
நந்திவடிவுஞ் சிறுமணியுஞ் சத்தமொலிப்பா மாத்திரை
சிந்தியோர்களடியார்க்குத் தெரியவருவாய் கணபதியே. 71

## கதை

என்றுதருமர்தானினைந்து ஏற்றகணபதிக்கு
நன்றாகச்சொல்லி நடுதிசைநோக்கி
நெஞ்சுதனில்வைத்து நேசத்தையுள்ளிருத்தி
அடுக்காறும்பார்த்து அகண்டவெளிபார்த்து
நடுக்கமதுதவிர்த்து நமன்விதியைத்தள்ளிவைத்து
சட்சிக்கும்பகத்தில் நினைவாகப்பூரகத்தில்
நாசித்துவாரம் நடுவணையாய்தான்சிறந்து
ஆராய்ந்துதேடி ஐம்புலனையுள்ளடக்கி
சீராய்ந்துபூரித்துத் திருக்கைமுருக்கெடுத்து
கானகக்கனலெழுப்பிக் கணபதியைப்பார்பளவில்
மூலக்கிழங்காகி முத்திக்கும்வித்தாகி
மும்மண்டலமும் முடியடியுந்தானாகி
எம்மண்டலந்தனக்கு ஏகமுகலாகாசம்
அம்மண்டந்தனக்கு ஆதியுமனாதியுமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமென்றநாதமணி கலகலெனத்தான்முழங்க
வந்தார்வரம்பிடுங்கி மலைகள்தகர்த்தெறிந்து
கண்கள்சிவந்து கனலாய்பொறிபறந்து
விண்களதிர்ந்திடவும் விநாயகனார்வந்துதித்தார்.

## விருத்தம்

கடகடக விகடித நடசரணங் கருமுடலரி திருமுருகா சரணம், வடவரை யதிரவந்தாய் சரணம் தகளிரெனவரு கொண்டாய் சரணம், அடவியில் விழிதக மாறாசரண மடியேன் கவலையைத் தீர்ப்பாய் சரணம், நடமிகு வேந்தனாக வந்தாய்சரணம் நாதா கணபதி சரணம் சரணம் 72

இடைந்தேன் மனது புண்ணாகி யெங்கே யெவ்விமென்றசைந்து, குடைந்தே னெனது குடம்கும்பிக் குலைகள் ஈரல் வருவாது கடந்தே தொடர்ந்து முன்சென்ற கர்த்தனே கணநாத பூபதியே, அடைந்தே னுனைநான் கதியென்று சரணம் வைகுந்த மடைவியும்.

## கதை

தருமர்துதித்து சரணமென்றுபோற்றிசெய்து
மும்மதவேளானை முகமனமகிழ்ந்து
என்பிள்ளாய்தம்பியடா இத்தூரம்நீங்களுந்தான்
தான்பிறந்தமண்ணில் தலமும்விட்டு
கானகத்தில்வந்தமையால் கஸ்திநமக்குண்டாகி
வானகத்தோன்தாமறிய மனதுமிகப்பதறி
தடுத்தோம்நாமுங்களையும் தருமரேயென்றுசொன்னார்
அடுத்துமிகத்தருமர் ஐங்கரனைதெண்டனிட்டு
நடந்தவிபரிதமும் நாரணனார்கற்பனையும்
முடிந்தரகசியமும் முழுதுமெடுத்துரைத்து
தொடர்ந்துகலிவருமுன் தொல்லுலகைவிட்டெழுந்து
அயர்ந்துவனத்தூடே அடியார்வருகையிலே
வழிமடக்கிதேவர் வாட்டப்படுத்துகையில்
தெளியவழிகாட்டவென்று தேவர்தமைநினைத்தோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதருமர்சொல்ல ஏற்றதொருவிநாயகரும்
நன்றுகாண்தருமரேநீர் நாரணனார்தம்மிடத்தில்
சென்றுவைகுந்தஞ் சேருதற்குநான்தாமும்
இன்றுவழிகாட்ட எழுந்தருளுமென்றுரைத்தார்
கானகத்தூடே கணபதியுந்தானடைந்தார்
வானகத்துச்செய்தி வைகுந்தஞ்சேர்வதற்கு
நல்லவழிகாட்டி நடந்தார்விநாயகனார்
வெல்லரியதருமர் விநாயகனைத்தான்தொழுது
தம்பியருத்தருமருமாய் தானடந்தாரம்மானை
நம்பிவெகுதூரம் நடுக்காடுதான்கடந்து
காடுமலைசெடிகள் கல்லடர்ந்தபூமியுமாய்
இரடுகிறதற்காடா மிக்கட்டாம்காதவழி
அலுத்துக்கடந்து அப்பாலும்போகையிலே
வலுத்துவெகுவுன்னிதமாய் மலைதெரியக்கண்டார்கள்
கொண்டுசெரிகுழலாள் சோதைதுரோபதையும்
அசந்தாள்நடந்து ஆயோவெனவேதான்
பசந்தாள்மோதி பாவைமிகநொந்துருகி
தங்கியிருந்து தவிப்பாரிப்போவோமென்று
மயங்கியவள்வருமுன் மலையடுப்போவோமென்று சொல்லி
மலையைதிசைநோக்கி வந்தனர்காணம்மானை
நிலையைத்தொடுத்து நெடுகவளர்ந்தமலை
மேகம்படியும் விசாலமுள்ளகந்தமலை
மாகமுடனளவும் வளர்ந்தமலைதனிலே
காந்தருவனென்றொருவன் கண்டெதிரேவந்துநின்றான்
ஊர்ந்துவருமானிடரே உயிர்வெறுத்துவந்ததென்ன
மேகநாதனென்பேர் விடுவதில்லையுங்களையும்
சாகுமுடன்பேரூர் சாற்றுமென்றான்கந்தருவன்
அப்போதுதருமர் அவனைமிகநோக்கி
சந்தனுமகாராஜன் தன்னுடையவங்கிஷத்தில்
வந்துதித்தோம்பாஞ்சவராய் பார்வேடாநீர்கேளும்
என்றன்பேர்தருமர் எனக்கிளையநால்வரிவர்
வந்தோங்கலியதனால் வைகுந்தஞ்சேர்வதற்கு
இந்தவகையாக ஏகிவந்தோமென்றுரைத்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமொழிகேட்டு அவனேதுசெப்பலுற்றான்
விந்தையுடனென்குலத்தில் வேந்தரையுங்கொன்றுபுக்கி
வந்தீர்களேதருமர் வாய்த்தபழியதனை
தந்துவிட்டுப்போமெனவே தானுரைத்தான்கந்தருவன்
முன்னாளில்வானவர்க்காய் மூர்க்கமுள்ளஅர்ச்சுனனை
மனம்பொறுத்துவிட்டேன் வலியவந்தீரிப்போது
இன்னாளிலென்பிழைக்கு எதிராகவந்துவிட்டீர்
மன்னாவுனையும் வலுவானநால்வரையும்
கொன்றுசினந்தீர்ப்பேன் கொற்றவனேயுங்களையும்
இன்றுபோய்வாருமென்று எதிர்த்தான்வனந்தனிலே
கலியைவிட்டுதப்பிக் காசினியைவிட்டகன்று
வடியவனந்தனிலே வைகுந்தம்தானோக்கி
போகையில்நீமறுத்துப் போருக்குவாருமென்றாய்
ஆகையினாலுன்னுடனே அடர்ந்துபோர்செய்வதில்லை
என்றுதருமர்சொல்ல ஏற்றதொருகந்தருவன்
நான்தான்தருமரேநீர் நம்மோடெதிர்க்காவிட்டால்
ஆனாற்றிரும்பியுங்கள் அத்திபுரஞ்சேருமென்றான்
தேனூருந்தருமர் சிரித்தவனைநோக்கி
ஏனோகெடுவாய்இவ்வசனந்தானுரைத்தாய்
நானேவுன்சொற்கேட்டு நடப்பதுபோலேயுரைத்தாய்
பேய்கொண்டகெந்தருவா பேசாதிருபோடா
வாய்கொண்டுதட்டாதே வழிவிலகிநீபோடா
மன்னாநீர்போர்புரிய மாட்டாயோயாமானால்
என்னோடெதிர்க்கவுந்தான் இளையோரையேவுமென்று
கடுகியனுப்புமென்று கந்தருவன்தானுரைத்தான்
முடுகிப்பொருதவென்று மூடனவன்சொல்லுகையில்
தருமர்சினந்தெழுந்து தம்பியரைத்தானோக்கி
பொருமலுடன்மனது பொருமைமிகவாகி
வார்த்தைசொல்லிதம்பியர்கள் வணங்கிபதறாமல்
கீர்த்தியுள்ளசுவாமி கேடுகெட்டேன்சொல்வதுதான்
என்றுசொல்லியிப்பால் இருக்கின்றநால்வரையும்
பன்றுமிக்ககாந்தருவன் படைபொருதவாருமென்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றுபுகழ்பார்த்தனையுஞ் சகாதேவன்வீமனையும்
ஏற்றபரிநகுலன் இவர்களையும்வாருமென்ன
போருக்கழைத்தான் புத்திசற்றுமில்லாதவன்
பாருக்குளவானான் பதைத்தவுடல்வேர்த்து
இக்கணமேயுங்களையும் எமலோகமேற்றுதற்கு
தக்கமுடன்வாருமென்று தாழக்குழிபோட்டான்
இப்போதுநாங்களுமே ஏற்பதில்லையானாலும்
உன்மேலேயுத்தம் ஒருநாளுஞ்செய்வதில்லை
தருமர்மொழிதப்பத் தருமமோவெங்களுக்கு
என்றாரிழையோர்கள் என்சொல்வான்காந்தருவன்
நன்றாகக்கேட்டிலையோ நமன்சேதிவிண்ணுலகில்
முன்னாளிலிந்திரன்மேல் முடுகியமர்பொருதே
மன்னாஅவன்பிறகே மாட்டாற்போம்பொழுது
சொன்னான்காணைவர் தோற்றமுடனிவ்வசனம்
அப்படியேநீங்கள் அனைவர்சொல்லைமீறாமல்
சொற்படியேவந்தீர் துவண்டுபுறம்வாருமென்றான்
வேண்டுமடாகாந்தருவா வைகுந்தம்போறவரை
ஏண்டாதடைபண்ணாய் ஈடழித்துபோகாதே
சொல்லக்கேளப்பா துடுக்கதனைவிட்டுவிடு
அல்லகாண்நீங்கள் அடர்ந்துபோராடாமல்
போவதறிவனென்று புத்திகெட்டகாந்தருவன்
தாவித்துரோபதையைத் தானெடுத்து
கொண்டுசெல்லநங்கையுந்தான் கோவிந்தாவென்றழுதாள்
கண்டுமதவீமன் கண்கள்பொறிபறக்க
ஆகாசம்பூமி அதிரவேசத்தம்பண்ணி
பார்க்காதேயென்று புறப்பட்டான்போர்வீரன்
கெந்தருவன்தன்னை கட்டிமிகப்பிடித்து
சோர்ந்துபொருதியே சினந்துரெண்டுமாப்பிரித்து
காற்றுமழையுங் கலந்துபொழிவதுபோல்
ஏற்றமலைரெண்டு மெதிர்த்துபொருதாப்போல்
சிங்கமுடனாளி சினந்துபொருதாப்போல்
பொங்குகடலேழும் பூரித்தலைவதுபோல்
வாலியுடன்சுக்ரீவன் வந்துபொருதாப்போல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலிலேமுன்னாளில் கோபாலசிங்கமுமாய்
இரணியனைகொன்றதுபோல் யேற்றமிகுவீமன்
தரணிதனிலவனைச் சங்கரிக்கவேநினைத்தான்
தருமருந்தானறிந்து தம்பிடமேலாணையிட்டு
மின்மையிரும்வீமா விட்டுவிடுதம்பியென்றார்
அண்ணனார்மொழிகேட்டு அவன்மயிரைதானும்விட்டு
மண்ணதிரவிண்ணதிர வாரியெடுத்தெறிந்து
குத்தினார்வீமன் கூவென்றான்காந்தருவன்
தெண்டனிட்டுஓடலுற்றான் திரும்பியேபாராமல்
சண்டையிட்டுகாந்தருவன் தப்பிப்பிழைத்தோமெனவே
முன்னாளில்துரோபதைதான் வேந்தரைவர்தன்னுடனே
பாடுபட்டதெல்லாம் பாவியேன்தன்னாலே
கேடுகெட்டேன்யானும் கிலேசமெல்லாம்விட்டுவிட்டேன்
என்றுசொல்லத்தருமர் ஏந்திழைக்குப்புத்திசொல்லி
நன்றுதானென்று நடந்தாரவ்விடம்விட்டு
மலைகள்பருவதங்கள் வனமும்பலதான்கடந்து
குலைசெய்யும்யாளிசிங்கம் கொடியபுலிக்குஞ்சரமும்
வனமிருகம்வாழும் மலையும்வனாந்திரமும்
பலமிருகம்தானும் பஞ்சவர்களென்றறிந்து
விலகுமிருகமதை விந்தையென்றுபார்த்திருந்து
கலகமிடுமிருகங் கண்டொதுங்கிப்போகுதென்று
தங்களிலேதான்பேசிச் சந்தோஷமாய்நடந்தார்
பொங்குநதியாறுகடந்து பூபாலர்பொய்கையிலே
செங்கழுநீர்தாரை சேர்ந்தநீரான்பலுடன்
திங்கள்முகங்காணாமற் சிறந்தவனச்சோலையிலே
வைகைநதியாவும் வாருதடாங்களும்
பொய்கையதுகண்டு புனலருந்தியங்கிருந்து
செய்யும்புகழாசாரி செய்யருந்தவங்கண்டு
வெய்யபுகழ்தருமர் விஷேசமதுவென்றிருந்து
கண்டுபணிந்தவர் களிகூர்ந்துதெண்டனிட்டு
தொண்டுபண்ணிநின்றார்கள் துரைராசர்மாமுனியை
பார்த்தீபர்முனியைப் பணிந்தேதுகேட்கலுற்றார்
போர்த்துபுலிதோலுட நீர்பொய்கைதானேதெனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகின்றதீர்த்தமது ஐயரேயென்றுசொன்னார்
அப்போதுமாமுனியை ஐவருமேதானோக்கி
செப்புமுலைமடவார் தீர்த்தமிகவாடுதற்கு
எப்போவருவா ரெனக்கேட்டாரம்மானை
தப்பாதமாமுனியும் தருமருக்குஏதுசொல்வார்
ஓடுகின்றநீர்பெருகி உதயமென்னும்வேளையிலே
காதலாலங்கவரைக் காணலாமென்றுசொன்னார்
வாலவுபாயமதால் வந்தார்மடந்தையர்கள்
மேலானபொய்கைதனில் மெல்லிநல்லாள்தான்முழ்கி
கோதையர்கள்யாவரும் குழலாத்திதாமுடித்து
வந்தவரைக்கண்டு மங்கையர்களெல்லோரும்
இந்தவனத்தில் இவராரெனவேதான்
துங்கமுடன்மன்னவரே துடியிடையாள்தன்னுடனே
எங்குவந்தீர்நீங்கள் எவ்வூரிடமென்றார்
பாரார்புகழுகின்ற பாண்டுமன்னர்தன்புதல்வன்
தாராருந்தருமரென்பேர் தம்பியர்கள் நால்வருந்தான்
அருமையுடனிப்போ ஐவரையுங்கண்டோமே
தருமருடதம்பியரும் சார்ந்ததுரோபதையும்
வாய்ந்தகலியுகமு மண்ணுலகில்வந்ததினால்
ஆய்ந்தபுகழ்வைகுந்தம் அடையவென்றுசம்மதித்து
எங்களுக்குநற்காலம் இப்போதுநீங்களுந்தான்
உங்களுக்குநாங்கள் உகந்தடிமைதானாகும்
புரந்தரன்தம்மிடத்தில் போவோமெனவுரைத்தார்
வரந்தருவாரங்கே மகுடமுடிசூட்டிவைப்பார்
நாளைமுடிசூடி நாகலோகமானதெல்லாம்
ஆளும்படிக்கு அரசாளவைத்திடுவார்
நன்றாகவுங்களுக்கு நாங்களெல்லாமிப்போது
மன்னர்சபையறிய மனையாட்டியாயிடுவோம்
சேருவோம்தானவர்முன் செல்வியுடனைவருமாய்
வாருமையாவென்று மடந்தையர்கள் தானழைக்க
பாசமுள்ளபெண்கள்தாம் பார்மீதிலாசைவிட்டு
நேசமுடனாங்கள் நெடுமால்தனைநோக்கி
போகையிலேநீங்கள்சொல்ல புத்தியுள்ளமங்கையரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபமுடன்சொல்லத் தகுமோதானுங்களுக்கு
என்றுதருமர்சொல்ல ஏந்திழைமார்தான்கேட்டு
ஒன்றுமில்லைநாமிவர்க்கு உள்ளாசைபட்டதெல்லாம்
ஒத்தாசையுமில்லாமல் தானுரைத்தார்பஞ்சவர்கள்
சித்தாசைகொண்டபெண்கள் திரும்புமென்றுதான்போனார்
மன்னவரைவிட்டு மடந்தையர்கள்போனபின்பு
தென்னவர்களைவருமாய்ச் சேர்ந்ததுரோபதையும்
மாமுனியைத்தான்வணங்கி வாழ்த்திவிடைதாருமென்று
பூமுனிவன்வாக்கருளிப் போமென்றுசொல்லுகையில்
தருமரேநீங்கள் தாவுவழிதனிலே
தென்மலைபோல்பாம்பு சீராவுந்தான்விழுங்கும்
எப்படிதான்போவீர் என்றுரைத்தார்மாமுனியும்
மெய்புடையோர்தருமர் விரைந்தேதுசெப்பலுற்றார்
விதிவசத்தையாராலும் விலக்கவல்லோருண்டோதான்
சதிரானமுனியைத் தானனுப்பியேநடந்தார்
மின்கொடியுந்தருமருமாய் வீமருடன்தம்பியரும்
குணமிகுந்தமாமலையில் வந்தனர்காணம்மானை
அந்தமலைச்சாரல் அங்கேயொருபுறமாய்
சிந்துசிறுதாரைவழி தானடைந்துபோகையிலே
சித்தமுடமும்பாதையுமாய் சிறியமலைபோலே
புத்ரதவமானதுதான் போர்வரைகள்போலேதான்
ஓங்கிவளர்ந்தது உயர்வரையாமென்றுசொல்லி
தாங்கிநடவாமற் தாராளமாய்நடந்தார்
வந்தவர்களைவரையும் வனிதைதுரோபதையும்
சந்தோஷமாய்நாகந் தானேவிழுங்கினதாம்
அப்போதுவீமன் அறையில்சிறுவாளதுவும்
தப்பாமல்நாகமதை தான்பிளந்துகூரியதால்
மெய்யானதருமருந்தான் விதிவசமோயீதெனவே
இப்பால்வெளியில்வந்து எச்சில்பட்டோமென்றுசொல்லி
மகாதீர்த்தமாடி வருங்கரையில்நீர்தனிலே
கோதிவிழுகின்ற கொடியவரம்பார்ப்பானாய்
வந்துபணிந்தான் மன்னவர்களைவரையும்
இந்தமகிமையிது ஏதென்றுதருமருந்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறபோது கிருபையுடன்பார்ப்பானும்
தாக்குமுதல்முன்னால் சபித்தார்கள்முனிவர்
சீக்கரம்போனேன் சிறுத்திருக்கும்சோலையிலே
பூங்காவனந்தேடிப் போனவடபாதியில்
மாங்குயில்போல்ரம்பையர்கள் வந்துமங்கிவிட்டார்
பூசைசிவன்தனக்குப் புஷ்பம்வரவில்லையென்று
ராஜரிஷிகோபமதாய் நாட்டமுடனெந்தனையும்
பாம்பாகவேசபித்து பாரமுனிகோபமதாய்
அப்போதுசாபம் அகலுவதெக்காலமென்றேன்
தப்பாதசொல்லுடைய தருமருடனைவருமாய்
வைகுந்தஞ்சேரவென்று வருவார்வழிதனிலே
தையவலுவீமன் தாழமடிவாளரத்தால்
இப்போதுதானும் ஈடேறஇங்குவந்தீர்
தருமருடன்நால்வரையும் தான்கண்டபோதெனக்கு
சென்மவிமோசனமாய் தேவர்சபைநான்சேர
போறேனென்றுபார்ப்பான் போயினர்காணம்மானை
நீரேதரித்தருளும் நிமலர்தனைநினைந்து
மார்க்கமுடனடந்து மலைகடந்துஅப்பாலும்
தீர்க்கமுடனடந்து திருமால்தனைநினைந்து
வாரவழிதனிலே மலைகளோவாயிரமும்
ஏறியிறங்கியப்பால் எண்காதமேநடந்தார்
நடந்துவரும்வழியில் நல்லதொருஅஸ்தகிரி
அடர்ந்தமோராகாயம் அந்தியமட்டுந்தான்வளர்ந்து
நீண்டமலைகண்டு நினைவயர்ந்துதருமருமே
ஆண்டவனேயிந்த அதிசயந்தானேதெனவே
தெண்டாயுதமெடுத்து திறல்வீமனப்போது
அண்டமதிர அடித்தான்மலைநகர
காத்தமலவேதியனாய் தானின்றான்பார்பானும்
பார்த்ததருமரேதெனவே பார்பான்தனைநோக்கி
இந்தவிசனம் ஏதென்றுதான்கேட்க
சிந்தைமகிழ்ந்து செப்பலுற்றான்வேதியனும்
முன்னாளரசருடன் மூர்க்கருடன்தான்பொருதே
என்னோடவரெதித்துப் போராடமாட்டாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைப்பட்டசூரர் உயிர்குலைந்துபோகையிலே
வதைபட்டுமாளுகிறோம் வைகுந்தம்தாருமென்றார்
வகைதெரியாமல் வைகுந்தம்தந்தேனென்றான்
பகைவருவதறியாமல் பாவிநான்சொன்னதினால்
சொல்லிவிட்டேன்வாய்வீணாய் சொன்னதைமாலறிந்து
கல்லாயெனைசபித்த கண்ணருந்தானப்போது
பண்டுவுருமாறிப் பாரமலைதானாகி
விண்டுபரந்தாமன்வளர்ந்து மேதியிற்றானிரென்றார்
ஆயரேஆச்சுதரே அடியேன்விமோசனந்தான்
நேயமுடனைவர் நினைத்துநம்மைநோக்கி
மாயவரேதஞ்சமென்று வைகுந்தம்சேர்வதற்கு
வருவாரிதுவழியாய் மானனையாள்தன்னுடனே
தருமருடன்தம்பியவன் தான்வீமன்கண்டாலே
உருமாறவுன்னை வுடையவேதானடிப்பான்
பருவரையுந்தூளாய்ப் பழையவுருவாகி
வருவாய்போவேந்து மாயவனார்சாபமிட்டார்
ஆனதிலென்சாபம் ஐவரேதீர்த்துவிட்டீர்
நானதினாற்பிழைத்தேன் நல்லவரேயுங்கள்தர்மம்
நான்போரேனீங்கள் நாராயணர்தம்மிடத்தில்
நான்போங்லென்று சதுர்மறையோர்தானடைந்தார்
ஆமென்றுஐயர் அனேகநெடுந்தூரம்
தாமோதரனே சரணஞ்சரணமென்று
தருமருந்தம்பியரும் தாரார்துரோபதையும்
இம்மைதனிலெல்லாம் இங்குகழித்தோமென்று
ஆதித்தனூடாடாத அருங்கானகம்புகுந்து
பேதித்தவன்மிருகம் பெரும்பூதநாதகணம்
ஊறும்பலஜாதி உயர்பறவையாளிசிங்கம்
சாறும்பலவிருட்சந் தளதளெனச்சேனைகளும்
மன்னுயிருந்தன்னுயிர்போல் வாழுகிறகர்மமென்று
எண்பத்துநான்குயிரும் இவர்களுடனேபேசும்
பண்செற்றுபஞ்சவர்கள் பலசலிப்புமில்லாமல்
நாற்றிசையும்கானகமும் நல்லசுபஜெனமும்
வேற்றுமைகளின்றி விலாசமாயவ்வனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறார்களைவருடன் வனிதைதுரோபதையும்
போகக்கண்டெதிரே பெண்கொடியாளென்றொருத்தி
அஸ்வமுகமாக ஐவர்முன்னேவந்துநின்றாள்
விஸ்வசொருபமுடன் வேகமாய்வந்துநின்றாள்
தருமருடன்தம்பி தார்வீமனுக்கிளையான்
வரும்விஜயன்தோளை வந்துதழுவுகின்றாள்
புரவிமுகமானதும் பெண்போலமுகமாகி
இரவிமதிபோல ஏந்திழையும்நின்றளவில்
தடலருந்தருமர் தானேயதிசயமாய்
ஈதலருகன்னி இவ்வசனங்கூறுமென்றார்
காளிமுனிதேவி காளியென்பார்முன்னாளில்
வானிலொருமுனிவன் வந்தெனைச்சேருகையில்
அறிந்தவெந்தன்பத்தாவும் அஸ்வமுகமாகவென்றார்
பிரிந்தேன்முனியைவிட்டு பேச்சொன்றுமில்லாமல்
ஐயகோயிச்சாபம் அகலுகிறதெப்போவென்றேன்
மெய்யாகநீயும் விஜயனுடன்தன்தோளில்
சென்றுதழுவத் தீருமேயஸ்வமுகம்
என்றுமுனிசொற்படிக்கு இப்போதுதீர்ந்துதென்றாள்
பூவுலகில்வாழும் போர்வேந்தரைவருமாய்
தேவுலகில்வைகுந்தஞ் சேருவீரெனமொழிந்து
போனாள்தன்சாபம் போச்சுதென்றுதான்மகிழ்ந்து
வானமும்போனபின்பு மன்னர்களைவருந்தான்
சேனாபதிவேந்தர் திருவுளமேயுண்டெனவே
நடந்தார்வெகுதூரம் நாலாறுகாதவழி
கடந்தப்பால்வந்துநின்று கண்டார்விமலமலை
அந்தமலைகடந்து அநேகநெடுந்தூரம்
சந்தனச்சோலைகளும் தடாகமதுதான்கடந்து
ஆலிலைமேற்றுயின்ற அச்சுதனைத்தானினைந்து
காளியாறொன்று மாந்திரியும்வந்துகண்டார்
ஆறுதனைக்கடந்து ஐவர்தானக்கரையில்
ஏறவென்றுதானும் இயல்தருமர்தானுரைக்க
வீறிட்டுவீமன் விசயனையுந்தர்மரையும்
பூரித்திரண்டு புயமதில்வைத்துமிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகையிற்சகாதேவன் ஒருகையில்நகுலனையும்
மருவுமலர்முதுகில் மங்கையரைத்தானேற்றி
பிறவிப்பெருங்கடலை பெரியோர்கள்நீந்துதல்போல்
திரவியக்கரிய திரள்முனிவர்போலாகி
ஆறுதனைநீங்கி அந்தவைகுந்தமதில்
ஏறுகைபோலக்கரையி லேறினார்காணம்மானை
அந்தமுள்ளபேராறு ஆரணங்குபோலாகி
வந்தவளும்நிற்க மன்னவருந்தர்மருந்தான்
ஏதுகாண்பெண்கொடியே யிவ்வேஷந்தனுக்கு
ஓதுவீரென்றுதர்மர் உண்மையாய்த்தான்கேட்க
நீதிமுனிதேவிநான் நித்தியகன்னியென்பேறு
சாதகமாநித்திரையில் தானனந்தல்செய்துவிட்டேன்
ஆகையினாலென்னை ஆறாவாயென்றுரைத்தார்
மாய்கையிதுசாபம் வாங்குவதெக்காலமென்றேன்
அரியபுகழ்தருமருடன் ஐவர்மயங்கிநிற்பார்
பெரியவர்களிந்தவழி பெண்ணேவருவார்கள்
ஆறென்றுசொல்ல ஐவர்திரௌபதையும்
ஏறெனவேவீமன் யிவர்கள்தனைப்பிடிக்க
நீந்திவருகையிலே நீங்குமுந்தன்சாபமென்றார்
அந்தமுனிச்சொற்படிக்கு அச்சாபம்நீங்கிப்போய்
பாவமென்றதுகாண் பதிதனக்குநான்போறேன்
தேவரீர்நீங்கள் சேரும்வைகுந்தமென்றாள்
காவலிங்குயிலாள் கணவன்பதிபோய்ச்சேர்ந்தாள்
அந்தமொழிகேட்டு அதிசயமாயுளமகிழ்ந்து
வந்தார்வெகுதூரம் மலையும்வனங்கடந்தார்
வரும்வழியிலேநிமித்தம் மதிமயக்கமாயுரைக்க
தருமரதுகேட்டு தானேவிசாரமதாய்க்
கன்னிதிரௌபதிக்குக் காலம்பொல்லாததென்றறிந்து
இன்னிமித்தஞ்சொல்லுமென்று யிடைந்துமனமுழன்று
வருகையிலேயல்ல லாய்த்துரோபதையும்
இருகைவிரித்தலறி எடுத்தடியும்வையாமல்
மெய்சோர்ந்துகைசோர்ந்து மேல்மூச்சுவேர்வையுமாய்
கைகளசைந்து களைதாங்கிநின்றளவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவர்திரும்பி ஆரணங்கைத்தான்பார்த்து
கைதாங்கிமெள்ள கருத்தென்னவென்றுகேட்க
தனக்குவரும்மயக்கந் தானுரைத்தாரம்மானை
உனக்குவருமயக்கம் உள்ளபடியின்னதென்ன
சொல்லென்றுகேட்ட துரோபயைும்வாய்தவறி
நில்லென்றுதாதி நெடுநாடியுள்ளசைந்து
தத்துவங்களற்றுத் தன்னினைவுதான்மாறி
பித்துகலங்கிப் பேரறிவுசிற்றறிவாய்
கண்டத்தில்சென்று மாயன்காலனெனும்பாவி
அண்டத்தில்நின்று ஆரணங்குதான்பார்த்து
பிண்டத்தடுங்குலைந்து பிராணனெனும்வாயுவுந்தான்
விண்டலத்தைநோக்கி விடையும்மிகப்பதறி
பொறிகலங்கியந்தப் புலனுமதிமயங்கி
நெறிகலங்கியெந்தன் நினைவுதடுமாறி
வாதமொடுங்கி வன்பித்தமதிகரித்து
சீதம்பறந்து சிலேட்டுமமேலோங்கி
மண்ணுந்தண்ணீரதிலே வந்துமிகவொடுங்கி
தண்ணீருந்தீயில் தானொடுங்கிமேலாகி
வாய்விலேவக்கினியும் வந்தெட்டிப்பார்குதிப்போ
காயத்துடனே கட்டுடனேஆக்கையிட்டு
அசதிகொடுக்குதே ஐயரேஎன்றுரைத்தாள்
அசதியென்றசத்த மைவருமேதான்பார்த்து
வீமன்சகாதேவன் விஜயநகுலனுமாய்
தாமுமயங்கி தங்கையிலேதருமருந்தான்
நால்வருக்குநேசன் நடுங்காமற்புத்திசொல்லி
வேல்விழியாள்துரோபதைக்கு மெய்யேதடுமாறாமல்
சொல்லுகிறார்தர்மர் துரோபதைக்குநேசமுடன்
வில்லுக்குநல்ல விஜயன்மனையாளே
மின்னேதுரோபதையே விட்டுப்பிரியாதே
பொன்னேநவமணியே புத்திசொல்லக்கேளுமென்று
நெடியோனைத்தஞ்சமென்று நெஞ்சிற்றியானமதாய்
பிடியேநினைவாகப் பிடியுமென்றுதர்மர்சொல்ல
துடியிடையாள்நல்ல துரோபதையுந்தான்மகிழ்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியாளந்தமாலே பஞ்சவர்ணாதஞ்சமென்று
மகிழ்ந்துதுரோபதையும் வாழ்த்துகின்றான்தோத்திரங்கள்
புகழ்ந்துபுவியிலுள்ளோர் புத்தியென்றுதான்கேட்க.

**விருத்தம்**

பஞ்சவர்கள்தமக்குநாமும் பஞ்சாலிவந்துதோன்றி
பஞ்சவரைந்துபேருக்குப் பாரியாயிருந்துபாரில்
துஞ்சவேசூதுவென்று துச்சனன்துகிலைக்கொய்து
அஞ்சியபோதெனக் கபயமளித்தாயே.

ஐவருக்குப்பியாதிந்த அவனியிலிருந்துவாழ்ந்து
ஐவருக்குந்தேவியாகி யழியாதகன்னியாகி
ஐவருக்குமடியாள்தானு மருந்தவஞ்ரேவந்தோம்
ஐவருக்குமுன்னேவாறே னரியவைகுந்தந்தாரும்.

வந்தனத்திலிடை வழியில்மரணமெனக்குசரியெனவே
இந்தவனத்திலூடெடுத்து எளியாள்தன்பதஞ்சேர
விந்தைவிழிக்குவழிகாட்டி வேறேதுன்பமணுகாமல்
நந்தாமுகுந்தாவைகுந்தா நாதாவரந்தருள்வாயே.

என்னையேமனணுகாம லெதிரேவந்துபதம்நல்காய்
பின்னைமனதுபாராமல் பிடித்தபிடியுந்தவறாமல்
உன்னைமனதில்மறவாமலுறைவேன் வரவும்வைகுந்தம்
முன்னேவாராய்கோபாலா முகுந்தா சரணம்சரணுமக்கே.

**கதை**

என்றுதிரௌபதியும் இறையோனைபோற்றிசெய்து
ஒன்றுமறியேன்சிவனே உன்பாதமெந்தனுக்கு
தந்தருளவேணும் தரணிதனைப்போற்றியென்று
நந்தா முகுந்தா நடுக்காட்டியென்னுடலை
இந்தாருமும்முயிர்தான் எங்கோவேயும்மிடத்தில்
வந்தாலும்மும்முடைய மலர்பாதந்தந்தருளும்
வைகுந்தஞ்சேருமையா மாயோனேயென்றுசொல்லி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யென்றுஉன்பாதம் வினாவுமறவாமல்
தோத்திரங்கள்பண்ணித் தூபமறவாமல்
மாத்திரைப்போதானாலும் மனதுமறவாமல்
தில்லைநகர்காட்சி திருவருளை அவனாகி
தொல்லையகல்சிந்துநதி தோற்றமுடன்முத்திநதி
செய்யதிருக்காவேரி குடந்தைபொன்னாரம்
ஐயனேசெகநாதம் அனந்தசயனமுதல்
திருப்பதிசிதம்பரமும் சீர்காழிமாதவமும்
விருப்பமுடனுள்ள விசேஷதலமத்தனையும்
சிந்தைதனில்வைத்துத் தியானித்துநிற்பளவில்
அத்தரத்திலுள்ள அரம்பையர்களெல்லோரும்
துய்யமலர்சொரியத் துந்துமிகளாடிவர
வெய்யமணிபதக்க விமானமதிலேதான்
ஆயாள்திரெளபதைதான் அரம்பையர்கள்சூழ்ந்துவர
நேயாள்வைகுந்தம் நிறைந்திருந்தாளம்மானை
மைக்கண் திரெளபதையும் வைகுந்தஞ்சேர்ந்தபின்பு
மிக்கதொருபஞ்சவர்கள் மெய்பதறியுள்ளசைந்து
வாடியிடைந்து மழைகாணாபயிர்போலே
கூடிப்பிரியாத கொம்பிழந்தவானரம்போல்
தெய்வமேயுண்டெனவே தேறியஜவருந்தான்
ஐவருங்கூடி அடக்கினாருத்தமியை
மெய்தளராமல் மேனிபதறாமல்
செய்யுஞ்சடங்குந் திருத்தமுடனேமுடித்து
நடந்தார்திசைநோக்கி நல்லபுகழைவருந்தான்
கடந்தார்வெகுதூரங் கானகமுமாறுகளும்
அப்பாலும்போகையிலே ஆனதொருவீமனந்தான்
தப்பாதசொல்லுடைய தார்வேந்தரண்ணாவே
கற்புடையமாது கானகத்திலேமடிந்த
உற்பனமேதென்று உயர்வீமன்தான்கேட்க
வாசமுள்ளதருமர் மகிழ்ந்தேதுசெப்பலுற்றார்
ஈசர்பதிவாழும் இமையமடந்தையவள்
பாரதமுடிய வந்திருந்தாளைவருடன்
தீபாவியானதொரு துரியோதிரன்மடிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதமும்பேரும் பகையறவேதான்முடித்து
கலியுகத்தைதாண்டிக் காட்டகத்தேநாம்வரவே
சலியாமல்நம்முடனே தானடந்தாளித்தூரம்
தேவர்முனிவர் திருமால்சபையறிய
பாவசரீரமதை பார்மீதிலேகிடத்தி
முன்னேநடந்துவிட்டாள் முகுந்தனிடதன்பதிக்கு
பின்னேதொடர்ந்து பிறகுவழிகூடி
நாமும்கடக்கவென்று நடந்தார்கள்வெகுதூரம்
தாமும்தம்பியரும் தையலையுந்தான்பிரிந்து
கானகத்தினூடே கடுகிநடக்கையிலே
வானகத்திலுள்ள மலையுள்ளுக்குள்ளிருந்து
வந்துபதுங்கி வருவாரைத்தான்பார்த்து
சிந்தைகசிதீரத் தின்னலாமென்றுசொல்லி
என்றுமனமகிழ்ந்து எதிரேதானார்பரித்து
கொன்றுபசியாறக் கூர்முகங்கைகளுமாய்
கண்ணும்முகமும் கனல்போல்பொரியெழும்ப
விண்ணுருவம்பாய்ந்து விழுங்கவேஜவரையும்
சேர்ந்துபிடிக்கவென்று சிங்கம்வந்துதான்சீறி
பாய்ந்துபிடித்ததுகாண் பருவீமன்றன்னையுந்தான்
சிங்கத்துவாயகலத் திரள்வீமன்தான்கிழித்து
பங்கப்படுத்தி பதர்ந்திரண்டுகூறாக்கி
வதைத்தானடிவயிற்றில் மருண்டோடசிங்மது
உழைத்துத்திகைத்துப் பதறிவுடல்நடுங்கி
வேதியர்போல்வந்து மெய்யுடையதருமர்முன்னே
நீதிமுறையோனும் நிற்பளவில்தருமருந்தான்
ஏதுகாண்வேதியரே இப்படிநீவந்ததென்ன
தாதுவிசுவமுனி தன்பூசைக்கேமலர்கள்
நாடுனெடுக்கப்போனேன் நடுக்கானகந்தன்னில்
தேனிருக்குஞ்சோலையிலே சினத்திரண்டுசிங்கமது
ஆர்ப்பரித்துரெண்டும் அவைகள்பெரும்போரை
பார்க்கப்பிரியமாய்ப்பார்த்துத் தாமசமாய்நின்றுவிட்டேன்
வேதித்துமாமுனியும் வேகமாயோடிவந்து
ஏகிற்றுசிங்கமென இச்சாபமிட்டார்காண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றியேநான்துதிக்கப் புகலுமுனியுமப்போது
ஐவருங்கானகத்தில் மால்பாதந்தான்தேடி
ஐவருந்தானந்தவழி அவர்கள்வருவார்கள்
பெருமையுள்ளதருமர் தம்பிபோர்வீமன்கையாலே
திருமுனிவர்சொன்னார் தீர்ந்ததுகாணிச்சாபம்
ஆனதினாலிச்சாபம் ஐயரேதீர்த்துவிட்டீர்
நான்போறேனீங்கள் நாரணனார்தம்மிடத்தில்
போங்களென்றுசொல்லப் போனார்வேதியரும்
வாங்களென்றுசொல்லி மன்னர்களைவருமாய்
இறையோனைதஞ்சமென்று ஏகினர்காணம்மானை
பறையறையவேணுமென்று கடுகிநடக்கலுற்றார்
மலைகள்பலகடந்து மாயோனைதானினைந்து
கலைகள்மறைகள் கரடிபுலியாளிசிங்கம்
பெரியமதவாரணங்கள் பேராறுதான்கடந்து
அரியவனக்காரணமும் அதிசயமுந்தான் பார்த்து
பஞ்சுலவுஞ்செண்பகக்கிரி வட்டமலையோர்புறமும்
மிஞ்சுபுகழ்பஞ்சவர்கள் விரைந்துவருகையிலே
தானதவம்பூஜைசெபம் தன்னுடனேயாமாகில்
ஏனமாமுனிவரிங்கே இருந்தாரவர்தனையும்
கண்டுவணங்கியிரு கையால்மலர்சொரிந்து
தொண்டுபண்ணிநிற்கையிலே தோற்றமுடன்மாமுனிவர்
மன்னவரேஎங்கிருந்து வாரீரெனக்கேட்டார்
தென்னவர்கள்போற்றுஞ்சீராகஐவருந்தான்
பாண்டுமைந்தரவர் பாராசைவிட்டகன்று
கண்டுகலிவருமுன் கரியமலர்கண்ணர்பதம்
தேடிவந்தோம்வைகுந்தஞ் சேரவென்றுநாங்களுந்தான்
நாடிவந்தோமும்முடைய நற்பதந்தெண்டனிட்டோம்
என்றுதருமர்சொல்ல இயல்முனிவர்ரேதுசொல்வார்
நன்றுதான்பஞ்சவரே நாங்கள்சொல்லநீர்கேளும்
வேகமுடனித்தூரம் விரைந்தோடிவந்ததினால்
தாகப்பசியிளைப்பும் களையாரவேணுமென்று
ஐவரையுந்தானிருத்தி அன்புடனேவார்த்தைசொல்லி
வெய்யவருமூலப்பலாதிகள்தான் வேணுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போசனமும்பால்தயிரும் போதவுண்டாகுமென்று
வாசகத்துடனேமுனிவர் மகிழ்ந்துரைத்துஐவரும்
பார்த்தீபரேநீங்கள் பாருமென்றுதானுரைத்தார்
சேர்ந்துநீருமென்று தயவாகமாமுனிவர்
தேனுங்கனியுந் தெவிட்டாதபால்பழமும்
தானுஞ்சிவமுனிவர் தன்னிடத்தில்தோற்றியதால்
இந்தக்கனிதேன்பழமும் அருந்துமென்றார்
அந்தக்கனிப்பலாப்பழமும் இப்போதழைத்தவிதம்
அதிசயந்தானென்ன ஐவருந்தான்மகிழ்ந்து
நதியிற்புனருந்தி நமஸ்கரித்தார்மாமுனிவர்
இருந்துபசியாருமென்று இயல்முனிவர்தானுரைத்தார்
விருந்துண்டுகளைப்பாறினார் வீரானஐவருந்தான்
கதிரோனும்போய்மறைந்தான் கங்கல்வந்துதோன்றியதே
கதிரானமாமுனிவர் தர்மத்தைத்தான்கேட்டு
வேதவிதிசாஸ்திரமும் விளக்கமாயைவருக்குங்
போதமாய்ச்சொல்லி போதித்தார்மாமுனியும்
கங்குலகன்று கதிரோனும்வந்துதித்தான்
பொங்குபுகழைவருந்தான் பூரித்தெழுந்திருந்து
கதித்துபதியுடன் காலைசெபந்தான்முடித்து
மதித்துமகிழ்ந்தைவர் மாமுனிவர்தன்னிடத்தில்
வந்துவணங்கி வைகுந்தஞ்சேர்வதற்கு
சந்துபுகழ்வனத்தில் தான்வழியுஞ்சொல்லுமென்றார்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்களுமச்சுதரைத் தேடியிணங்காமல்
தள்ளுவதுஞாயமல்ல சரணஞ்சரணமையா
வேழமுகத்தோனே விக்கினங்கள்தீர்த்தோனே
காளமுகில்மேனியினார் கண்ணன்மருகோனே
கதவுதிறவுமையா கணபதியேசரணமென்று
இதமுடனேதருமர் இருதாள்சரணமையா
மத்தகஜமுகமும் வாசல்வழிதிறந்தார்
வித்தகவிநாயகனை விழுந்துநமஸ்கரித்து
வட்டமதிக்குடையோன் மாநகால்வந்துநின்று
பட்டணங்களெல்லாம் பளிங்குநிறம்போலவேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்குஞ்சிவாலயமும் எம்பெருமாளாலயமும்
பொங்குஞ்சிவமுடையோர் பூசைபண்ணுநீதிகளும்
தவமும்சிவமுஞ் சந்நியாசிவேஷமுமாய்
அவமும்பவமும் அரிஞானமூலமுமாய்
தெளியும்பெரியோர்கள் சிவஞானவேதமுமாய்
வழியுமணிமுழங்க மன்னவர்கள்தான்பார்த்து
மகிழ்ந்துகளிகூர்ந்து வந்தார்களைவருந்தான்
புகழ்ந்துமுனிபாதம் போற்றியடிபணிந்து
அப்பனேயெங்கள் ஆதிகுருபரனே
செப்பமுடனெங்கள் தெய்வசிகாமணி
என்றுதருமர்தெண்டனிட்டு இன்பமுடனேபணிய
நன்றுகாண்பஞ்சவர்கள் மன்னவர்கள்தான்பார்த்து
பாண்டுமைந்தர்தானும் பதியிழந்துவந்தவரை
வேண்டியேயிங்குவந்த விசாரமேதென்றுரைத்தார்
பொய்யானதோர்கலியன் பூமியிலேவந்ததினால்
வந்தோம்புவியிழந்து வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாயனுப்புந் தானுவேயென்றுரைத்தார்
தருமரிவைசொல்லத் தான்கேட்டுமாமுனியும்
இம்மைதனில்வைகுந்தம் எவர்சேர்ந்தார்புவியில்
வேதமுடன்மாமுனிவர் விண்ணோருங்காணாத
சீதரன்மலர்விந்தபதம் தேடிநீகாண்பீரோ
ஆனாலுமாயன் ஐவருக்குமன்புடையோன்
தானானகோபாலர் தன்னிடத்தில்நீங்களுந்தான்
போனாலுமுங்களுக்குப் புத்திதான்சொல்லுகிறேன்
சேனாதிபதிக்கதிபர் செப்புகிறேன்கேளுமினி
வேதம்வெகுளி வெகுண்டதொருகோபம்
தாகம்பசியிளைப்புஞ் சஞ்சலங்களில்லாமல்
கருப்பங்கொலைகளவு ஏதொன்றுமில்லாமல்
கடுங்காமமனேகங் கருத்திலுற்றுப்பாராமல்
அன்றியுமோர்கதையா யருளுமென்றுதானுரைத்தார்
ஐம்புலனையுள்ளடக்கி ஆத்துமத்தைச்சுத்திபண்ணி
எம்பெருமாள்தன்னை இருதயத்திலேநினைந்து
மன்னுயிர்தன்னுயிர்போல் மனதுபரிபூரணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தால்தெரியுமப்பா என்னாணையப்போது
இடந்தான்தெரியுமப்பா என்னாணையப்போது
தாளார்துளசிமணித் தாளணியுமூர்த்திதன்னை
ஆராய்ந்துதேடி யருள்பெருவீர்கண்டீரோ
சொல்லுவழிதனிலே தீதொன்றும்வாராமல்
சொல்லுகிறேன்கேளும் துன்பமற்றபாதையிது
தீதானபேர்கள்வந்து செல்லாவழிகேளீர்
கேதாரம்போய்ச்சேர்த்தால் கிட்டுவதுதூரமில்லை
பக்கவிளக்குமில்லை பலபாதைதானுமில்லை
சொர்க்கமதுபோய்ச்சேர சொல்லுகிறேன்நீர்கேளும்
கதித்ததொருவாசல்வழி காவல்பத்திரகாளியென்றார்
துதித்தவளைப்போற்றித் துன்பமறவேநடவும்
என்றுதுருவாசர் இவ்வசனந்தான்கூற
நன்றென்றுபஞ்சவர்கள் நமஸ்கரித்துமாமுனியை
நடந்தார்திசைநோக்கி நல்லதொருபஞ்சவர்கள்
அடர்ந்துவழிகூடி அம்மையுடன்கோயில்சென்று
பணிந்தார்களஐவர் பத்திரகாளிதன்னை
துணிந்தார்களஐவர் தோத்திரமுஞ்சொல்லலுற்றார்.

### விருத்தம்

வக்கிரசந்த்ரமுகக்கமல விழுதுபல செஞ்சடையடி முடியும், உக்கிரம கோரவுமைவிருமருட்டு மோங்குநற்கர முந்தன் சூலஞ், சக்கிரவிசயஞ் சாமுண்டி கௌரி துர்க்கை மாகாளி திரிசூலி நீலி, நிக்கிரசாலி நிமலிதுதித் தேனுனையே துணை செய்வாயே. 83

காளிபகவதி கங்காளிமாரி கரியமால்தங்கை காரிழையாளே, எளியார் தமக்கெங்குமபரி பூரணியிடைவிடாவறியை, வெளியில் வந்துதவு மாதாவே யென்றுவந்ததோ முன்பாதம், தெளிவிலென்தாயே நின்பாதம் துணைசெய்வாயே. 84

துந்துபிபிடாரிசொல்லி தோத்திரமாயாருத்திரி
சிந்துரதிலர்தமாதே திருசூலிகபாலமேந்தி
வந்துமுன்தோன்றவேணு மாசற்றவடிவினாளே
கந்துவைகுந்தஞ்சேரப் பதிவிடைதாருமம்மா. 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதுமலர்க்குழலணங்கே சமயமிதுதான்வழிகாட்டி
மாதுதனதுகேதாரம் மட்டுஞ்சேரமலைவுதன்னை
ஏதுவினைகளணுகாம லெளியாரிடமேநீயிருந்து
தீதுவினைகள்வாராமல் செவ்வேநடத்துந்திரிபுரையே. 86

நடக்குந்துயர மறிந்துனது நாட்டமதனால் கண்டிறங்கி, அடக்கமுடைய பொருளறிய வம்மாவுனது செயலாலே, நடக்கவேணும் வழிந்துலையக் காணவேணும் வைகுந்தம், வடக்குவாசல் மடக்கொடியே வருவாய் வந்துதுணை செய்வாயே. 87

துணையாயெனக்கு முன்னின்று துன்பமுனைக ளணுகாமல் அணைவாய்மலைக் காதரவா யைந்துபுதல்வர் திகையாமல் பிணைவாய்த் தனது பிள்ளைகள் முன் பேசாதோடி வந்தருகே இணைவாய்வருக வம்மா நீ யிப்போ சமயமாதாவே. 88

வருவாய்கமல மாதாவே வார்க்கவழியே தீர்க்கமுடன், குருவாய் நிதமும் முன்னின்று குற்றங்குறைகள் வாராமல், திருவாய்மொழிந்து பயமறவே சிந்தைமகிழ்ந்து செயல் பெருக, வருவாய்பெரிய வைகுந்தத் தாயே சரணஞ் சரணுமக்கே.

## கதை

மாதுகவுரி மகமாயிராசகன்னி
சாதுவேமாகாளி தாயேபராபரியே
துர்க்கைபிடாரியம்மா துரியசடாட்சரியே
பஞ்சாட்ரத்தினிட சதியேபதியுரையே
அஞ்சலென்றுகாக்க அடைக்கலமேயுன்மனதில்
மாதாவேதாயே வழிகாட்டவந்தருளும்
ஆதரவுமில்லையம்மா அடியேற்குவந்ததுவும்
என்றுதருமர்சொல்ல இறங்கிவந்துமாகாளி
சொல்லுவாளப்போது துரைராசமன்னவர்க்கு
நல்லதருமரேயுனக்கு நல்லவழியீதெனவே
வழிகாட்டிமாகாளி மறைந்தனள்காணம்மானை
தெளிவாகபஞ்சவர்கள் சென்றுவழிதான்கூடி
தாராளமாய்நடந்து சத்திபத்திரகாளிதன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேராயிருதயத்தில் நெஞ்சுநடுவேயிருத்தி
எண்பதிங்காதவழி எய்யாமலேநடந்தார்
நண்புற்றகானகத்தில் நடக்கும்வழிதனிலே
அப்பாலொருமலைதான் அளவற்றயுன்னதமாய்
ஒப்பாருமில்லாத வுயர்ந்தமலைமீதேறி
அந்தமலைபெருமை ஐவருந்தான்பார்ப்பளவில்
கத்தமுடனரக்கன் கயிலாசமென்றொருவன்
ஆகாயம்பூமி அளவாகவாய்பிளந்து
வாசகந்தன்னுடனே வயிறுகளையெக்கிநின்று
தீயறிந்தகண்ணுஞ் சிறக்கவழிநாபியுமாய்
போயிருந்தவீடுபோல் பேருடலும்நீள்வயிறும்
காட்டானைசிங்கம் கரடிபுலிபன்றியுடன்
நாட்டமுடன்காதவழி நடந்துதிரிவதும்
நாசிவழிச்சென்று நடமாடப்பட்டதெல்லாம்
யோசனைகாதவழி யுழன்றிருண்டுதான்திரியும்
சிலேட்டத்திலீயதுபோல் சிக்கியலைந்திடவும்
வாட்டம்பெருங்காற்றால் வல்லரக்கன்தன்மூச்சு
எல்லையில்லாதூரம் எந்தமட்டோநாமறியோம்
தொல்லையுடல்பங்குந் தூரம்வெகுதூரம்
கடக்கமுடியாது கடற்கரைக்குமெட்டாது
நடக்கவழிகாணும் ராட்சதனைத்தப்பியப்பால்
ஏகவழிசற்றும் ஏதொன்றுங்காணோமே
வேகமுடன்சென்றவன்மேல் வீரியங்கள்செய்தாலும்
எதிர்த்துப்பொருதுவான் ஈடல்லநாம்தாமும்
மதித்தவனுந்தின்னவென்றால் வாய்தனக்குப்பத்தோமோ
கைகாலுலாவிவருங் காதமிருகாதவழி
ஐவருந்தான்பார்த்து அவன்வயிற்றுக்கிப்போது
என்றுமயங்கி இறங்கியேபார்ப்பளவில்
நின்றுமலைத்தவகை நெடுமூச்சுதானெறிந்து
காவலர்கள்போனவழி காணாமலேயலைந்து
தாவியெங்குஞ்சுற்றித் தனித்துவழிதிகைத்து
உற்றதொருராட்சதனை உசுப்பினார்கிட்டவந்து
சத்தமிட்டுக்குதித்து தட்டியெழுப்புகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்னமாய்ச்சும்மா மெய்யசைந்துகண்ணுறங்கி
ஏதுசெய்வோமென்று எண்ணிமனம்புண்ணாகி
தீதுவினைதானுந் திருவுளமேயுண்டெனவே
சுற்றும்போயாராய்ந்து சூழவழிகாணாமல்
மற்றினிப்போயாராய்ந்து வழியொன்றுமில்லாமல்
நின்றுதிகைத்தளவில் நெடியதொருவல்லரக்கன்
குன்றுமலைபோலவனும் கொட்டாவிகொண்டெழுந்து
ஐவரையுங்கொண்டார்கள் ஆவிபிடிப்பளவில்
தெய்வமேயென்று திகைத்தெழுந்தான்வீமனுந்தான்
மண்ணுவிண்ணுந்தானதிர மலைகள்கிடுகிடென்ன
நண்ணும்புயவீமன் நாடிச்சினத்தெழுந்து
ஆர்ப்பரித்துக்குத்த அரக்கனுமேதான்சினந்து
ஏற்பரித்தவீமனுடன் எதிர்த்துப்பொருதலுற்றான்
மலையும்மலையும் மற்கட்டிசேர்ந்தாப்போல்
அலைகடலுங்காற்றும் அலறுவெகுசத்தமிட்டு
காடுசெடிநெருங்கிக் கற்கடலுந்தூளாகி
ஈடுசெய்யமாட்டாமல் எடுபட்டவல்லரக்கன்
மதியஒருசமயம் வல்லரக்கன்றான்பொருந்தி
அதிகபலமெல்லாம் ஆங்காரமுள்ளடக்கி
தாக்கினான்வீமன் தலைகளுருண்டோட
நோக்கிவந்தராட்சதனும் நொருங்கியேபட்டுருண்டான்
பட்டஅரக்கன் பாயில்பிழைத்தெழுந்தான்
துஷ்டனவன்தேடிநம்மை துரத்திப்பிடிக்கவென்று
தாராருந்தருமர் தம்பியரைவாருமென்று
சீராகத்தானடந்தார் தெய்வமேயென்றுசொல்லி
வருத்தமுடன்நோக்கி வளர்ந்தவனங்காடுகளும்
திருத்தமுடன்கடந்து சென்றார்வழிகூடி
நடந்தார்வெகுதூரம் நாற்பதிங்காதவழி
கடந்தார்வெகுதூரம் கானகமுந்தான்கடந்து
வரும்வழியில்வீமன் வார்த்தையொன்றுதானினைந்து
தருமரடிபணிந்து தான்தொழுதுயேதுசொல்வான்
நடக்கும்வழிதுலைய நாதனேயெங்களுக்கு
அடக்கமுள்ளமுற்கதையை அருளுமென்றான்வீமனுந்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளுமுரையும் போதமுடன்முற்கதைதான்
சாற்றுகிறோம்தம்பியரே தான்கேளுமென்றுரைத்தார்
போற்றமுலமும் புவனம்பதினாலும்
வேதாவும்மாலும் மிக்கதொருருத்திரனும்
மீதானமூவர் விதிக்கவிதிபாராமல்
நாண்படைத்தேனென்று நான்முகன்தான்கூற
மாண்பிடித்தருத்திரனும் வகைபலவுந்தானாகி
நேயமுடன்மூவரிலே நீபெரியோன்நான்பெரியோன்
என்றுபகையாக எதிர்த்தவழைக்குரைத்து
மனதிற்சபதமிட்டு வாய்த்தசத்தந்தானாகி
நன்றிலாமூவருமே நடக்குமதிகாரம்
படைப்பித்துதேவன் படியளந்தமாயோனும்
முடைப்பிக்கருத்திரனும் மூவருமேயல்லாது
ஒன்றையொன்றுமிஞ்சாது உண்டைப்பொருளாகுமிது
மன்றில்விளங்கி வழக்குரைக்கமூவர்களும்
பார்க்கசரியெனவே பரமரகசியத்தை
ஏர்க்கவேமுன்னாள் எழுதிவைத்தோர்மேருவினில்
ஆர்க்கும்பெரியோ னவனல்லால்வேறுமுண்டோ
தீர்க்கமுடன்மூவர் செய்தொழில்மிச்சமில்லை
அவனைமறந்துரைத்த அபசாரந்தீரவென்று
சிவனுமவனுந் திருமாலுந்தான்கூடி
ஒருவர்க்கொருவர் உயர்ச்சிசொல்வதல்லவென்று
மருவித்தழுவி மகிழ்ந்தார்கள்மூவர்களும்
அண்டபுவன மண்டலமெல்லாந்தான்படைத்து
அண்டங்கடந்துநின்றோன் ஆடுந்திருக்கூத்தை
கண்டறியமாட்டார் கருதியுரைத்ததெல்லாம்
கொண்டவினைப்பயனால் கூறினோமிவ்வார்த்தை
நஞ்சுண்டாயென்று நல்லதொருபார்வதியும்
எவனோவவன்காண் எல்லையில்லாப்பேரொளியை
மறந்துரைத்தகுற்றம் மாறாமலேயிருக்க
இந்தனமிருந்து இருதயத்திற்றான்துதித்தார்
அல்லவாடாதம்பியரே இன்னமொருகதைதான்
மாயருமிந்திரரும் வானோரும்வேதியரும்
நாரதமுனிரிஷிகள் நால்வகையிலுள்ளோரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாளில்யமதேவர் அமுதங்கடையவென்று
பொன்னாருமேரும் பொறுப்பதேதான்தூணாக
நாகமதுகயிறாய் நாட்டியதோர்தூண்தனக்கு
வாசனையுமாமதியு மத்தாகத்தான்சேர்த்து
வானவர்களோர்புறமும் வாலியொருபுறமும்
ஆணவர்கள்பாற்கடலில் அமுதங்கடையுமன்னாள்
மலைதானுங்கழன்றிடவே வாசுகியுமப்போது
நிலைதாங்கமாட்டாமல் நீள்விஷங்கள்தான்கழன்று
மீறியதோராலவிஷம் வெகுண்டுருண்டுதான்கழன்று
சீறியவுலகெங்குஞ் சென்றுபுரந்தப்பாமல்
அண்டமட்டுக்கும் அகண்டமுதற்றான்பறந்து
விண்டலமூடுருவி விரஞ்சனிடலோகமெல்லாம்
பொங்கிவிஷம்பெருகி புகையெழுந்துகோபமுடன்
தாங்கியேமுவுலகில் தானுமுண்டுமீள்வதுபோல்
வாரவிஷந்தன்னை வானவருங்கண்டேகி
போரவழியெங்கும் போகவழிகாணாமல்
கண்டுவிஷந்தன்னைக் கலங்கியேவானவர்கள்
அண்டமுகமெல்லாம் ஆனதலைஎன்றுபுக்கி
தெண்டனிட்டுக்கண்டு சிவனையடிபணிந்து
தொண்டருக்குவந்த தோஷங்கள்தீர்த்தருளும்
பரனேபராபரனே பசுபதிவெள்ளெருக்கும்
அரவணியுஞ்சடையான் அண்ணலேநீர்கேளும்
கடைந்தமிர்தந்தந்தன்னில் காலவிஷந்தான்பிறந்து
அடரத்திரிலோகமெல்லாம் அந்தகாலமாமெனவே
தொடர்ந்துவருநெஞ்சினைத் துடைக்கவகைகாணாமல்
நடந்தோடிவந்தோம் காலவிஷந்தான்பிறந்து
எண்டிசையுந்தான்படைத்த இறையோனேகாவலென்று
தொண்டிரைசூழ்வையமெல்லாம் சிவனேயினிக்காரும்
என்றவர்கள்கூறி இறையோர்க்கபயமென்று
நின்றவர்கள்தன்னை நீள்சடையோனஞ்சலென்று
சென்றுபறந்துவந்து தீதானநஞ்சுதன்னை
ஒன்றுபோல்தான்திரட்டி உட்கொண்டாரீச்சுரனார்
நஞ்சுண்டாரென்று நல்லதொருபார்வதியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வுயிருங்காக்கவென்று ஈசுரனார்நஞ்சதின்றால்
அவ்வுயிரெல்லாம்பிழைக்கு மவர்மடிந்துபோவாரென்று
போலிவிஷம்பாயாமல் குறுக்கேமிடரடியில்
தாலிதழைக்கவென்று தடுத்தாள்கரத்தாலே
கண்டத்தில்நின்று கருத்தகரையிடமாய்
நின்றதுகாணந்த நெற்றிமேலுச்சியிலே
அன்றுபிழைத்தார்கள் அமரர்முனிவரெல்லாம்
இரவிமுனிரிஷி தேவரோடுமூவரையும்
இறவாமலீசுரனா ரட்சித்தாரம்மானை
ஈதல்லால்வேறுகதை இன்னமொன்றுசொல்லுகிறேன்
ஆதலால்இவ்வுலகில் அரசெனுமுப்புரத்தார்
இவ்வுலகிலுள்ளதொரு எண்பத்துநான்குயிரும்
அவ்வுலகுமிவ்வுலகும் அடங்கலுங்கொள்ளைகொண்டு
இடுக்கங்கள்பண்ணி இருந்தாரேஅசுரரும்
துடுக்குமுப்பத்திரவமும் துன்பத்திற்காற்றாமல்
தேவர்களுமிந்திரருந் திசைநான்முகத்தோனும்
மூவர்களுமொன்றாய் மூர்த்தமெனுமீசுரரை
இன்றுமுதல்முப்புரத்தார் இடுக்கத்துக்காற்றாமல்
வந்தோமேபராபரனே வஸ்துவேகாருமென்று
அந்தமொழிகேட்டு அரனாருமேதுசொல்வார்
செங்கணசுரரெல்லாம் சிவபத்தராயிருக்கும்
அங்கவரைதம்மால் அழிக்கவேபோகாது
சிறந்தவர்செய்யும் சிவபூசைதன்னையிப்போ
மறந்துவிடப்பண்ணிவைத்தால் வாகாயழித்திடலாம்
என்றுசிவன்சொல்ல எம்பெருமாள்தன்பதியில்
கண்ணாமுகுந்தா கரியமுகில்மேனியனே
அண்ணாதுளபமணி ஐயனேஅச்சுதனே
முப்புரத்தோரானாலும் மூவுலகங்கொள்ளைகொண்டு
இப்போவழிவந்ததுகாண் என்செய்வோமாயவரே
வண்ணரோஈசுரர்பால் வாகாகப்போயுரைத்தோம்
திண்ணமுடன்முப்புரத்தார் சிவபத்தரென்றுசொல்லி
அவர்கள்செய்யும்பூசைதன்னை யகற்றினாலிப்போது
சிவனாருமுப்புரத்தை சிதைக்கிறோமென்றுசொன்னார்
ஆகையினாலம்மை அடியேங்கள்தேடிவந்தோம்
மாய்கைபலசெய்து வல்லோர்சிவாலயத்தை
மறந்திருக்கப்பண்ணுமையா மாபாவிமுப்புரத்தோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்துநெருப்பெரிய எம்பெருமாள்பண்ணுமிப்போ
வானவருந்தேவர்களும் மயங்கிநின்றுவார்த்தைசொல்ல
ஆயன்பெருமாள் மாயவருந்தானிறங்கி
விண்ணவரேயுங்கள்பயம் வேண்டாமெனதீர்க்க
தண்டமுடன்முப்புறத்தோர் தங்களுடனேவந்து
என்னமாய்நானும் இருந்தோம்வயல்தனிலே
மண்ணையடிப்பதற்கு மாயமாய்த்தானிருந்து
தழுவியவாதனையுஞ் சற்பனையோசெய்வதற்கு
வழுவறவேதான்பார்க்க வருகிறோம்யாங்களென்றார்
அகமகிழ்ந்துவானவர்க ளமராபதிசேர்ந்தார்
ஜெகநாதர்வந்து திரிபுரத்தைதீயெரிக்க
வந்தார்காண்முப்புரத்தில் மாயேனுமாயமதாய்
விந்தையாய்பூசை விழுந்தாட்டவேணுமென்று
புத்தாய்சமைத்து புத்தராய்வடிவுகொண்டு
வித்தகனார்போயிருந்தார் வீரானமுப்புரத்தில்
போயிருந்தபுத்தர்தனைப் பொல்லாதபுரத்தில்
தீவினைகளேதென்று சென்றார்காண்புத்தனிடம்
சிறந்துசிவபூசையிங்கே செய்யுந்தவந்தனிலே
மறந்துமொருபுத்தன் வருவானோயென்றுசொல்லி
புத்தருடனெதிர்த்து புரத்திலுள்ளோரெல்லோரும்
தத்துவங்கள்பேசியிவர் தர்க்கித்தாரம்மானை
நிற்கநிலைநிறுத்தி நிலைநிற்கவாதுசெய்து
தற்கித்துபுத்தரவர் தனுசாஸ்திரப்படியே
அடையும்படிக்கு அறிவுரைத்தார்புத்தரென்று
வாதாடிமுப்புரத்தார் மலைத்திருந்துதான்தேடி
சூதனும்புத்தனுட சூட்சமறிவோமெனவே
புத்தரேநீரிருக்கும் பூமரத்தைநீங்களுமே
அந்தரத்துநீறால் அதுசாம்பலாகவேதான்
பார்க்கிறோம்நீரும் பாழ்மரம்போலாகுமிப்போ
அக்கினிநீறானால் அரனாரும்நீரெனவே
வேதமெல்லாமும்முடைய வேதமேதான்படிக்க
பாதம்பணிந்து பலகாலம்பூசைபண்ணி
ஈஸ்வரனாரென்று எல்லோருந்தான்பணிந்து
வாசமுடன்முப்புரத்தார் வழுத்துரைத்தசெய்தியினால்
புத்தர்சினந்துபூமரத்தைப்பாருமென்றார்
பத்தறவேமுப்புறத்தைப் பாருமென்றாரம்மானை
பூமரம்வெந்து பொடிசாம்பல்நீறாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமரத்தைப்புத்தனுந்தான் பூமரம்போலாக்கிவைத்தார்
கண்டுதான்முப்புரத்தார் காக்ஷிபிதுவென்றுசொல்லி
தெண்டனிட்டுப்போற்றிச் சிறந்திருந்தாரெல்லாரும்
மாயனிதுபொய்கை மனமறியாமாபுரத்தார்
ஒறுத்தார்தவங்கள் உபதேசம்தான்மறந்தார்
வருத்தமின்றியீசரிட வாசனையுந்தான்மறந்தார்
பெற்றவரமிழந்தார் பெரியவரந்தான்மறந்தார்
எதிர்த்துவந்தபுத்தனையும் ஈசனென்றுதான்பணிந்தார்
பூமரத்தில்முப்புரத்தார் புத்தனையேதெய்வமென்று
நேசமற்றுவீற்றிருந்தார் நெடுமாலுமப்போது
ஈசர்தனைநினைந்து இப்பொழுதுமுப்புரந்தான்
பூசைதவங்குலைந்தார் போர்பொருதமாட்டார்கள்
வேளையிதுவாகுமென்று மேகவண்ணர்தானினைந்தார்
காளைதனிலேறுங் கடவுளருந்தாமறிந்து
முக்கியமாய்மனதில் முயல்தனைத்தான்வளைத்து
செந்தில்மகாமேருவையும் சிலையாகத்தான்வளைத்து
வாசுகியைநாணாக மால்தானும்அம்பாக
நேசமுள்ளவேதம் நெடுப்பரிதேராக
சதுர்முகன்சாரதியாய்ச் சங்கனார்தானடைந்தார்
முதுமொழிதானெடுத்து மீறிச்சிலையேற்றி
திருமளவில்மாயனிட மாய்கைதனையறிந்து
வருமழிவுமுப்புரத்தில் சென்றுநின்றுதான்சிவனும்
காயாம்பூமேனி கண்ணரிடசூட்சமதை
வாயாரச்சொல்லி வழுத்தமுடியாதெனவே
சித்தத்திற்கொண்டு சினந்துசிலைதானேந்தி
சத்தவொலிநாணைசந்தார் தராதலங்கள்தானடுங்க
கர்த்தனார்முப்புரத்தை கண்டுநகைசெய்தளவில்
பற்றவேமுப்புரமும் பஸ்பமாய்தானெரிந்து
மாபாவிமுப்புரத்தார் மாண்டர்களெல்லோரும்
பூபாலனான புண்ணியஞ்சேர்தருமருந்தான்
இக்கதையைநன்றாய் இளையோர்க்குந்தானுரைக்க
அக்கதையைச்சொல்லி அடவுகளுமாமலையும்
கடந்தார்வொருநூறு காதவழிதூரம்
நடந்ததைக்கேட்டு நல்லதென்றுபோகையிலே
வெற்றியுள்ளவீமன் விரையவுந்தானிப்போது
மன்னவரேதம்பியரே மறுத்துமொருகதைதான்
இன்னமொன்றுசொல்லுகிறே னிப்போதுநீர்கேளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டகனென்றேயொருவர் அவனிதனிலேதோன்றி
நாடுதனிற்றன்பேர் நலமாய்விளங்கிடவே
இரணியதேவனவன் மூவர்கள்தம்மிலுமே
வாழ்வன்றிவாழ்ந்திருக்கும் வல்லஇரணியனை
தேவர்களுமிந்திரனு திசைநான்முகத்தோனும்
ஏவல்செய்துதானும் இரணியனையேற்றிசெய்து
ஆற்றாமலேயவர்க ளச்த்தனைபோற்றிசெய்து
கூறானமாபாவி கொடுமையெல்லாந்தானுரைத்து
சேவகனும்நம்முடைய கிருபையினாலானாலும்
சாபமதுதீர்க்கத் தரணிதனிற்பிறந்து
மாபாவிதன்கொடுமை மண்ணுவிண்ணுந்தாமறிய
தீர்க்கிறோம்நீங்கள் சிந்தைதனிற்றான்மகிழ
கார்க்கிறோமென்றிசொல்ல கண்ணருந்தானரைத்தார்
வந்துபிறந்தார்காண் மகிழ்ந்தாணிரண்யனும்
இந்தப்பிரலாதன் றனையெடுத்துமுத்தமிட்டு
தந்தையுந்தாயுந் தானேபிரியமதாய்
காலுக்குதண்டையிட்டு கனத்தசதங்கையிட்டு
அஞ்சுவயதானளவி லருமையிட்டுத்தான்போற்றி
வஞ்சனுடன்மைந்தன் மதலைமொழிகேட்டு
வாகாயவைகளும் வந்ததென்றுதந்தையுந்தான்
பாங்காகவேபடிக்கப் பாலகனையும்தானழைத்து
முந்திமறைவேதியரே முகூர்த்தமிடுமென்றுசொன்னான்
மைந்தனுக்குவில்வித்தை வழுத்துமென்றுதான்மொழிந்தான்
அந்தமொழிகேட்டு அந்தணனுஞ்சம்மதித்து
இந்தவசன மிதுவேபிரியமென்று
தம்பிரகலாதன் தன்னையேயோதுவிக்க
தும்பிமதவாரணரே துணைசெய்யவேணுமென்று
ஏடுபித்து இரணியநமாவென்று
தேடுதமிழ்வேதியரும் சொப்பினார்தம்பியர்க்கு
பேசாமலேயிருந்து பிரலாததேவனுந்தான்
ஆசானைப்பார்த்து ஐயரேவேதியரே
உலகில்வளப்பம் உரையாமலிப்போது
தலைகீழாய்ச்சொன்னால் சம்மதியோவுந்தனுக்கு
வளப்பமதுஏதெனவே மறையோனுந்தான்கேட்க
அளப்பொன்றுமில்லை அரிநமோவென்றுசொன்னால்
வேதமொழிந்தாலும் விண்ணாடழிந்தாலும்
ஆதவனும்புவியும் அண்டமழிந்தாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருக்காலமும்மழியார் உண்மைப்பொருளாகுமிது
திருமாலுநான்முகனுஞ் செப்புமொழிவேதாந்தம்
ஓம்நமோநாராயணா வென்னுமுபதேசம்
ஞானமிதுஉலகில் நற்றுணையாமெவ்வுயிர்க்கும்
மானாபிமானமென்று வழங்குதுகாண்
என்றுசிறியோ னெடுத்துரைக்கவேதியரும்
சென்றுமறைவேதியரும் செப்புகின்றவார்த்தைகளை
மன்னனிரணியன்முன் வந்திருந்துவேதியரும்
தென்னவனேயுன்மகன் செப்புகின்றவார்த்தைதன்னை
கேட்டிலையோவென்று கிருபையுடன்சொல்லலுற்றான்
தாட்டீகமாயென்மொழியைத் தம்பியரேநீயுமிப்போ
இரணியநமாவென்று இன்பமுடன்சொல்லுமென்றால்
இரணியனைமுதுரையாய் முதுமொழியேமாற்றுவதோ
அரிநமோவென்றசத்தங் அண்டமெல்லாங்கேட்டிருக்கும்
சரியாவிரணியனைத் தானெதிராய்சொல்லுவாரோ
என்றானுன்மைந்தன் இரணியனேயென்றுரைத்தார்
நன்றாச்செனவே நாழிகையில்மைந்தனைத்தான்
கூட்டிவரச்சொல்லி குழந்தைதனைப்பார்த்து
பூட்டிவைத்தசொல்லதனைப் பொருந்தாமலேபார்த்து
ஏறுமாறுரைத்தாய் ஏன்பிள்ளாய்தம்பியரே
கூறுமிரண்யநமோ வென்றுகூறுமென்ன
அரிநமோவென்று அருளினான்பாலகனும்
எரியெழவேகோபம் இரணியனும்தான்சினந்து
சொன்னபடிசொல்லேன்று சுடரைமிகக்கொளுத்த
என்னவதைச்செய்தாலு மெடுத்துரையேனந்தமொழி
முன்னேசொன்னமொழி யல்லாமல்வேறுமொழி
மன்னவனேயெட்டெழுத்தை மறப்பதுஞாயமதோ
ஆகாதசொல்லதனை ஆமென்றுசொல்வாரோ
சாகாவரமுனக்குத் தந்ததினாலிந்தமதம்
வந்ததுகாணென்று மைந்தனிதையுரைக்க
சென்னியசைத்து சினமாயிரணியனும்
சொல்லடாவென்று சுதனைப்பிடித்தடிக்க
நில்லடாசொல்லுகிறேன் நிரந்தரமாகயெங்கும்
இருக்கிறார்கண்டாயோ எள்ளுக்குளெண்ணையைப்போல்
உருக்கமுடன்காட்டென்று உரைத்தான்மகன்தன்னை
திரும்பிமகனுந் திருமால்தனை நினைத்து
துரும்பிலுமேயிருப்பார் தூணிலுந்தானிருப்பார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுபிரகலாதன் இன்பமாய்த்தானுரைக்க
மன்றுபுகழ்ரத்ன மணிவைரத்தூண்களிலே
இருப்பானோவென்று இரணியனும்கோபமதாய்
நெருப்பாயெழுந்து நிலவாமோவென்றுரைக்க
அப்போதுபாலகன்தான் அச்சுதனைதானினைத்து
இப்போதுயித்தூணி லிருக்கிறானென்றுரைத்தான்
எண்ணமறயிங்கே என்சேதிதானறிந்தும்
வண்ணமணித்தூணில் வந்திருப்பானென்றுசொன்னாய்
எங்கேயடாவென்று எழுந்தறைந்தான்தூணதனை
நங்கைபல்லவன்தூணில் நரசிங்கமாயெழுந்தார்
கண்டவுடன்மைந்தன் கடவுளிவர்தாமெனவே
தெண்டனிடவேணுமென்று செப்பினான்தந்தையிடம்
அந்தமொழிகேட்டார் அந்தவிரணியனும்
வந்தநரசிங்கமுடன் வாகாய்பொருதலுற்றான்
வாய்த்ததுவேளையிதுவென மாயன்மிகநினைத்து
சாய்த்தவனைப்பற்றித் தன்மடியிலேயிருத்தி
வாசற்படிதனிலே வந்திருந்துகூர்நகத்தால்
பாசக்குடல்மார்பும் பகந்திரண்டுகூறாக்கி
குடல்பிடுங்கிமாலையிட்டு குடித்துதிரம்வீழாமல்
அடல்கதிரோன்பாதி அஸ்தமிக்கும்வேளையிலே
கொன்றானிரணியனைக் கோபாலர்தன்கரத்தால்
போனானிரணியனும் புழுநரகிலம்மானை
மாயோனைவந்து வானவர்கள்போற்றிசெய்து
நாயேங்களுக்காக நரசிங்கமாயிருந்து
இடுக்கந்தவிர்க்கவந்த எம்பெருமானைப்போற்றிசெய்து
நடுக்கந்தவிர்க்கவந்த நாரணரேதஞ்சமென்று
போனார்கள்வானோர்கள் பொன்னரந்தானோக
ஆனாலும்பஞ்சவர்கள் அநேகநெடுந்தூரம்
பாதைதுலையவென்று பழங்கதைகள்தான்பேசி
தாதுபுகழ்நகுலன் சகாதேவன்வீமனுமாய்
பூண்டுகொண்டுசெல்லும் புகழ்பெரியஅண்ணாவே
மீண்டுமொருகதைதான் விள்ளுகிறேன்கேளுமென்றார்
கூறுமொருசிவனார் கோயில்திருவிளக்கு
ஆறாஞ்சுடரொளிபோ லாறுகிறவேளையிலே
நீண்டவிளக்கதனில் நெய்யுருகவேநினைத்து
மூண்டோரெலிவிளக்கை முகத்தினாற்நூண்டவே
அவியாமலோர்விளக்கு அழகாகநின்றெரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமசிவனும்பார்வதியும் தான்மகிழ்ந்து
வரமருளவேணும் வாவென்றெலித்னையும்
அண்ணமார்தாமு மரசாட்சியாளுமென்றார்
மண்ணுலகையாளுமென்று வரங்கொடுத்தாரம்மானை
பூவுலகிலேபிறந்து புரந்தரன்லோகமெல்லாம்
தேவரடிபணியத் தேசமெல்லாமோர்குடைகீழ்
ஆளுகிறான்லோகமெல்லாம் அயிராவதத்தனைப்போல்
வாழுகிறார்மாபெலிதான் வையகமெல்லாந்தழைக்க
ஆயிரலிங்கமடைவுடனே பூசைபண்ணி
கோயில்குளமும் குடிசையுந்தான்தழைக்க
தானதவமும் தன்பரிபாலனமாய்
வானவர்க்குமெட்டாத மகாபூசைகுருபூசை
ஞானசிவயோகியென நற்குணம்விற்பனமும்
ஈவிரக்கம் இரப்போர்கலிதீர்த்து
இரப்போர்க்கொருநாளு மில்லையென்றசொல்லாமல்
பசியாலுண்ணப் பாக்கியமுந்தானருளி
ரிஷிகள்தபோதனர்கள் இன்பமுடன்தானிருக்க
பாராளும்நாளில் பச்சைமால்சோதனைக்கு
சீரார்புவியில் திருமாலறியவென்று
வந்தார்புவியில் மாபெலிதன்சேதிகண்டு
சந்தோஷமாகத் தவத்தின்பெருமைகண்டு
ஒருவிளக்குத்தான்தூண்டி உலகமெல்லாந்தானாண்டு
திருவிளக்குலோகமெல்லாஞ் சிறப்பாயிருக்குதென்று
இவனுடையகர்மம் ஈரேழுலோகமெல்லாம்
இவனுடையரூப மெய்த்தீபச்சுடரொளியாம்
எங்கும்விளக்கொளியா யிருக்குதுகாண்தானதவம்
பொங்குதுகாண்பூலோகம் பொய்யாமல்யாவருக்கும்
இவன்செய்யுந்தானதவம் எள்ளளவுங்குற்றமில்லை
அவன்செய்தவமழிக்கவென்றால் ஆகாதெவராலும்
வள்ளல்கொடுத்தவரம் வளருங்காண்மாபெலிக்கு
உள்ளக்கருத்தில் உபாயமொன்றுசெய்யுமென்று
கள்ளத்திருடன் காயாம்புமேகவண்ணன்
மெள்ளமனதில் வேறேநினைவுகொண்டு
மாயோனுந்தான்கேட்க மாபெலியுமப்போது
நேயோனுந்தானதவம் மானிலத்தில்செய்வதற்கு
உகந்துநதிமூழ்கி ஓடுகிறநதிக்கரையில்
புகழ்ந்தசிவபூசை பூரணமாய்த்தான்முடித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதானம்பூதானம் வஸ்திரதானமுதல்
கோதானமும்நதியில் கொடுத்தருளவேபலமாய்
கன்னிகாதானங்கள் காவலுந்தான்கொடுத்து
உன்னிமனதில் ஒருமித்துகையாலும்
கொடுக்கிறோமென்று கோபாலர்தான் கேட்டு
அடுக்கவேசென்று அந்தணர்போல்தானாக
நரைதிரைமுப்பும் நடுக்கமுடன்வாதமுமாய்
புகையிருமலாகி புதைந்திருண்டகண்களுமாய்
நாசியொழுகியுடல் நாடித்தளத்திடவும்
பாசிபற்றியபல்லும் பருவாய்ஒருக்கமுமாய்
போற்றம்புடவையது கொள்ளலாம்காற்றா
பீற்றப்புடவையது பிராமணனாய்த்தானிருந்து
அன்னருந்தருமாபெலியே அட்சத்தையும்தாவெனவே
மன்னவரெயுன்னிடத்தில் வந்தேனெனவேதான்
அட்சதைையுந்தான்கொடுத்து அந்தணனுந்தேகியென்றான்
பட்சமுடன்தேகியென்ற பார்ப்பனைவாருமென்று
ஏதுக்குவந்தீரென்று இன்பமுடன்மாபெலியும்
சாதுவுடன்கேட்கத் தள்ளாதுமாமறையோன்
இடறிவிழுவார்போல் இளைப்புமிளைப்புடனே
மறுதேசமாயிருந்து வந்தேனானும்மிடத்தில்
உன்னிடத்தில்வந்தேன் உத்தமனேயெந்தனுக்கு
நன்னிலத்தில் நானிருக்க நாட்டமுடனிப்போது
இருக்கயிடந்தாரும் உன்னுடையஜாகாவில்
சுருக்காகமூன்றடிமண் சொல்லித்தத்தஞ்செய்யும்
போதுமெனக்குப் புண்ணியமேசெய்யுமென்றார்
வாருமையாநீர்தானும் மற்றதொன்றுங்கேளாமல்
இவ்வளவுகேட்டீர் இப்போதுநான்தாரேன்
குலவுபுயமாபெலிதான் கொடுக்கஒருமனதாய்
கெண்டிதனையெடுத்துக் கெங்காசலமுவந்து
தெண்டிரையில்வேதியற்கு தத்தமதுசெய்கையிலே
தக்கதொருசுக்கிரன்றான் தன்னுடையசீஷனென்று
மிக்கதொருகெண்டித் துவாரத்தில்மின்வண்டாக
சிக்கெனவேதானடைத்தான் தெரிந்துமறைவேதியனும்
தெர்ப்பையாற்குத்திடவே திட்டியென்றுகேட்டுவிட
நிற்பளவில்சுக்கிரனை நிந்தித்தாரெல்லோரும்
ஈவோர்தனைவிலக்கி இப்படியாய்க்கொற்றவரும்
தீவினையாய்தான்முடியுஞ் செய்வோரைத்தான்விலக்கில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுசபைசொல்ல இருந்தான்தலைகவிழ்ந்து
ஒன்றுமுறையாமல் ஊமையைப்போல்தானிருந்தான்
தாமரையினால்தண்ணீர் தாராளமாய்விழுந்து
பூசையென்னமாபெலியும் புகந்துதத்தஞ்செய்தானே
தோற்றமதுவாகித் திருமாலும்பூவுலகில்
வைத்ததொருபாதமண்ணில் வானிலொருபாதம்
மற்றுமொருபாதத்திற்கு வகையேதெனக்கேட்டார்
கர்த்தன்திருமால் கருணைக்கடவுளர்தாம்
ஈரடிமண்ணுதான் இவ்வுலகுமவ்வுலகு
ஓரடிமண்ணெந்தனுக்கு உன்மேல்நிலுவையென்று
மாபெலியவன்சிறையில் வைத்தார்காண்கானகத்தில்
தேவலோகஞ்சிறந்து சிறையிருந்தான்மாபெலிதான்
வானவருந்தேவர்களும் மாயோனைத்தான்வணங்கி
தானவரும்வேதியரும் சதுர்வேதநான்முகனும்
மாயவனைவாழ்த்தி மகிழ்ந்திருந்தாரம்மானை
தூயதொருபஞ்சவருந் துலைதூரமேநடந்து
ஆயனிடச்சந்நிதிக்கு ஆடையுடனாவலுமாய்
வேகமுடன்நடந்து விந்தமதுகாணவென்று
தாகமுடன்வீமனுந்தான் மாதவனைத்தான்தொழுது
வைகுந்தஞ்சேர வழிதுலையவேண்டுமென்று
மெய்கொண்டமூர்த்தியின்னம் விளம்புமொருகதைதான்
சொல்லுகிறேன்முன்னாள் சுருதிமுதல்முக்கதைதான்
புல்லும்புவியும் புனல்முகடுஆகாயம்
கல்லுங்கரடுங் கடலிற்றிசைகளெட்டும்
அல்லும்பகலும் அட்டதிக்குமெண்டிசையும்
இல்லாதகாலம் இறையோனொருத்தனுமாய்
அல்லறவேயெங்கும் அண்டமெல்லாந்தானாகி
வெளியாகியெங்கும் விளங்கிடுமொளியாகி
அழியாதவஸ்தொருவன் ஆதியாய்நின்றமுதல்
ஏகவெளியாகி எல்லாநிரந்தரமாய்
ஆகபேதமின்றி அசைவுலகுந்தானுமன்றி
தானாகிநின்ற தருமதயாபரனாய்
ஊனாயுயிராய் உடலுயிரும்லோகமுமாய்
வானாய்நிலனாய் மலைகள்சராசரமாய்
வானாய்மதியாய் பலவகையாய்த்தோற்றமுமாய்
அண்டமடுக்காய் அண்டபகிரண்டமுமாய்
பிண்டமுமண்டமுமாய் பிரமரண்டகோடகையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுநிலைதற்பரமாய் தராதலங்களுர்வலமாய்
எட்டுத்திசையும் எழிலானபகவானும்
ஆகட்டுமென்று அருள்நினைவுகொண்டு
மாசிட்டரூபமென்றார் வந்துமுன்னேநிற்கலுற்றார்
எல்லாமுண்டாக்குமென்று இறையோன்பறையிடத்தில்
சொல்லாய்முடிந்ததுகாண் தோற்றமொடுக்கமெல்லாம்
தற்பரமாய்தோன்றி சராசரங்களுள்ளதெல்லாம்
பொற்பதத்திலேயிருக்கப் புண்ணியர்தான்தோன்றி
பரந்தோன்றிநின்று பரத்தில்சிவன்தோன்றி
சத்திதனிற்பூகநல்ல தத்துவத்தில்நாதமுமாய்
முத்திளொளிபோல மூலவிந்துதான்தோன்றி
விந்துதனில் நால்வேதம்வியனாறுசாஸ்திரமும்
தத்துவங்கள்தொண்ணூற் றாருடனேதானழைத்து
பத்துமறுபத்து நாலுகலைக்கியானமுமாய்
ஆதாரமுதலாய் ஐம்பத்தோரட்சரமும்
வீடுஞ்சதாதேடி வேதமுதல்மந்திரமும்
மந்திரத்தால்வந்துதவும் மகாவிந்தசதாசிவமும்
அந்தசதாசிவத்தால் அரிமயேச்சுரனும்
அந்தமயேச்சுரத்தில் ஈன்றதொருருத்திரனும்
வந்ததொருருத்திரனில் வாசமுள்ளவிஷ்ணுவும்
விஷ்ணுவிலேயிருந்து விதிப்பிக்கவேதாவும்
சாட்டமிடும்வேதாவில் தரித்ததொருஆத்துமத்தில்
ஆத்துமாவிலேயிருந்து ஆகாசந்தோன்றி
சாத்துமிவர்கள் தன்னிலேவாயுவந்தான்
வாயுவிலேதேயுவந்தான் வந்திருந்தஇப்போது
தேயுவிலேஅப்புவந்தான் சிறப்பாகத்தான்தோன்றி
சிறப்பானஅப்புவிலே சிறந்ததொருமண்தோன்றி
அப்பெரியமண்ணிலேதான் அருபவித்தாய்உண்டாகி
ஒன்பத்திநூறும் கோடிநூறாயிரமாம்
அன்றுவிதிக்கையிலே அனந்தநூறாயிரமாம்
வானும்புவியும் வகைபலவுந்தானாகி
ஊனுமுயிரும் ஊர்வனவும்பட்சிகளும்
திக்குத்திசையும் திசைசூழ்ந்தவையகமும்
நிற்குமோ அஸ்தகிரி நேரானஅஷ்டகெஜம்
ஈரேழுலகமுமாய் எண்பத்துநான்குயிராய்
பாரேழுந்தானாகப் பணாமுடிகளாயிரமாய்
யோனிபலவாகி வருவதுமெவ்வாறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடமேற்பூண்டாய் மரங்கள்விருட்சமதாய்
நால்வகையுஞ்சாதியுமாய் நால்வேதசாஸ்திரமாய்
நூல்வகையுமாகமுமாய் நோன்புவிரதமுமாய்
ஆண்பெண்ணிருவகையாய் ஆகாயமுமுதலாய்
காண்பதுகாண்காமங் கலைக்கியானமும்பெரிதாய்
ஆசையெல்லாங்கூடி அடக்கிவைத்தான்பொக்கிஷமாய்
ஓசைபஞ்சகரூபம் உறும்சுவைநாற்றமுமாய்
வாசலோரொன்பதுவாய் மலபாண்டம்வீடாக
பாசமெனுமைம்புலனும் பரும்பூதநாதகணம்
தத்துவங்கள்தொண்ணூற் றாருடையஞ்சலமும்
மற்றுஞ்சராசரங்கள் மண்டலங்கள்மூன்றுடனே
சுத்தனண்டகூடவருஞ் சுவருமடங்கலுமாம்
பித்தானாயிரட்சிக்கும் பெருஞ்சீவன்தான்முதலாய்
சந்திரனும்சூரியனும் தாரகன்நட்சத்திரமும்
இந்திரனும்வானவரும் இமையோர்முனிவர்களும்
தந்திரமாய்தான்வகுத்துச் சகலமெல்லாமுள்ளடக்கி
அந்திரத்தில்பேச்சு ஆர்பெரியோனென்றறியும்
நாமேபுவியில் நால்வகையுமேபடைத்து
தாமேநமக்குச் சரியில்லையென்றிருக்க
மாலயன்தானெல்லாம் வகுப்பித்தோமென்றுசொல்லி
ஆலமரத்தேறி அவர்துயின்றாராமாகில்
வீரவிரதமுமாய் விபரீதங்கள்தான்வளர்ந்து
கார்முகில்மேனியனார் கண்ணர்தனைப்பிப்போது
சென்றவனைநாமுஞ் சிலுக்கிவிட்டுபோய்பிடித்து
வென்றவனைநாமும் வெகுபெரியோன்வேதமென
நினைத்துமனதிலெண்ணி நெருப்பிருக்கண்டீயெரிய
மலைந்ததெல்லாம்பொய்யாய் வருத்தமெல்லாமிவனேதான்
நன்றாகயிட்சணமே நடந்தான்வைகுந்தத்தில்
அன்றிடைச்சியாலே அடியுண்டமாலிடத்தில்
சென்றானிருந்தான் சீராட்டும்வார்த்தையதாய்
கன்றால்யெறிந்த காயாம்புமேனியனே
உன்பேச்சுமென்பேச்சும் உலகறியவேண்டுமென்று
தன்பேச்சுமேலாகத் தானெண்ணிநீயிருந்தாய்
என்பேச்சுக்கீழா யிருப்பதுஞாயமோதான்
முன்பேச்சுமூவருடன் முப்பத்துமுக்கோடி
தேவர்களுமற்ற சீவபலராசிகளும்
மூவர்களுந்தாமறிய முழுதும்படைத்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்படைப்புக்குள்ளாக யிருந்துமேதான்பிழையாமல்
தம்பிதானறியச் சத்தியமாய்நான்பொறுத்தேன்
எம்பிரான்தானறிய இனிமேல்பொறுக்கேனான்
ஈலேழுலகம் இகபரமுந்தானறிய
பாரேழுநான்படைத்தேன் பச்சைமால்நீயேது
இப்பாலென்கையால் ஈரேழுலமெல்லாம்
மெய்ப்பானசத்த மேகமுடனேழ்கடலும்
அஷ்டகுலபர்வதமும் அஷ்டமாநாகமுதல்
அஷ்டகெஜமட்டும் அடங்கலுமேதானாக
மரீசிமுதல்சத்திரிஷி மைந்தருமென்னுடைய
அருகாகநின்ற அன்புடையமைந்தர்கள்தான்
குருக்களோடுதேவர் குலவசந்திரசூரியரும்
பெருகவேகாசிபரும் பெரியோர்முதலாக
அஷ்டவசுக்கள் அரசரோடுராட்சதரும்
திட்டமுருகாந்தருவர் சித்தவித்தியாதரும்
கிம்புருடர்கின்னரர்கள் கணநாதர்தன்னுடனே
தும்புருநாரதரும் தோற்றமெல்லாமென்னிடத்தில்
இந்திரனுமக்கினியும் இயமனுடனிருதி
வருணனுடன்வாய்வு குபேந்திரன்ஈசானன்
இட்டமுடன்அட்டத் திக்குபாலகருமென்னாலே
திட்டமுடன்சகலசீவன் முதலென்னாலே
உண்டானதென்று உன்மனதிலெண்ணாமல்
விண்டோமிவனையென்று மேதினியிலிவனுடைய
உந்திக்கமலத் துதித்தானிவனெனவே
சிந்தித்திருந்ததெல்லாந் தீர்க்கமுடன்விட்டுண்டு
ஏகினாலொன்றாய் என்னுடையகைநினைவாய்
வாகினாலெவ்வுயிரும் வருந்தவிடாதிருந்தால்
ஆரைநீரட்சிப்பாய் அச்சருபமில்லாதாய்
பேதையறியாத பேச்சதுதான்பேசுவாரோ
சுவரில்லாசித்திரமுந் தொட்டெழுதவல்லாயோ
எவரையுமயக்குகிறாய் இத்தொழிலைவிட்டுவிடு
நால்வரையும்நீதான் ரட்சிப்போமென்றதெல்லாம்
பெருமாளேபேசாதே மறந்துவிடுமிப்போது
உன்னைவிட்டுவேறே உன்னைப்போலொருவனுமாய்
பின்னையுமுண்டாக்கிப் பிரியமுடன்ரட்சிப்பாய்
ஆற்றமுடன்பாற்கடலுல் அங்கேநீபள்ளிகொண்டாய்
ஏற்கவேயோடி இப்போதொளித்திருப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடையபேரன் எல்லார்க்குமகரிஷிதாம்
உன்னுடையசெய்வினையா லுன்னையேதான்சபித்தான்
பத்துச்செனனம் பாரில்பிறந்திருந்தும்
முற்றுமந்தச்சாபம் முழுதும்தொடர்ந்துவர
விட்டதறியாயோ விதித்தெழுதவெண்கையினால்
இஷ்டமுடனந்த எண்பத்துநான்குலட்சம்
எல்லாவுயிருக்கு மின்னபடியென்றெழுது
கல்லாவென்கையுங் கருத்ததுவுங்காணீரோ
உன்னுடையஉந்தியில் உதித்துவந்தோமென்றுசொல்லி
என்னுடையபேரை இகழ்ச்சியாய்ச்சொல்வீரே
முந்தவொருதூணில் முளைத்தெழுந்தசிங்கமுமாய்
வந்தஇரணியனை மார்பைபிளந்துவிட்டீர்
அந்தத்தூணுனக்கு அன்னையோதந்தையோதான்
தந்தையதுவாமானால் தகப்பனுநீயெந்தனுக்கு
அக்கினிதான்மூங்கிலுக்குள் அவதரித்துவந்தபின்னும்
முக்கியமாய்மூங்கிலில்லான் முழுதும்வெந்துநீறாகி
போட்டதுபோலநான் உந்திதனில்வந்துதித்தேன்
வாட்டமில்லாவுந்தனுக்கு மாற்றானாய்வந்துதித்தேன்
என்றுமனதில் நினையாதெல்லாம்நினைந்து
வேதனிவைசொல்ல வெந்தணல்நாராசம்
காதில்வெகுதுன்பங் கைகால்சொருகினர்பால்
அகோரம்பிறந்து அனலாய்புகையெழும்ப
விகாதமுடனகைத்து வேந்தனுக்குயிந்தவிதம்
வந்ததென்னவென்று மனதிலெண்ணிமாயோனும்
இந்தமகிமை இனியறிவேணுமென்று
வேதாவைப்பார்த்து விஷ்ணுவுங்கோபமதாய்
மாதாவுனக்கெந்தன் வயிரியென்றறியாமல்
தீதாதுரைத்தாய் சிறுபிள்ளையாகையினால்
வேதாவும்நீர்தான் விவரமறியாமல்
மீதாய்ச்சிறுபிள்ளாய் வெகுளியாய்த்தானுரைத்தாய்
தந்தையதிகுற்றமென்று தான்சினக்கலாகாது
எந்தவிதம்நம்மையுந்தா னிகழ்ச்சியாய்த்தானுரைத்தாய்
இப்படிக்கொற்றபிள்ளை இடுக்கங்கள்தான்செய்திடத்தில்
உன்னைப்போலெந்தனுக்கு உற்றபிள்ளைதானிருந்தால்
பிள்ளைப்புயபலமும் பராக்கிரமமுள்ளவராய்
ஈதுடன்முன்னாள் என்வயிற்றிலேபிறந்து
தந்தையென்றுபாராமல் தாளாண்மைதன்னுடனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தெரிர்த்துநம்முடனே மற்பொருதுந்தானவரை
கொல்லமுடியாமல் மனங்குழைந்துவெகுநாள்பொருதி
வெல்லவுபாயம் வேறேநினைவுகொண்டு
சற்பனையாய்க்கொன்று தரணியிற்போட்டுவிட்டேன்
அப்படியேயுந்தனுக்கு அறிவுரைச்செய்தாக்கால்
உற்பனமென்றெண்ணாது உன்னகந்தைநில்லாது
நட்புடையதேசமதில் நல்வினைகளாயிருந்த
புணந்திணையுங்கீறிப் புறையறவேவானாற்றி
பண்புடனேதானிருந்தால் பதறாதேயாற்றிவிடும்
அத்தன்மைபோல அகந்தைசெய்தாய்ப்பிள்ளைகளை
உத்தன்சிரசில் ஓர்சிரசையீசுரனார்
முந்தவேகிள்ளுகையில் முளைத்ததேவுன்சிரசு
அந்தமட்டுமுந்தனுக்கு ஆண்மையொன்றுமில்லாதே
எந்தமட்டுமுன்செயல்தான் எவர்தனக்குத்தலைவன்
அந்தப்பலமுடிகள் ஆயிரந்தன்னிலொரு
கனத்ததனங்கள் கனத்தசிறந்தோன்றனக்கு
பாதாளலோகம் படைத்தோமெனும்பெருமை
மீதாகப்பேசுவது வீரியமேவுந்தனுக்கு
சொல்லுமுந்தன்வேதமதை சோமுகாசுரனுந்தான்
நில்லுமெனவேபரிந்து நெடுங்காலங்கொண்டேகி
மீன்வடிவுதானெடுத்து வேதமதைதான்பறிந்து
நான்மிகவுந்தந்த நன்றிமறந்தாயே
நச்சுமரமானாலும் நட்டமரந்தன்னையிப்போ
அச்சமறநாமும் அழிப்பதுவும்போகாதே
என்பதினால்நாமும் இந்தமட்டுந்தான்பொறுத்தோம்
உன்பலத்துக்காற்றாமல் ஒளிந்திருந்தோமென்றெண்ணாதோ
உயுத்தம்பண்ணிநாமும் உன்னைமிகக்கொல்வதற்கு
சயித்தின்றென்சுத்தமதைத் தள்ளியிங்கேமீறிவந்தாய்
இனிமேலுங்குற்றமில்லை என்றேநெடுமாலும்
கண்டுவெந்தேமாயன் கண்கள்பொறிபறக்க
ஒத்தெழுந்துவார்த்தைசொல்ல உந்திமலரோனும்
துத்திவெட்டுண்டாப்போல் துணுக்கென்றெழுந்திருந்து
ஒருவர்க்கொருவர் ஒருபூசலாய்வளைந்து
இருவருமப்போது எதிர்த்துப்பொருவதற்கு
மட்டுமிஞ்சுவார்த்தைகளாய் வாதுபலந்தான்கூறி
கட்டுவிடப்பேசிக் காவலர்கள்தானெதிரே
துதித்தார்பெருமாளும் துடைதட்டியேதுசொல்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாளரக்கர்தன்னால் முறையிட்டார்நம்மிடத்தில்
முன்னாள்உனக்காக வந்தான்ராட்சதரை
கொன்றுங்கள்தெய்வ பதவிகொடுத்தோமே
சென்றுங்கள்தெய்வ பதவியதுசேர்ந்திருந்தும்
நன்றிமறந்தென்னையிப்போ நையாண்டிபண்ணுகிறாய்
மன்றில்பொருத வாதாடிவந்தெதிர்த்தாய்
இனியறிவோமென்று எதிர்த்தாரிருபேரும்
பனிவரைகளிரண்டும் பகைத்தெதிர்த்துநின்றாப்போல்
திக்கெட்டுந்தானதிர திசைகள்கிடுகிடென்ன
தர்க்கமிட்டுயிந்தத் தரணியெல்லாந்தானதிர
இடசாரியாக வெடுத்தடியும்வைக்கவுந்தான்
அடைவுடனேவுந்தன் அடுத்துவலசாரி
கால்களோடுகால்மாறி கைகளோடுகைசேர்த்து
வேல்களோடுவேல்சேர்ந்து வேகமுடன்தானிருவர்
ஒற்றுக்குடுத்து ஓங்காரங்கொண்டெழுந்து
ஆர்த்துச்சினந்து ஆங்கா ரங்கொண்டெழுந்து
நடுங்கிமலைகலங்கி நட்சத்திரமுதிர
கடுங்கோபங்கொண்டு கதிரோனுந்தாமசைய
பூமியதிரப் புவனம்பதினாலும்
சாமிதிருமாயவனாய் தக்கமதுகாற்றாமல்
அரவுகலைமாய அண்டங்கிடுகிடென்ன
இரவுபகலாக எம்பெருமாளந்நேரம்
இருபேருந்தான்பொருதார் இமையோருந்தானடுங்க
ஒருவர்க்கொருவர் வொத்துப்பொருதையினால்
குத்துகின்றசத்தமது கொண்டலிடிபோலாகி
எத்துகின்றகால்களினால் எடுபட்டுமாமலைகள்
தூளாய்நொருங்கி தூளாய்ப்பறந்துவிடும்
ஆளாயிருபேரும் அடைவாய்வெகுளிகொண்டு
வலசாரியாக மாயோனடிபணிந்து
மலரோனிடசாரி வருவதும்பூவுலகில்
இரவுவந்துமுடுகைபோல் எம்பெருமாள்தன்மேனி
இப்படியொருநொடிக்குள் இரவுபகலாய்விடுமாம்
மற்பிடித்துச்சக்கரம்போல் வட்டமிட்டுசுற்றுகையில்
பூவுலகிலுள்ள புல்பூண்டுசீவசெந்து
தாவுமிடமெல்லாம் மயங்குமாமந்திரத்தில்
ஆகையினாற்றேவர்கள் அயிராவதத்தினிடம்
இவர்களுக்குமுன்னே எம்பிரான்தன்கலக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்சிவனிடத்தில் அபயமிடவாருமென்று
போனார்கள்தேவரெல்லாம் பொன்மலையைத்தானோக்கி
பரனேயுனக்கபயம் பாருலகிலிப்போது
மாயோனும்வேதாவும் மல்யுத்தமாகையினால்
நாலாவகைச்சீவன் நாங்கள்முதலிப்போது
நிற்கநிலையில்லாமல் நீந்திவந்தோமுன்பாதம்
தக்கதுணைநீரெனவே தானுமேநம்பிவந்தோம்
சூறாவளிக்காற்றுச் சுழல்காற்றுப்போலாகி
நீறாகிலோகம் நெருப்பாயெரியுதை'
அந்தரமும்வானும் அரசழிந்துபோகுதையா
இந்திரனுமட்டதிக்கு மெல்லாமலையுதையா
சந்திரனும்சூரியனும் தானொழிந்துபோனார்கள்
மந்திரங்கள்வேதமெல்லாம் வரவழிந்துபோகுதையா
அடுக்குநிலைபேர்ந்து அலைகடலுந்தான்தவறி
உடுக்களுதிர்ந்து உயர்முகடுந்தான்கழிந்து
எல்லாம்தடுமாறி ஏங்குதுகாண்மூவுலகம்
நில்லாநிலையில் நிற்கும்பராபரமே
நாதனேயெங்கள் நடுக்கந்தவிர்த்தருளும்
வேதனிடபோரும் விஷ்ணுவின்தன்போரும்
பார்க்கமுடியாது பரனேபராபரனே
கார்க்கவிதுசமயங் கடைக்கண்கிருபையினால்
ஏறிட்டுப்பாருமையா இருவருடபோரை
இறையவனேயெங்கள் இடுக்கண்கள்தீருமையா
முறைமுறையோகாண் முக்கண்னேதஞ்சமென
இமையோர்முறையிடவே ஈஸ்வரனுந்தானிரங்கி
அமையுமமையுமுங்கள் ஆபத்துதீர்ப்போம்நாம்
என்றுசிவனார் இருவருடபோர்விலக்க
குன்றுவடிவாய்க் கொழுங்கனலாய்த்தான்வந்து
ஒன்றாகலோகம் ஊடுருவிதாவவளர்ந்து
இருவர்தனக்கும் இதமாகநடுவாகி
உருவென்றுஅக்கினியாய் ஓங்காரகம்பமதாய்
ஒருருவாய்நின்றார் உருகித்தணலாகி
ஆருமறியாத அகண்டத்தெளிவாகி
அந்தமந்தமட்டும் அறியாமலேதானும்
சிந்தைகலங்கித் திகைத்துநெடுமைச்செறிந்து
அக்கினியைக்கண்டு அகன்றிருவர்தான்விலக்கி
நிற்கின்றார்கண்கள் நீலமதிகாண்பறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமெல்லாமக்கினியும் பலமனையுமக்கினியும்
திக்கெல்லாமக்கினியாய்ச் சிவந்ததுகாண்லோகமெல்லாம்
எந்தவிதமென்று இருந்தார்மதிமயங்கி
வந்திவர்சோதனை வருத்தமறியமாட்டாமல்
நொந்திடைந்துசென்றளவில் நோக்கமுடனேசிவனும்
இந்தமகிமை இவரிவரென்றுசொல்லி
தீர்க்கமுடனிவர் தெளிந்துவகைபேசி
இந்தமலைப்பெருமை யாரறியவேணுமென்று
அந்தமலையை அடிமுடியுந்தானதிர
தங்களிலேசம்மதித்து தானேயிருபேரும்
அங்கெழுந்துவேதன் அன்னவடிவாகி
முடிதேடிப்பறந்தான் முகவொளியூடுருவி
அடிதேடிமாயன் ஆதிவராகமதாய்
மேலேழுபோகங் வேதனுமேபோயறிய
சீலமுடனேபறந்து தேடினான்விண்ணிடைந்து
கீழேழுலோகங் கேசவனுந்தானிடைந்து
நீளநுழைந்து நெடியோனுங்காணாமல்
வாடிமனதிடைந்த வந்திருந்துமாயோனும்
தேடியுங்காணாமல் திரும்பினார்மாயோனும்
வந்திருந்துமாயன் மனதில்பலநினைவாய்
இந்தவுலகம் ஈரேழுலோகமெல்லாம்
ஆராய்ந்துதேடி அரைஷணத்திலாயிரமாம்
மார்பிளந்துகாதவழி யாராய்ந்துகண்டறியோம்
ஆதிவராகமென்னும் அதிரூபங்கொண்டெழுந்து
சோதிதனைத்தேடி தொல்லுலகமுடுருவி
கொம்புகளுந்தேய்ந்து குளம்புகளுந்தேய்ந்து
சாம்பசிவன்பாதந் தான்காட்டமாட்டாமல்
வருஷமொருநூறும் மண்ணுலகுமோரேழும்
விசிரிக்கொண்டுபாதாள மெல்லாம்ஊடுவி
இன்னபடியென்றறியோம் ஈசனின்தன்பாதம்
அன்னமுயர்ந்தோன் ஆயன்காண்பதென்ன
எண்ணிமனதில் இறையோனுந்தானினைந்து
மண்ணிருந்து மனதில்தியானமதாய்
ஞானக்கண்கொண்டு நாட்டகத்தில்வேகமதாய்
மாய்கையதுகருத்தாம் மவுனமாய்த்தானிருத்தார்
பட்சிவடிவுகொண்டு பறந்தொருவேதாவும்
கட்சியொருகாதங் கணப்பொழுதுதாயிரமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கடந்துசென்று மேலேழுலோகமெல்லாம்
தெளிவுசற்றுமில்லாமல் திகைத்துமனமிடைந்து
அப்பாலும்நூறு ஆயிரங்காதவழி
மெய்யாய்வெளிதாண்டி மெய்யசைந்துவேதாவும்
சிரசிரண்டும்தான்றேய்ந்து செயல்முழுதுந்தான்மறைத்து
அண்டகடாகமட்டும் ஆராய்ந்துமன்னமுந்தான்
கண்டில்லைநாமுமினி கர்த்தனதுதன்முடியை
இத்தூரம்வந்து இப்படியேயல்லாது
சற்றுமலைகிட்டச் சமீபமதுகாணாமல்
அளவற்றசோதனைக ளாராய்ந்துபற்றாது
துளபமணிமாயன் கண்டானோவெப்படியோ
ஆரறியப்போரார்காண் அளவளவாய்நின்றானை
பேரறியச்சோதியிது பேச்சுக்குமெட்டாது
அங்குமிங்குமொன்றா யடிமுடிதானாகி
எங்கும்நிறைந்திருக்கும் ஈஸ்வரனேயல்லாது
வேறேயுபாயம்விடை யுஞ்சற்றுமில்லையங்கே
கூறேனொருவசனம் கொண்டல்வண்ணன்தன்னுடனே
பகைமுடித்துக்கொண்டதொரு பாவந்துலையாதெனவே
வகையாயுறவுசெய்து மகனுடனாந்தரமும்
இணக்கமுடன்கூடி இருந்துவிடாமலிப்போ
பிணக்குடனாலும் பிழைமோசம்போனோமே
என்றுமலரோன் எண்ணிமனம்புண்ணாகி
ஒன்றுமுறையாமல் உள்ளமெல்லாம்புண்ணாகி
இருக்குந்தருவாயி லீசர்முடிமேலிருந்து
வருக்கமுள்ளதாழை மலர்தான்வருகிறதை
கண்டுமலரோனுங் கற்பனையாய்தானிருந்து
உண்டுபண்ணப்பொய்கை உரைக்கமனதிலெண்ணி
பொய்சொன்னோமானால் பொருந்துமோயென்றுசொல்லி
மெய்யாகச்சாட்சி விளங்குமந்தகேதகையை
வசப்படுத்திக்கொள்ள மனதில் நினைத்துக்கொண்டு
நிசப்படுத்துவதேன் நேராகவாரதொரு
கேதகையேநீதான் கிருபையுடனிருந்து
மாய்கையாய்வர வருத்தமென்னசொல்லுமென்றார்
அப்போதுகேதகைதான் ஐயனே இனிகேளும்
இப்போதுஈஸ்வரனார் ஏற்றசடைமுடிமேல்
இருந்துதவறிவிழுந் தெடுபட்டுநான்வாரேன்
பொருந்தவேநான்பாவி பொல்லாதகாலமதாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிவிழுந்து தங்குமிடமில்லாமல்
அவதிமிகப்பட்டு அந்தரத்திலேயலைந்து
வாடியிடைந்து வருகிறேனித்தூரம்
நாடியிடைந்து நடைதளர்ந்துகால்கள்நொந்து
வருகிறேனையா மகாகோடிகால்யுகம்
ஒருத்தரையுங்காணேன் உந்தனையெதிர்கண்டேன்
இன்னம்நிலத்தில்விழ எத்தனைநாட்செல்லுமதோ
தன்மையாய்ச்சென்று தமையராநானிருக்க
எத்தனைநாட்செல்லுவதோ இன்னபடியென்றறியேன்
கர்த்தனிடசெயலைக் கணக்கிடவும்போகாது
எப்படியோவென்று இவ்வசனங்கேதகைதான்
செப்பமுடன்சொல்ல தீர்க்கமுடனான்முகனும்
நல்லதுகாண்கேதகையே நான்சொல்லநீர்கேளும்
வல்லதொருமாயவனுக்கும் மானிலத்திலெந்தனுக்கும்
வாதுசெய்துசண்டையிட்டு மற்பொருதுதான்பொருதி
தீதுவந்துமுண்டிடுவர் செலுத்தமுடியாமல்
நீபெரியோன்நான்பெரியோ னென்றுசிலகாலம்
வாய்பேசிக்கொண்டு வழக்குரைத்துப்போராடி
மார்பிடித்துரெண்டிலும் வலுத்துச்சினமாகி
மேற்படிலோக மேலேழுந்தானதிர
அடுக்குநிலைகுலைய. அண்டபகிரண்டமெல்லாம்
ஒதிக்கங்கள்தானதிர ஒளிதிசையுந்தான்கலங்க
பரிபடுமதிகமலம் பருவரையுந்தானதிர
கருதியேலோகமெல்லாங் கடுகிப்பொடியாக
தேவர்கள்வானவர்கள் திக்குதிசைசூழ
மூவர்கணமாமுனிவர் முப்பத்துமுக்கோடி
யாவர்களும்பாரில் அந்தரமுந்தான்சுழல
போராடிநின்றோம் புவன்மதனிலிறங்கி
சீராடியிப்படியாய் சென்றுசிலகாலம்
ஒன்றையொன்றுமறவாமல் உருபூசலாய்விளைந்து
நின்றோஞ்சிலகாலம் நீணிலத்தோர்போமெனவே
அந்தமொழிகேட்டு அர்னோடிந்திரன்
வந்துவிலக்கவென்று மாய்கையாய்த்தோன்றி
இருவருக்கும்நடுவே எழுந்துதேயக்கினியும்
ஒருவருக்குந்தோற்றாமல் ஊடேசுடர்வடிவாய்
வந்ததுகாண்சோதி மலையாய்ப்பருவமதாய்
அலைந்துகண்காணாது ஆகாயமுடுருவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றநெருப்பேதெனவே நிலையறியமாட்டாமல்
ஒன்றையொன்றுபார்த்து உழன்றுமனம்புண்ணாகி
நின்றுமயங்கி நிலைகண்தெரியாமல்
நன்றுபுதுமையிது நாமறியவேணுமென்று
தங்களிலேதாங்கள் சம்மதித்துக்கொண்டேதான்
இங்குவந்தகாரணந்தான் என்னென்றறிவோமென்று
அடிதேடிமாயன் ஆதிவராகமதாய்
முடிதேடிநாமும் மொழிந்துவகைபேசி
கண்டார்பெரியோர் காணாதவர்சிறுவர்
பண்டோரறியாப் பழம்பொருளைக்கண்டறிந்தால்
அன்றுபொரியோர் அவருந்தானென்றுசொல்லி
என்றுவகைபேசி இருவருமேசம்மதித்து
பாதாளம்சென்றார் பச்சைமால்கண்டீரே
மீதானவிண்ணகத்தில் வேகமுடனான்தானும்
வந்தேநினைப்பாய் வலிவுமிகக்குறைந்து
உந்தனையேகண்டேன் உள்ளமெல்லாந்தான்தீர்ந்தேன்
கண்டபோதிப்போ கவலையெல்லாந்தான்தீர்ந்தேன்
அண்டினேனுன்னை ஆபத்தைக்காத்தருளும்
நாரணனுந்தான்மகிழ நமக்கோர்சகாயமென்று
ஆரணனுங்கேட்க அடைவுடனேகேதகையும்
ஏதுதான்சொல்லுமென்று இன்பமுடன்தான்கேட்க
சாதுவாய்நான்முகனும் சாற்றினார்நல்வசனம்
அந்தமொழிகேட்டு அரகராவென்றுசொல்லி
விந்தையுடன்கேதகையும் மெய்சோர்ந்தாங்கேது சொல்லும்
என்னவிதிப்பயனோ ஈசர்முடிமேலிருந்து
அன்னமேகேளும் அவதிவந்துயித்தூரம்
தவறினேன்கண்டீரோ தவிர்த்தவிடமெல்லாம்
குவலயத்திற்சொல்லக் கொம்பிழந்தமந்தியைப்போல்
ஆகாதபாவி அடியேனொருபொருட்டாய்
வாகாயென்னுடனே வருத்தமாய்நீர்சொன்னீர்
எங்கும்நிரந்தரமாய் எள்ளுக்குளெண்ணையைப்போல்
அங்குமிங்குமொன்றாய் அடைக்கலமேஎவ்வுயிர்க்கும்
கறக்கும்பராபரனே நீக்கியென்னசொன்னாலும்
தர்க்கமுடன்கேட்கத் தகுமோதானான்முகனே
ஆனால்முன்னாளில் அமரர்முதல்தேவர்களும்
வானோரமிர்தம் வாரிதனில்கடைய
ஆலவிஷம்பிறந்து அகிலமெல்லாந்தான்மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலவிஷஞ்சீறிவர கண்டமரர்தானோடி
அரனுக்கபயமென்ன அமரருக்காயோடிவந்து
பரனுக்கடிபொருட்டாய்ப் பானமாயவ்வித்தை
கொள்ளலையோயீசர் குவலயத்தோர்தான்பிழைக்க
தள்ளவிள்ளாயீர் சத்புருஷர்மீதெனவே
பெரியோரிவையெல்லாம் பேதமென்றும்சொல்வார்கள்
தெரியாதார்கெல்லாந் தெளிந்துமனந்தேறி
என்னபிழைவந்தாலும் ஏற்பார்பெரியோர்கள்
இன்னதென்றுசொல்வார்கள் மேலானநல்லோர்கள்
அடுத்தோரைக்காப்பார்கள் அடைக்கலமாய்வந்தவரை
விடுத்தேதுஞ்சொல்வார்கள் மேலானவேதியர்கள்
நமக்குமொருசெய்தி நாம்சொல்வநீர்கேளும்
உமக்குச்சுகிதமுண்டு ஒருவார்த்தைசொன்னாலும்
ஈசர்முடிகண்டுநான் இயம்புவேன்மாலிடத்தில்
ஓசையிடநீர்தாம் ஓமென்றுரையுமென்றார்
ஆபத்துவேளைதனில் அஞ்சாதேயென்றொருபொய்
பாவத்தைப்பாராமல் பயின்றோரைக்காக்கிறாயோ
ஆர்க்குமொருசமயம் அவரவர்க்குமிப்படியே
பார்க்கவல்லோவேணும் பாவியேநாம்தாமும்
எப்போதுமக்காக இசைவோங்காண்வேதாவே
உங்களுக்குதானே உதவுவேனோபூவுலகில்
தங்களுக்குள்தானே சம்மதித்துதானுமப்போ
பொய்சொல்லாகேதகையும் பொருந்தியேசம்மதித்து
மெய்சொல்லவேயிறந்து விதியோனுக்காகவேதான்
பொய்யொன்றுசொல்லப் பூமிதனில்வந்திறங்கி
ஐயமறக்கேதகையு மன்னமுந்தாறொன்றாகி
மேதினியில்வந்து விஷ்ணுவைத்தான்பார்த்து
ஓதியபிரம்மாவும் உயர்வாகாயம்புகுந்து
விரைவாகயிப்படியாய் வெட்டவெளிதான்போய்
கண்டேன்முடியைநான் கண்டீரோசேவடியும்
கொண்டல்வண்ணப்போது கொதித்துமனமிடைந்து
பன்றிவடிவெடுத்துப் பாதாளலோகமெல்லாம்
வெற்றியுடன்தேடி மெலிந்துவந்தேனல்லாது
காணேன்சிவபாதம் காணவுந்தான்காட்டாமல்
வீணேதிரிந்து வெளியேறிவந்தோங்காண்
முடிகொண்டோமென்று மொந்தாயோநீபெரியோன்
அடிகண்டோமென்றா லனலாயெரிந்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாரக்கண்ட காட்சிதனக்கொப்பனைதான்
விண்ணேறிய விளம்புமென்றுதானுரைத்தார்
அப்போதுவேதன் சத்தியமேயென்வார்த்தை
இப்போதுதானும் யீசர்முடிமேலிருந்து
நான்கண்டபோது நமக்கிவர்சாட்சியென்றார்
ஆம்காணும்விஷ்ணுவே அப்போதுநான்கூட
என்றந்தகேதகையு மிவ்வார்த்தைதானுரைக்க
சென்றிந்தப்பொய்யைச் சிவனறிந்துகோபமதாய்
நெடுகவளர்ந்த நெருப்புமலைதான்கொதித்து
திடுதிடெனவேமுழங்க செந்தீதாய்கோபதாய்
நெறநெறனவேகுமுறி நேரேபடீரெனவே
கிறுகிறெனச்சக்கரம்போல் கீழேழுமேலேழு
லோகமெல்லாந்தானதிர நொருங்கியிடியேறெனவே
சக்கரமுந்தான்தவறி தரணியெல்லாஞ்செந்தூளாய்
வெடித்ததுதானந்தமலை வெந்தனல்போல்நின்றமலை
பிடித்ததுகாணெங்கும் பெருந்தீயாய்கோரமதாய்
விண்ணுலகிலுள்ளோரும் மெய்ப்பதறியுள்ளடங்கி
மண்ணுலகிலுள்ளோர் மதிமயங்கிமூர்ச்சையதாய்
இறையோனேயெங்கள் யீசுவரனேயென்குற்றம்
முறையோனேயுனக்கபயம் மூர்த்தியேகாருமென்று
சகலமெலாஞ்சீவ சராசரங்களுள்ளதெல்லாம்
அகலாதிசோதி அரனேயுனக்கபயம்
தராதரமாய்நின்ற சர்வதயாபரனே
காருமிதுசமயம் காரணமாம்நின்றோனே
வாருமிதுசமயம் வள்ளலேயிப்போது
தீராவினைதீரச் சித்தம்பொறுத்தருளும்
வாராதகுற்றம் வந்தாலுமெங்களுக்காகய்
வந்திப்போகாத்தருளும் வடிவேசரணமையா
சந்திப்பவர்க்குத் தரவேணும்சுரனே
அபயமென்னவெங்களுக்காச்ச லொன்றுகாத்தருளும்
சபையதிரவே நடந்தாண்டவராய்நின்றோனே
தாங்கமுடியாது தராதலங்களுள்ளதெல்லாம்
ஏங்கியிடைந்து யிடுக்கண்படுகுதுகாண்
ஓங்காரந்தானோக்கி உத்தமமாய்தானறிந்து
செஞ்சுடர்சோதிநின்ற உத்தமமாய்தானறிந்து
அஞ்சலென்றுவந்து அரனாருமேதுசொல்வார்
ஏதுகாண்நான்முகனே என்முடியைக்கண்டேனென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதுசொல்லிமாயனுடன் வழக்குரைத்துநின்றாயே
காணாதநம்முடியைக் கண்டேனென்றுசாட்சியதாய்
வீணாகவார்த்தை விளம்பினையேயிப்போது
கேதகையேநீசொன்ன கெர்வமென்னசொல்லுமென்றார்
முத்தொழில்போல்சற்றே முருவலதுசெய்தளவில்
இமயதடாகம் அண்டவெளிப்புறமும்
கொண்டலிடுமீன்போல் குலுங்கனலுஞ்சோதியுமாய்
விண்டலங்கலெல்லாம் மீன்வந்துதான்மூடி
கண்டஅரசரெல்லாம் காலோடுகால்பின்ன
வீழ்ந்துகிடப்பாரும் மெய்சேர்ந்துநிற்பாரும்
தாழ்ந்துகிடப்பாரும் தர்மமோவென்பாரும்
சந்திரனுஞ்சூரியனுஞ் தலைகேட்டநூலதுபோல்
இந்திரரும்வானோரும் இமையோர்முனிவோரும்
அந்தரமும்வானும் அடுக்குநிலைகுலைந்து
போனதுதான்கண்டேகிப் பொருதுமலரோனும்
ஆனசவுரியமும் ஆங்காரமுள்ளதெல்லாம்
நீங்கிவலுக்குறைந்து நிலத்தில்தலைகவிழ்ந்து
தூங்கிமிகவோங்கித் துக்கித்தானான்முகனும்
அப்போதுதான்சிவனும் ஆயன்முகநோக்கி
இப்போதுபொய்யுரைத்தான் இந்தவுலகுதன்னில்
கோயில்குளம்பூசை குவலயத்திலில்லையென்று
சேவில்வருமீசர் செப்பினாரப்போது
செப்பியசொல்மாயன் திருச்செவியில்கேட்டவுடன்
மெய்ப்புடையயீஸ்வரனை விழுந்துநமஸ்கரித்து
ஆடினார்மான் அரனைமிகக்கொண்டாடி
பாடினார்மெய்மகிழ்ந்து பணிந்துபணிந்தன்புருகி
ஆனந்தக்கூத்தாடி அருட்கண்ணால்நீர்சொரிய
தானந்தமாய்நின்ற சதாசிவனேயுன்மகிமை
ஆரறிவாருன்கோலம் அகண்டமெல்லாமொன்றாகி
பேரறியார்வூரறியார் பெருமைதனையாரறிவார்
வேரறியார்தூரறியார் மேலறியார்கீழறியார்
ஆரறிவாரெங்கும் ஊடுருவிநின்றானே
சீரறியாருந்தன் செயலறியார்யாவர்களும்
கூரறியார்வீறுசெய்வார் குணமறியமாட்டார்கள்
நானேயறியத் தகுமோதானுன்பாதம்
பேயேன்சிறியேன் பிழையேதுசெய்தாலுங்
பொறுத்தருளவேணும் புரமூன்றெரித்தோனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுத்தொண்டன்தன்மனையில் மென்றமுதுகொண்டேனே
ஐயாபொறுத்தருளும் அடியேன்தனைக்காரும்
மெய்யாய்சரணமென்று விஷ்ணுவுமப்போது
தோத்திரங்கள்செய்து தொழுததெல்லாங்கண்டுசிவன்
நேரத்திரத்தினாலே நெடுமாலைக்கண்டழைத்து
ஏதுவரமுள்ளதெல்லாம் இப்போதேயுந்தனுக்கு
ஈசர்புகழ்ந்துரைக்க எம்பெருமான்தானினைந்து
நேயமுடனிருந்தார் நீணிலத்திலப்போது
பொய்சாட்சிசொன்னதினால் இங்கேநீநம்மிடத்தில்
வேண்டாமினிமேல் விலகுமென்றுசாபமிட்டார்
ஈஸ்வரன்மேற்குற்றமில்லை இதுநம்மால்வந்தகுற்றம்
பேரக்கணக்கில்லை எம்பெருமானெனப்போனான்
வேதன்மனமிடைந்து வேகாமல்வெந்துருகி
நாதனேநாயடியேன் நடந்ததெல்லாங்குற்றமையா
பொல்லாதான்செய்த பிழைபொறுத்தருளவேணுமையா
வல்லோனேயெந்தனுக்கு வந்ததுகாணபுத்திமதி
இனிமேலுமையர் ஈடேறவேண்டியதாய்
தனியேதனிப்பொருளே தற்காக்கவேணுமையா
பாவிக்குச்சாபம் பலித்துவிட்டால்பூவுலகில்
கேள்விக்குநாயடியேன் கிருபைசெய்வதெக்காலம்
சத்தசமுத்திரந்தான் தான்கொதித்துப்பொங்கிவந்தால்
மற்றுமொருதண்ணீர் மாநிலத்திலுண்டாமோ
சற்றுக்கருணைவையும் கடலேவெளியொளியே
பற்றுஞ்சரவண பவனேபராபரனே
முப்புரத்தைதானெரித்து மூவரையுங்காப்பாற்றி
அப்புரத்தைக்காக்கலையோ அரனேயவர்க்கிரங்கி
காமனையுந்தானெரித்தீர் கடவுளரேயிப்போது
பூமனையேதிரும்பிப் போகமுடன்காக்கலையோ
மார்க்கண்டனுக்காக மறலிதனையுதைத்தீரே
தீர்க்கமாமார்கண்டனையுஞ் சிறப்பாகத்தான்காத்தீர்
மூன்றுமதமுள்ள மும்மதத்துயானைதன்னை
தோற்றுமொருதாருகா சூரனவனேவிவிட்ட
ஆனைதனையுரித்து அடைவுடனேதான்போர்த்தீர்
ஏனைரிஷிமருண்டு எக்கியத்தலக்கினியை
கோபமுந்தாபமுமாய்க் கூடியேமுச்சுடராய்
தீபமுள்ளவக்கினியைச் சிவனென்றுபராமல்
ஏவினானப்போ யெடுத்தீர்மழுவாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிநான்செய்த பகைதானொழியாதோ
உடலுக்குள்தீயிருக்கும் முகனைத்தெரியாமல்
காடவரும்பொல்லா கனமாவஞ்ஞானம்
போலிருந்துநாயேன் பொசுங்கியேவந்துவிட்டேன்
கோவிந்தரெந்தன்மீதிருந்த குற்றமெல்லாந்தான்பொறுத்து
காத்தருளவேணுமையா கஞ்சன்படுந்துயரம்
பார்த்திருந்தநாதன் பண்புடனேவேதனுக்கு
அஞ்சலென்றுசொல்லி அருளினர்க்காணம்மானை
வஞ்சமென்றும்பூவுலகில் மாமறையோர்வேதியர்கள்
செய்யுந்தவபூசையெல்லாஞ் சித்தித்தோமுந்தனுக்கு
உய்யும்பலபடைப்பும் உலகுமுதலெவ்வகையும்
எப்போதும்போல இருந்துபடையுமென்றார்
அப்போதுவேதனுக்கு அச்சுதரும்வந்தவகை
ஒருவர்க்கொருவர் உறவாயிருங்களென்று
இருவர்க்குநல்ல சிவபதமுந்தான்கொடுத்து
லோகத்திலப்போது உலகத்திலுள்ளவர்கள்
மாலும்வேந்தனுக்கு வஞ்சமினிவாராமல்
நேராகயிருமென்று நீதியுடன்தான்தீர்த்து
அவரவர்செய்தொழிலை அவரவரேசெய்வதென்று
வைரமுடன்தானிரண்டு வித்தகனார்தாமுரைத்து
அந்தமொழிகேட்டு ஆயனுமேதானிருந்து
விந்தைமலர்பாதமதில் விழுந்துநமஸ்கரித்து
எங்கள்தனைக்காக்க இவ்வடிவந்தானெடுத்து
தங்கமயமாகத் தணல்வடிவாய்த்தோன்றி
ரட்சித்துகாக்கவந்த நாதாபராபரனே
பட்சிவடிவெடுத்து பன்றிவடிவெடுத்துத்
தேடியுங்காணாத சிவமேசிவக்கொழுந்தே
நாடிடும்நாங்கள் நாட்டமதிற்கண்டிருக்க
வேணும்பராபரனே மேதினியிற்கண்டிருக்க
அணுவுக்கணுவாய் அடியேங்கள்தான்பிழைக்க
பூசையனுதினமும் புட்பமலர்சாத்தி
ஆசையறுத்து அரனடியைச்சேர்வதற்கு
தற்சொரூபங்காட்டித் தரிசிக்கவேணுமையா
இந்தச்சொரூபம் இப்படியாய்த்தானிருந்தால்
அந்தச்சொரூப மறிந்தேதுபூசைசெய்வோம்
மேகசலமுமக்கு மேனியெல்லாம்நீர்சொரிய
ஜெகமெல்லாங்குலுங்கச் சிரசின்மேல்புட்பமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசிக்கவீற்றிருக்கும் புண்ணியரேஉம்முடைய
ஆசித்தணலானதையும் அடக்குமையாஇப்போது
வேதநெடுமாலும் விரும்பியிவருரைக்க
போதமுடநீதா பூரித்தகமகிழ்ந்து
அக்கினியாய்நின்ற அனலுமிகநிறுத்தி
மெய்க்கவினிச்சாந்தமாய் மேதினிலெந்நாளும்
நிற்கவொருமலையாய் நேமித்தாரப்போது
தக்கதொருமலைக்குச் சாத்தினார்தர்மமதை
அயனையொளிவானத்தினால் அருணாசலமெனவே
கருணைகடாட்சமதாய் கற்பித்தார்பொன்மலையை
அம்மலையிலீசர் அதிசயமாய்த்தானிருந்து
செம்மலையிலிங்கமதாய் சிவசொரூபமாயிருந்து
அந்தமலையில் அயனுந்திருமாலும்
கந்தமலர்சோலைகளும் கற்பகமுமுண்டுபண்ணி
தெய்வக்கண்ணாளர்தனையுஞ் சீக்கிரமாய்வாவெனவே
மைவர்க்குகந்ததல மாகுமருணைதலமென்று
கோயிற்றிருப்பணியுங் கோபுரமுந்தான்சமைத்து
ஆவலுடன்பட்டணமும் அலங்காரமாய்முடித்து
திருத்திகையுமென்றுந் திருமாலும்நான்முகனும்
அரப்பெரியதச்சனுக்கு அருளினாரிவ்வசனம்
அந்தட்சணமேமுடித்து ஏங்கினான்கன்னாலும்
வானுலகிலுள்ள மறையோர்முனிவரையும்
தானுலகிலந்த தலத்திற்குடியேற்றி
அரம்பயரைத்தானழைத்து ஆடல்செய்யகோவிலுக்கு
இடம்பெறவேநிறுத்தி உகந்துசிவபூசைசெய்து
மாலுமயனு மகிழ்ந்திருந்தார்காணம்மானை
அருணாச்சலந்தனிலே அயனுந்திருமாலும்
ஒருநாளும்பேதமற உகந்திருந்தாரம்மானை
என்றுதர்மர்தம்பியர்க்கு எடுத்துரைத்தாரிக்கதையை
சென்றுசிலதூரம் செழித்துவழிதொலைய
ராமர்கதையும் நானிலத்தில்முக்கதையும்
வீமனுக்குந்தம்பியர்க்கும் விபரமாய்த்தானுரைத்து
கஞ்சமலர்மாயவன்றான் கஞ்சன்றனைவதைத்து
வஞ்சமெனும்சகட்டை வாகாயுதைத்ததுவும்
அலகைமுலையுண்டு அவ்வுருவைக்கொன்றதுவும்
உலகுதனில்மாயன் உயர்ந்தவிளாமரத்தை
கன்றாலெறிந்து கனியதனையுண்டதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தரறியாமல் உபாயங்கள்செய்ததுவும்
அச்சாவிலுச்சதனில் அடித்தவகைதன்னையும்
அச்சமரத்தம்பியர்க்கு அன்பாகத்தானுரைத்து
அச்சமுடன்தர்மர் வருகிறாரென்றுசொல்லி
நேயமுடன்மாயன் நினைவறியவேணுமென்று
ஆதிகருடனையும் அங்கேவரவழைத்து
நீதியுடன்தர்மர் நினைவறிந்துவாருமென்று
அன்னமெனும்வடிவாய் ஐவரெதிர்த்தானோடி
தன்மையாய்நின்று தர்க்கமிட்டுவார்த்தைசொல்லி
உண்மையென்னவென்று உட்புலனையாராய்ந்து
செம்மையறநன்றாய்த் தீர்க்கமாய்சோதியென்று
ஆமென்றுதான்கருடன் அன்னவடிவெடுத்த
ஓமென்றுசம்மதித்து உலகளந்தார்விருட்சத்தில்
வந்திருந்துதர்மர் வரும்வழியிலன்பாக
இந்தக்கதைப்பயனை ஏதென்றுகேட்கவென்று
பேசாமலேயிருந்தான் பெரியவிருட்சமதில்
ஆதாரமுள்ளதர்மர் ஆலமரத்தடியில்
இருந்துகதையை இளையோர்க்குத்தானுரைக்க
திருந்தவேதம்பியர்கள் செவியுறத்தான்கேட்டு
விசாரமெல்லாந்தீர்ந்து மெய்மகிழ்ந்துதானிருந்தார்
உயரவிருந்ததொரு உற்றபுகழன்னமுந்தான்
மருளவரேநீங்கள் வருந்தியுரைத்தகதை
இன்னவகையென்று எனக்குரையுமென்றுசொல்ல
சீரானதருமர் சிறப்புடனேஅன்னமதை
நேராகநோக்கி நினைத்தகதைகளையும்
சொல்லுகிறேன்அன்னமே சுகமாகநீயேகேளும்
சொல்லுங்குலதெய்வங்காண் செங்கண்மாலெந்தனுக்கு
எம்பெருமாள்தன்பெருமை எல்லாமென்தம்பியர்க்கு
நானுரைத்தேனிப்போது நடந்தகதைதாரணியில்
காரணங்களெல்லாங் கதையாகத்தான்படித்து
பூரணமாய்தானுரைத்தேன் புண்ணியனார்தன்மாய்கை
அவ்வுயிர்க்குமீது அரஞ்செலுத்திநின்றமுதல்
சாரதியெங்களுக்குச் சாங்கமாய்நின்றமுதல்
மாயவனும்மாயன் ஆயன்புவிராஜன்
மெச்சம்புவிராஜன் விஷ்ணுபதம்தாம்தேடி
நாயகனெங்கேயென்று நல்லதிசைநோக்கி
நேயமுடன்தேடி நெடுகவத்தோமித்தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யதொருவைகுந்தஞ் சேரவென்றுவந்தோங்காண்
ஐயமில்லாநாங்கள் அண்ணல்தனைத்தேடி
வாறோம்வழிதொலைய வாய்த்தகதைதம்பியர்க்கு
போகச்சொல்லி பெரியவனத்தூடேவந்தோம்
என்றுதர்மர்சொல்ல இன்பமுடன்அன்னமுந்தான்
ஒன்றுமறையாடல் உரைத்தீரேமன்னவரே
மண்ணுலகிற்கிட்டாது மலைகளிலுங்காணாது
விண்ணுலகிற்காணாது வெளிதனிலுங்கிட்டாது
மெய்யுகந்துநீங்கள் வியந்துதான்தேடுகிலும்
வைகுந்தங்காண வசமோதானுங்களுக்கு
மாயவனைக்காண வலுவுண்டோஆராகிலும்
நேயனிடவஞ்சம் நிமைதெரிந்துயாவர்க்கும்
சிந்தைகலங்காமல் திரும்பியுங்களூர்தனிலே
விந்தையுடன்போயிருந்தால் வேணுமென்றதுண்டாகும்
மானையுங்காணமல் வைகுந்தங்காணலாம்
போயிருங்காணுன்பதியில் புண்ணியரேநீர்கேளும்
உங்கள்தெய்வமாமென்றீர் யோனித்தளும்புபட்டு
இங்குலகுதன்னில் இறந்துபிறந்தேதிரிவார்
மானிடர்தன்னை மாயனென்றுநீர்நினைத்து
தேனிடருஞ்சோலைதன்னில் தேடவந்தீரித்தூரம்
தேவனேயாமாகில் சிறந்தவைகுந்தமதில்
போவதினாலென்ன போயிருந்துஎன்னபலன்
மண்ணுலுள்ளோர்தர்மமென்று வாழ்த்துவதும்பார்த்திருந்து
எண்ணிரியவேந்தேநீர் இருந்துபசிதாளாமல்
வந்தீரோசும்மா மறந்தீரோமற்றவர்கள்
தந்தீரோதனமெல்லாஞ் சகமெல்லாம்விட்டீரோ
நாடுதனையாண்டிருந்தால் நற்றவங்கள்செய்திடலாம்
வீடுபெறலாமென விளம்பியதேயன்னமும்
கேளாய்நீஅன்னமே கிருபையுடனோர்வசனம்
நாளாய்வெகுதூரம் நாடிழந்துவந்தகதை
மண்ணாசைபொன்னாசை மற்றுமுள்ளபெண்ணாசை
பெண்ணாசைவிட்டுப் பிள்ளைமேலாசையற்று
தேடுந்திரவியமுஞ் சேனைமன்னராசையற்று
வீடுவிட்டுகாடுறைந்து வித்தகனைத்தான்தேடி
வந்தவர்க்குஅன்னம் வழியுண்டோயிருப்போது
இந்தமட்டுமில்லை இனிமேலுமெப்படியோ
உடலுமுயிரிழந்து உணர்வுசெய்யுமோராசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடரும்பிணிதீர்க்க அபிஷேகமோராசை
நடந்திருந்தால் நமைசகியுமோராசை
கிடத்திலுறக்கங் கேள்விசெய்யுமோராசை
காலில்முள்தைத்ததென்று கலங்குவதுமோராசை
மேவிவரும்பூவிதென்று விளங்குவதுமோராசை
குளிருங்கனல்தேடி குளிர்க்காய்வதுமோராசை
துளிருமலரெடுத்து தொழுவதுமோராசை
காடுசெடியென்று கடும்பயமுமோராசை
வெய்யிலுக்கொருநிலை விரும்புவதுமோராசை
துயிலுதற்குநல்லநிலஞ் சூதானமோராசை
தாகந்துக்குண்ணுமொரு தண்ணீருமோராசை
நாகத்துக்கஞ்சி நடப்பதுவுமோராசை
அரிந்தவிடஞ்சொரிதல் அறப்பசியுமோராசை
விரித்தபலசாஸ்திரங்கள் விளம்புவதுமோராசை
கரடிபுலியானைகண் டஞ்சுவதுமோராசை
குரடுதடிகொண்டுயிர் கொள்வதுமோராசை
இடறுவதுமீதெனவே எண்ணுவதுமோராசை
படரும்பரயோகம் பண்ணுவதுமோராசை
எப்போதுமண்ணில் இருப்பதுவுமோராசை
ஒப்பாதபெண்களையும் உறவுசெய்யுமோராசை
கன்னல்சென்னலிட்டுக் கருதுவதுமோராசை
பொன்னும்வெள்ளித்தேடி புதைப்பதுமோராசை
நாடாளுஞ்செங்கோல் நடத்தவதுமோராசை
மாடாடுதேடி மகிழ்ந்திருப்பதுமோராசை
புலைகொலைகள்செய்யப் பொருந்துவதுமோராசை
மலைகடல்களேறி வருவதுமோராசை
மெய்மறைத்துப்பொய்யுரைக்க விரும்புவதுமோராசை
நெய்பால்தயிருமென்று நினைப்பவுமோராசை
வெளிதாண்டியேகவனம் விளையாடுமோராசை
அழியாமல்கற்பகம் அருந்துவதுமோராசை
மனைதோறும்பிச்சை வாங்குவதுமோராசை
புனலாடவென்று போனதுவுமோராசை
ஒடுக்கமதுகுகையில் ஒடுங்குவதுமோராசை
எடுக்காமல்கோலம் எடுப்பதுவுமோராசை
இந்தமட்டுமாசை இருக்குதுகாணிவ்விடத்தில்
அந்தாசைதன்னில் அதிலுமொருமோராசை
தம்பியர்க்குயெந்தனுக்கும் தானேதெவிட்டாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானாசையென்றால் எங்கள்மனதிலுந்தான்
அளவற்றஆசையது அன்னமேயெங்களுக்கு
துளபமணிவாசனையே கண்டால்துயர்தீரும்
ஆசையதுதீரும் அச்சுதனைக்கண்டால்
நேசமுடன்மகிழ்ந்து நெடுமால்தனைத்தொழுவோம்
என்றுதருமர்சொல்ல இன்பமுடன்அன்னமுந்தான்
நன்றுதானென்று நன்மையுள்ளதருமரென்று
மனமகிழ்ந்துபட்சி மரத்தைவிட்டுக்கீழிறங்கி
வனங்கடந்துநல்ல வைகுந்தம்தானோக்கி
சென்றுதிருமாலுடனே தெண்டனிட்டங்கேதுசொல்லும்
ஒன்பத்திநூறா புண்மையொருதன்மையுமாய்
மாற்றிற்றுபஞ்சவர்கள் மனதையெல்லாமாராய்ந்து
எத்துயரம்வந்தாலும் ஏதுபிழைவந்தாலும்
அத்துயரந்தன்னை அணுவளவுமெண்ணார்கள்
கரியமால்துணையென்று வருகிறார்பஞ்சவர்கள்
ஆலிலையிற்றுயிலுகின்ற அச்சுதனேதஞ்சமென்று
வாக்குமனமொன்றாய் வருகிறார்பஞ்சவர்கள்
தீர்க்கமுடன்கார்க்கச் சித்தமருளுமையா
காத்தசிறையைக் கடைத்தேறப்பாருமையா
ஏத்தவரைமுன்னுமிங் கிருக்கப்பண்ணுமையா
செங்கருடன்சொல்லச் செங்கண்மாலப்போது
அங்கங்குளிர்ந்து ஐவர்மேலன்புவைத்து
செங்கண்நெடுமாலும் திருவாய்மலர்ந்தருளி
தருமருந்தம்பியரும் தடையறவேநம்மிடத்தில்
சென்மமதுகொண்டுவரத் தெய்வவுலகேறாது
இம்மைதனில்சென்மம் இகத்திலேதான்போட்டு
நன்மைசெய்தாலே நம்மருகில்தானிருக்க
நால்வருங்கூடுவிட்டு நல்லவைகுந்தத்தில்
பால்போலும்நம்மிடத்தில் பட்சமுடன்தானிருப்பார்
சடத்துடனேதருமர் சருகாமல்நம்மிடத்தில்
என்றுதிருமால் இவ்வார்த்தைதானுரைக்க
அன்றலர்ந்தபுஷ்பமென ஆழ்வார்மனமகிழ்ந்து
சிக்கெனவேவான்கருடன் திருமால்தன்பாதமதில்
முக்கியமாய்த்தோத்திரங்கள் விழுந்துநமஸ்கரித்து
சக்கரத்தைவாருமென்று தாமழைத்துகோபாலர்
இக்கணமேசென்று உம்முடையபஞ்சவர்கள்
காணாமல்நீகலந்து காவலாய்வாருமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊணாகஎட்டெழுத்தை உபதேசமேபுரிந்து
பஞ்சவர்களைவர்களில் பருகின்றநால்வருந்தான்
துஞ்சலுடன்போட்டுத் தோற்றமுடனம்மிடத்தில்
வருவார்சுகம்பெறுவார் வைகுந்தஞ்தான்சேர்வார்
வருவாரில்தருமர் வருவார்தனியராகி
வாரவழிதனிலே மறுத்துமொருவிக்கினங்கள்
சீராகயானைபரி சிக்காமல்நீர்தானும்
பக்கமேவாருமென்று பட்சமாம்புத்திசொல்லி
சக்கரத்தைபோவெனவே சாற்றினார்மாயனுந்தான்
மிக்கவொருவனமும் வெகுமலையுந்தான்கடந்து
தண்டுளபமேனியனை வாகாகவேநினைத்து
கண்டுதொழவேன்று கடுகநடக்கலுமே
சுத்தமுடநூறு யோசனைக்காதவழி
வித்தகனார்பாதம் விபரமாய்க்காணவென்று
போயிருந்தசக்கரமும் புவிராசன்மன்னனிடம்
ஐவரையுங்கண்டு அரிநமோவென்றிருந்தார்
மாயோனைத்தஞ்சமென்று மகிழ்ந்தாலின்கீழிருந்து
இருக்கிறாரைவ ரியல்பாய்சகாதேவன்
நெருக்கும்விதிவசத்தை நேராயறிந்துகொண்டு
தனக்குவருங்கருமம் தானறிந்துசகாதேவன்
தருமர்தனக்குத் தமையன்மார்மூவருக்கும்
வர்மமுள்ளதெல்லாம் வகையாகயின்னதென்று
தத்துவத்தைபார்ப்பளவில் சக்கரத்தானிந்தமட்டும்
முற்றிலுமேயெந்தனுக்கு முடிவுஞ்சரியாச்சு
தன்னையறிந்த சகாதேவனிதுரைக்க
நமக்குள்ளசாஸ்திரங்கள் நன்றாய்முடிப்பித்து
சுமக்குஞ்சுமையென்று துன்பமற்றோமென்றுசொல்லி
நாரணர்பாதம் நாளுமறவாமல்
சீரானவைகுந்தஞ் சேருமென்றுதானுரைத்து
அண்ணன்மார்நால்வருக்கும் அங்கிருந்துநல்வசனம்
எண்ணமரநிஷ்டைதனி லிருந்தான்சகாதேவன்
சாலோகசாமீப சாருபமுந்தெரிய
மூலாந்திருந்த நாரணரைப்போற்றிசெய்வான்

## விருத்தம்

ஏதுமறியேனென்வழியே எல்லாவுயிர்க்குங்கவையாகி
வாதுசிறியவழக்கோர மன்றிலிருந்துவழக்குரைத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீதுபயிலும்நாயேனை சென்மமிழந்துவழக்குரைத்த
தூதுவரவுமிருப்பேனோ சுந்தரமுகுந்தனையெங்கே. 87

வீமன்விஜயநகுலனுடன் வேதனானதருமருமாய்
நேமமானவைகுந்தம் நெடியோனடியேதுணையாக
ராமதாசனெனவேதான் வந்தாயெந்தன்பதிதேடி
ஏமதூதனுமேயணுகாம லிதமாயுதவிசெய்வாயே. 88

## கதை

நாட்டமுடனிருந்து நாரணனைநெஞ்சில்வைத்து
வாட்டமறச்சிந்தை மயங்காமல்வாழ்குவதை
மூட்டியனலெழுப்பி முச்சுடரையொன்றாக்கி
கூட்டித்திரட்டிக் கொழுந்துமுனைவாங்கி
நான்முகனைக்கண்டு நமஸ்கரித்தப்பாலும்
மாயன்பதந்தேடி மணிபூரகந்தனிலே
நின்றுவணங்கி நெடியோனைப்போற்றிசெய்து
அன்றுபுரமெரித்த ஆரணனார்தன்பதத்தை
வருந்தியேமனதில் வணங்கியடிபணிந்து
திருந்துமகேஸ்வரனை தியானமாய்த்தான்தொழுது
கண்டுமகேஸ்வரனை கருதிமிகவணங்கி
தொண்டுபணியப்பால் தொழுதுசகாதேவன்
அக்கினியிற்சென்று அடங்கியொடுங்குகையில்
தக்கபத்துசீவன் தடுமாறிமூலமிட்டு
பிருதிவியில்வந்தொடுங்கி பேசாமல்மேல்நோக்கி
மாய்ந்தார்களென்று மனமகிழ்ந்தகன்னியர்கள்
மாலுமயனு மன்மதனும்போலாகி
மயிலுமிருந்து விளையாடும்பாவனைபோல்
நால்வரையுங்கண்டு நஞ்கையர்தங்களிலே
மேல்விழுந்துதானது வில்லாமலுள்ளடைந்து
மெத்தமயலாகி மெல்லியர்கள்நால்வரிடம்
உத்தமர்போல்நேராய் உகந்துகிட்டவந்திருந்து
மன்னர்களேநீங்கள் வந்துமேயித்தாரம்
எந்தநாடெந்ததேசம் எங்குவந்தீர்சொல்லுமென்று
விந்தமுறுகன்னியர்கள் விளம்புமென்றுகேட்டார்கள்
அப்போதுதருமர் அன்புடனேதானிருந்து
இப்போதுசொல்லுகிறோம் ஏந்திழையேகேளுமென்று
சீரார்குருநாடு தேசமெங்கள்தேசமென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராளும்பாண்டுமன்னன் தன்புதல்வர்நாங்களுந்தான்
ஏராகவேயக்கலியன் இவ்வுலகில்வந்ததினால்
நேராகநாங்கள் நிலைமைவிட்டுதானகன்றோம்
மாதுதிருலட்சுமிதன் வைகுந்தஞ்சேரவந்தோம்
சாதுவாயுங்களையுந் தான்கண்டோமிப்போது
ஏதுவாகதர்மர் இவ்வசனந்தானுரைக்க
ஓதுவார்கன்னியர் உத்தமர்தன்னிடத்தில்
பாரீர்கண்முன்னால் மாதாக்கள்சொற்கேட்டு
வாரீர்புருஷரே மிருகமதுபால்வாங்கி
வீமன்றனையனுப்பி மெய்யுடையகானகத்தில்
நேயமுடன்வீமன் நிமிஷமேசென்றுபுக்கி
தந்திரத்தினாலே சம்மதமாய்ப்பால்வாங்கி
தொடர்ந்துமிருகமது சொன்னபடிதப்பாமல்
அடர்ந்துமிருகமது ஆரும்பிடிக்கையிலே
சலுதியொருகாலம் தாவனத்திலோர்காலம்
எதிர்வந்தபன்றி இழுக்கவேவீமனுந்தான்
தர்க்கமிட்டுக்கொண்டு சரமாடிநின்றிருந்தான்
மிக்கபுகழ்தருமருடன் விளம்புவதுஞாயமென்று
சென்றுமிருமுந்தான் தீர்க்கமுடன்வீமனுமாய்
அன்றுதர்மர்முன்போய் ஆகமுடன்ஞாயமதை
கேளுமென்றுவன்மிருகங் கிருபையுடன்வீரமுடன்
வாழுவீர்ஞாயம் வகையாய்ச்சொல்லுமென்று
ஒருவருக்குச்சாங்க முண்மைசற்றுமில்லாமல்
தம்பியென்றுசற்றுந் தயவுவைத்துப்பராமல்
தம்பியுடமேனியிலே தயவாகப்பேர்பாதி
நிறைவாகத்தன்னுடல் நேராகத்தான்பிளந்து
குறையாமலேறாமல் கொடுத்துவிடுவீமரென்று
தச்சரெனையழைத்து சதுராகநூற்போட்டு
மெத்தவேதச்சன் உளியுடன்வந்துநிற்க
மிருகமதுண்டு வெகுவாய்மனமகிழ்ந்து
தருகாமல்நான்போறேன் தர்மமோவுந்தனுக்கு
பொறுத்தேனிதுஞாயம் பூவுலகிற்கண்டதில்லை
ஒருத்தேனெனமிருகம் உயர்கானகந்தனிலே
போனதுங்கேட்டிருப்போம் புண்ணியவான்தர்மரென்று
ஆனதினாலுங்களைப்போல் அவனிதனிலில்லையென்றார்
பிள்ளையுமேவீமன் பிரபலமுங்கேட்டிருப்போம்
முன்னமேபாரதப்போர் மூண்டசமர்தனிலே
வல்லிடும்பன்தன்னுடனே வலியமகாசூரனையும்
சொல்லரியகீசகனும் துஷ்டதுரியோதிரனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லசராசந்தனையுதம் நாட்டிலுள்ளவேந்தரையும்
வீரமுடன்காவலுக்கு விருதுதனையளித்து
பாரமுள்ளவீமனுட பராக்கிரமங்கேட்டிருப்போம்
ஈதெல்லாம்பார்த்தனுந்தான் ஈஸ்வரனைத்தானோக்கி
பேதமில்லாபாசுபதம் பெற்றதுவுமல்லாமல்
அசுரர்தனைவென்றதும் அமரர்சிறைமீட்டதுவும்
பசியுடையஅக்கினிக்குப் பாலமிர்தமீந்ததுவும்
பாலாலபிமனையும் பாராமல்தேத்தரசன்
குலமதாக்கொன்ற துயரமதுவைத்திருந்து
தேற்றரசன்தன்னுடனே தேருரும்பாகனையும்
மாற்றரசர்சேனையும் மன்னரையும்கொன்றுபுக்கி
அர்ச்சுனனுமொன்றாய் அப்போதுங்கேட்டிருப்போம்
விரிவானமேதினியில் விரிசுடையசூரனென்று
பாவகுலமென்று பாங்குடனேகேட்டிருப்போம்
மற்றும்நிகழ்காலம் வருங்காலம்செல்காலம்
முற்றுஞ்சகாதேவன் மொழிவதுங்கேட்டிருப்போம்
அப்படியேநாங்கள் ஐவருடசெய்தியெல்லாம்
இப்படியாய்க்கேட்டிருப்போம் இன்னமும்கண்டதில்லை
அவரவரைப்பார்க்க ஆச்சரியமெங்களுக்கு
இவரிவர்தாமென்று எங்களுக்குச்சொல்லுமென்றார்
மங்கையர்கள்தான்கேட்க மகிழ்ந்துதர்மராஜருந்தான்
சங்கையுள்ளபெண்களே தர்மரென்பேர்கண்டீரே
மெல்லியரேநல்ல வீமன்விசயனவன்
சொல்லும்நகுலனிவன் தோகையின்னமுந்தான்
வேந்தன்சகாதேவன் பின்னுள்துரோபதையும்
போதமுடன்வைகுந்தம்போய் புகுந்தாரெந்தனைத்தான்
திருந்துமதின்கன்னியருந் தேவேந்திரன்மகளும்
இருந்துதர்மர்சொன்ன இயல்பதனைக்கேட்டிருந்து
வாருமையாவுங்களுக்கும் வானவர்கோன்தன்னிடத்தில்
சேருமையாவுங்களுக்குந் தெய்வலோகந்தானிருந்து
அருதியென்னுமண்ணைவிட்டு அப்புவியிமலவந்தொடுங்க
வாய்வுசதாசிவத்தில் வந்தொடுங்கியேசுரனை
போயடைந்துதெண்டனிட்டு பூரணமாயுள்ளடங்கி
தேடிவைந்தமதில் சேர்ந்ததுகாணம்மானை
ஓடியொடுங்கியபின் உடலுமிகக்கிருந்து
கழித்துவிழிந்துழன்று கன்மத்தலைசாய்ந்து
அழுத்தமுடன்மண்ணி லடித்துவிழுகுமுன்னே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துசமமாக இருத்தியேநால்வருந்தான்
அடுத்திருந்துசாஸ்திரங்கள் ஆகமமாய்த்தான்முடித்து
நிலத்திலடங்கியபின் நீலவண்ணாதஞ்சமென்று
அலத்தினார்நால்வர் அச்சுதற்குத்தான்கேட்க
வந்தான்சகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்
நந்தாமுகுந்தா நாரணரேநீர்காரும்
மாயோனேஎன்தம்பி வந்தடைந்தானுன்பாதம்
ஆயனாருக்கபயம் அச்சுதரேகாத்தருளும்
தந்தைதாய்போலாகத் தற்காத்தீர்எம்பெருமாள்
என்தம்பிவந்தான்காண் இனிக்காருனக்கபயம்
கண்ணரேகாத்தருளுங் காயாம்புமேனியரே
வண்ணரேநாங்கள் வருகிறோம்கண்டீரோ
என்றுதர்மர்காண இயல்பானதம்பியுமே
நன்றுசகாதேவன் நடந்தான்நமக்குமுன்னே
என்றுமனந்தேறி எழுந்திருந்தார்நால்வருந்தான்
வாழ்த்திமனந்தேறி மாயனையேதான்போற்றி
ஏத்தித்தொழுது இருகையைத்தான்குவித்து
அஞ்செழுத்தாய்தேகம் அஞ்சுபஞ்சபூதமதாய்
அஞ்சுபஞ்சலோகமதாய் அஞ்சுபஞ்சவர்ணமுமாய்
அஞ்சுமுகமாய் அகண்டமெல்லாந்தானாகி
அஞ்சுலகமு மைம்பொன்மகாமேராய்
அஞ்சுதணலாகியுள்ள அஞ்சுபொறியாகி
அஞ்சுமலர்வேள்தனக்கு அஞ்சுபூதபாணமுமாய்
எங்கும்நிரந்தரமா யிப்படியாய்த்தானிருக்க
ஐவரென்றும்போரி லன்றளவுமின்றளவும்
தெய்வமென்றுநாங்கள் சேர்ந்திருந்தோமிப்போது
ஐவர்தனிலொருவ னங்குவந்தான்கண்டீரோ
தெய்வமென்றுநாங்கள் சேர்ந்திருந்தோமிப்போது
மெய்வருந்திநால்வர் விட்டகுறைதீர
எத்தனைநாளோ இப்போதோயிக்கணமோ
அத்தனையுமுன்பெருமை ஆரறியப்போறார்காண்
சித்தமுடனெங்களையுஞ் சீக்கிரமாய்ச்சேருமையா
வித்தகரேவாரும் விண்ணப்பங்கேளுமையா

### விருத்தம்

கேசவாமுகுந்தாவாறோம் கிருஷ்ணதேவாவாறோம்
ராசகோபாலாவாறோம் நரசிங்கரூபாவாறோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசமில்வாசர்வாறோம் தடைகளில்லாமல்நன்றாய்
நேசமாயுந்தன்பாதம் நெடியவாபாருங்காரும்

நாரணர்பாதந்தேடி நால்வரும்நம்பிவந்தோம்
வாரணம்யாளிசிங்கம் வல்லியகரடிபன்றி
கோரணங்கோழிபன்றி கோவிந்தாவுனதுபாதம்
சாரணமாகவந்து காக்கவேவேணுமையா

### கதை

தோத்திரங்கள்சொல்லித் தொழுதுநமஸ்கரித்து
சாஸ்திரமும்சொல்வேதஞ் சகாதேவனைநிறுத்தி
வழிதேடிசெல்வர் மாயன்றனைத்தேடி
தெளிவாகநால்வர் திசைநோக்கியேநடந்தார்
நடந்தார்வெகுதூரம் நல்லதொருநால்வர்களும்
கடந்தார்மலையளவுங் காடுவனாந்திரமும்
கூடேகலந்து உகந்துவரும்வழியில்
கோடேறிவீமன் கும்பிட்டுவாய்புதைத்து
அண்ணாவேயிப்போது அடியேன்சொல்விண்ணப்பம்
கண்ணானதம்பி கருத்துடையசகாதேவன்
விட்டுப்பிரிந்ததென்ன மேதினியில்நம்மைவிட்டு
கட்டுடனேயெந்தனுக்குக் காவலரேசொல்லுமென்று
வீமனுங்கேட்க விளம்புகிறார்தருமருந்தான்
பூமானேமுன்னாள் போகின்றபாரதத்தில்
பேரிட்டுநாள்முகூர்த்தம் பேசினார்சாஸ்திரத்தில்
சீரிட்டுப்போர்முடியத் திருத்தமுடனரவானை
கடைபலியென்றேயிவனுங் கணக்கிட்டதாகையினால்
அளப்பொன்றுமில்லை அதுகாக்கயிவன்தவத்தை
பழிதொடருமென்ன பார்மீதிலேகிடத்தி
வழிநடையிற்போட்டான் வகையேதுமில்லையென்றார்
அந்தமொழிகேட்டு ஆமென்றுவீமனுந்தான்
சிந்தைதெளிந்து சேகரமாய்நாலுபேரும்
வைகுந்தம்நோக்கி வனத்தூடேசெல்லுகையில்
மெய்கண்டதீர்த்தமென்று விளம்புவாரோர்வசனம்
சந்திரகாந்தமென்னுஞ் சாந்தமாவிந்தமது
இந்திரன்வந்ததென்னாளு மிருந்துசிவபூசைசெய்யும்
அந்தமலைமீதிருந்து அந்தமுள்ளதீர்த்தமது
விந்தைமலரெங்கும் விபரீதமாய்ப்பூத்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார்கள்கங்கையது நாசிநதிபோலெனவே
கொண்டார்கள்தீர்த்தமள்ளிக் கோபாலர்தன்னருளால்
அப்பெரியபொய்கைதனி லரம்பையரும்தேவர்களும்
செப்பமுடன்வந்து தீர்த்தங்களாடுகையில்
கன்னியருந்தேவர்களுங் கண்டார்கள்நால்வரையும்
மன்னியசீர்கன்னிகள் வந்துகரையேறிநின்று
பார்த்தார்கள்நால்வரையும் பாதாதிகேசமுதல்
மன்னவரேநாங்கள் வருவிதனையாளாய்ச்
சொன்னபடிகேட்டுக்கொண்டு செய்தோம்நாங்களுந்தான்
எங்கள்பொருட்டாய் இனிகேளும்மன்னவர்கள்
தங்களிலேவேள்விசெய்து தவம்பண்ணிநிற்போரும்
அக்கினியிலூசியின்மேல் அணிவிரலைத்தானிருத்தி
சிக்கெனவேதபசு செய்துமுடிப்போரும்
கால்மேலுந்தலைகீழாய் கடுந்தபசுநிற்போரும்
பால்போலும்எக்கியங்கள் பண்ணிமுடிப்போரும்
தெய்வப்பெண்களென்று தெய்வப்பதியென்று
மெய்வருடியாகம் விரும்பிவளர்ப்போரும்
வேண்டியல்லோயித்தபசு வேண்டுமென்றுசெய்தார்கள்
தூண்டிநினையாமல் சொப்பனத்திற்கேளாமல்
வலியவேநாங்கள் வரவழைத்தநீங்களுந்தான்
பொலியாகுமென்று பூரணமேயெங்களுடன்
வந்துபுரந்தரனை வணங்கியனுதினமும்
முந்துதெய்வலோகம் முழுதுந்தனலாகி
இருக்கலாமென்று ஏந்திழைமார்தானிருக்க
வருத்தமுடனின்ன வகையுமக்குசொல்லுகிறேன்
தீர்க்கமுடன்வைகுந்தம் சேரவேணுமென்றால்
ஆர்க்கமுடியாது அருந்தவத்தோர்கிட்டாது
இரந்தோர்க்குமேதினியில் இல்லாதேயென்பதுகாண்
கேளீரோபூவுலகில் கிருபையுடன்மன்னவரே
ஆளீரோதெய்வலோகம் அன்பாகயெங்களுடன்
ஈஸ்வரனும்பெண்கள் இருவர்தனையேயருகில்
வாசமுடன்வைத்து மருவியிருக்கலையோ
பாவுக்கலைமகள் பண்ணுமறைவேதியனும்
நாவில்தரித்துமவர் நட்பாயிருக்கலையோ
சீதைதனைநெஞ்சில் திருமாலும்வைத்திருந்து
கோதையுடன்கூடிக் குலாயிருக்கலையோ
தேவேந்திரனுஞ் சிறப்பாயிருக்கலையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவேந்தேகூடிக் குலாவியிருக்கலையோ
அதனருகில்பதசில் அறிவாயிருந்தோமே
கண்டாசைகொண்டு கலந்தாசைதீர்க்கலையோ
விண்டாசையெல்லாம் வெறுத்துமுனிவர்களும்
நன்றாயதையறிந்து நாதாக்களெல்லோரும்
ஒன்றாகிக்கர்த்தாவை ஊடுருவக்கண்டோரும்
பூதமோரைந்து புலன்பொறிகள்தானடக்க
நாதமொடுவிந்துமொழி நடுவணியந்தானிருத்தி
நாடிதனையறிந்து நடுவானவட்டமதில்
தேடியமிர்தந் தெவிட்டாமலுண்டிருக்கும்
யோகிகளுமப்போது உலகந்தனிலிறங்கி
போமெனும்விந்தைகளைப் புறம்போக்கியிருக்கலையோ
அறவேவெறுத்து அவனிதனிலாசைவிட்டு
துறவாகவந்ததென்ன சொல்லுமென்றார்கன்னியர்கள்
இன்பமுள்ளகன்னியர்க ளிவ்வசனந்தான்கூற
அன்புடனேதர்ம ரவர்களுடனேசொல்வார்
ஈதெல்லாநீங்க ளெடுத்துரைதீரிப்போது
ஆதலாலந்த அற்பமானவாழ்வைநம்பி
ஈடழிந்துநாங்க ளெடுத்ததவங்குலைய
கூடழிந்துபொல்லாத கொடுநரகில்வீழ்வதற்கு
சொன்னீரோபெண்கள் சோதனையோயெந்தவிதம்
முன்னீர்பொழியும் முகில்வண்ணர்தன்னருளால்
இப்படியுஞ்சொல்வாரோ ஏந்திழையேஎங்களுக்கு
கற்பனையுங்கேட்க கருமமோவெங்களுக்கு
சீரானவைகுந்தஞ் சேரவென்றுபோகையிலே
நேராகநின்று நில்லுமென்றுசொல்வீரோ
ஒன்றுமுறையாமல் ஒவியமேநீங்களுந்தான்
நின்றுவிடுமென்று நெடுமால்தனைநினைந்து
வாகுடையதருமருமாய்த் தம்பிமார்மூவரும்
ஏகுவோமென்று இதமாய்வனத்துடனே
கடந்தாரேவெகுதூரம் காடுமலைகடந்து
வானோரெனல்புவியும் வானகிரிப்பார்மலையும்
போனார்கள்நல்ல புதுமையெல்லாந்தானறிந்து
சேர்ந்தபலநதிகள் தீர்த்தமதுதானாடி
வாய்த்தநல்லருத்திராட்ச மரங்களும்சந்தனமும்
கற்பகக்காவுகளுங் கண்டுமிகத்தோன்றி
நற்புடையசோலையென்று நடந்தார்கள்நால்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமலைக்கப்பால் நடந்துமேயோசனைதான்
வந்தவர்கள்முன்னே வழியில்வெகுவானரங்கள்
கண்டுமனமகிழ்ந்து காலவரேநீர்கேளும்
புண்டரீகமாயனுட பூமிதனில்வந்தீர்காண்
இன்னாளிலுங்களையும் இவ்வுலகில்நாங்காணோம்
என்னாடுஎத்தேசம் எங்கிருந்துஎங்குவந்தீர்
மன்னாநீசொல்லுமென்று வானரங்கள்தான்கேட்க
பொன்னாருந்தருமர் புரையுடையோரேதுசொல்வார்
மன்னர்குருகுலத்திற் பாண்டுமைத்தர்நாங்களுந்தான்
மண்ணாசைவிட்டு வந்தோங்கலிதேவனால்
அத்திபுரத்திலிருந்து அச்சுதனைத்தானோக்கி
பத்தியுடன்கானகத்தில் பரிந்துவந்தோங்கண்டீரோ
சீதமதிவானமைய்யன் செய்தியெல்லாந்தான்கேட்டு
ஆதலாலெங்கள் அநுமார்க்கிளையவன்காண்
வீமனல்லோவென்று விஜயனிடத்தேதனக்கு
கோமானைவெற்றிக் கொடியலவோநாங்களுந்தான்
உம்மானையெங்கட் குரியோர்காணீங்களுந்தான்
எம்மாணையிங்கே யிருந்தீரேயாகில்
நாடுங்கைவந்ததென்றால் நாங்களேவெற்றிகொண்டு
ஈடுபணியுங்களுக்கு ஏவல்செய்துதானிருப்போம்
இங்கிரும்நீரென்று எடுத்துரைக்கவானவர்கள்
தங்கும்புகழுமன்னன் தர்மர்தானேதுசொல்வார்
துங்கமுடிமன்னனுக்கு தொண்டுசெய்யும்நீங்களல்லோ
அடலம்புவியோர்க்கு ஆர்ப்பரித்துநின்றவர்கள்
ஆனதினாலென்னை அஞ்சாதேயென்றுசொல்லி
மானமுடன்காக்க வானவர்தானீரல்லோ
உலகந்தனில்காக்க உங்கள்மேல்பாரமல்லோ
புகழ்ந்துதான்தருமர் பூரித்துவார்த்தைசொல்ல
மகிழ்ந்துதான்வானவர்கள் வைகுந்தமாளிகைக்கு
போதமுடன்போறோம் போகவழியாதெனவே
உம்முடன்காட்டில் நெடுந்தூரம்கூடவந்து
சத்துபதியில்வந்தேன் தாவிவழிகாட்ட
மெத்தமகிழ்ந்து விரைந்துவழிகூடி
நற்றவன்தான்கூடி நடந்தார்வனத்தூடே
இயக்கர்பதியும் இராட்சதர்கள்தன்பதியும்
மயக்கும்புலையர் வல்வேடர்தன்பதியும்
கொலைகூர்பழிக்கஞ்சா குறவரிடதன்பதியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையிற்பலஜாதி வாழுகின்றார்தன்பதியும்
நடந்துமலைகடந்து நாற்பத்தெண்காதவழி
மீதானகானகத்தில் வேகமுடன்தான்நடந்தார்
ஈதாகமுவர்க் கிளையநகுலனுக்கு
மெய்க்கலங்கியுள்ளசைந்து விதியாவுந்தான்முடிந்து
கையசைந்துகா லசைந்து கண்ணுமிகச்சுழன்று
வாக்குத்தடுமாறி மதிமயங்கிவாய்குளறி
தாக்ககற்றுநின்று தள்ளாடும்வேளையில்
வீமன்விசயன் மிக்கானதருமருந்தான்
வீமன்நகுலனையும் போயணைந்தான்மார்புடனே
கார்மறலிதூதுவர்கள் கடுகவாவென்றுசொல்லி
நேர்நகுலன்தன்னுடனே போராடிவார்த்தைசொன்னான்
தூதுவர்கள்வந்த துடுக்குமிகவறிந்து
ஏதுவாகநெஞ்சில் எட்டெழுத்தைநினைத்து
வாதுதிருமால்பதத்தை மனதிற்றியானமதாய்
ஓதுவான்போர்நகுலன் ஓதுங்கியேகாவலுந்தான்
வாகாகவேநடந்து மயேந்திரமலைதன்னில்வந்து
ஏகாந்தமாக யிருந்துசுனைதாண்டி
வந்துசுகமென்று மலைமீதிற்றானேறி
புத்திமிகமகிழ்ந்து புயமென்றுமாமுனியே
பாதம்புரிந்து பரிவுடனேதானிருந்தார்
ஏதுநீரிங்குவந்தீரியம்பு மென்றார்மாமுனியும்
தங்கள்வரலாறுதன்னைத் தவமுனிக்குரைக்க
வேகமுடன்கேட்டு வுகந்தேதுவாய்வார்த்தைசொல்லி
பேராகயெந்தனுக்கு பெண்களையாயிருந்தேன்
மாராமல்நீங்கள் மணமுடித்துயிங்கிருந்து
காடுதனைக்கடந்து காவலரேயிப்போது
நாடுதனையாண்டு நம்மிடத்திற்றானிருந்து
பெரியவரைச்சார்ந்தால் பிறைபோலநாள்தோறும்
வரிசையாய்தான்வளர்ந்து வாழ்வுமிகவுண்டாகும்
சீர்முனையைச்சேர்ந்தால் சிறுமைபெருமைதான்
தார்முனிவர்சொல்லத் தருமர்தானோர்வசனம்
பார்முனியெங்களுக்கு பேராசையொன்றுமில்லை
கார்முனியெங்களைநீர் கடைத்தேற்றவேணுமென்று
எங்களுக்குவைகுந்த மிருப்பிடமேயல்லாது
தங்குவதுமில்லை தரிப்பதுதானில்லைகாண்
கஞ்சமலர்பதத்தை காணவிடைதாருமென்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமெனவேமுனியைத் தரணிதனிலேபணிந்தான்
பணிவிடைவாங்கி பாங்காகமுவருந்தான்
துணிந்துகாலமன்னர் துயராலேதானடந்தார்
அப்பாலுங்கானகத்தில் ஐம்பதுயோசனைதூரம்
மெய்யாகவேநடந்து மெல்லடிகள் கொப்பளமாய்
வருத்தமுடனடந்து வடவாலின்கீழிருந்தான்
கருத்துடனேயங்கிரண்டு கன்னியர்களூசியின்மேல்
பாதமதையூன்றிப் பாரில்விழநீள்சடைகள்
நீதமுடன்தபசில் நின்றார்கள்கன்னியர்கள்
கன்னியரைக்கண்டு காவலர்கள்தான்பணிந்தார்
மன்னவரேநீர்தாமும் வந்ததுதானேதெனவே
கன்னியர்கள்தான்கேட்க கனத்தபுகழ்தருமருந்தான்
பன்னருஞ்சீர்மாதே பத்தினியேவுத்தமியே
சீரார்குருநாட்டில் சேர்ந்ததொருஅத்திபுரம்
பாராளும்புவிராசன் பாண்டுமைந்தர்தன்புதல்வர்
திருவணையமர்ந்ததென்பார் வாய்க்கதம்பிமாரிருவர்
மருவணைமாதேநீசெய் தவத்தினாலிங்குவந்தோம்
கண்டபோதெங்கள் கர்மமெல்லாந்தான்தீர்த்தோம்
கொண்டதவம்பெறவே சொல்லுமென்றார்தருமமே
தருமர்மொழிகேட்டு தயவுவந்துகன்னிகையும்
இம்மைதனில்வேணுமென்ற தெல்லாந்தான்தாரேன்
எங்களுக்குவேண்டியது இத்தவமேபோதுமென்றார்
சொன்னவுடன்கன்னியர்கள் தோத்திரமாய்த்தான்வாழ்த்தி
மன்னர்பெருமானே வைகுந்தந்தான்வருவீர்
என்றுவிடைகொடுத்து ஏந்திழைமார்தானிருந்தார்
அன்றுவனங்கடந்து ஆழிநீர்பொய்கையிலே
தீர்த்தங்களாடித் திருநாமந்தான்தரித்து
காக்கவேயிப்போது கடந்தார்வெகுதூரம்
மேகவளமாய்வளர்ந்த வீரமயேந்திரத்தில்
மாகமுயர்மலைமேல் வந்தார்கள்தானேறி
அங்குள்ளமாமணிகள் அடிகள்பணிந்தேற்றி
பொங்குபுனலாடிப் புண்ணியர்களப்போது
அந்தமலைகடந்து அடவிகளுந்தான்கடந்து
பிந்திவளர்கோசமலை நாட்டிலேதானேற்றி
பவளமணிமேனிப் பரஞ்சுடரேமாமுனியே
துளவவணங்கி தொழுதார்காணம்மானை
அம்மலையில்வாழும் அகஸ்தியர்புலத்தியனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்மைவிஸ்வா மித்திரவதிஷ்டரையும்
ஜனகன்ஜனற்குமாரன் ஜனகமுனிதனையும்
மவுனருங்காளமுனி வாகானகோமுனியும்
சுகருடனேகாசிமுனி சொற்பெரியகீசமுனி
பகருமோர்பெரிய பராசரமகாமுனியும்
சென்றுவணங்கித் திருத்தாள்சரணமென்று
நின்றுபலமனையும் நேமமுடன்கண்டுசென்று
நடந்தார்வனத்தூடே நாகமலைதான்கடந்தார்
கடந்துவெகுதூரங் கடுகநடக்கலுற்றார்
அடர்ந்ததோர்ஆறும் அருவிகளுமலைகளும்
தொடர்ந்துவரும்யாளிசிங்கம் தொழுதுபணிந்திடவே
மகிழ்ந்துகெருடாழ்வார் மலையதுவுந்தான்கடந்து
புகழ்ந்தெண்பதுகாதம் போனார்கள்மூவருமாய்
அவ்விடத்திலுள்ள அதிசயந்தான்பார்த்து
எவ்விடத்துங்கண்டதில்லை இந்தவதிசயந்தான்
கண்காட்சியெல்லாங் கண்டோம்களிகூர்ந்தோம்
விண்காட்சிகாணவென்று விரைவாய்நடக்கலுற்றார்
நடக்கும்வழிதனிலே நல்லமருத்துமலை
அடக்கமாய்நின்ற அதிசயமுந்தான்பார்த்து
தோதகனும்வந்து திருக்கூட்டமாயிருந்து
பாவமுந்தீர்க்குமந்தப் பர்னசாலையிலே
இருந்துயிளைப்பாறி எண்ணமெல்லாந்தான்தீர்த்து
அருந்திபுனல்மூழ்கி அமிர்தமெல்லாந்தீர்த்து
சிறந்துவளர்ந்தோங்கிநின்ற தென்னவனந்தனில்வந்து
துறந்தோர்முனிவருக்குந் தொண்டுபண்ணியப்பாலும்
சிந்தைமகிழ்ந்து திருமால்தனைநினைத்து
மந்திரசோபமென்னும் மேகமலைமீதேறி
செல்லுகின்றபோதே சித்தாதிசித்ரெல்லாம்
நல்லவர்களென்றறிந்து நட்பாகவார்த்தைசொல்லி
எங்கிருந்துவந்தீர் இம்மூவர்களுந்தான்
துங்கமுடிவேந்தர்களே சொல்லுமென்றசித்தர்களும்
சித்தர்களுந்தான்கேட்கச் சீரானதருமருந்தான்
அந்நேரம்நாங்கள் அத்திபுரநகரில்
பாண்டுமன்னர்புதல்வர் பஞ்சவர்கள்நாங்களுந்தான்
வேண்டுமென்பேர்தருமர் வீமன்விசியனிவன்
ஆண்டதொருநகுலனும் அரியபதந்தான்சேர்ந்தான்
மாண்டுசகாதேவன் வைகுந்தந்தான்சேர்ந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுபேர்தனில் அடியேங்கள்மூவருந்தான்
விஞ்சுபெருவைகுந்தம் வித்தகரேசேரவென்று
வந்தோம்வனத்தூடே மலைகடந்துயித்தூரம்
சந்தோஷமாச்சுதுங்கள் சந்நதியைக்கண்டதுடன்
இனிமேல்துயரமேது எத்தனைதானானாலும்
பனியதுபோல்நீங்குமுந்தன் பாததெரிசனையால்
இன்பவைகுந்தங்காண எத்தனைநாள்செல்லுமையா
அன்புடனேசொல்லுமையா அடியேங்கள்போய்ச்சேர
என்றுதருமர்கேட்க இயலானசித்தர்கள்தான்
நன்றெனவேசொல்லுகிறேன் நன்மையாய்ப்பஞ்சவரே
அந்தரத்திலேதிரிந்து ஆகாசமூடுருவு
தந்திரத்தினால்குளிகை சாகசமாயண்டமெல்லாம்
கவனமாயோடியொரு கேசரிமார்க்கமாய்
மவுனமாய்நடந்திருந்தும் வைகுந்தங்கண்டதில்லை
வைகுந்தஞ்சுற்றி வருவோமதையடுத்தறியோம்
மெய்யென்றுகண்டு விளங்கிநாம்வந்ததில்லை
அந்தமட்டுங்கண்டறியோம் அச்சுதரேநாம்தாமும்
இந்தமட்டுநீங்க ளெல்லாந்தனைவெறுத்து
நாடுவிட்டுவந்து நவனாதிசித்தரையும்
காடுதனிற்கண்டீர்காண் கருத்துடையயெங்களைத்தான்
ஈடுநமக்குச்சோடு எதிருண்டோமன்னவனே
மாயனிடசீர்பாதிம் மன்னவரேநீர்பெறுவீர்
தூயதொருதர்மரென்று சொல்லுவார்கேட்டிருப்போம்
கண்டோம்நாமுங்களையும் காவலரேயிப்போது
விண்டோம்நாமுங்களுடன் மெய்விட்டுவாய்திறந்து
கேதாரந்தூரமல்ல கிட்டசமீபமது
பாதாரவிந்தமதில் பஞ்சவரேசேர்ந்திருப்பீர்
என்றுநவசித்தர்கள்தா னேகினர்காணம்மானை
அன்றுதருமர்வீம னர்ச்சுனனுமன்னேரம்
செங்கமலமாது சீதைமகாலட்சுமியாள்
பங்கரேதஞ்சமென்று பார்மீதிலேநடந்தார்
எல்லைகடந்தப்பால் எண்பதுயோசனைதூரம்
முல்லைபிச்சைசெண்பகமும் மல்லிகைபூத்துநிற்கும்
தில்லைவனங்கடந்து செந்திநதிதான்மூழ்கி
வில்லைவனங்கடந்து வேள்விகலைகளூடேபோய்
குன்றுபருவதமுங் கொடுஞ்சரமுங்கடந்து
சென்றுதிருமலைமேல் தீர்த்தங்கள்தானாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புட்பமலரெடுத்து பூசைகளுந்தான்முடித்து
நிற்பனவிலேவிஜயன் நிலவிழிநீர்சொரிய
நெஞ்சுழன்றுகண்சுழன்று நெடுமால்தனைநினைந்து
நலமாகவூழியஞ்செய் தரசனென்றுதானறிந்து
வித்தகரையும்மையும் நான்விட்டுப்பிரிந்தேனோ
நாரணரேகேளும் நல்விருத்தம்பாடுகிறேன்
காரணரேகாத்தக் கடவுளரேகண்டாரும்

## விருத்தம்

கண்ணுங் கருத்துமென்றாகி கவனிப்போரின் னுயிர்களைந்து, எண்ணுமெழுத்துமயராம் வெட்டடசரத்தைப் பிரியாமல், நண்ணும் பாரிலனுதினமும் நாரணரே தஞ்சமென்றே, விண்ணும்புவியுமளந்துநின்ற விந்தைமலர்த்தாள் தருவாயே.

கடியமாளிதாமே கமலக்கண்ணனிங்கிருக்க
முடிவும்வினைகளணுகாது முகுந்தாவெனவேதுதிக்க
விடியவதிர்த்தகார்போல் விந்தையாலயம்வைகுந்தம்
நெடியபதவியுண்டாகி நீயேயருள்வாய்கோபாலா

## கதை

இரண்டுவிருத்தம் இன்பமாய்த்தான்புரிந்து
தொண்டுதிருமால் தொழுதுமனமகிழ்ந்து
வாசமுள்ளதூதுவரும் வானவரும்வந்தெதிரே
நேசமுடன்பார்த்தனையும் நேராகத்தானழைத்து
புஷ்பவிமானமதில் பூரணமாய்த்தானிருத்தி
செப்பமுடன்ரதத்தை சிங்காரமாய்நடத்தி
பொன்னுலகமெங்கும் பூப்பந்தல்தானிறைந்து
மின்னுலகத்தோரணங்கள் வீதியெங்குந்தானிறைந்து
தோரணங்கள்நீளமுமாய் ஜோடித்தார்தாழையினால்
பூரணகும்பமென்னும் பூரித்தாரம்பையர்கள்
ஆலாத்திகற்பூரம் அலங்கரித்தார்கன்னியர்
தாளத்திருவிளக்குத் தானெடுத்தார்பூவையர்கள்
கற்பூரவாசனை கமகமென்றுதான்மணக்க
பொற்புடையவானோர்கள் போற்றிமிகத்தேற்றி
நாரணனார்தன்பதிக்கு நல்லவழியிதெனவே
பூரணமாய்வானோர்கள் போற்றிமிகத்தேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர்தனையழைத்து அவரவர்பயந்தீர்த்த
விஜயனேவானோர்கள் வேந்தரிடபுத்திரனே
குஞ்சரமாமலையைக் குறித்தேயருகில்வந்து
அந்தமலைபிறந்து அருள்முனிவரைப்பணிந்து
இருந்துலவுமாமலையில் இருடிகளைத்தான்பணிந்து
சீருலகமூவர் சீதமெனுமாமனுக்கு
பாருலகுதர்மருடன் பங்காகவேநடந்து
நீண்டமலையருகே நெடியோனைதஞ்சமென்று
ஆண்டவனைப்போற்றி அநேகநெடுந்தூரம்
நந்தவனமும் நல்லமருஞ்சோலைகளும்
மந்தாரைப்பிச்சி மல்லிகைப்பூங்காவனமும்
அந்தமுள்ளபார்த்தனுக்கு அச்சிவந்துதோன்றிடுதே
கொந்துலவுமிப்போது குணங்கிவெகுதோத்திரம்
காலசைந்துகண்ணசைந்து கண்ணுமிகச்சுழன்று
மேலாசைபாசம் மெய்யாசைநாவுலர்ந்து
அங்கங்குளிர்ந்து அக்கினியுந்தானொடுங்கி
பொங்குஞ்சுவாசம் பொறிகலங்கிமேல்நோக்கி
நாடிதளர்ந்து நரம்புமிகப்பதறி
ஓடியொடுங்கும் உண்மைதனைத்தானறிந்து
பொறிகலங்கும்போது போர்விஜயன்தானறிந்து
நெறிகலங்கும்நெஞ்சை நிறுத்தியசையாமல்
இருநான்கெழுத்தை இதயத்திலேயிருத்தி
ஒருநான்கெழுத்தை உள்ளடக்கிமேல்நோக்கி
நின்றெழுத்தைப்பார்த்து நினைவெழுத்தினாலறிந்து
குன்றெடுத்தமாலே கோவிந்தாவென்றுசொல்லி
அத்தனேபோற்றியெங்கள் நீலவர்ணாதாள்போற்றி
மெய்யனேபோற்றிஐயா விண்ணோர்பெருமானே
ஐயரேபோற்றியெங்கள் அடியார்க்கெளியோனே
வேதனைப்பயின்ற வித்தகனேமெய்ப்பொருளே
பாதந்தனைமறக்கேன் பச்சைமுகில்மேனியனே
பேய்முலைப்பாலுண்ட பூரணனேயுனைமறக்கேன்
கண்ணரேயெந்தன் கருத்தினிலேதானிருந்து
அண்ணரேகேளும் அடியேன்சரணமையா
நேயரேயெந்தன் நெடுமால்சரணமையா
சோலையழகா துணையெனக்குமுன்பாதம்
நம்பினேன்காத்தருளும் நாரணரேதஞ்சமென்று
வெம்பியுயிர்மாளாமல் விவரமறிவுடனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரம்பத்தும் அடியேன்பணிவிடைகள்
காண்டீபத்தார்சூரனையும் கட்டாகவேரறுத்து
வேண்டியவானவரை மெய்மகிழவைத்தேன்
வானவர்களும்தேவர்களும் வந்துமலர்சொரிய
தானவருந்தேவர்களுந் தர்மச்செயலென்றுவர
அந்தணர்கள்சூழ்ந்து அரம்பையர்களாடிவர
கெந்திருவர்கணநாதர் கிம்புருடராடிவர
தேவேந்திரன்புலவர் தேர்மீதிலேறிவர
கோவேந்திரனோ குபேரனோவென்பாரும்
தக்கபுகழ்செலுத்தும் தனஞ்செயன்தானென்பாரும்
மெய்க்கும்புகழ்ரம்பையர்கள் மெய்மலர்கள்தான்சொரிய
அந்தரத்தில்துந்துபிகள் ஆலாத்தியேந்திவர
தந்திரக்கின்னரர்கள் சங்கீதம்பாடிவர
சோபனங்கள்சொல்லித் தோகையர்களாடிவர
பீமனருச்சுனனும் புட்பகவிமானத்தில்
தேவர்கள்கொண்டாட ஜெயசோபனத்துடனே
தருமரவருச்சுனனும் சந்திரன்போல்தானிருந்தான்
ராமர்வைகுந்தத்தில் நரநாராயணாவெனவே
கொண்டுவந்துவானவர்கள் கோவிந்தாவென்றுசொல்லி
விண்டுவெடபதியில் வீற்றிருமென்றுவைத்தார்கள்
வந்தானிருந்தான் வைகுந்தந்தான்சேர்ந்தான்
இந்தமகாவிந்தபதம் விஜயனுமேசேர்ந்தபின்பு
பார்த்தனுயிர்போக பார்த்திருந்ததருமருமே
நேற்றிருந்தாரின்றிருக்க நிச்சயமில்லாமல்
காத்திருந்தகூற்று கழன்றோடிப்போனவழி
பார்த்திருந்தநேசம் பதறாலுள்ளடக்கி
காத்திருந்துதானிருவர் கைக்கருமந்தான்முடித்து
செய்துமுடித்து தீர்த்தங்கள்தானாடி
ஏற்றகருமமெல்லாம் இருபேருந்தான்முடித்து
வீற்றிருந்தபார்த்தனுக்கு வேணுமென்றசாஸ்திரமும்
சிவனேதிருமாலே சிவராமாபாருமென்று
அரனேஅரிராமா அச்சுதனேகாருமென்று
தர்மருடன்வீமருமாய் தானிருந்துமாயனையும்
திருமாலேயுந்தன் சீர்பாதமெப்போது
மறவாமலேநடந்து வருவோம்பதிசேர்வோம்
திறமாகவுன்னுடைய சீர்பாதந்தாருமையா
இத்தரணிதன்னில் இவ்வோர்க்குந்தான்துணையாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகரேவந்து வீமனையுமெந்தனையும்
மெய்கலங்கிநில்லாமல் அச்சுதரேநீதுணையாய்
மெய்யுடையதர்மருமாய் வீமனுடன்தானெழுந்து
வைகுந்தஞ்சேர வழியேநடக்கலுற்றார்
ஓங்குமொருபட்சிக் கொருசிறகுவிழுந்தாற்போல்
தங்குமொருசிறகு தனிவீமன்றானாகி
இறசிறகுகொண்டு எதிரில்லையென்றிருந்தேன்
ஒருசிறகுகொண்டு ஒருவரில்லையென்றிருந்தேன்
தீதில்லாநீள்தருமர் சென்றார்வனத்தூடே
ஓதரியவீமரை யொருவனுமேதானாகி
அன்னவர்கள்நால்வர் அருங்கானிலேமடிந்து
மன்னரிருபேரும் வராகமலைதான்சேர்ந்து
சேர்ந்திருந்துதங்கள் தியக்கந்தடுமாறி
வாய்ந்துபுயவீமன் மனதுமிகவுழன்று
தாராருந்தருமரிட தாளிணையைத்தான்தொழுது
சீரானநல்விசயன் சேவித்தானிவ்வனத்தில்
ஏதையாசொல்லும் எனக்கரியவின்னதென்று
சீரானபாரதத்தில் தேர்ப்பாகன்தானாகி
மேகவண்ணர்தேர்நடத்த விசையனாலிவ்வனத்தில்
தேகமதைவிட்டெறிந்து திருமாலிடஞ்சேர்ந்தார்
விசாரமினிவேண்டாம் வீமரேயென்றுசொல்லி
சர்வதுணைநமக்கு உலகளந்தாருண்டெனவே
சிறகிழந்தபட்சிகள்போல் துயரமெல்லாமுள்ளடக்கி
கூடியேசென்று குமுதமலராறுதன்னில்
நாடியேபாதை நடந்தேவெகுதூரம்
தொடர்ந்துவனங்கடந்து தொண்ணூறுகாதவழி
நடந்துமலைகடந்து நாற்பதுயோசனைதூரம்
உற்றகழிமலையும் ஓமகிரியென்னுமந்த
அஸ்தகிரிமலையும் அவ்வனமுந்தான்கடந்து
சாகரமுமலையும் தாங்கள்மிகக்கடந்து
வராகிமலைதன்னை வந்தடைந்தாரம்மானை
நன்றியுள்ளதர்மருமே நாடிசினந்தெழுந்து
பன்றியொன்றுவந்தெதிரே பகட்டியதட்டுகையில்
பார்த்துவீமன் பன்றிதனைப்பிடித்து
நெரித்துகழுத்தை திருமகுந்தவேளையிலே
வேதியன்போல்நின்றான் மிக்கதொருபன்றியுந்தான்
நீதியுள்ளதர்மர் நினைவேதெனக்கேட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுவான்வேதியனும் உள்ளபடிதப்பாமல்
சாதுவுள்ளதர்மருடன் தானுரைத்தான்வேதியனும்
கருதித்தவம்புரியுங் கார்மேகாமுனிவர்
பருத்ததவசு பக்கத்தில்மேலிருப்போம்
தக்கதொருவேள்விக்குச் சமிதைகொண்டுவாவெனவே
சிக்கெனவேவாவென்று செப்பினார்மாமுனியும்
சமுத்தெடுத்துப்போகாத்தான் மரமாகநின்றுவிட்டேன்
குமிட்டிமனங்கோபங் கொண்டெழுந்துமாமுனியும்
அமுட்டியெனைவேண்டி அரோகரித்துச்சாபமிட்டார்
இச்சாபமிட்டார்காண் இவ்வடிவமானேன்நான்
இச்சாபந்தீருவதெப்போ அருளுமெனவுரைத்தேன்
தர்மருடன்வீமன் தனித்துவரும்வழியில்
மின்மருவுந்தர்மர்தனை கண்டுசினந்தெதிர்ப்பாய்
வலுவீமன்கண்டு வாரிப்பிடித்துனையும்
தலையைத்திருகையிலே தான்தீருஞ்சாபமென்றார்
ஆனதினால்சாப மகன்றதுகாணம்மானை
தானவர்கள்வைகுந்தம் மன்னவரேசேருமென்று
போனான்மறையோனும் புகழ்பெரியகானகத்தில்
தேனாருந்தர்மர் சிவனேசிவனேயென்று
இந்திரகிரிசந்திரகிரி என்றுமொருமாமலையும்
அந்தகிரிவானமலை அப்பாலுந்தான்கடந்து
ஓங்கிவளர்ந்ததொரு ஓமகிரிதான்கடந்து
மூங்கில்வனங்கடந்து முப்பதிங்காதவழி
பாங்குடனேபாதாள மூடுருவியப்பாலும்
தாங்குநிலைத்துவாரந் தான்கடந்துஅப்பாலும்
வெளியேறிவந்து வீமனுந்தருமருமாய்
வழிகூடியேவந்தார் மலைகள்வனங்கடந்தார்
இம்பாலிருபேரும் எண்பதுயோசனைதூரம்
மெய்யானகாட்சிகளும் வேணதெல்லாந்தான்பார்த்து
சோமகிரிகண்டு தொழுதுஅடிபணிந்து
நேசமுடன்கானகத்தில் நெடியோனையேநினைந்து
ஆரண்யமானதொரு அடவிதனிலேநடந்து
பூரணமாதொரு புட்பகரநீராடி
கீர்த்திபெருஞ்சக்ரகிரி கிரவுஞ்சமாமலைதான்
கார்த்திகைமாமலையுங் கடம்பவனந்தான்கடந்து
இப்பாலிருபேரும்எண்பது யோசனைதூரம்
அப்பாலுந்தான்கடந்து அகன்றுவருகையிலே
அவ்வசனத்திலேநிமித்தம் ஆர்ப்பரித்துதான்கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வனத்திலேநிமித்த மேதென்றுபார்ப்பளவில்
தாராரும்வீமருக்குச் சக்கரமாச்சுதென்று
நேராகவேநிமித்தம் நிஜமாயுரைத்ததென்று
தர்மர்நினைத்து தனியானோமென்றுசென்றுசொல்லி
விந்தையுள்ளதம்பியரே வீமரேயுந்தனுக்கு
சந்தையுமாய்கூத்துஞ் சரியென்றுதானுரைக்க
பாரியசொல்வீமன் பட்சமுடன்தர்மரையும்
ஆரியரே அண்ணாவே அடியேன்தானோர்வசனம்
உம்மைத்தனியேவிட்டு உடல்குழைந்துநிற்பேனோ
கல்மனதுசொல்லக் கவலைதொலையாது
இறப்பதுவுமெய்யாகும் இருப்பதுவும்பொய்யாகும்
சிறப்பானவைகுந்தஞ் சேர்வதுவுண்மையென்று
எமக்குப்பயமில்லை எம்முடையஅண்ணாவே
உனக்காகஎன்மனது உழன்றதுவேயல்லாது
வேறேகவனம் விடைசற்றுமில்லைஐயா
கூறேனொருவார்த்தை கோவிந்தாநீயறியாய்
தனியானோமென்று சலியாமல்நீர்தாமும்
இனியவைகுந்தம் இப்போதுசேருமென்று
கண்ணர்தனை நினைத்து கருத்திற்யானமதாய்
எண்ணமறஅண்ணாவே இருமென்றுதானுரைத்தார்
சொல்லுகின்றபோது சோத்தியமும்வந்ததுவே
மல்லுபுயவீமனுக்கு மதிமயக்கம்வந்தவுடன்
ஐம்புலனையுள்ளடக்கி அறிவைமிகத்திருத்தி
செம்பொன்றிருநெடுமால் இருதாள்சரணமென்று
அரிநமோவென்று அட்டாட்சரந்தனையும்
பிரியாமல்நெஞ்சில் பிடித்தானிருபாதம்

## விருத்தம்

ஐவர்க்குஞ்சகாயமுன்னா னடைக்கலங்காத்தமாலே
தெய்வர்க்குந்தெய்வமாகித் தேவனாயிருந்தமூர்த்தி
உய்வதற்கருளியென்று உள்ளத்தாலன்புவைத்து
மெய்வர்க்கமாகிநின்ற வேதநாரணனேபோற்றி.

அருமறைப்பொருளேயுந்த னடைக்கலமைவரென்றே
திருக்கடையடைவார்நால்வர் திருவடிசரணஞ்சேர்ந்தோம்
தருமரும்பிறகேவாருந் தனிவழிதனியனாகி
வருவழிபயமில்லாமல் மாயவனேவந்துகாரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும்பொருளும்நீயே ஈஸ்வரசுகமும்நீயே
அன்பருக்கன்பன்நீயே அச்சுதாபச்சைமாலே
துன்பமுமிகழ்ந்துநாயேன் சுருதியேபொருளென்றெண்ணி
நின்பதந்தேடிவாரேன் நெடியவாபோற்றி போற்றி.

முன்னாள் முதல்வா முகில்வண்ணமுகுந்த நந்தகோபாலா, உன்னாளாகி மிருந்தபடியே னுடலைக்கிடத்தியுயிர்பிரிந்து, இன்னாள்வந்த படியதனா லிப்போ வந்தேனே வைகுந்தம், தன்னாளெனவே தற்காத்து சாமிசரணந் தருவாயே.

*கதை*

சங்குசக்கரனேபோற்றி சாமிநமசிவாயாபோற்றி
எங்குமாய்நின்றாய்போற்றி ஏழைப்பங்காளாபோற்றி
சங்குசக்கரனேபோற்றி சாரங்கதரனேபோற்றி
பொங்குபூரணனேபோற்றி பூமகள்வாணிபோற்றி
ஆயனேஅச்சுதனே அன்பர்பெருமானே
நேயனேபாண்டவர்க்கு நேத்திரமாய்நின்றோனே
விண்ணகத்துக்கெல்லா மெய்ப்பொருளாய்நின்றோனே
கண்ணரேயுன்பாதங் கார்க்கக்கடனுமக்கே
எனக்குமதிமயக்க முறுதிவடிவாகி
உனக்கபயமென்று வோதினேன்யான்விருத்தம்
கடைக்கணிருளாகிச் காதோசைவேறாகி
உடைக்கலமுந்தானிழந்து வுயிர்பிரிந்துவானோக்கி
அடைக்கலமென்றுனையே அடியேன்மிகநினைந்து
வந்தவடியோர்க்கு வைகுந்தந்தானருளி
காத்தருளவேணும் சமயஞ்சமயமையா
பொய்கொண்டநெஞ்சன் புலையனுமென்னையிப்போ
வைகுந்தஞ்சேர்த்து வைத்தருளுமாயோனே
பஞ்சாயத்துடனும் பசுந்துளபமாலையும்
கஞ்சமலர்மாதுளையும் கனத்ததிருமார்புடனும்
செம்பொன்மணிமாலையுடன் சிறந்தபசுமேனியுமாய்
அம்பொன்முடியிலங்கி யழகாயடியேன்முன்
ஆடுங்கெருடன் அறியதோர்வாகனமேல்
நீடுந்திருக்கோலமுடன் நீரிங்கெழுந்தருளி
அடியேன்செய்தபிழை அடிமையெனவேநினைந்து
அடியாளும்வைகுந்தம் பாதத்திலேவைத்தருளி
கட்டழகன்வீமன் கருணைக்கடலாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டெழுத்தையும்யுச்சரித்து இறைஞ்சுமினம்மானை
மேகவர்ணர்தன்பதத்தை, வீமனுந்தானுச்சரித்து
தாகமுடனிமையோர் தங்கவிமானத்தில்
கொண்டுவந்துவீமனையுங் கூப்பிட்டதிலிறுத்தி
விண்டுசங்குசின்னம் வீராணந்தான்முழங்க
பைகொண்டநாகமிசை படத்தின்மேற்பள்ளிகொள்ளும்
வைகுந்தம்வாழ்பதியில் வைத்தனர்காணம்மானை
தாமன்றருமன் தனியாகவுள்ளயர்ந்து
வெம்பிமனமுடைந்து வேர்த்துமனம்புண்ணாகி
தம்பியரைக்காணாத தனிமையதுமிகுந்து
தண்ணீர்தனைநினைத்து கவலையெல்லாந்தானொழிந்து
எண்ணமெல்லாம்விட்டு எம்பெருமாளுண்டெனவே
இன்றைக்கிருப்பதுபொய் என்னுடைமையென்பதும்பொய்
அன்றைக்கிருந்தபடி யல்லாதுவேறுண்டோ
பூமிதனில்வந்து பிறந்தோம்புவியாண்டோம்
சாமிதிருமாள் சகாயமதுபெற்றிருந்தோம்
ஐவரென்றுபாரி லரசாகத்தானிருந்தோம்
ஐவர்தனில்நால்வராக நின்றார்களென்னைவிட்டு
ஏதுசெய்வோமென்று இடைந்துருகிநொந்தாலும்
வாதுமலரோன் வகுத்தபடியாமிதுவும்
விட்டுப்பிரியாத வீமனருச்சுனனும்
மட்டுப்படாதநகுலன் வாய்த்தசகாதேவனுந்தான்
மாண்டுவிட்டாரென்று மயங்கியழுதாலும்
மீண்டுவருவாரோ மிக்கானதம்பியரும்
என்றுதர்மர்தேறி இருந்துமனந்தேறி
அன்றுதம்பிவீமனுக்கு அருகாகத்தானிருந்து
செய்யுங்கருமமெல்லாஞ் சீக்கிரமாய்தான்முடித்து
உய்யும்பொருள்நமக்கு உளகளந்தார்தாமெனவே
சிந்தைதனிலெண்ணித் திருமாலைத்தானினைந்து
சந்தையாம்வாழ்விதென்று தானடந்தாரம்மானை
நடந்துவனத்தூடே ராமரேதஞ்சமென்று
கடந்துவெகுதூரம் கைவிட்டசூத்திரம்போல்
திகைத்துமருகித் திசையறியமாட்டாமல்
வகைக்கும்வகையீதெனவே வகைசொல்லுந்தம்பியரே
விட்டுப்பிரிந்து வெறிகொண்டபித்தரைப்போல்
முன்னேவல்செய்து முன்னேவழிகூவி
பின்னேவல்செய்யும் பிறவிகளைக்காணாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தைப்பார்த்து மயங்கிவழிதிகைத்து
கானகத்தைப்பார்த்து கவலைபெரிதாகி
இறகுதிர்ந்தாசலைப்போ லேங்கிமனமுழன்று
பிறவிமயக்கப் பிரமையதுதான்பிடித்து
வாசமுள்ளதர்மருக்கு மயக்கம்வந்துமுடியபின்
நேசமறந்தொரு நினைவுதடுமாறியொரு
மெய்மறந்துநாவசைந்து வேறுபட்டமானதுபோல்
கைமறந்துகால்மறந்து கண்ணிரண்டுமாசடைந்து
நாடிழந்துநின்ற நடுக்கம்பிடியாமல்
சோடிழந்துநின்ற துயரமேதான்மடிந்து
நல்லறிவுகுன்றி ஞானமிருளடைந்து
புல்லறிவுமடைந்து புலம்புவார்தருமருமே

## கொச்சகம்

அந்திரமேயேகவழி யம்பரமேமங்குரங்கள்
சந்திரனேசூரியனே தம்பிமார்நால்வருந்தான்
இந்திரனேவிறைவனே எந்தவழிவந்தார்சொல்
செந்திருமால்வைகுந்தஞ் சேர்ந்தாரோசேர்கிலையோ

பாரேவருவரையே பனிமலர்கள் செண்பகஞ்சேர்
மேரேபரிமளமே மேதினியிற்சானகமே
சீரேசிறந்துபொங்குஞ் சிந்துநதிவாவிகளே
நேரேயெனக்கிளைய நெடுவீமன்காணீரோ

நாகனேநீர்சாரம் கற்சுணங்குமாவிரிய
பூதமேவானரமே போற்றுஞ்சிறுபுள்ளினமே
காகமேவண்ணர் கண்ணரிடவைகுந்தத்தில்
தேகமேவினமன்னவ ரிங்குவரக்காணீரோ
நாக்கரசேபேராலே நாகவல்லிபூரவல்லி
நோக்கரியமூங்கில்காள் நூதனமாயிங்குமொரு
போக்கரியவில்லிபுரந் தானாகதாமருளும்
ஆக்கமிகுந்தழக னர்ச்சுனரைக்காணீரோ
காட்டுபுரவியே கரடிபுலியாளிகளே
கோட்டுதிகிரிமல குஞ்சரமேயிப்போது
நாட்டுப்பரிநகுலன் நாரணரைத்தான்தேடி
மேட்டுக்கரையேறி விரைந்துவரக்காணீரோ
ஆடுமயிலன்னங்கா ளன்னங்காள்கிஞ்சுகங்காள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகுயிலினங்காள் நீலவர்ணமாயிருக்கும்
வீடுவைகுந்தமெனும் வேதசகாதேவன்
ஓடுவதுமெங்கெனக்கு உண்மையாய்ச்சொல்வீரோ
ஏதறியேன்யானும் இடமும்வலமுமறியேன்
தீதறியேன்பொய்யுரையேன் றிருவுளமேயல்லாது
சூதறியேன்வஞ்சகம் துடுக்கறியேன்நீயறிவாய்
மாதுருமார்பானின் வைகுந்தந்தாருமையா

## விருத்தம்

வழியுந்திசையீதென்று வழிதானறியத் தெரியாமல் விருநீர் சொரியமெய்சோர விட்டாயோ வெட்டவெளிதனிலே, இளையோர்பிரிந்த நாள் முதலா யெளியேன்மனது தெளியாமல், அழியாதிருக்கும் பெரியோனே அடியேனை யாதரித்தருள்வாயே.

தாருமெனக்குச்சீர்பாதந் தனியேவனத்திலலையாமல் வாருமெனக்கு வழித்துணையாய் வந்தாலெந்தன் துயர்தீரும், ஆருமெனக்குத் துணையில்லையடியேனொருத்தனானதினால், காருமுனது பதஞ்சேரக் கண்டாய் நந்தகோபாலா.

## கதை

பொருள்மயக்கமில்லையங்கே பூமிமயக்கமில்லை
அருள்மயக்கமானதில்லை அரியயொத்தாசையில்லை
இருள்மயக்காயிப்போ யேதுந்தெரியாமல்
மருள்மயக்கங்கொண்டு மனதுமிகவுழன்றேன்
பித்தரைப்போலாகிப் பிரமைபிடித்துழன்று
அந்தநெடுமால் அரியவைகுந்தமதில்
நோக்கிவரும்போது நொந்துமனம்புண்ணாகி
தாக்குவரும்வினைக்குத் தம்பிமாரில்லாமல்
தனியேவழிநடந்து நானிங்கொருவனுமாய்
இனியார்நமக்கு எம்பெருமாளுண்டெனவே
கங்குதனில்ஆலநிழலிற் கையேதழுவணையாய்
தங்கியேகண்துயின்றார் தர்மருந்தாரம்மானை
சத்துவமன்னவனைத் தானிறையாமென்றுசொல்லி
ஐந்துதலைநாகமது அருந்தாதேநான்விழுங்கி
ஆலிலைமேற்றுயிலுகின்ற அச்சுதநாராயணர்தான்
தலைநாளுறைமொழி தப்பாமல்சக்கரமும்
மற்றதொருநால்வர் மடிந்தபின்னர்தர்மரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துடனேகாத்துவந்த பரிவானசக்கரமும்
வடவானிற்கண்துயிலும் மன்னனையேகாணாமல்
அடவாகநாகமதை அறுத்ததுவேசக்கரமும்
அரவதனைப்பிளந்து அடிவயிற்றுள்ளிருந்து
தர்மர்தனையெடுத்துச் சாந்தமாநல்நிழலில்
துலங்காமலையிடத்துத் தூரநின்றதம்மானை
பூந்தரவமுண்டவும் பூலோகச்சக்கரந்தான்
அந்தரவைகீண்டதுவும் அறுத்தரிந்துபோட்டிடதுவும்
சற்றுமறியாமல் தர்மருந்தான்கண்துயின்றார்
நித்திரையுங்கொண்டு நேராமலெழுந்திருந்து
ஆரறிவார்போல அண்ணர்தமைநோக்கி
ஊரறியப்பாதை யொருவருமேதான்கடந்து
கல்லுங்கரடுங் கடியவனாந்திரமும்
அல்லும்பகலும் ஆகவழிநடந்து
திகைத்துமலைத்துத் திசைகெட்டமானதுபோல்
திகைத்துத்தனியே தவிப்பும்இளைப்பாகி
பேச்சுதுணையும் பின்துணையுமில்லாமல்
மூச்சுவிடச்சற்றும் முத்தியுமில்லாமல்
பக்கத்துணையற்றும் பரதேசிபோலாகி
துக்கஞ்சுகமிரண்டுந் துலைதூரந்தான்கடந்து
உன்னிடநடந்துதர்மர் ஒன்பதுயோசனைதூரம்
கன்னிமலைகடந்து கடியவனந்தான்கடந்து
வருணன்மலைகடந்து வாயுமலைதான்கடந்து
தருணநதிகடந்து தவமலையுந்தான்கடந்து
மிக்கதொருபொய்கை மிகுந்தபெருக்குடைய
புட்கரணிகண்டு புனலாடிபூசைபண்ணி
தம்பிமார்நால்வருக்கும் தர்ப்பணந்தான்முடித்து
கொல்லிமுடித்து சூரியனைத்தண்டனிட்டு
நல்லதம்பிமாருக்கு நாரணரேதஞ்சமென்று
தன்துயரந்தீராமல் தனியேவனத்தூடே
என்துயரந்தீர எத்தனைநாட்செல்லுமென்று
சிந்தைதனிலேயெண்ணிச் சிவனேசிவாயமென்று
விந்தையதுபாருலகில் மேகவண்ணர்தான்கூத்து
பார்க்கும்பொழுது பலவிதமாய்கைகளாய்
தீர்க்கமுடன்தோழர் தெளிந்ததருமரப்பாலும்
மார்க்கமுடன்செல்லும் வழிதனிலேஓர்மலையாம்
ஆர்க்கும்புகவரிதா அண்டகடாகமட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கிவளர்ந்துநின்ற உன்னிதத்தைக்கண்டவுடன்
ஏங்கிமலைத்துநின்ற இதற்குவழியெங்கேயென்று
நாலுதிக்குமோடி நன்றாகஆராய்ந்து
காலுக்கெட்டுந்தூரமெல்லாங் கடவுள்சற்றுமில்லாமல்
வெம்பியுமன்று மெய்மறந்துதருமருந்தான்
தம்பிமாரில்லாதிப்போ தாழ்வுவந்ததென்றுசொல்லி
என்செய்வேன்கோபாலா எவ்விடத்திலேயுரைப்பேன்
முன்செய்ததீவினையோ மூதாக்கள்செய்ததுவோ
ஏதுமயக்கமினி என்செய்வேனந்தரத்தில்
வாதுமயக்கம் மதிமயக்கமாய்மயக்கம்
சூதுதிருமால் யோசனையிதுமயக்கம்
இப்படியாயென்னை இடறுபண்ணிப்பார்ப்பதுவும்
அப்படியுமானால் அடியேன்மலைப்பேனோ
கண்ணாவுனக்கபயம் கானகத்தில்லாருமில்லை
அண்ணாவுனக்கபயம் அருகில்ஒருவரில்லை
அனந்தசனத்தோனே அபயமுனக்கபயம்
வனந்தனிலேவந்து வெறிமயக்கந்தான்தீர
அபயமென்றசத்தம் அச்சுதற்குகேட்கிலையே
அபயமென்றசக்கரந்தான் அழிந்தோடிப்போனதுவோ
சங்குதொனிபண்ண சமயமுனக்கில்லையோ
மங்குமதிமயக்கம் மலர்ந்துதோமோயோனே
ஆயிரநாமம் அசந்துதோஎன்னாலே
பாயிரமாலிலே பள்ளிகொள்ளப்போனீரோ
உன்சித்தமென்று உன்னைநம்பிவந்தவிடத்தில்
என்சத்தங்கேளாமல் இருந்ததென்னமாயோனே
தம்பியருமாண்டு தட்டுழன்றுநான்தானும்
தம்பிமுகம்வாடித் தாவிப்பரதவித்து
நம்பினேனுன்னையென்று நான்வரவும்நீர்தாமும்
வம்புசெய்துஎன்னை மயக்கிவைக்கலாமோதான்
மனதுதடுமாறி மதிமயங்கியிப்போது
தனக்குரிய சமர்த்தறியவேணுமென்று
சித்தமேயல்லாது செயல்வேறுமில்லையென்று
சுத்தமாகத்தருமர் தோத்திரங்கள்பண்ணியபின்
காத்திருந்தசக்கரமுங் கண்ணரிடையேவலினால்
பேர்த்தெடுத்துமாலையைப் பெருங்கடலிற்போட்டதுவே
ஏகவெளியாகி இடையூறுதானீங்கி
வேகமுடன்தருமர் விரைந்துவழிகூடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகமுடனாற்காதந் தாண்டியேயப்பாலும்
அஞ்சனமாமலையும் அதிலுள்ளகூடுகளும்
கஞ்சமர்வாவிகளுங் கண்டுபுனலாடி
மஞ்சுலவுசோலை வனமும்பலகடந்து
பஞ்சமலைநீங்கும் பாரமலைதான்கடந்து
சென்றார்வழியூடே சீரானகானகத்தில்
நின்றார்திகைத்து நெடுமாலெனக்கூற
காட்டகத்தில்வாழும் கரடிபுலியாளிமிருகம்
கேட்டவுடனே கிருபையுடன்தருமரையும்
ஆரவர்தானென்று அறிவுடனேதான்கேட்க
நீரேயினிகேளும் நீதியுடன்சொல்லுகிறேன்
அத்திபுரநாட்டில் ஆனதொருபாண்டுமன்னர்
புத்திரனார்தர்மர் புண்ணியரேநீர்கேளும்
காசினிகாலங் கலியுகம்வந்ததினால்
தோஷக்கலியன் தொடறாமல்நாங்களுந்தான்
பாஞ்சாலிதானும் பஞ்சவர்களைவருமாய்
வந்தோம்வனத்துடனே வைகுந்தஞ்சேரவென்று
சந்தோஷமாயிருந்து தம்பிமார்பாஞ்சாலி
மாண்டிறந்துமுன்னே வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
ஆண்டிபோலாகியிங்கே பரதேசியாகிநின்று
தனியாகிதானுந் தாமரையில்தண்ணீர்போல்
இனியொருவர்காணாமல் இங்குவரவுன்னையுந்தான்
கண்டேனேயென்று கவலைதெளிந்ததென்று
விண்டேன்புருஷா மிருகனந்தனக்குரைத்த
கேட்டுவருமிருகங் கிலேசமிகவுண்டாகி
நாட்டிற்புகழ்தருமரேயுன் ஞாயமதுக்கொப்பாக
இப்புவியில்காணேன் இங்குவந்தீர்நீர்தனியே
ஒப்பெரியவீமன் உயிர்துணையாமெந்தனுக்கு
வீமனிருந்ததொரு வுபசாரமெனக்கருதி
நேமமுடன்நீர்தான் நீதமாயெங்களுக்கு
முன்னாள்வழக்கு மொழிந்ததுநீர்தானே
இன்னாளுனைமறந்தால் ஈடேறமாட்டேனான்
நீதியுள்ளதருமரிங்கே நெடுகவந்தாரித்தூரம்
செய்தியுடனானுஞ் சிநேகமறவாமல்
வருவேன்துணையாக வைகுந்தஞ்சேருமட்டும்
குருவேசரணமென்று கோரியபின்னாக
வாரமிருகமதை வகையுடனேதருமருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறவேசிந்தை தெளியவேஆதரவாய்
எந்தன்மனந்தேற்றி இத்தூரம்வந்தீரே
சந்தோஷமாச்சுதென்று தாயேநீபோமெனவே
தருமரிவையுரைக்கத் தனிமிருகமேதுசொல்லும்
இனிமையுடன்வைகுந்தம் எவர்சேர்ந்தாரிப்புவியில்
நன்மைதுன்மைரெண்டும் நாட்டிலனுபவித்து
சென்மங்கடைத்தேறச் செய்வார்கள்தானதரும்ம்
வைகுந்தம்சேர்ந்து வாரியெடுப்பதென்ன
கைகண்டகோபாலன்காண் காவலர்கள்யான்தாரேன்
அசுரசுரலோகம் அடங்கலுமேயுண்டாகி
விசுரமுடிசூடி வேந்தரைப்போலிங்குவந்து
வைக்கிறேனும்மை மன்னவரேதானிரென்றார்
தங்கமிருகமது தருமருடன்கூட
நல்லதென்றுதருமர் நகைத்தேதுசெப்பலுற்றார்
அல்லவேயெந்தனுக்கு அன்பாகவேயுரைத்தீர்
செல்லவேவைகுந்தஞ் சேரவென்றுதான்போக
நில்லென்றுசொல்லி நிறுத்துவதுஞாயமல்ல
தம்பியர்தருமரண்டை சலிப்பென்றுபொறாமல்
நம்பியெனையரசு நாட்டுகிறோமென்றுசொல்லி
நந்தகோபாலா நரசிங்கரூபனையே
எந்தவிதமானாலும் இதமாகவேநடந்து
விஷ்ணுபதம்சேர்ந்து மெய்மகிழ்ந்துநான்தினமும்
கிருஷ்ணாவதாரனுடன் கிலேசமெல்லாமங்குவைத்து
பாதம்பணிந்து பரிவுடனேபோற்றிசெய்து
நீதமுடனென்னை யனுப்பவேண்டுமென்று
புருஷாமிருகமுடன் போதனையாய்சொன்னவுடன்
பிரியமுடன்மகிழ்ந்து பிரியமாய்த்தான்மறையும்
பாங்காகபின்தொடர்ந்து பாதைவழிநான்கேட்டு
நீங்காமற்பாதை நெறியாய்வழிநடந்து
சீரானவைகுந்தஞ் சேர்ந்திருப்பீரென்றுசொல்லி
பேரானமாமிருகம் பிரியமுடனேதழுவி
தாமேவும்வைகுந்தந் தானுமேதூரமில்லை
மெத்தசமீபமது விசாரமிதுவேண்டாங்காண்
கர்த்தரிடசீர்பாதங் காண்பீரெனவுரைத்து
அனுப்பியேவனமிருக மருங்கானில்வந்ததுவே
சனிபோலுந்தருமர் சருகாமலேநடந்தார்
அரியதிருமாலே அருகாகஎன்னுடனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாமல்நேரே பின்னேதுணையாக
வரவேணுமாயன் வைகுந்தவாசனே
தரவேணுஞ்சீர்பாதந் தரணியிலேயென்றுதருமர்
நடந்தார்திசைநோக்கி நாரணரேதஞ்சமென்று
கங்காதரனாங் காளகண்டநாதரையும்
சங்கரனார்தான்வாழுஞ் சத்திசித்திமாமலையும்
அன்புதிரிகோணர் அருகாகவந்துநின்று

### விருத்தம்

என்றுமறியாப்பொருளாகி ஏகாம்பரமுந்தானாகி
அன்றுமுதலாயின்றளவு மளவாயுத்தந்தீர்க்கமாய்
நின்றுகொடியபுவனமெல்லாம் நீயேயிருந்தபரஞ்சுடரே
ஒன்றுமறியேனுமைபாகா வுடையாருடையபடிகாரும்.

காசிதனிலேவாழ்ந்து கருமமேமிகவுஞ்செய்து
பாசிநீர்போலேயானும் பாரைவிட்டகன்றுசெல்வேன்
தேசிகனாயிந்தச் சட்டையேசுமந்துகொண்டு
வாசனையுடனேயுந்தன் மலரடிபெருகவாரேன்.

மாயனேவாழுகின்ற வைகுந்தந்தன்னிலென்னை
ஆயனேயருகிருக்க லவணியேகடாட்சந்தாரும்
தூயனேநமசிவாயா சோதியேஆதிமூலம்
நாயனேதுணையதாக நடத்துவாய்நமச்சிவாயா

### கதை

தொழுதுவணங்கித் துதித்தவுடனேபரனார்
முழுதுமனமகிழ்ந்து முன்புநின்றாரம்மானை
சாம்பசிவருத்தினார் தன்மலையில்தீர்த்தமெல்லாம்
இன்பமுடன்தானாடி இருந்தங்களைப்பாறி
துன்றிமணிரத்தினகிரி சுனையில்புனலாடி
வேறுகதியில்லையென்றும் வெள்மலைக்கப்பாலும்
ஆயர்தன்மலையு மண்டர்திருப்பதியும்
கூறியதோர்வாழ்கிரியுங் கொடுமலையுந்தான்கடந்து
கால்கண்டவேகங் கடுவேகமாய்நடந்து
பால்வடியுமேனிப் பரஞ்சுடரைத்தானினைந்து
எண்பத்திருகாத மோயாமலேநடந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புற்றுதேசம் பசுந்துளபமேனியெல்லாம்
ஆசைகொண்டுதர்ம ரனேகநெடுந்தூரம்
பாசபலப்பேசி பலமிருகபட்சியோடு
பேசிநடந்து பெருந்துயரந்தான்தீர்ந்து
தேசிகன்போல்வந்தவரைச் சிவலோகபட்சியோடும்
இத்துயரங்கொண்டு எங்குவந்தீராமெனவே
அத்துயரங்கேட்க அரிபட்சிதன்னுடனே
இப்புவியிலத்திபுர மியல்பானதர்மரென்பேர்
மெய்ப்புடையதம்பியரை விட்டுப்பிரிந்தமையால்
மெய்தளர்ந்துயானும் வெகுதூரம்வந்தேன்காணும்
தாழ்ந்துமனந்தேறிச் சலியாதிருமெனவே
வாழ்ந்தநெடுமால்பதத்தை மனதிலுன்னிச்செல்லுமென்று
உள்ளதுசொல்லப் பூரணமாயுளமகிழ்ந்து
வள்ளல்திருவைகுந்தம் மன்னவனேதூரமில்லை
கிட்டுவதுதூரமில்லை கேதாரஞ்சாத்திரங்காண்
சட்டமுடன்தர்மரேநீர் சலியாமலேநடந்து
போமென்றுசொல்லி பூரித்தகமகிழ்ந்து
நாமெங்கிருந்தாலும் நமக்குநீயுண்டெனவே
எண்ணியிருப்பான்கா ணென்னுடையபுள்ளரசே
புண்ணியமேபோமெனவே போவென்றார்தர்மருமே
தர்மருந்தான்புள்ளரசைத் தானனுப்பிப்போனபின்பு
மின்மருவுஞ்சோலை யவ்வனமுந்தான்கடந்து
இப்பால்வெகுதூரம் ஓயாமலேநடந்து
அப்பாலிருக்கின்ற அந்தவனந்தனிலே
கீதாடகியென்னுங் காணப்பிரகாசமதாய்
நீதமுடனங்கிருந்த நீராரெனக்கேட்க
சாதுபதில்தர்மர் சாற்றுவாருள்ளதெல்லாம்
ஓதும்பயனெல்லா முண்மையாய்க்கேட்டிருந்து
எல்லாங்கழித்துஇங்கே இத்தூரம்வந்துவிட்டீர்
பொல்லாங்கினியுமக்குப் போச்சுதுகாணம்மானை
அடுத்தீர்வைகுந்தம் அன்பானதர்மரேநீர்
தொடுத்தீர்பிடித்தீர் துயரமெல்லாந்தான்தீர
எடுத்தீர்தவமுழுதும் ஏதுவதுவைகுந்தம்
கொடுத்தீர்முதலருந்தீர் கோபாலருண்டெனவே
தர்மம்பலித்ததுகாண் தர்மரேயுந்தனுக்கு
கானகமெல்லாங்போய்க்கண்டு கண்ணர்புறம்வந்ததுகாண்
சென்மமுடன்வைகுந்தஞ் சேர்வீர்தவம்பெறுவீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மைதனிலுன்னைப்போல் இப்புவியிலாருமில்லை
என்றந்தபட்சி எடுத்துமிகத்தானுரைக்க
நிறைந்ததருமருமே நீயாரெனக்கேட்க
ஈசனடியார்கள் ஈஸ்வரியேதான்வளர்த்த
வாசமுள்ளபிள்ளைதனை வதைசெய்தேனாகையினால்
கோபமுடன்பாசியுந்தான் சூழ்ந்ததுகாணல்லவென்று
அந்தக்கயிலைவிட்டு அகன்றுநானிப்போது
இந்தப்படியேவைகுந்த மிவ்வீதியேவந்தேன்
செங்கணெடுமாலுடைய திருக்கோலமுள்ளதெல்லாம்
பொங்கமுடன்சொல்லிப் பூங்காவனந்தனிலே
இங்கிருக்கும்பொய்கைகள்தா னென்னதுகாண்மன்னவரே
இந்தத்தலத்தில் இனியதவமிருந்தால்
எந்தப்பலனும் எய்திடுங்காணப்போது
தாமமுடனீயிருந்து தவமுடிப்பீரித்தலத்தில்
மேகவர்ணர்தம்மை விரைந்துதானங்கழைத்து
மவுலிதரித்து மகுடமுடிசூட்டி
பவரியாயும்மைப் பாராளவைப்பேன்காண்
அரசர்மடந்தையரும் அரம்பையருமுந்தனுக்கு
முரசுடையமன்னா முடிசூடுமென்றுரைக்க
பகருமொருபட்சியைத்தான் பார்த்துமிகதருமருந்தான்
செகதலமுமுண்டான ஈசன்தனையழைத்து
தாரணிமேலாசைவிட்டுச் சற்றுமனமில்லாமல்
நாரணனார்வைகுந்த மிடைவென்றுபோகையிலே
பின்னாசைவைத்துப்பேசுவாரேபுள்ளரசே
உன்னாசையாலும் இனிமேலுமெள்ளளவும்
இல்லையங்கேசற்றும் என்மனதக்கேறாது
கலையுருவாக்குவித்த காரணனாருண்டெனவே
பகலுமொழிகேட்டுப் புள்ளரசேயேதுசொல்லும்
இகலுடையவேந்தே என்மொழிதானீர்கேளும்
ஆதிதிருமாலுடைய அன்புற்றநீர்தாமும்
நீதியுடன்தம்பியரே நீநினைத்தால்காரியமோ
வேறுநினைவு விசாரமதுதானுமின்றி
ஒருமொழிநினைவு கோவிந்தாவென்றுசொல்லி
பார்த்திபரேதம்பியர்மேல் பாசமதையகற்றி
ஏத்தியேமால்பதத்தை இறைஞ்சுமென்றாரம்மானை
ஓதரியமுன்னாளில் ஊழ்வினையுமும்மாலே
வேந்தர்விதியை விளக்குவார்பாருலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுபுள்ளுஞ்சொல்ல இன்பமுடன்தருமமே
ஒன்றுமறியாமல் உரைத்தீரேபாருலகில்
ஓங்குபஞ்சபூதம் ஒன்றொன்றுகூடாமல்
தூங்குமயக்கமென்னுந் துயர்கடலிலேவிழுந்து
அழுக்குவினையகற்றி அச்சுதனேயல்லாது
தொழுதேகவேயார்க்குந் தோற்றுதேபுள்ளரசே
என்றுதருமர்சொல்ல இயல்பானபட்சியுந்தான்
நன்றுதான்தருமரென்று நன்றேகிப்போனதுவே
பட்சியும்ப்பால் பறந்தேகிப்போனபின்பு
காட்சியுள்ளதருமர் கதிக்கவேதானெழுந்து
அந்தவிடம்விட்டு அநேகநெடுந்தூரம்
வன்றலருஞ்செண்பகமும் வனமுமிகக்கடந்து
திருக்கோணமாமலைமேற் சென்றிங்கிதமாகி
பார்த்துமனமகிழ்ந்து பாலாறுதன்னில்வந்து
சாற்றுமொருநாள் சதுர்வேதமாமலையும்
தாராருந்தருமர் தருவாய்மனமகிழ்ந்து
சீராரும்பாறையின்மேல் சென்றிருந்தாரம்மானை
பரியமலைதன்னில் பன்றியொன்றுதான்வரவே
கரியதிருமாலை கண்டீரோபன்றியென்றார்
இவனாரெனவே ஏதென்றுங்கேளாமல்
கவனமதுவேறாய் காட்டகத்திலோடியதாம்
ஓடியதோர்பன்றிதனை யுத்தமனேபோமென்றார்
நாடியொருநினைவாய் நடந்தார்வழிகூடி
புலிகரடியாளிசிங்கம் பேரானமற்றுமுள்ள
நலிவுகண்டுமண்மேல் நடக்கலுற்றாரம்மானை
சேனையுடைய செகவீரராசனுந்தான்
கானையவர்வந்து கண்டார்காணதருமருந்தான்
ஆதவனுஞ்சென்று அடைந்தானேயவ்விருளில்
போதமுடன்தர்மர் பூமியேமெத்தையதாய்
நேமமுடன்கானகத்தில் நெடுமரத்தின்கீழாக
தாமிசமாகண்துயின்றார் தருமருமேதானசைந்து
அங்கேபரிதி அருணனுதயமதாய்
பங்கயம்போலாக பருதிவந்துதோன்றியபின்
வண்மையுடன்னெழுந்து வேதவதியாறுதன்னில்
செம்மையுடன்புட்கரணி தீர்த்தமேயாடியதற்கு
செந்திருவையொப்பான தெய்வமடந்தையர்கள்
நீராடிகன்னியர்கள் நீர்க்கரையிற்றானேறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராய்துகிலுடுத்தி சிகையாற்றியேமுடித்து
பூசைகளுந்தான்முடித்து புஷ்பமலர்சாற்றி
ஓசையுடன்காலில் உலாவிவருகையிலே
செப்பமுடன்தருமர் சேரநிழல்தனிலே
தாபமுடனிருக்கத் தான்கண்டார்கன்னியர்கள்
காவுதனில்வந்திருக்கக் காரணந்தானெனவே
வந்தருகில்நில்லென்று மாதரெல்லாந்தான்கூடி
இந்தவனந்தனிலே இத்தூரம்வந்ததென்ன
என்றுசொல்லக்கன்னியர்கள் ஏதுரைத்தார்தருமருந்தான்
மண்ணுலகில்நானும் வாசமுள்ளஅத்திபுரம்
பாண்டுமன்னன்மைந்தர் பஞ்சவர்களைவருமாய்
மீண்டுகலியதனால் விரைந்தேகிகானகத்தில்
இருந்துசிலகாலம் எல்லாந்தான்விட்டிழந்து
திருந்துமொருவைகுந்தஞ் சேரவென்றுவந்திடத்தில்
மடிந்தார்கள்தம்பியர்கள் வனத்திலேநால்பேரும்
இடிந்துமனமுழன்று யிங்குவந்தேனானொருவன்
வழியறியேன்யானும் மற்றதிசையறியேன்
வெளியேதனியாக வேற்றுமுகமாகவந்து
களிகூறக்கண்டேன் கன்னியரேயுங்களைத்தான்
தெளிவாச்சுதெந்தனுக்கு தெள்ளமுதேயிப்போது
உங்களைக்கண்டவுடன் உற்றதுணையெனவே
திங்களொளியதுபோல் தெரிசித்தேன்கண்டீரோ
விந்தைமலர்வைகுந்தம் வீடுபேரெந்தனுக்கு
எந்நாளோவறியேன் எத்தனைநாட்செல்லுமென்று
மைந்தர்களேயெந்தனுக்கு வழிதானும்நீங்களுமே
ஆதரவாய்ச்சொல்லி அனுப்புமென்றார்தருமருமே
அந்தமொழிகேட்டு அரம்பையர்களந்நேரம்
விந்தமதுகோடி விரைந்துவந்தீர்தருமருமே
அதிலும்பதின்மடங்கு அரசனேயுந்தனுக்கு
சதியும்பழியும் சம்பத்துமவனுக்கு
உம்மைமுடிசூட்டி உமக்கேவல்செய்திருப்போம்
நன்மையுடனெங்களைநீர் நம்பியேவாருமென்று
கன்னியர்கள்சொல்ல கருத்துடனேதர்மருந்தான்
மன்னியதோர்பெண்ணரசே மண்ணாசையிலினி
உண்மையாய்ச்சொல்லுகிறேன் உற்றதர்மருமே
தன்மையாய்ச்சொல்லுகிறேன் தற்காத்துநின்றதொரு
அச்சுதனார்பாதமல்லாமல் ஆசைவேறில்லையென்று
நாகவிழிமாதே நடவென்றாரம்மானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேந்தனிதைச்சொல்ல விரைந்துதான்கன்னியர்கள்
வேகமுடன்கானகத்தில் நடந்தார்காணம்மானை
மாதரந்தகன்னியருந் திசைநோக்கிபோனபின்பு
மூவருடன்தர்மர் ஏமன்பதிநோக்கி
மனோமயமோய்ச்சாட்சியதாய் வள்ளல்திருமாலே
அனாதிபொருளான ஆதிமகாமூலம்
வஞ்சியென்னுமுன்னால் மாதுமகாலட்சுமி
நெஞ்சிலனுதினமும் நீங்காமல்வைத்தருளும்
நீலவண்ணர்தங்கை நினைத்துவெகுதூரம்
சீலமுடன்மேருகிரிச் சிகரமதுதான்தெரிந்து
அங்குள்ளதீர்த்தமது ஆடிக்கரையேறி
தங்கமுடிவேந்தன் தொண்ணூற்றுகாதவழி
கடந்தங்கொருவருமாய் கங்கைமலைதானேறி
அடர்ந்தமலைச்சார்பில் அழகாகத்தர்மரும்போய்
சென்றுகங்கைநீராடி சிவபூசைதான்முடிந்து
குன்றுமலைகடந்து கோவிந்தாவென்றுசொல்லி
கேசவனைத்தேடிக் கிருபையுள்ளதர்மருந்தான்
இராஜகோபாலர்திரு நாமமிடும்பூரணமே
ஆறுதனில்வந்துநின்று ஆழமதுவென்றறிந்து
வேறுவெளியெங்கும் விசாரித்துக்காணாமல்
நின்றுமுறையாமல் நெடுமாலைத்தானினைந்து
ஒன்றுமுறையாமல் உழன்றுமனம்புண்ணாகி
சென்றறிந்ததர்மர் திருமாலைத்தானினைந்து

## விருத்தம்

ஆழியும்நதியுங்கேட்ட னக்கரைக்கடக்கவென்றால்
நீதியவாதிதன்னை நீந்தாவுமாட்டேனிப்போ
வாழியேவீமனில்லை மற்றுமோர்தம்பியில்லை
சூழியதுணையுமில்லை சுந்தரநந்தகோபாலா 109

ஆக்கமுநீயேயெந்தன் ஆத்துமமதுவுநீயே
பாக்கமுநீயேயல்லாற் பாலனைவேறுகாணோம்
தேக்கமுந்திசையுநோக்கித் தீரவேயுன்னைத்தானே
நீக்கவோரிலத்தோடென்றாய் நீயருள்நந்தகோபாலா 110

எல்லாப்பாடு பட்டலைந்தே னிளையோன் பிரிந்தநாள் முதலாய், பொல்லாப்பொழிய வேறில்லை பூத்தய்வு முக்கிலையா, சொல்லாய்பெரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகுந்தா துரையோடோடி நான்வந்தால் எல்லாப்பகைக ளெதிர்விடுத்தா யேழையெளியேன் கோபாலா. 111

வருந்தியுனையே யான்தேடி வரவேவெளியில் வெகுமாய்கை, பொருந்திமயங்கி மிகப்பாடி பொல்லா நின்றாள் வேறாக, திருந்தவினையிற் றானுரைத்தார் சிறியாதனக்கு யீடளவே வருந்தியுனது பதஞ்சேர வருவாய்நந்தகோபாலா. 112

கல்லோமரமோ துணையெனக்கு காடோசெடியோ துணையெனக்கு, அல்லோபகலோ துணையெனக்கு வகண்டமோதிருமால் நீயிருந்தற், புல்லோபுனலோ துணையெனக்குப் பூடோநிலமோ துணையெனக்கு, வல்லோபுகழும் பெரியோனே மாயாதுணையார் கோபாலா. 113

ஆறுகுளமு மலையதுபோல் அரியகரடி புலிசிங்கம், ஏறுங்களிறும் பூதகண மிருண்டகெஜ நாதனைப்போல், தூறுங்கடிய வுருப்போலத் தோன்றியெதிரே சோர்வுசெய்தார், தேறுங்கரும மெந்தவிதந் தெளிவும்மதிறமும் நீர்தானே. 114

கெருடாவுனது விளையாடல் நேராயறியேன் கோதகமுற் றிருடாவுனது திறமறியச் செய்வாயுனது தொழிலறியேன், வருடாய்தனையும் வருடாய்நீ மாயாமாயா வுபாயம்நீ, கருடாழ்வாரே யுன்செய்தி கேட்டே யிருப்பேன் கோபாலா. 115

தொடரும்வினைக ளணுகாமற் றும்பச்சடத்தி லழுந்தாமல், அடரும்பகைக ளெதிராம லழியாப் பொருளா யடியேற்கு, இடருங்காலத் துணைப்பதத்தை யெனதுசிரமேயேற்கு, இடரும்காலத் துணை பதத்தை யெனதுசிரமே லனுதினமும், படரும்படியாகக் கிருபையது பாராய் நந்தகோபாலா. 116

சீறியதேவாபோற்றி செந்திருமாலேபோற்றி
ஆரியராமாபோற்றி ஆழியிற்றுயில்வாபோற்றி
பாரியவாறுதாண்டப் பரிவுடன்பாவைதோன்றிக்
காரியமாகவந்து கண்ணிற்றொன்றுவாயே. 117

மாவணிதுளபமாலை மார்பினிலிலங்கவெய்யோன்
பூரணகளபமேனிப் புளகிதநளினமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவணிவையிரமுத்தும் நவமணிபத்துமெந்தன்
தாமணிசிரமேல்நிற்குஞ் சச்சிதானந்தகோபாலா. 118

### கதை

நல்லவிருத்தம் நாரணார்தான்கேட்டு
மெல்லச்சிரித்து மெய்மகிழ்ந்துபூரணமாய்
ஆறுதனைப்பார்த்து அமருமென்றுகோபாலர்
மாறுபுனல்சுவரி வழியாகத்தோன்றியதால்
அந்தவழிநடந்து அப்பாலும்போகையிலே
விந்தைமலர்தருமர் மெய்யறியவேணுமென்று
நந்தகோபாலரப்போ நமனைவரவழைத்து
கருதமருந்தர்மருட கருத்தினைசோதியென்றார்
அந்தமொழிகேட்டு ஆனதொருமாமறலி
சிந்தைமகிழ்ந்தவருஞ் சீக்கிரமாய்த்தான்பரசு
இணக்கமுடன்வாய்க்கண் எங்கும்புழுச்சொரிய
சுணங்கனென்னும்வடிவாய்த் தோன்றினாரம்மானை
வந்துதருமர்முன்னே வால்தனைத்தான்குலைத்து
நொந்துமனமுடைந்து நோக்கிமுகமண்ணாந்து
ஓலமெனஊளையிட்டு ஓடியோடியேதிரும்பி
காலடியில்வந்துநின்ற காலனென்னும்நாய்தானும்
ஆய்துடலில்புண்ணாய் அடர்ந்துபுழுச்சொரிய
சேர்ந்துவிட்டேன்மெத்தத் துன்பவினைக்குயாருமில்லை
யாருந்துணையில்லை சஞ்சலந்தீர்ப்பாருமில்லை
ஆருந்துணையில்லை ஆதரவுதானுமில்லை
என்துயரந்தீர இனியாருமில்லையையா
உந்தன்பிறகே ஓடிவந்தேனகாருமென்று
இந்தச்சுனங்கள் எடுத்துரைக்கதருமருந்தான்
வாராய்சுணங்கேநான் வகையுனக்குச்செய்வதென்ன
சீராகச்சொல்லென்று செப்பினாரம்மானை
சாந்தமுள்ளதம்பியரேநீர் தனியொருவனாகவந்தீர்
நான்தான்துணையும் நம்பினேனுன்பிறகே
வருகிறேனென்னை மனதுவைத்துகாப்பாற்றி
அருகேயனையழைத்து ஆதரவாய்க்கொண்டுவந்து
நம்பினபேரை நட்டாற்றில்தள்ளாமல்
தம்பிரானானதொரு தருமரேசாட்சியென்று
தாழ்ந்துசுணங்கன் தஞ்சமாய்வார்த்தைசொல்ல
ஆழ்ந்தசுணங்கனுக்கு அஞ்சலென்றுசம்மதித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கமுடன்பிறகே வாவென்றுதானழைத்து
போகையிலேயோராறு பூமிதனிற்பெருக
ஏகும்வகைகண்டு இவர்கள்மதிமயங்கி
நிற்குமளவில் நீளவாற்சுணங்கனுந்தான்
அக்கரையிலென்னை ஐயரேகொண்டுசென்று
விட்டுவிடுமுந்தனுக்கு வேண்டுஞ்சுகிர்தமுண்டு
கட்டுடனேதர்மர் கருத்தில்மிகமகிழ்ந்து
பேராறுதாண்டவென்று பேணியந்தவாறுதன்னில்
தானேகுந்தருமர் தானிறங்கியாறுதன்னில்
வாட்டமிகவேசுணங்க வாருமெனவழைத்து
சேட்டமுடன்கையாலே சேர்த்தணைத்துபையவொரு
மார்பிலணைத்து வயிற்றளவில்வெள்ளமது
சோர்வறிந்துதருமர் சுணங்கனையுந்தானெடுத்து
வயிறளவுதண்ணீர் மார்பளவுந்தான்வரவே
புயத்தினாலேதானேந்திப் போனார்சுணங்கனையும்
கழுத்தளவுதண்ணீர் கண்டவுடன்தருமருமே
அழுத்தமுடன்சிரசில் அன்பாய்சுணங்கனையும்
வைத்துசுமக்க வழிந்தொழுகவேகிருமி
மிகுந்துவழிந்தது முகத்துவழியாக
புழுத்தக்கிருமி வெகுதிரளாய்த்தானுதிர
முகத்துவழியாக முதுகுநெஞ்சுநாவுதடு
அள்ளியெரிவதுபோல் அங்கமெல்லாந்தானெரிய
தள்ளிவிடவென்று சற்றுமனமில்லாமல்
அல்லவருந்தருமர் ஆற்றுநடுவாக
செல்லுமளவிற்சுணங்கன் செய்ததொருசேதிசொல்லும்
நான்செய்ததீவினையை நல்லவரேகேளும்
ஊன்சேரும்கோவையை உண்ணவென்றுகொன்றுவிட்டேன்
தேவமறையோர்தம் விரதமழித்துவிட்டேன்
காதலுடன்மங்கையரின் கற்பையழித்துவிட்டேன்
நேசமுள்ளசற்குருவை நிந்தனைகள்செய்துவிட்டேன்
வாசமுள்ளவேதியரை வகைப்படுத்தியான்பிழைப்பேன்
தந்தைதாய்மாமன் தமையனுடன்மூத்தோரை
எந்தனுக்குள்ளாகி ஏவல்செய்யுமென்றுவிட்டேன்
சூதுசெய்தார்தன்னுடன்கூடி துஷ்டருடன்கூடி
தீதுசெய்யும்பாதகங்கள் செய்துவிட்டேனிப்போது
அழிவுவழக்குரைத்து தெரியவழனங்குலைந்து
பழிகொலைகளைவிரும்பிப் பாவங்கள்செய்துவிட்டேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தநன்றிதான்மறந்து தீவினைகள்செய்துவிட்டேன்
எய்துமனைநம்பிவந்தோர்க் கிடுக்கங்கள்செய்துவிட்டேன்
காசினியோர்தாங்களிட கட்டையறுத்துவிட்டேன்
வீரியத்திலுள்ள வேலியறுத்துவிட்டேன்
அறையிலிருந்தோரை அறவேவதைத்துவிட்டேன்
புரையுடையபாகங்களையும் பொல்லாங்குசெய்துவிட்டேன்
எண்ணியபாவ மெத்தனையோசெய்ததினால்
புண்ணியவான்மேனியெல்லாம் புழுச்சொரியவுந்தலைமேல்
வைத்துச்சுமக்க வழிந்தொழுகவேசலமும்
சற்றுமணங்கோணாமல் தான்சுமந்துபோனதினால்
உமக்குச்சுகிர்தமுண்டு ஒப்புடனேசொர்க்கமுண்டு
எமக்குநாகமுண்டு என்னையுந்தான்நீள்தளத்தில்
போட்டுவிடுமுந்தனுக்கு புண்ணியமேயுண்டாகும்
நாட்டுபுகழ்தர்மரேநீர் நன்னீரில்போட்டுவிடும்
பாவமேயான்செய்தேன் பார்நதியில்போட்டுவிடும்
சாதகமாய்வாசமுள்ள சவ்வாதுமிகப்பூசி
துற்கந்தம்போக்கிச் சுகந்தமருகேபூசி
நற்கந்தமாக நடவுமென்றாரம்மானை
தலைமேல்சுணங்கன் தானிருந்தசொன்னதெல்லாம்
அலைமேல்துருழபதுபோல் அந்தமொழிகேளாமல்
பாதகமேசெய்தாலும் பழிகொலைகள்செய்தாலும்
ஆதரவாயுன்னை ஆறுகடக்கவிட்டு
போவென்றுசொல்லப் புல்லறிவுகொண்டுநான்
சாவென்றுசொல்ல தள்ளுவேனோ ஆறுதன்னில்
வேறொன்றுஞ்சொல்லாமல் வெண்சுணங்காநீயென்று
ஆறொன்றுநீந்தி அக்கரையில்தானேறி
வந்துநின்றதருமர் வருகுஞ்சுணங்கனுக்கு
நொந்ததோவுடம்பு ரோமமெல்லாம்புண்ணாச்சோ
வெந்ததோயெந்தன் வேர்க்கைபட்டுமேனியெல்லாம்
நைந்ததோசிந்தை நடுங்குதோயுன்மேனி
என்றுசுணங்கனையும் இதமாயிறக்கிவிட்டு
சென்றுதருங்கால்நாலும் செவ்வையாய்ப்பிடித்துருகி
ஆற்றிமிகப்போற்றி அன்பாய்வரவழைத்து
தேற்றியிளைப்பாற்றி தேகமெல்லாந்தடவ
இன்பங்குளிர்ந்துதப்போ எமதர்மராஜனுக்கு
அன்புடையமைந்தனுக்கு அழகாகத்தன்வடிவு
காட்டிமகிழ்ந்தணைத்துக் கன்னத்தில்முத்தமிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டியெந்தன்புத்திரனே நன்மைசெய்தாய்தருமமென்று
கீர்த்தியென்றுபுத்திரனே கிடைத்ததுகாணெந்தனுக்கு
பார்த்திபனேவகுந்தப் பதிதனக்குச்செல்லுமென்று
எமதர்மர்தானும் எமலோகம்போய்புகுந்தார்
நேசமுள்ளதருமர் நீதியொன்றுந்தப்பாமல்
வீறுடனேயிப்பால் விரைந்துவெகுதூரம்
கூறுஞ்சிகரக்கொடி யென்னுமாமலையும்
பார்த்துமிந்திராணி பஞ்சமிர்தப்பாரையெனும்
ஏந்துமொருகோடான இதலிமலைதான்கடந்து
உற்றதவமெல்லாம் உண்மையாய்த்தான்பார்த்து
சந்திரகேசமென்னும் சத்திசிவமலைதன்னை
இந்திரவிமானம்போல் இருக்குமலங்கார்ம்
பார்த்துபூரித்து பரிவுடனேதானடந்தார்
சாத்துமொருநாள்தான் தரணிதனில்முன்னாளில்
மண்டலத்தில்மாபெலியால் மண்ணுவிண்ணுமோரடியாய்
அண்டமுழுதளந்த அரியோன்மலர்ப்பதத்தை
தோத்திரங்கள்பண்ணி துதித்துமிகப்பணிந்து
ஏத்தியிருதாளை இருதயத்திலேநினைந்து
நோக்கியேதருமரிடம் நாலுவேதசாஸ்திரமும்
ஆடலுடன்பாடலுமாய் அரம்பையர்களாடிவர
ஏடலருந்தருமரையும் எதிராகக்காண்பதற்கு
ஓடிவருவாரம் உபகாரஞ்செய்வாரும்
பார்க்கவருவாரும் பரிமளங்கள்தூதுவாரும்
எதிர்த்துவருவாரும் இமையோர்கள்தான்முதலாய்
வானவர்கள்வந்து மார்க்கமுடன்தருமரையும்
தானவர்கள்வந்தெதிரே தழுவியுறவணைத்து
வந்தார்தருமருடன் மகிழ்ந்துமுகம்நோக்கி
முந்தியேபாரதப்போர் முடிந்ததொருபாவமெல்லாம்
போகவேநீயுமந்தப் பொய்கைகளில்முழுக
பழையவுருவாகிப் பசும்பொன்னிறந்தானாகி
அழகானதருமருக்கு அமலமலர்தூவ
இந்திரவிமானத்தில் ஏறியேதருமரையும்
அந்தரதேவதைகள் அமரருமங்கிருக்க
தேர்நடந்திவானவர்கள் சிறப்பாய்மலர்சொரிய
வார்பிடித்திரண்டருகில் மடந்தையர்களாடிவர
தயக்கமிகவான தருமடரதேரேறி
மற்றுந்தருமன் மலையுமலைச்சார்வுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடுயர்ந்ததாகவும் நித்தமலர்பொய்கைகளும்
காடுஞ்செடியும் கடந்துவந்துயிப்பாலும்
மன்னன்திருத்தோகையும் மாமலையில்வந்திருந்தார்
அன்னவனைக்காக்க அடைக்கலங்காணென்றுமொரு
சக்கரமுஞ்சொல்லிச் சாவுமிகப்பண்ணியபின்
மிக்கதொருசக்கிரத்தால் விசனமெல்லாந்தான்கேட்டு
செங்கண்மால்தான்மகிழ்ந்து சீர்தர்மனுக்கெதிரே
இங்குள்ளயிந்திரன்போல் எதிர்க்கொண்டழையுமென்றார்
அந்தமால்தானனுப்ப அமரபுகோனிந்திரனும்
முந்தவேமுப்பத்து முக்கோடிதேவரெல்லாம்
சித்தவித்தியாதரரும் சிறந்தகாந்தருவர்
சத்திரிஷிமாமுனிவர் தபோதனர்கணநாதர்
கின்னரர்கிம்புருடர் கெருடகாந்தசித்தருடன்
சொர்னமயமான துருவாசமாமுனியும்
தேவரிஷிமாதவரும் தெய்வகன்னிமாதருடன்
பாலகரும்பாடகரும் பாங்கானவேதியரும்
வாத்தியங்கள்தான்முழங்க வானவர்கள்தான்கூடி
கீதம்பயிலுமந்த கேதாரமாமலையும்
ஓதுமொருபத்து யோசனைதூரமென்று
வளர்ந்திருக்குமந்த வடவாலவிருட்சமதில்
தளர்ந்துமிகதவித்து தருமருமேவந்திருந்தார்
இருந்துதவப்பாரில் எழுந்திரந்துதான்பார்த்து
பொருந்துமிடமும் பொருந்திமிகக்கடந்து
செவ்வையாய்கானகமும் சீர்மலையுந்தான்கடந்து
கோவைபடர்ந்தமலை கோபுரந்தான்கடந்து
தோற்றுந்திருக்கேதாரஞ் சோதிமலைகண்டதன்பின்
போற்றியேயப்பதியில் போய்புகுந்தார்தருமருமே
மேடைகளும்மண்டபமும் வெற்றிச்சிகரமுடன்
மாடநெடுங்கூடமுமாய் மதில்கள்தெருவீதிகளாய்
நீர்நிலையும் நிறைந்ததொருவாவிகளும்
ஆதிமதவேழம் ஐயருடசன்னிதியும்
கூடுஞ்சிவாலயமும் கொண்டல்வண்ணராலயமும்
நாடுந்திரக்கேதாரம் நாகரீகமாமெனவே
ஆடுங்கொடிவேந்தன் அங்கிருந்தாரம்மானை
மிக்கவைகுந்தமதில் மேவியசக்கரமம்
திக்குள்ளோர்போற்றுந் திருமாலதனைபார்த்து
பத்தியின்மேலாசையல்லால் பார்மீதிலாசையில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கர்பதிதனிலே எய்தினாரம்மானை
மன்னவவனேயிந்நகரில் வந்திருப்பாய்வாருமென்று
பொன்னகரஞ்செல்லப் போர்வேந்தன்மார்க்கமதாய்
என்னுடையதம்பியர்கள் இரக்குந்தலந்தனிலே
பன்னுமறைவேதியரே பரிவுடனேசெல்லும்
பருதிவாசமது பார்த்தீபரேயுந்தனுக்கு
கருதிமுடிசூட்டுகிறோம் கருத்தடனேநீருங்காண்
அச்சுதனார்வாழும் அரியவைகுந்தமதில்
அச்சுதனார்பாதத்தில் தருமரேசேருமென்றார்
அப்பதியைத்தான்கடந்து அரிராமர்தன்னருகில்
செப்பரியருத்திரர்கள் சிறந்திரக்கமந்நாளில்
சென்றுதருமருக்கு சீராயமரரெல்லாம்
அன்றுமுடிசூட்டவென்று அருள்பெற்றார்வானவர்கள்
இராஜனேயெம்பெருமாள் இருக்குமிடத்தில்
வேறேபதியொருநாள் விரும்போமெனவுரைத்தார்
உடுக்கர்பதிதன்னில் உரையுமென்றுதானுரைத்தார்
இடுக்கம்வரும்வேளைதன்னில் இமையோரோயுங்கள்தர்மம்
நடுக்கந்தவிர்த்து நாயகமாயெந்தனையும்
அடுக்கவேகாத்தருளும் அச்சுதனார்தன்பதிக்கு
போகவென்றுசொல்லி பொன்னுலகந்தனில்வந்தார்
கோகைமலர்மாதினருள் துலங்குமுடிமன்னவரே
தீதில்லாமாநகரில் சிங்காதனத்திருந்து
மாதாக்களரம்பையர்கள் வயிரங்கவரியிட
அத்தமுடனிங்கிரென்று அமரர்கோன்தான்கூடி
இந்தவுலகாள யெனவுரைத்தார்தருமருமே
வானோர்களந்த மறலிதனைவந்துகண்டு
தேனோருடையதர்மர் தேசமெல்லாம்விட்டகன்று
கலிதானும்வந்தமையால் காடுமலைதானகன்று
வலியவந்தமாநகரில் வந்தான்காண்மன்னவரே
அழைத்தேயவன்றனக்கு அரியகவமீயுமென்று
தழைத்தோங்காவாருமென்று சாற்றுமென்றாரப்போது
மறலியும்தான்மகிழ்ந்து மைந்தனையுமந்நேரம்
விரைவுடனேயிங்கழையும் விண்ணவரேயென்றுரைத்தார்
அந்தகன்பால்தருமரையும் அழைத்துமுன்னேவிட்டார்கள்
வந்துபணிந்ததொரு மைந்தனையுந்தான்தழுவி
சிந்தைமகிழ்ந்து செப்புவார்தருமருமே
உத்தமனேயென்பதியை உனக்கருள்வேனிப்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்திசையும்போற்றி இருமென்றார்மாபாவி
அப்போதுதருமர் அன்புடனேசொல்வார்
இப்போதுவிப்பதியில் இருக்கமனதாசையில்லை
அந்நகரில்வைகுந்தம் அடைவதற்குஎன்னையுமே
புண்ணியரேயந்த பொன்னகர்க்கேகுமென்றார்
பாசமுடன்நீர்பொருதும் பாரதப்போர்தனிலே
நேசதுரோணருடன் நின்றுசமர்பொருத
மாமுனிவன்கைச்சிலையில் வலிமைகண்டுமாயோனும்
ஆமுனியேயுந்தன் அசுவத்தாமாவெனவே
சொல்வாயெனுமாயன் சொல்வேனெனநீயும்
அல்லவெனுமாயன் அப்போவெகுண்டுரைக்க
கோபிக்கநீர்பயந்து கூறுகின்றபொய்மொழியால்
தாபிக்கபாவமென்று தானிருந்துஎன்பேரில்
அத்தேசம்போக அருநரகங்காண்பதற்கு
வைத்தார்மணிமார்பன் மன்னவனேசொல்லுமென்றார்
இன்றேதான்பாருமென்று எழுமாயன்நாங்களுமே
சென்றவரிடங்காட்டித் திரும்பியேவாருமென்று
தூதுவனைத்தானனுப்பச் சொற்பெரியதருமருமாய்
போகமுனிநீர்தாமும் புண்ணியரேபாருமென்று
பார்த்துவரும்போதையிலே பலவிதமாய்நாகரீகம்
தோற்றுதுகாணேதெனவே சொல்லுமென்றார்தருமருமே
கற்பகபூங்காவில் கமலசிங்காதனத்தில்
விற்பனமாய்வந்ததென்று வேண்டியதெல்லாங்கொடுக்க
சொர்க்கந்தன்னில்கன்னியர்கள் துலங்குகுடைநிழலிற்
களித்தேயிருப்பாரைக் கண்டேபிரியமுடன்
செழித்துமிகத்தருமர் சிந்தைகுளிர்ந்திருப்பார்
இவர்செய்ததர்மம் ஏதோவெனக்கேட்க
தவமுடையகிங்கிலியர் சாற்றுவார்தருமருக்கு
தக்கதவஞ்செய்து தருமருந்தழைத்தோங்க
துக்கமெனும்பாவம் தொலைந்தோரிவர்காணும்
ஓதுகின்றபல்லுயிரும் ஒன்றாகவேபாரில்
நீதமுடனடத்தும் நிருபரிவர்காணும்
சீருங்கீர்த்தி செலுத்தினோரிவர்காணும்
விளங்கவேதருமம் மேதினியிலெந்நாளும்
களங்கமறச்செய்து கண்டாரிவர்காணும்
பூஜையேசீர் பூஜைகளுந்தான்முடித்து
ஈசுதமிழ்வேதியற்கு ஈந்தோர்முகம்பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்போர்தமக்கு ஈந்தோரிவர்காணும்
அடைந்தோர்கள்தம்மை ஆதரித்தோர்காணுமிவர்
இடைந்தவரைத்தாங்கி இளைப்பாற்றிவந்தார்காண்
மிகுந்ததவமுனிவர் வேள்விகளைக்காத்தோர்காண்
பகுத்தறியுநால்வரையும் பட்சம்வைத்துக்காத்தவர்காண்
மறையோர்க்குநல்ல மாதானஞ்செய்தார்காண்
குறையேதுசெய்தாலுங் குற்றம்பொறுத்தார்காண்
பசித்ததுயர்தீர்த்துக் கனத்தவங்கள்செய்தோர்காண்
கோதானம்பூதானங் குருபூசைசிவபூசை
பூதானமீய்ந்து புண்ணியரேசெய்தோர்காண்
கன்னிகைதானமது காசினியிற்செய்தோர்காண்
இத்தனையுஞ்செய்து இங்குவந்தார்கண்டீரோ
மூத்தவர்கள்தர்ம மூர்த்தியேயென்றார்காண்
தர்மமதுசெய்து தார்வேந்தர்சொர்க்கமது
இம்மைதனிலிப்போது இங்குவந்தார்காணுமிவர்
குன்றுவதுபாழ்நகரம் கொற்றவனேபார்ப்பதற்கு
இன்றுநீர்வாருமென்று ஏகினார்தர்மருடன்
ஒன்றாம்நரகம் ஒருநூறுயோசனைதூரம்
பொருந்திதிருமகளாய்ப் பேருடலுமுள்ளதுவாய்
வருத்தமறியாமல் மாண்டாரைத்தான்பிடுங்கி
நெளிப்புப்புளுவுகளும் நிறைந்தவுதிரங்களும்
உளையமுதலையுடன் ஊறுகின்றஅட்டையுடன்
பாம்புடனேநீர்நாயும் பற்றியபூதிருக்க
சோம்புவார்தம்மைத் துயரமுடன்தர்மர்கண்டு
சிவசிவாவென்று செவியிலிருகையைவைத்து
தவமேதுசெய்கிலையோ தம்பியவர்தாமும்
பொய்யும்புரட்டும் பொருந்தாக்கொலைகளவும்
செய்யாதகாரியங்கள் செய்தோரிவர்காணும்
இந்தநரகமதில் ஏழாம்நரகமதை
நாடியேயேழாம் நரகத்திலுள்ளபாவத்தை
ஓடியேதர்மர் உலாவியேபார்ப்பளவில்
ஏழாம்நரகமதில் கீழாகநின்றாலும்
பாழ்நரகமது பாதாளபாதகமும்
தாங்கமுடிமன்னவனைத் தான்கண்டுதர்மருமே
ஏழாம்நரகமதில் அலறிக்கிடப்பாரை
பாசமுடனருகில் பரதவிக்கும்நூற்றவரை
அடைந்தோர்கள்தம்மை ஆதரித்தோர்காணுமிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைந்தவரைத்தாங்கி இளைப்பாட்டிவந்தவர்கள்
வாகமுடன்தர்மர் வாகுடனேகண்டாராம்
பொல்லாதநூற்றுவரை புழுக்களெரித்துடம்பை
இல்லாதுகொட்டாலை இருசெவிகள்மூக்கதிலும்
ஊடுருவியேதுளைத்து உலாவித்திரிவதையும்
வாடுமுடல்கிடந்து மயங்கிதவிப்பதுவும்
கவ்விமுதலை கடித்துப்பிடித்திழுக்க
மதித்ததொருநூற்றுவர்கள் மயக்கம்வருத்தமெல்லாம்
கதித்தபுகழ்தருமர் கலங்கியுடல்பதறி
அண்டமுறநின்று அரிநமசிவாயவென்று
ஓதுமூலம் ஒருக்குடைக்கீழாண்டதொரு
மாதுபழிமன்னன் மாநரகிற்குள்ளானான்
என்றுசொல்லிதருமர் ஏங்கிமனமுடைந்து
நின்றளவிலிருந்த நெடியதுரியோதிரனும்
விண்டுரைக்கமாட்டாமல் விசாரமாயுள்ளமர்ந்து
கண்டுதர்மர்தன்னைக் கலங்கியேயேதுசொல்வான்

### விருத்தம்

தம்பியே துணையே யான்செய்த சதிகேடனைத்தும் பொறுத்தருளி,
வெம்பித்துயரி லழுந்தாமல் வேண்டுகிறேனெனையே கரையேற்ற
நம்பிகரத்தா லெடுத்தணைத்து நன்மைபெறவே தர்மரேநீ, எம்பியெனையே
வைகுந்தத்திருக்கவினைவந்தவமுனக்கே. 119

யான்செய்தவினையினாலே யழுந்தினேன்நரகில்வீழ்ந்து
நான்செய்ததவத்தினாலே தர்மரேநீரிங்குவந்தீர்
ஊண்செய்தபகையினாலே உடல்தனைக்கிடத்திப்போட்டு
வான்செய்ததவத்தால்வாடி மயக்கமும்தீர்ப்பாய்தம்பி 120

போரார்பெரியதர்மரெனப் பெற்றாய்பெருமையதனாலே
நேரேயானும்தர்மரென்றே நின்றேகொடுமையதனாலே
பாரார்புவியிலுன்னியென்னைப் பகைவர்பெரியபாரதத்தில்
ஈராய்தன் மனதுடனே கிரமமாய் வந்து வகைதாரும். 121

பஞ்சவரைஞ்சுபேர்க்குப் பாஞ்சாலி தனக்குத்தானே வஞ்சகமாய்செய்துபாவ
மட்டல்லோ சொல்லக்கேளும், கொஞ்சமாம் நினைந்தபத்தி கொடியதோர்
நரகில்வீழ்ந்தேன், தஞ்சமென் றுன்னைசொன்னேன் தர்மரேகையைத்தாரும்
122


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதுதான் கபடஞ்செய்து துரத்தினேன் வனத்தில்யானும், ஏகினார் குவலயத்தில் இப்படி நரகம்புக்க, வாதினாற் கொலை செய்து வங்கிஷமதுவுமாண்டு, தீதினால் நரகஞ்சேர்ந்தோம் செய்தமாக்கையைத் தாரும். 123

மாயனார்தூதுவந்தார் மதித்துநான்துதித்ததில்லை
ஆயனார்மனதுக்கேறா தாகவேவரசுபெற்றேன்
தூயவர்பாதம்போற்றித் தொழுதவர்க்கெதிரேபோற்றி
வேயனார்சாகத்தர்மர் ளிரைந்துநீர்கையைத்தாரும் 124

பெருமையுடைய தர்மரே போனாலெக்கு கெதியில்லையே, கிருமியுடலைத் துளைத்துப்பார் கெஞ்சியது பரதவிக்க, உருமியகட்டு நீர்நாயு முருக்கியமுதலை பிடித்திழுக்க, சிறுமைநெடுநாள் பட்டலுத்தேன் தெய்வப்பிறப்பே கைதாரும். 125

வேற்றுமையுனக்கேயப்பா மெய்யுயிராசையெல்லாம்
பார்த்திபனானமூர்த்தி பாரசரம்வந்தாய்சேர்ந்தாய்
நாற்றிசைபுகழுங்கீர்த்தி நரகம்விட்டகலவென்னை
ஏற்றியேகரையில்விட்டு இருக்கவைகுந்தஞ்சேர்ப்பாய். 126

உந்தனைக்கண்டபோதே வுடலுயிர்மகிழ்ச்சிபெற்றேன்
எந்தனைவிட்டுப்போனா லெனக்கினிதுணைவேறில்லை
சிந்தனைத்தீர்த்துத்தம்பி திருவுளமறியநீயும்
எத்தனைத்தருமரேநீர் வைகுந்தஞ்சேருமிப்போ. 127

**கதை**

தேர்வேந்தனானுக்கு செய்தேன்தீவினையால்
ஓர்சடுதானும் உன்மனதிற்காணாமற்
தருமநெறியும் தவமுந்தயிரியமும்
உரிமையுடன்நீயிருந்தாய் உற்பனத்திலும்பரிடம்
வந்தீர்வைகுந்தம் வான்பதியும்பெறுக
முந்தநான்செய்த மோசமெல்லாம்விட்டுவிடு
மன்னவனேயான்செய்த வன்மமெல்லாம்விட்டுவிடு
என்னைநரகம்விட்டு ஈடேற்றத்தான்பாரும்
ஏராதபாவி யிவையுரைக்கத்தான்கேட்டு
தாராருந்தர்மர் தயவுடனேதானோக்கி
பேதறமறப்பார்த்துநின்ற பேர்பெரியதருமருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதரியகிங்கிலியர் உகந்தேதுசொல்வார்கள்
பார்த்தீபன்செய்ததெல்லாம் பாவமேயல்லாது
ஏற்றதொருதர்மம் இவன்செய்தானில்லையென்றார்
இவன்பரகதிக்கு எய்வதுமெப்படிகாண்
தவமுடையதருமரேநீர் சாற்றுகிறீரென்றுரைத்தார்
திருத்தவேதானதருமஞ் செய்திலரேயாமாகில்
பொருந்திப்போநான்செய்த புண்ணியத்தில்பேர்பாதி
மன்னனுக்குநன்றாய் மகிழ்ந்தேநானிப்போது
சொன்னேன்காண்தூதுவனே சுகமாகநீர்காணும்
பூலோராஜனையே புழுக்குழியைவிட்டேக
மேலாகதூக்கிவிடு மென்றாரேதருமருமே
அந்தமொழிகேட்டு ஆனதொருதூதுவனும்
வந்ததொருகாந்தாரி மைந்தனையேகைதூக்கி
கூசாமல்தானெடுத்து கூட்டினார்மன்னவனை
ஆதாரமாக அண்ணன்துரியோதிரனை
தாராருந்தர்மர் நடந்தோளுறவணைத்து
சீரார்மகிழ்ந்து தீவினையெல்லாமாற்றி
தாராருமன்னன்முன்னே தான்சென்றாரம்மானை
பாரார்புகழ்மன்னன் பாண்டுமைந்தன்தான்வருக
இருவர்வரக்கண்டவுடன் எமராஜன்தான்கலங்கி
அருவினைகள்மாபாவி அவன்வருவதேதெனவே
எமதருமன்கேட்க ஏற்றதொருதூதுவனும்
நியாயமுடன்வாய்புதைத்து நின்றேதுசெப்பலுற்றார்
புகழ்தருமர்செய்துவந்த புண்ணியத்தில்பேர்பாதி
இகழாதிவ்வேந்தனுக்கு ஈந்தாரெனவுரைத்தான்
கேட்டுமகிழ்ந்தேஎமன் கிட்டவேமுன்னிருத்தி
வாட்டமில்லாமன்னனுக்கு மகிழ்ந்துரைத்தாரம்மானை
நடந்துதர்மஞ்செய்தவர்கள் நல்லநலம்பெறுவார்
அடர்ந்துதுன்பஞ்செய்தவர்கள் அவதிமிகப்படுவார்
இன்றேதான்கண்டோம்நாம் எமதருமன்றான்பொழிந்து
முன்னேபெரியோர்கள் சொன்னமொழிகேட்டிருப்போம்
ஆயர்நெடுமாலிவற்கு ஐந்தூர்விடுக்கவென்று
ஈயிருக்கத்தானும் இடமில்லைவிடுக்கவென்று
தெரிந்தவன்றான்செய்த தீமைப்பொருத்ததொரு
பரிந்துதர்மர்புண்ணியத்தால் பாதியிவர்க்கீந்ததினால்
ராஜரிஷிகாணுமிவன் ரத்தினமுடிசூடுமென்றார்
பாசமுள்ளதர்மர் பகுந்துரைத்தாரில்வசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையோர்மகிழ்ந்து இராஜரிஷியென்றுபட்டம்
அமையமுடிசூட்டி அங்கிருக்கவேதருமன்
கோற்றுமாநகரம்விட்டுச் சுற்றத்தாருள்ளோரை
ஏற்றங்கரையென்று எமதர்மர்தானுரைத்தார்
வையகம்மகிழ்ந்துமன்னர் வங்கிஷத்திலுள்ளோரை
எமதர்மர்சொற்படிக்கு சொர்க்கத்திலேற்றினரே
துதிக்குந்தருமனையே மகிழ்ந்துரத்தம்வந்ததுபோல்
வர்க்கமுள்ளசொர்க்கமதில் வைத்தாயெனவேதான்
சேனார்தொடைமார்பன் தெய்வத்தருமனையே
வானோர்களெல்லாம் மகிழ்ந்தனர்காணம்மானை
அந்தச்சிறுமைந்தனையே அன்பாய்முகம்நோக்கி
உந்தனுக்கேயிந்த உலகமெல்லாம்நான்தருவேன்
துங்கமுடிசூட்டி சொர்க்கந்தனையாளுமென்றார்
அங்கேமறலி அருளினார்வேந்தனுக்கு
தர்மரதுகேட்டு சரணமெனப்பணிந்து
சென்மமழிந்தாலும் செய்தகர்மம்போனாலும்
எம்பிரானெம்பெருமாள் இறையோன்வைகுந்தமல்லால்
நம்பியேயோரிடத்தில் நான்தரியேனென்றுரைத்தார்
மகன்றனுக்குமாற்றி வைகுந்தம்வாழ்பதிக்கு
உகந்துநீர்செல்லுமென்று உபசாரமாயுரைத்தார்
சிந்தைமகிழ்ந்திப்போ செல்லும்வைகுந்தமென்று
கிடந்தசுற்றமுள்ள துரியோதனன்றனையும்
அடைந்தசொர்க்கஞ்சேருமென்று அன்புடனேவாருமென்று
வானோர்கள்தர்மரையும் மகிழ்ந்துரதமேற்றி
சேனாதிபதிதர்மர் செல்லலுற்றாரம்மானை
அந்தரத்தில்துந்துபிகள் ஆர்ப்பரிக்கும்பேரொலியும்
முந்தினபேரிகையும் முரசினிடபேரொலியும்
ஏழுகடல்போல்வானுலகம் எத்திசையுமேமுழங்க
அகத்தியெனுமயேச்சுரரும் அந்தவிமோசனமும்
மதத்தில்கௌதமரும் வசிஷ்டர்அரசருடன்
சொல்லுஞ்சவுமியரும் துருவாசகாசிபரும்
வல்லபுயமாதவரும் வருணன்முதலுள்ளோரும்
எட்டுதிக்குபாலகரும் ஏற்றவசுக்களுடன்
கோட்டுசெத்தலோகங் குமுகுமெனத்தான்முழங்க
மாணிக்கத்தால்சமைத்த வச்சிரமணிமண்டபமும்
ஆணிக்கனகம் அழுந்தியசிங்காசனத்தில்
ஓதுபதினாலுலகம் உலகம்படைத்தோரும்
வேதரும்நன்றாக வீற்றிருக்கும்வேளையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தமுனிவர்களும் தேவர்களுஞ்சூழ்ந்துவர
பரிந்துவரும்தருமர் பணிந்தார்காணம்மானை
இறைநான்முகத்தோன் இவராரெனக்கேட்டு
நீதிவான்குருகுலத்தில் நீள்பாண்டுதன்புதல்வன்
தர்மனிவன்றான்காணும் தரணிதனிற்கலியன்
பெருமையுடன்வந்ததினால் பேருலகந்தானிருந்து
ஆதிநெடுமால் அரிகேசவன்பாதம்
நீதிவைகுந்தம் நினைத்துவந்தாரென்றுரைத்தார்
தானவன்போய்த்தருமர் தனக்கெங்கெதிராக
வானவரேசொல்லுமென்று மாமறையோன்கூற
அழைத்துவந்துமுன்னே அடிபணிந்துவிட்டார்கள்
தழைத்தோங்குதர்மரென்று சாற்றினார்வானவர்கள்
செப்பரியநான்முகத்தோன் சிந்தைதனில்மகிழ்ந்து
ஒப்பரியதர்மர் உலகமதிலெப்போது
நன்றாகச்செங்கோல் நடத்தும்விசேஷமெல்லாம்
குன்றாதமுனிவன் கூறினான்கேட்டிருப்போம்
நன்றிசெய்சகாயமுடன் நன்றாகவிளங்குவார்தான்
புண்ணியவானென்றுடமிகப்போதமிமகிழ்ந்து
இன்னுமிந்தப்பூவுலகில் இவர்கதையுண்டோவென்று
அன்னத்தின்மீதில்வரும் அவனுமெடுத்தரைப்பான்
எவ்வுலகந்தன்னில் அரசாளவைப்பேனான்
வேண்டியதுகேளெனவே வேந்தன்மகிழ்ந்துரைக்க
ஆண்டவனேவைகுந்தம் அமையுமென்றார்தர்மருக்கு
ஏதுமிவர்க்காசையில்லை இறைவனேயிப்போது
தூதுவரையும்வேந்தர் தவத்தின்பம்வேண்டி
வந்தாரிவரெனவே வானோருரைத்தபின்பு
சிந்தாகுலமடைந்து திசைமுகனுமேதுரைப்பார்
தர்மர்தனக்கிப்போ தானவரேவானவரே
அறத்திலுள்ளோர்வானோரும் அருமுனிவர்நாதர்களும்
பிரமரிஷிதீர்த்தம் பிரமரிஷியென்றுரைத்தார்
மெய்கண்வாழ்தர்மர் விரும்பிவருவதற்கு
நன்மணிசேர்மண்டபம் நற்கணக்கர்மண்டபமும்
மற்றும்வைடூரியம்பேர் மாணிக்கமண்டபமும்
கத்துங்கல்முகத்துடனே கனகத்தூண்பண்டபமும்
புட்பராகம்பதித்த புதிதானமண்டபமும்
கற்பமிகுரத்தினமணி தான்சமைத்தமண்டபமும்
துய்யகோமேதகத்தால் தூண்சமைத்தமண்டபமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையமகிழ்புட்ப ராகத்தூண்மண்டபமும்
சிங்காரமண்டபமும் சீர்பளிங்குமண்டபமும்
வங்காரமண்டபமும் வச்சிரத்தூண்மண்டபமும்
வீறானபாட்டை மேற்கட்டுமண்டபமும்
மாறாதகண்ணாள் மாளிகையின்மண்டபமும்
விரைந்துநல்லசந்தனத்தால் எழுதியதோர்மண்டபமும்
நிறைந்துநல்லசந்தனத்தால் நிலமெழுகுமண்டபமும்
மந்தாரைப்பிச்சி மலர்தூக்குமண்டபமும்
கந்தபொடியரசுங் கமகமென்றமண்டபமும்
சாம்பிராணிகற்பூரம் தான்மணக்குமண்டபமும்
ஆனதொருகஸ்தூரி யால்மணக்குமண்டபமும்
ஆறிரண்டாழ்வார்கள் அமர்ந்திருக்குமண்டபமும்
கூறுமொருபொக்கிஷங்கள் வைத்திருக்குமண்டபமும்
நீண்டகெருடக் கொடியுடையநன்மதிலும்
அண்டஅநுமக் கொடியுடையமண்டபமும்
உப்பரிகைமேடைகளும் உயர்ந்தசிகரமுமாய்
அப்பெரியதேவர் அலங்கரித்துமாளிகையில்
துய்யதொருமாணிக்கத் தோரணமுந்தான்கட்டித்
மாயனிடமாளிகைகள் வகையாலங்கரித்து
போத்தியிவ்வீதியெல்லாம் புனுகுமணம்வீச
கீதப்பரிமளங்கள் கெந்தப்பொடிசந்தனமும்
வாசனைகளாக மல்லிகைமுல்லைபிச்சி
பேசரியவெட்டிவேர் பெரியமருக்கொழுந்து
கமகமெனவாசங் களபமொடுதீபம்
பொட்டெனவேவைகுந்தம் போலவலங்கரித்து
மாசில்லாதருமருடன் வானவர்கள்தேரேறி
ராசகோபாலரிட நகர்தனிலேவந்துபுக்கார்
மண்ணுலகில்வாழ்தருமன் வைகுந்தவாழ்பதிக்கு
எண்ணரியதேவருடன் இங்குவந்தோமென்றுசொல்லி
கேசவனுந்தான்மகிழ்ந்து கெம்பீரமாகவேதான்
வாசமுனிவர் மற்றுமுள்ளதேவருடன்
சக்ரமுஞ்சங்குந் தரித்தமணிமாலையுடன்
எங்கெங்குங்கொண்டாடச் செங்கருடன்மீதேறி
மாலைதுளபமணி மாலையதுதானணிந்து
வாகனையதர்மரென்று வந்தனர்காணம்மானை
அண்டபகிரண்டம் அண்டமெல்லாமொன்றாக
உண்டமொருபாதமதில் ஒடுந்துண்டமேருவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டுநான்செய்ய பாக்கியமாயீதேது
கண்டுனதுபாதங் கண்குளிரதெண்டனிட்டு

### விருத்தம்

கண்டபோதே களிகூர்ந்தென் கனவினைக் கசடறுத்தேன், அண்டர்புகழும் பொற்பாத மடியேன் பணியத்தவங்கள் பெற்றேன், தொண்டனிவனா மென்றெண்ணிச்சொல்லும் பெரியவைகுந்தம், குண்டலந்தனிலே யெனையிருத்துங் கோவேநந்த கோபாலா. 128

ஆதரவாயுன்னைக்கண்டே னல்லிருளகன்றதிப்போ
மாதவாயென்றன்சிந்தை மயக்கமுந்தீர்ந்ததிப்போ
சீதவாதுளமார்பா தேவகிநந்தகோபாலா
கீதவாயிறைவன்சேருங்கிருஷ்ண வைகுந்தஞ்சேர்ந்தே.

ஜானகிராமராமா சரங்கராமராமா
மானகரயோத்திராமா மாதவாவாசுதேவா
ஓம்நமோராமராமா ஓங்கியதுளசி நாமா
தானவாவுனதுபாதஞ் சரணமேகண்டேன்கண்டேன்.

பட்டேன் புவிலுன்னடியேன் பாசங்களைந்து வருமளவும், விட்டேனுணர்வதனைமறந்து விதரமுனது வைகுந்தம், வட்டையேறி கடந்துவந்தேன் மறலிமறையோன் வானவரும், தட்டியழைத்தார் சுகம்பெற்றே தொழுதேனுனைநான் றொழுதேனே.

### கதை

மாயாமுகுந்தா மாபாரதந்தனிலே
ஆயர்குறிப்பறிந்து ஆதவனைத்தான்மறைத்து
சீராகவீமனுமாய் வேற்றரசனைவென்று
தாராவிசயனுந் சாகாமற்காத்தனையே
ஆனைநின்றுமூலமென்ன அந்தமடுக்கரையில்
கானில்வந்தங்குசென்று காகுத்தாவென்றுசொல்ல
தொழுதுதாள்பணிந்தான் துயரமெல்லாந்தான்தீர்த்தான்
சாற்றுபுகழ்தருமருந்தான் சரணமென்றுமாயனையும்
ஏற்றதொருமாயன் இருமென்றுதானுரைத்தார்
போற்றிநித்தம்பூசைபண்ணி பொற்கொலுவில்தானிருந்தார்
வீற்றிருந்தார்தர்மர் விரேதணிந்துமாளிகையில்
பொய்யில்லாவாசகனே புவிராசமன்னவனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயன்முகுந்தன் அரிகேசவனானவனே
செய்யும்புகழ்தருமருந்தான் திருமாலிடம்நடந்தார்
கூறியமாபெலிதான் கோவிலும்வாசல்தன்னில்
வீறுடனேதானணிந்து மேகவண்ணர்தாமும்நின்றார்
மாயனுந்தருமருமாய் வாசலில்வந்தாரெனவே
தூயதொருபாபெலிக்கு தூதுவர்தான்போயுரைத்தார்
விரைந்தங்கேமாபெலியும் வேகமாயோடிவந்து
காணாமற்றேவர்களும் நான்முகனுந்தான்தேடி
காணாதபாதமதை கடையேன்பொருட்டாகக்
கொடியேன்சிரசில் கோபாலர்வந்துநின்றார்
அடியேன்பொருட்டாக ஐவருமிப்போது
இங்கேயெழுந்தருள யேதுதவஞ்செய்தேனோ
சங்கேந்துமாலே சரணஞ்சரணமென்றார்
திருமாலேயிங்குவாராய் செப்புமென்றார்மாபெலியும்
குருகுலத்தார்தருமரிவர் குணமும்பெருமையுள்ளோன்
சாதகமாய்நாள்தோறும் சத்தியவான்காணுமிவர்
நீதமுடைவன் நீனிலத்தில்மன்னவர்க்கு
தக்கபுகழ்செய்யுந் தவமுமுடையவன்காண்
மிக்கனைநான்வென்று வேண்டியேவந்தேன்காண்
மாபெலியேயென்றுரைக்க மாயோனேநம்முடைய
ஏவலினாலைவருந்தா நிருந்தாரேரூபமதில்
தாழ்ந்ததொருசற்றோராய் தாழ்த்திருப்பீர்கண்டீரோ
வாழ்ந்தாரிவர்பெருமை மாதாவேசொன்னீரோ
தங்கும்பொன்நேரதனில் தற்காலஞ்சேர்ந்திருப்பார்
புக்குமந்தக்காலம் பொன்னிறமாகலையோ
அழுதான்கருணைவழி ஆனந்தநீர்சொரிய
தொழுதுகாண்மாபெலியுந் தோத்திரங்கள்சொல்லியபின்
ஆடினான்மெய்மகிழ்ந்து அரிகரியென்றுசொல்லி
பாடினானுளமகிழ்ந்து பச்சைமால்பாதமதில்
செங்கைமலர்ப்பாதஞ் சேர்வைபண்ணிநித்தமுமே
இங்கிருக்கப்போமோநான் என்னதவஞ்செய்தேனோ
என்றுசொல்லிதருமர் ஏற்றுகின்றதோத்திரமும்
மன்றலகுமாயோன் மனமகிழ்ந்துதருமரையும்
வாருமென்றுதானழைத்து வானவர்களன்னேரம்
தானவரும்வானவருஞ் சதுர்முகவிந்திரனும்
தேடாயபாதந் தெரிசிக்கப்பெற்றனையோ
ஆடல்புரிதருமரே அரிபதஞ்சேர்ந்தனையோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுசொல்லிவனத்தி லிமையோர்மகிழ்ச்சியுடன்
அன்றுதான்கட்டி அணைத்தார்காணம்மானை
மற்றுமந்தவானவர் வானோர்தனைநோக்கி
கொற்றவனைக்கொன்று செம்பொற்கோவிலிலேவாருமென்றார்
பரிந்துதருமர்கோவில்பக்கம் பச்சைமால்தான்மகிழ்ந்து
இருந்தங்கிமையோரை எம்பெருமாள்தானனுப்பி
என்றுதான்மாபெலியு மிவ்வசனந்தானுகந்து
நின்றதொருமாயோனும் நேராகயிப்போது
ஆகிலுந்தானின்னமொன்று அருளக்கேள்மாமுனியே
நாதமுடன்கேளுமென்று சாற்றினாரம்மானை
பரிந்துநல்லவேதியர்கள் பதினாயிரம்பேர்க்கு
தெரிந்துமொருவேள்வி தினந்தோறும்பண்ணிவைத்தார்
மற்றுமோராயிரம்பேர் மாமறையோர்களுக்கு
நின்றனன்தருமர் நிறையக்கொடுத்தவன்காண்
நன்றாய்மனுநீதி நடத்துமுறைதனிலே
குன்றான்மலாரிவென்று கொண்டாரிவர்காணும்
இல்லோரிறப்போர் இளைத்தோர்தங்களுக்கு
எல்லோருயிரு மிவனுயிர்போற்காத்தவன்காண்
சத்தியவாழ்வை தவறாமல்பூவுலகில்
நித்தியம்நீதி நிலைநிறுத்தும்புண்ணியர்கள்
தங்கள்மும்மாரி சிறக்கமிகப்பொழியும்
பொங்கும்பசுவும் புலிவாழுமோர்பதியில்
உண்ணுந்தண்ணீரில் உறவுமிகவுண்டால்
மண்ணுலகிலிந்த மகிமையிவர்நீதியது
வழக்காகவீமனுடன் வரும்புருஷாமாமிருகம்
பழவாருந்தர்மருடன் பக்கலில்வந்துநின்று
வருந்தியிவர்தானும் வழக்கென்றுதான்கூற
பிந்தினான்வீமன் பிறந்துகொள்ளென்றனன்காண்
தெரிந்துதுரோபதையைத் துரியோதிரன்பிடித்து
பரித்துதுகிலுரியப் பார்த்துநின்றநால்பேரும்
வில்லம்புதீவட்டி வெகுண்டுசினந்தெழுந்து
பாரின்மேலாசையற்றுப் பரிந்துயிங்குவந்தான்
சேரவேதானிருந்து தீங்கொன்றும்பேசாமல்
ஆவலுடனிங்குவந்தான் அன்பாகநம்மருகில்
மாபெலியேயென்று மகிழ்ந்துரைத்தார்மாயோனும்
என்றளவில்மாபெலியும் இகபரமுந்தான்முழுகிச்
சென்றுதருமரையும் சிந்தையறத்தான்தழுவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னரேநீர்காண் வருந்தியேசெய்தவத்தில்
இன்னகரில்வந்தாய்நீ என்றுமிகப்புகழ்ந்து
உற்றதொருதருமருக்கு உபசாந்தமாயுரைத்து
மற்றுமந்தமாபெலியும் வணங்கினாரம்மானை
மாபெலியுந்தானிருத்தி மாயோனேயுன்பாதம்
காதலனால்தருமரையுங் கையுடனேகொண்டுசென்று
பேராரும்பார்த்தனும் பிரகலாததேவருடன்
தாராருநாரதனுஞ் சதுர்வேதமாமுனியும்
பக்தியுள்ளஆழ்வார் பன்னிருபேர்களுடனும்
வீற்றிருக்குஞ்சோலைதன்னில் மேகவண்ணர்கோவிலிலே
போற்றியேவானவர்கள் பொற்றாளடிபணிந்து
தங்குந்புகழ்தருமருக்குச் சக்கரமுந்தான்தரித்து
பொங்கும்திருமால்பாதம் போற்றிநின்றுவானோர்கள்
அங்கவர்தம்மை அச்சுதனார்தாமிருத்தி
தங்கள்முதல்வேந்தருடன் திருமாலெழுந்தருளி
குளிர்ந்தமலைச்சோலைதன்னில் கோபாலர்தானடைந்தார்
அழுத்தநவரத்தினத்தில் அலங்கரித்தார்மேடைதன்னில்
செல்லும்பொழுது திரள்வீமவிஜயனுடன்
தேகைதிரௌபதையுஞ் சுகிர்தரவர்தம்மையும்
இருவரையுங்கொண்டு எதிரேயெழுந்திருந்து
அரியபொருள்கண்டவர்போல் அரியிணையடியில்
வந்துப்பணிந்து மலர்கள்மிகச்சொரிந்து
சிந்தைபணிந்து சேவித்துநிற்பளவில்
தம்பிமார்தங்களையும் தருமரெடுத்தணைத்து
எம்பிரான்சீர்பாதம் இறைஞ்சினோம்பாதமினி
நந்தகோபாலா நரசிங்கரூபமுடன்
விந்தமதில்நடந்து மெய்தளர்ந்துவிட்டீரே
என்றுரைத்ததம்பியரை இயல்பாகஜவர்தான்
மண்ணாலவுமாயோனை மகிழ்ந்துரைத்தாரம்மானை
இன்னகரிலிப்போது இருமென்றுதானுரைத்தார்
ஆனந்தப்பருதிகொண்டு ஐவரும்நீராடி
தானந்தமானவள்ளல் சாத்திரமுடிசூடி
மாயவனார்தாமும் மனமகிழ்ந்துதான்வாழ்த்தி
நேயமுடன்கொண்டுசென்று நிருத்தியஞ்சேர்மண்டபத்தில்
அன்பாகநம்மிடத்தில் அருகேயிருமெனவே
இன்பமாகவே யிருமென்றாரம்மானை
நாரதனார்தாமுதலாய் தவமுனிவர்தான்கூடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரானநால்வேதந் திரும்பவேபாருமென்று
வீரசிங்காதனத்தின்மே லிருமென்றுதானுரைத்தான்
பாரதங்கொள்மாவேந்தர் பரிந்துமிகவீற்றிருந்தார்
வெண்கவரிதான்வீச விருதுபலமுழங்க
தங்கமணிமண்டபத்தில் தம்பியருந்தர்மருந்தான்
ஏந்திழையேதம்மோடு இருந்துபணிமாற
ஆய்ந்தமடமாதர் அரம்பையர்களாடல்செய்ய
அச்சுதனார்நேசம் அகலாதபஞ்சவர்கள்
மெச்சுபுகழ்வைகுந்தம் வீற்றிருந்தாரம்மானை
பொய்யிலார்கையில் புண்ணியமேசெய்ததினால்
செய்யும்வெகுதர்மமெல்லாம் தேவியேசெய்தபலன்
பாதிமதிகாணாத பச்சைமால்தன்பதத்தில்
வினிதசுபபஞ்சவர்கள் மேவினர்காணம்மானை
பேருற்றபஞ்சவர்கள் காணாதவிந்தநகர்
கண்டாரிவரென்ன கனகசபைதான்முழுதும்
அண்டர்முனிவோரும் அதிசயமாய்கொண்டாடி
மெய்கண்டார்கண்டார் வெளியிலொளியிருந்தார்
வைகுந்தங்கண்டார் வாசமுள்ளபஞ்சவர்கள்
என்றுகதைசொல்ல ஏற்றசெனமேசெயன்
சென்றுதிருச்செவியில் செவிமடுத்துநன்றாக
ஓசையால்கேட்டு உளமகிழ்ந்துதானிருக்க
வாசமுடன்போற்றுகிற பழையகருப்பட்டதுவும்
வெண்பட்டுமாகி விருமையதுதானீங்கி
பண்பட்டவார்த்தை பழையபடிதான்பேசி
வறுமையகன்று மேதினியோர்கொண்டாட
பெருமையுள்ளபஞ்சவர்கள் புவியாண்டுவிந்தமதில்
போனவதிசயந்தான் புதுமையிதுதானென்று
ஆனசெயமேசெயர்க்கு அறிவுமிகவந்ததினால்
சத்தியவான்வசனம் சற்றேவிளங்குதென்று
பத்தியுடனப்போது பஞ்சவர்கள்கோவிலொன்று
கட்டிமுடித்து கைகுவித்துபூசைபண்ணி
திருஷ்டிகழித்து திருக்கோயிலாலயமாய்
பூமிதனிலிந்த பூலோகங்கொண்டாட
ராமனேராமாவென்று நாதமணிநாதனாட
திருவிளக்குநின்றிலங்கத் தீபமுடனதீபமதாய்
பரிமளங்கள்வீசப் பஞ்சவர்கள்கோவிலொன்று
வருவார்பணிவார் தன்வினைகள்தானகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியார்கள்காட்டி விளங்கியலோகமெல்லாம்
அவரதிசயங்கள் அன்புடையோர்கொண்டாட
தருமர்கதையென்று தரணியிலேதுதிக்க
காமமகலத் கற்பனைகள்விட்டோட
நோய்கள்பலவுந்தீர நொந்தமணங்களிக்க
பிணிகள்பலநீங்கி பிரமஹத்திதானந்தீர
குட்டங்குணவாய்வு குலைமுட்டிதானந்தீர
அட்டங்குணவாய்வு அடங்காதபிணிசமும்
வெட்டைகரப்பன் வெடிசூலைமேகமுதல்
துட்டக்கிரந்திபல தோகைகாமாலையுடன்
அந்திரவாய்வு அண்டபவுத்திரமும்
முந்திஇடுப்புவலி முழங்கால்கரப்பனுடன்
சன்னிகரப்பான் கடியாண்டமாயுடன்
அன்னக்கிருமி அழிநீரிழிவுமுதல்
பல்லுக்குத்தும்பல்லாணி பாண்டுநீராம்பலுடன்
ஒடுக்கத்துடன்பருகல் ஒக்கச்சுரமுதலாய்
ஈளையிருமல் இளைப்புபெறுவயிறும்
கோழைகுவளைக் கொடியபிணிசமும்
வாதகரப்பான் மண்டைசொறிகரப்பான்
காதிரைச்சல்கண்புகைச்சல் கனமாகடவைமுதல்
வெட்புதைப்பு வலுத்தபில்லிசூனியமும்
பலவாதிபித்தம் பழுத்தரத்தகாசமுதல்
பத்துவயிறொளைகள் கண்டிப்புகெண்டையுடன்
அடுத்தநடுக்கல் அசதிதந்தவாதமுதல்
வலிப்புமிசிப்பு வாய்நோய்வரட்சியுடன்
சலிப்புமிளவை கண்ணோசைவிப்புருதி
கண்டிவல்விழுப்பிருமல் தாதுநட்டமானதுவும்
அண்டவலிஅகோரமாய் அத்தாரைவாய்முதல்
பருப்பபடுவன்சில்விஷங்கள் பண்டிப்புதொண்டைவலி
கருப்பழிதலூர்கிருமி கனவுமிகச்சொப்பனமும்
உள்ளுருக்குநோயும் உடலெலும்புருக்கி
வெள்ளுளுவைவெண்கடு வீங்கும்பெரும்பாண்டு
எரிபிளவைகரிபிளவை ஈடுமுறைபாடுமுதல்
அரிபிளவைசப்பாணி ஆனந்தவாய்வுடனே
அழல்நோய்பொருமல் அடைப்புநீர்கல்லடைப்பு
வெள்ளைகுழந்தைகட்கு வந்தவியாதிகளும்
சீதசுரம்பார்வை சேத்துமத்தின்கேட்டாலை
வாதசுரம்பித்தசுரம் வலுத்தசுரமானதுவும்
எழுநோயராகி வழுந்தவியாதிகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுநோயரான பாரிசவாய்வுமுதல்
தீருமென்றுமாயன் திருவாய்மொழிந்தபடி
அருந்தவமுடையார் அரிகரியென்றுசொல்ல
வாக்குமனமொன்றாய் மகிழ்ந்திருந்தான்கேட்க
பார்க்கும்பழிபாவம் பறந்துவிடும்சத்தியமே
என்னதவமானாலும் இரட்சித்துக்கேட்போர்க்கு
சொர்ணமயமாக சொல்லுவாள்துரோபதையும்
பிள்ளைதவமும் பெருந்தவமும்தான்கொடுத்து
கிள்ளைத்துரோபதையும் கேட்டவரந்தானீந்து
நேயமுள்ளகாரியந்தான் நிமிஷத்தில்வேணுமென்று
வீமனுதவிசெய்ய விஜயன்மனமகிழ்ந்து
சென்றுசெலுத்தித் திசைகளெட்டுங்கீர்த்திபெற்ற
வென்றநகுலன் வெகுவரங்கள்தானீய
மருத்துஞ்சகாதேவன் மற்றுள்ளநோய்பலவும்
பன்னுமொருஞான பார்வையால்தான்தீர்க்க
தருமர்கொலுவாக தான்கொலுவிலேயிருக்க
கருமம்பறந்தோடக் கசடுவினைதீர
சத்திவிளங்கச் சகலபிணிதான்தீர
வெற்றிகொண்டபாரதம்போய் விண்ணுலகுமண்ணுலகும்
அங்குதிருமாலிடத்தில் ஐவர்சிறந்திருக்க
இங்குமவர்தானிருக்க ஏற்றவரங்கொடுக்க
பெற்றார்பெருமையென்று பேருலகில்கொண்டாட
உற்றாருறவோர் உகந்துபணிமாற
பூங்காவில்வாசனைகள் போதவேதான்வளர்க்க
தூங்காமணிவிளக்குச் சந்நிதியில்நின்றிலங்க
சாம்பிராணிவாசம் சந்நிதியெல்லாம்மணக்க
தேம்பாமல்நாதமணி திருச்சங்குதான்முழங்க
தீராவினைதீர்க்கும் தீர்மும்சவுரியமும்
தாரார்செனமேசெயன் தானறிந்துபோற்றிசெய்ய
பொறுமையுள்ளபஞ்சவர்கள் பூலோகந்தன்னிலிப்போ
வெறுமைபிடித்திருந்த மெய்மறதிதான்தீர்த்தோம்
விதிவசத்தையாராலும் விலக்கமுடியாதெனவே
அதிசயமாய்கொண்டாடி அத்திபுரநகரில்
வீற்றிருந்தசெங்கோல் விளங்குமுடிசூட்டு
பார்த்திபருஞ்சூழப் பார்மன்னர்தான்சூழ
சிங்காதனத்திலிருந்து செங்கோல்செலுத்துதற்கு
மங்காவுயிர்க்கருட வாக்கியமுந்தான்கேட்க
நினைத்தசெனமேசெயன் நெஞ்சுருகித்தான்கேட்டு
அனைத்துயரும்வேத வியாசரதுவறிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுலகம்விட்டு பூலோகந்தன்னில்வந்தார்
மின்னுலவுமந்த வேதவியாசரையும்
கண்டுசெனமேசெயன் கண்களிக்கத்தான்போற்றி
தொண்டனுக்குப்புத்தி தோற்றமுடனுரைப்பார்
அந்தவிவரமதை யராய்ந்துபாராமல்
வந்தபிரமஹத்தி மாற்றிவைக்கவேண்டியென்னை
பஞ்சவர்களைவர் பாராண்டுபாரிழந்து
வஞ்சமில்லாவைகுந்தம் வாழ்பதிக்குப்போனகதை
கேளுமென்றுசொன்ன கிருபைபடிதானும்
நாளுமொருமாதம் அகன்றதுகாண்மாமுனியே
நாளும்பிரமையது அகன்றதுகாண்மாமுனியே
கோளும்வினையும் கொடுமைகளும்தான்விலக்கி
போனதினாலைவர் புதுமைஅதிசயத்தால்
தானமுடன்கோவில் தான்சமைத்துபூசைபண்ணி
வானவரேயெப்போது வைத்துவணங்குகிறேன்காண்
நாமுந்தன்பாதம் நாள்தோறும்நான்மறவேன்
என்றுசெனமேசெயன் இவ்வார்த்தைதான்கூற
அன்றுகுருவேத வியாசர்கவிகளது
சத்தியவாண்மை தவராதாரிப்போது
நித்தியமாயெங்கும் நிரந்தரமாய்நின்றவர்கள்
இங்குமிருப்பார் எவ்வுலகந்தானாள்வார்
அங்குமிருப்பார் அமரரோடாசனத்தில்
நல்லவர்கள்பஞ்சவர்கள் ஏற்றவம்பெற்றாரெனவே
வல்லவர்கள்மாமுனிவர் மகிழ்ந்துசெனமேசெயனும்
அந்தசிங்காசனத்தில் நன்றாயிருந்துசெங்கோல்
அந்தமுடன் பூவுலகில் மன்னனாயிருமெனவே
வாழ்த்திவிடைகொடுக்க மகிழ்ந்துசெனமேசெயனும்
போற்றிநமஸ்கரித்துப் பொற்பாதம்பூண்டுகொண்டு
சாற்றியமாமுனியைச் சரணமென்றுதான்தொழுது
பூருவத்தரசுநாட்டிப் பூவுலகனைத்தும்பூட்டி
வேறுபசையுங்காட்டி மித்திரபேதமாக்கிக்
கூறுமுற்கதையுங்காட்டிக் குலத்தொழில்புரியவிட்டில்
பேர்பெற்றஐவரென்று பெருமையைமுடித்தாய்போற்றி.

அடியேன் செய்த பிழைபொறுத்தீ ஏரசுநிறுத்தி வினையறுத்தீர், சிறியேனுனது மகவாகச் சித்தமிரங்கி யனுதினமும், வெளியேயகல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைபுரிந்தீர் விட்டகுறையும் நிறைவேற்றி, குறியாய்மகுடமுடிசூட்டுங் கோவேயெனது குலக்கொழுந்தே. 153

இன்னஞ்சிறியேன் கலியுகத்திலிருந்துமெலிந்து வாழாமல், முன்னஞ்சுபேர்க்கு நூற்றுவதற்கு மொழியும் விவரமதுபோக, வின்னஞ்சுமராநெடுஞாயம் விரும்பியுரைத்துவடியேனை, தன்னஞ்சறிவுதானதுபோல் தற்காத்தருளுஞ் சற்குருவே. 154

முன்னாள் நடந்தவழிவசமு முறையுமெனக்குத் தெரியாது. இன்னாள் நடக்கும்விபரிதத்தா லென்னைமறந்து சகியாமல், அன்னாட்கலியன் வந்ததினாலைவர் நடந்தாரியிடத்தில், பின்னாளுமக்கு நானடியேன் பேசாதடிமை வாழ்வேனே. 155

குருகுலத்தரசர்க்கெல்லாங் கொற்றமாயுற்றபோது
வருகெனச்சமையமென்பேன் வருந்தருள்புரிந்துநீரும்
குருவெனத்தடுத்தாட்கொண்டு யேங்கறன்வடியன்மீதில்
தருவெனக்கனகமீயுஞ் சற்குருநாதாபோற்றி. 156

## கதை

தோத்திரஞ்சொல்லித் தொழுதசெனமேசெயனையும்
வாழ்த்திவிடைகொடுத்து மகாமுனிவர்தான்போனார்
வேதவியாசர் விண்ணகத்துக்கேகியபின்
சாதுசெனமேசெயன் தாரணியோரரசன்
இருந்தான்கொலுவி லேகசிங்காதனத்தில்
வந்தார்தமக்கு வணங்காதகோவேந்தாய்
கலியுகத்திலேயிருந்து காரணமாய்நற்கதையைச்
சலியாமல்கேட்டுத் தான்பிரமைதீர்த்தமையால்
பிரியமுள்ளதன்கதையைப் பட்சமுடன்கேட்டோரும்
வலியவர்கள்தன்கதையை மனமகிழ்ந்துகேட்டோரும்
எழுதிபடித்தவரும் இன்பமுற்றுக்கேட்டோர்க்கும்
தொழுதுவைகுந்தக்கதையை சொல்லிமுடித்தோர்க்கும்
வைகுந்தமென்றொருக்கால் சொல்லிமுடித்தோர்க்கும்
செயகண்டவாசன் விஷ்ணுபதமுண்டாகி
வந்தவினையும் வருவினையுந்தான்தீர்ந்து
செந்திருமால்பாதஞ்சேர்ந்திருப்பீர்கண்டீரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவைகுந்தகதை இயல்பாகமுன்னாளில்
சிந்தைமகிழ்ந்து ஸ்ரீரங்கத்தான்சீஷன்
வெங்கியறாள்வேடன் விளக்கினானிக்கதையை
பொங்கியசொற்றமிழைப் பூரித்துநன்றாக
முதலுமுதல்தெரிந்து முற்சபையையாராய்ந்து
அதினும்பொருள்விரித்து அத்தன்செயலாலே
ஒருசொற்பொருளை ஒன்பதாய்த்தான்விரித்து
கருவாகவேதெரிந்து கற்பித்தான்விற்பனமாய்
திருந்துபுகழ்வகைத் தென்திசையெனும்மதிதான்
பொருந்துதமிழ்பெற்றோன் புகழேந்திதன்புதல்வன்
மன்னவனாம்பொன்னழகு மகிபனிடவன்மருமகன்
அன்னதருவானவர்க்கும் அன்புடையோர்களுக்கும்
மின்னுதமிழ்வானவர்க்கும் வேந்தரமைச்சருக்கும்
சொன்னபடிகேட்டுத் தொழுதுமிகவணங்கி
சீஷனடியார்க்கும் சீஷனாய்த்தானிருந்து
தாசனென்றுகூறித் தமிழினாலிக்கதையை
தேடித்தமிழாய்ந்து திருவிருத்தந்தான்கடந்து
நாடிப்பொருளாராய்ந்து நமஸ்கரித்துமுற்கதையை
க்ஷேத்திரம்போல்நன்றாய்த் திரட்டினானிக்கதையை
தோத்திரமுந்தான்வாழ்கக் கூறினானிக்கதையை
வாழிமிகவாழி மங்காதநூல்வாழி
ஆயுஞ்செங்கோல்செலுத்தும் அரசர்மிகவாழி
கேட்டோர்படிப்போர் கிளைகளுடன்தான்வாழி
ஆழ்ந்தபெரியோ ரனைவோருந்தான்வாழி
அன்னைசுற்றும்வாழி அருந்தவமியோர்வாழி
சின்னஞ்சிறுபிள்ளை செல்வமுடன்தான்வாழி
ஆல்போல்தழைத்து அருகதுபோல்வேரூன்றி
மூங்கில்போலன்னைசுற்றம் முரியாமல்வாழியவே.

## விருத்தம்

அரிகரிராமாவென்றால் அநேகமாஞ்செல்வமாகும்
அரிகரிராமாவென்றால் அனேகமாய்பொருளுஞ்சேரும்
அரிகரிராமாவென்றால் அறங்களுமிகுந்துவாழும்
அரிகரிராமாவென்றால் அவர்கள்மெய்ஞ்ஞானியாமே.

**வைகுந்த அம்மானை முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்

03

06

1933



விண்ணில்

17

10

2021

குருக்கள்மடத்தை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் கணபதிப்பிள்ளை மயில்வாகனம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

**அவர்கள் 2021.10.17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்**

அன்னார் **வள்ளியம்மை** (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்பு கணவரும்,
காலஞ்சென்றவர்களான **கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம்** தம்பதிகளின் அன்பு மகனும்,
காலஞ்சென்றவர்களான **செல்லையா சின்னத்தங்கம்** தம்பதிகளின் அன்பு மருமகனும்,
**கலாகரன்** (லண்டன்), **சிவசக்தி** (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,
**கண்மணி, நேசம்மா, கருணையம்மா, கிருபையம்மா,** காலஞ்சென்ற **முத்துலிங்கம்**
ஆகியோரின் அன்பு சகோதரரும்,
காலஞ்சென்ற **மயில்வாகனத்தின்** சகலரும்,
**பொன்மலர்,** காலஞ்சென்றவர்களான **செ.கந்தசாமி, பரஞ்சோதி** (ஓய்வு பெற்ற ஆசிரியை),
**கந்தசாமி, செல்வநாயகம், நாகலிங்கம், தெய்வநாயகம்**
ஆகியோரின் அன்பு மைத்துனரும்,
**அற்புதநாதன்** (ஓய்வு பெற்ற பொறியியலாளர்), **உதயகுமாரி** (லண்டன்)
ஆகியோரின் அன்பு மாமனாரும்,
**அருட்பிரகாசம்** (ஓய்வு பெற்ற DEO), **வரப்பிரகாசம், தயாளினி, ஞானபிரகாசம்** (விவசாய உத்தியோகத்தர்), **பிரபாகரன்** (ஓய்வு பெற்ற காதி ஆலை உத்தியோகத்தர்), **விக்கேஸ்வரன், பவிரதன், பிரகலா, சுதர்சனா, பத்மகுமார்** (மட்டக்களப்பு வைத்தியசாலை), காலஞ்சென்றவர்களான **சிவகுமார், சிவப்பிரகாசம், ராதாகிருஸ்ணன்,** ஆகியோரின் அன்பு தாய் மாமாவும்,
**கலாதேவன், உதயகுமார், தவமலர், நவமலர், வசந்தகுமார், நளினிதேவி** (ஆசிரியை), **நந்தினி** (லண்டன்), **கங்காகரன்** (ஓய்வுபெற்ற அதிபர்), **கருணாகரன்** (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும்,
**அஞ்ஜலா** (உதவி விரிவுரையாளர் திருகோணமலை வளாகம்), **கவுந்தினி** (கிழக்குப் பல்கலைக்கழகம்), **கிசான்** (University of Leicester, UK), **அருண்பிரசாத்** (QA Engineer), **திவ்யபிரதா** (கிழக்குப் பல்கலைக்கழகம்), **சஜீந்தன்** (System Engineer)
ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

**இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள்**
**அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.**

**கோவிந்தன் வீதி**
**மட்டக்களப்பு.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

*Yathavan's Communication, Batticaloa, Tel : 065 - 2222504*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்பின் இருப்பிடமாய் எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து மறைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர் கணபதிப்பிள்ளை மயில்வாகனம்

(சரவணமுத்து)

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு, எமது இல்லம் வந்து ஆறுதல் கூறி, எமது துயரத்தில் பங்கு கொண்டு உதவி ஒத்தாசை வழங்கியவர்களுக்கும், அத்துடன் மலரஞ்சலி செலுத்தியோருக்கும், பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், வெளிநாட்டிலிருந்து தொலைபேசி, இணையங்கள் ஊடாக ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திக்காக பிராத்தித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், 31ம் நாள் கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும், இம் மலரினை அச்சிட்ட எவகிறீன் அச்சகத்தார்க்கும் எமது மனமுவர்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவகிறீன் அச்சகம் (பிறைவேட்) லிமிட்டெட், மட்டக்களப்பு. 065 2222607